# சுவாமி நாராயணானந்தாவின்

# தியான பிம்பம்

# (Revelation)

This Book is Published with the
Financial Assistance of
Tirumala - Tirupati Devasthanam
under their scheme
"Aid to Publish Religious Books"

தமிழாக்கம் — பிரசுரம்

சுவாமி நித்தியானந்தா

என். டி. சரணாலயம் - வேடந்தாங்கல் (வழி)

அஞ்சல் எண் - 603 314

© N.U. YOGA TRUST
GYLLING - DENMARK
First Edition: December, 1992
Copies: 1000
Pages: XII+296 = 308
Price: 45.00
Tamil Translation Right is
Vested with Swami Nithyananda
Translated and Published by
Swami Nithyananda
N.U. Charanalayam,
Vedanthangal (Via) - Pin - 603 314
Printed at
Typeset By: R.M. Nathan & Co, Madras - 17
Printed By: ACE Graphics, Madras- 600 094

## சமர்ப்பணம்

அனைத்து
ஆன்மிக
சாதகர்களுக்கும்

## சுவாமி நாராயயணானந்தாவின்

## பிற நூல்கள்

| | | |
|---|---|---|
| மனக்கட்டுப்பாட்டின் ரகசியங்கள். . . | ரூ. | 24.00 |
| சாந்தி - சக்தி - நீண்ட ஆயுள். . . | ரூ. | 28.00 |
| ஆதார சக்தி. . . | ரூ. | 38.00 |
| தியான பிம்பம். . . | ரூ. | 45.00 |
| அகண்டைக மதம். . . | ரூ. | 25.00 |

கிடைக்குமிடம்:

**சுவாமி நித்தியானந்தா**

தமிழாக்க ஆசிரியர்

என். யூ. சரணாலயம்

(வழி) வேடந்தாங்கல்

செங்கை - எம்.ஜி.ஆர். மாவட்டம்

அஞ்சல் எண்: 603 314

## புத்தகத்தைப் பற்றி. . .

சுவாமி நாராயணானந்தாவின் குறிக்கோள் ஆன்மிக ஆர்வலர்களுக்கு தியானத்தின் சிறப்பை உணர்த்துவது, ஊக்குவிப்பது. செய்யும் வழிமுறைகளை எளிய முறையில் விளக்குவது, நடைமுறையில் பின்பற்ற உதவுவது. குருதேவர் தாம் தியானத்தில் ஈடுபட்டுள்ள போழ்தில் தமக்குத் துவக்கத்தில் சரியான வழிகாட்டி இல்லாமல் தவித்தார். அதனால் சில இடர்ப்பாடுகளைச் சந்திக்க நேர்ந்தது. ஆகவே ஆன்மிக சாதகர்களுக்கு உதவும் நோக்கத்தில் பல புத்தகங்களை எழுதினார். அவருடைய ஐந்தாவது புத்தகம் இது.

மின்சாரம் எல்லா இடங்களிலும் நிறைந்து இருக்கிறது. அந்தச் சாரத்தின் பயனை அனுபவிக்க வேண்டுமாயின் அதற்கென சில செயற் கருவிகளைச் செய்ய வேண்டும். முதலில் மின்சாரத்தைத் தேக்க இடமும், தேங்கியுள்ள மின்சக்தியை வகைப்படுத்தவும், வகைப்படுத்தியதை இயக்கவும், DYNAMO' எனும் "மின் இயக்கி சாதனத்தை" உருவாக்கி அமைக்க வேண்டும். அதன் பிறகே பயனைப் பெற இயலும்.

அது போன்றதே "உயிர்ச்சாரம்". இது பரவெளி எங்கும் பரவி இருக்கிறது. எல்லா உயிரினங்களையும் வாழ்விப்பது; எல்லா உருவ அமைப்புகளுள்ளும் குடி கொண்டிருப்பது. அந்த சாரத்தை-சக்தியை மனித உடலில் தேக்குவது, அவனுள் அல்லது அவளுள் இருக்கும் ஆற்றலை வெளிக் கொணர்வது, இவற்றின் விளக்கமே இப்புத்தகம்.

சுவாமி 'ஒவ்வொரு நாளும் பெரும்பொழுது தியானத்தில் அமர்ந்து கிடைத்த அனுபவப் பேருண்மைகளின்

தொகுப்பே இந்நூல். "நிர்விகல்ப சமாதி" "பரம அம்ச" நிலையை எய்தியவர் மகான் சுவாமி நாராயணானந்தா. ஸ்ரீ இராம கிருஷ்ண மடத்தின் இரண்டாவது தலைமைப் பீடத்தின் தலைவராக விளங்கிய மகா புருஷர் சுவாமி சிவானந்தரின் சீடர் இவர். இந்தத் தொகுப்பில் ஆன்மிக சாதகர்களுக்கு ஏற்படும் ஐயப்பாடுகளைத் தீர்த்து வைக்கும் பேருண்மை முடிவுகள் அரிய பெரிய கரு வூலமாகத் திகழ்கின்றன.

தியானம் என்பது துறவிகளுக்கு மட்டுமே உரிய சொத்து அல்ல!

மாணவர், இல்லறத்தார், வியாபாரிகள், கவிஞர், கலைஞர், உழைப்பாளிகள், மருத்துவர், தொழிலாளர் - தொழில் விற்பன்னர், தொழில் முதலீட்டாளர் ஆகிய அனைவருமே கைக்கொள்ள வேண்டிய ஒன்றாகும். இது அடிமை மோகத்தை மாய்ப்பது; சுதந்திர தாகத்தைத் தணிப்பது. அவரவர் தத்தம் தொழிலில் வெற்றி பெற வலுப்பெற உதவும் ஆற்றலைத் தருவதும் ஆகும். இந்த அற்புத நூலில் இதையெல்லாம் மிக எளிமையாக நடை முறையில் கைக்கொள்ள வகைப்படுத்தித் தந்துள்ளார் சுவாமி நாராயணானந்தா. இதற்கு முன் வெளி வந்த நான்கு புத்தகங்களைப் படித்த பலர், ஆசிரியரின் பிற நூல்கள் என்னென்ன - அவை எங்களுக்குத் தேவை எனக் கடிதங்கள் எழுதியுள்ளனர். மொழி பெயர்ப் பைப்பற்றியும் சிலர் குறிப்பிட்டுள்ளனர்.

"மொழியாக்கம் என்கிற சாயலே இல்லாமல் தமிழ் நூலே" என்று போற்றத்தக்க வகையில் மொழி பெயர்ப்பு அமைந்துள்ளது." இவை ஊக்கத்தை அளிக்கின்றன. சில வடமொழிச் சொற்களைப் பயன்படுத்தியது ஏன்? என்றும் கேட்டுள்ளனர்.

வாசகர்கள் எளிதாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்கிற எண்ணமே இதற்குக் காரணமாகும்.

இந்த நினைப்பு தவறு எனவும் தோன்றுகிறது. தொடர்ந்து வரும் நூல்களில் இதைத் தவிர்க்க முயற்சிக்கிறோம்.

திருமலை திருப்பதி தேவஸ்தான அறநிலையப் பிரிவு இந்த ஐந்தாவது புத்தகத்திற்கும் நிதி உதவி அளித்துள்ளது. இதைப்பற்றி இங்கே எப்படி எழுதுவது - என்னவென்று விளக்குது! "தெய்வச் செயல்" "குருவருள்" என்பதைத் தவிர வேறெப்படி விமரிசிப்பது?

பல ஆன்றோர் சான்றோர் அளித்த ஊக்கமும் ஒத்துழைப்பும் இந்த நூல் உருவாக உறுதுணையாக நின்று உதவியது. இந்த நூலை உருவாக்க உதவிய அனைவருக்கும் குருதேவரின் பரிபூரண ஆசிகள் உரித்தாகட்டும்.

சுவாமி நித்தியானந்தா

# தியான பிம்பம்

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அ. | புத்தகத்தைப் பற்றி . . | V |
| ஆ. | தத்துவம் (கற்பனா சக்தி - நிதரிசன சக்தி). . | 31 |
| இ. | கடவுள் (பிரம்மம்), பிரகிருதி (படைப்புச் சக்தி). | |
| ஈ. | விசிட்ட அத்வைதம் - துவைதம் ஆபத்தில்லாத வழிகள். . | 120 |
| உ. | துறவு. . . | 123 |
| ஊ. | பக்தி. . . | 138 |
| எ. | பிரம்மஞானி. . . | 178 |
| ஏ. | சவிகல்ப - நிர்விகல்ப சமாதி நிலைகள். . . | 229 |
| ஐ. | எண்ணங்களின் தோற்றம் (உளவியல்). . . | 231 |
| ஒ. | செயலும் விளைவும். . . | 278 |
| ஓ | ஆசிரியர் வாழ்வும் வரலாறும். . . | 287 |



50-வது வயதில் சுவாமி நாராயணானந்தா



1929-ம் ஆண்டு செப்டம்பர் 5-ந் தேதி மைசூரில் துறவு நிலை ஏற்ற மறுநாள் சுவாமி நாராயணானந்தா.



*1964-ல் ரிஷிகேஷ் ஆசிரம மாடியில் சுவாமி நாராயணானந்தா. பின்புறம் கங்கை ஆறு ஓடுவதைக் காணலாம்.*



*1976 ஜுலை 11-ம் தேதி டென்மார்க், ஜில்லிங்கில் நடைபெற்ற குரு பூர்ணிமை விழாவின்போது குரு குடீரில் சீடர்களுடன்.*

# தியான பிம்பம்

## முகவுரை

1933லிருந்து 1949வரை தியானத்தின் போது ஆசிரியருக்கு ஏற்பட்ட எண்ணப் பிரதிபலிப்புகளின் தொகுப்பே இப்புத்தகம். பல தரப்பட்ட பொருள்களைப் பற்றியது இந்நூல். பிரம்மம் (கடவுள்), நிர்விகல்பசமாதி (ஆழ்ந்த தியான நிலை), பிரம்ம ஞானியின் நிலை, (வாலறிவன்) தத்துவம், உளவியல், பக்தி, கர்மம், கர்மபலன் (செயலும், வினைப் பயனும்) போன்றவை. இவை தேதி வாரியாகக் குறிப்பெடுக்கப்பட்டவை. சாதி, மதம், வர்ணம், ஆண்-பெண் பேதம், இனப் பாகுபாடுகளைக் கடந்த பேருண்மையைத் தேடும் அனைவருக்கும் இந்த நூல் மிக உதவியாக இருக்கும் என்பது நிச்சயம்.

ஆங்கிலம் தெரிந்த எல்லா மக்களும் எனது இந்த முயற்சியை வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். (தமிழறிந்த பல்லோருக்கும் கூட இது உதவும் - மொழி பெயர்ப்பாளர்)

கடைசியாகப் பஞ்சாப் பல்கலைக் கழகத் தேர்வு ஆணையாளரும், புகழ் பெற்ற ஆங்கில இலக்கணப் பேரறிஞருமான லாலா குருசரண்லால் சேத்தி, B.Sc. அவர்கள் இந்தப் புத்தகத்தின் கையெழுத்துப் பிரதியைப் படித்துக் கொடுத்ததற்கு எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

ரிஷிகேஷ்,

இமாலயம்.

நவம்பர் - 17, 1950 சுவாமி நாராயணானந்தா

## நிதர்சனம்

ஞாயிறு, ஜூன், 25, 1933

1. பிரம்மம் (கடவுள்) "சத்" அல்ல, "சித்" என்பதும் அன்று; "ஆனந்தம்" கூட அல்ல. தன்னில் தானாகவும், தன்னில் தானான மகா சமுத்திரமாகவும் உள்ளதே பிரம்மம். ஆயினும் ஒரு எல்லைக்குள் இயங்கும் மனித மனத்தின், அதைப் பற்றிய மேலான விளக்கம், முடிவு, சொல்லாக இருப்பது சத்து, சித்து, ஆனந்தம். சத்து சித்து, ஆனந்தம் என்பன மூன்று வெவ்வேறான சொற்கள் அல்ல. ஒரே "பெரும் பொருளின்" மூன்று வகை நிலைகளைக் குறிப்பதாகும்.

தெளிவுரை:-

பிரம்மம் உயிரோ, ஜடமோ அல்ல. உயிருள்ள ஒன்றோ உயிரற்றதோ அன்று. உயிரோடிருப்பதையோ உயிரற்ற நிலையையோ குறிப்பது அல்ல. நம்மால் பெறக் கூடியதையோ, பெறக்கூடாததையோ சொல்வதல்ல அந்தச் சொல். பகுதிகளாக உள்ளவற்றையோ, பூரண மானதையோ குறிக்காது. அதைப் பெயரிட்டு அழைக் கவோ, விளக்கிச் சொல்லவோ முடியாது. புலன்களினால் உணரப்படும் பொருள் அல்ல. மனத்தினால் தெரிந்து கொள்ளக் கூடியதுமல்ல. அது அனைத்துப் பொருள் களுக்கும் காரணப் பொருளாக இருப்பது. அந்த நிலையில் அந்தக் 'காரணப் பொருளை எவ்வாறு தெரிந்து கொள்ள முடியும்? அதை அறிவதற்கு யார் இருக்கிறார்கள்? ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டு மானால், அதை உருவகப்படுத்தினால்தானே இயலும். பிரம்மம் அனைத்துப் பொருள்களுக்கும் மூலப் பொருளாக இருப்பதால், அதை உருவகப்படுத்தி விளக்க

முடியாது. ஆகையினால், அதை அறிவதும் இயலாத ஒன்று. வேறு வகையில் கூறுவோமாயின், நம் அறிவிற்கும் அப்பாற்பட்டது. நாம் "உயிருடன் இருக்கிறோம்" என்பதற்கு அத்தாட்சி தேவைதானா? ஒரே ஒரு மூலப் பொருள்தான் உண்டு. அந்த ஒன்றே பிரம்மம். பிரம்மம் நம்முள் உள்ள ஆன்மா. அந்தப் பிரம்மம் எங்கும் வியாபித்து இருப்பது - முடிவற்றது. இரண்டாவதற்ற ஒன்று. உண்மையைக் கூறப்போனால் அது சத்து, சித்து, ஆனந்தம் மட்டுமல்ல. அதைவிட இன்னும் மேலானது. எல்லைக்குள் இயங்கும் மனித மனத்திற்கு ஓரளவு விளங்குமேயொழிய முழுமையாகப் பிடிபடாது. அதை உயிர்ச்சாரப் பரம்பொருள் (சத்து) என்றவுடன், மனித மனம் தனக்குள்ள இயல்பினால் அதைப் பரந்த ஆகாய மெனவோ பரந்து விரிந்துள்ள மகா சமுத்திரமாகவோ நினைக்கிறது. அதனால் அதற்கு ஒரு வரையறை ஏற்படுத்தி விடுகிறது. அதே போல் "எல்லை யில்லாப் பேரறிவு (சித்து), பேரானந்தம் (ஆனந்தம்)" என்று சொன்னவுடன் ஒருவர் தம்மையுமறியாமல் "அறிவீனம்", "வேதனை" என்ற நிலைகளின் எதிர்மாறான நிலைகளாக இவற்றைக் கருதுகிறார்.

இது எதனால்? "உயிருடனிருப்பது", "பேரறிவு", பேரானந்தம் ஆகியவற்றுடன் தொடர்புள்ள சொற்களாக அவை இருக்கிறதல்லவா! முரண்பட்ட அந்தச் சொற்கள் இல்லாமல் இந்தச் சொற்கள் மட்டும் இருக்க இயலாது. ஒருவர் "உயிர்" என்று கூறியதும், அவர் மனத்தில் "உயிரில்லாதது" என்ற சொல்லும் நினைவுக்கு வருகிறது. உயிரில்லாதது என்ற கருத்து இல்லையேல் "உயிர்ப் பொருள்" என்ற தன்மையை விளங்கிக் கொள்ள முடியாது. இது போலவே பேரறிவு, பேரானந்தம் என்று

சொன்னதும் அறிவின்மை, வேதனை என்ற சொற்களும் மனத்தில் தோன்றவே செய்யும். இன்னும் ஆழ்ந்து பார்ப்போம். பிரம்மத்தை நற்செய்கைகளும், நற்பண்பு களும் நிறைந்ததாக மட்டும் கருதினால் கெட்டவை எங்கே போவது? அந்தக் கெட்டவைக்கு யார் பொறுப்பு? ஒரே "மூலப் பொருள்" என்பதால் இந்தக் கெட்டவைக ளெல்லாம் இரண்டாவது ஒன்று இருக்கிறது என்பது இயலாது. பிரம்மம் முடிவில்லாதது, எங்கும் வியாபித்து இருப்பது என்பதால், அது எல்லா இடத்திலும் எல்லாப் பொருளிலும் இருக்கிறது. நல்லது, கெட்டது என்பவை ஒரு நாணயத்தின் இரு புறங்களைப் போன்றவை. அது போலத்தான் உயிர் - உயிரற்ற தன்மை; பேரறிவு - அறிவீனம்; பேரானந்தம்- வேதனை! இந்தக் கருத்தும் ஒன்றோடொன்று சார்ந்து நிற்பது. ஆகவே சத்து, சித்து, ஆனந்தம் என்ற சொற்றொடர் ஒரு சார்புடையதாகவும் ஒரு வரையறைக்குட்பட்டதாகவுமே உள்ளது. அதனால் தான் இந்த மேலான பரம்பொருளை விளக்க "தன்னில் தானாக உள்ள பரம்பொருள், "தன்னில் தானாக வேயுள்ள உயிர்ச் சார மகாசமுத்திரம்" என்பவையே பொருத்தமானவை.

சத்து, சித்து, ஆனந்தம் ஒரே சொற்றொடராக இருப்பது. மூன்று வகைத் தனிச் சொற்களால் அமைந்தது. மேலான "நிர்விகல்ப சமாதி" நிலையில் இந்த மூவகைத் தனிச் சொற்களும் ஒரே நிலையைக் குறிப்ப தாகி விடுகிறது. அதாவது, உயிர் என்பது பேரறிவு, பேரறிவு என்பது பேரானந்தம், பேரானந்தமே உயிர் என்ற வகையில் முடிகிறது. இந்த மூவகை நிலைகளும் ஒன்றேயாகும். பிரிக்க முடியாதவை. மாறுபட்டவையே அல்ல. ஒரே பரம்பொருள்தான் உண்டு. அதைப்

பேராண்மா, பேரறிவு, பேரானந்தம் என்றெல்லாம் கூற லாம் என்கிறோம். அப்படியானால் எதன் பேராண்மா? எதன் பேரறிவு? எதனுடைய பேரானந்தம்? என்ற வினாக்களும் எழுகின்றன. பிரம்மத்தின் உண்மையான விளக்கம் தருவதிலுள்ள பிரச்னைகள் எதுவாயினும், அந்த மேலான பரம்பொருளுக்கு மனித மனம் முடிவாக வும், உயர்வாகவும் தரக்கூடிய சொல் சத் - சித் - ஆனந் தம்! தன்னில் தானான பரம்பொருளை வார்த்தை களால் கூற முடியாது. சொற்களால் விளக்க இயலாது. அது மனித மனம், மனித அறிவுக்கு எட்டாத ஒன்று.

ஞாயிறு, ஜூன் 25-1933

2, கர்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகம், ராஜ யோகம் தனித்தனி யோகங்கள் அல்ல. அவை ஒன்றோ டொன்று உறவுடையன; ஒன்றில் ஒன்று கலந்திருப்பவை.

தெளிவுரை-

ஒட்டு மொத்தமான மனம் ஒன்றே ஒன்றுதான். அது நால்வகை ஆற்றல்களைக் கொண்டுள்ளது. அதாவது உள்ளுணர்வின் ஆற்றல், ஈடுபாட்டுணர்வு, ஆழ்ந்து சிந்திக்கும் ஆற்றல், ஒருமுகப்படுத்தும் ஆற்றல் ஆகும். மனத்தின் இந்த நால்வகை ஆற்றல்களுக்கேற்ப, நால்வகை யோக நிலைகள் உள்ளன. கர்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகம், ராஜயோகம் ஆகும். ஒரு சாதாரண மனித மனத்தில் நால்வகை ஆற்றல்களுமே இருப்பினும், அவை சமச்சீராக வளர்ச்சியுற்றிருப்ப தில்லை. பெரும்பாலானவர்களில் இவற்றில் ஏதாவதொரு ஆற்றல் மற்ற மூன்று ஆற்றல்களை ஆதிக்கம் செலுத்தும் நிலையில் இருக்கும். மனத்தைக் கட்டுப்படுத்த, குறிப்பிட்ட ஆதிக்க ஆற்றலுக்கேற்ற யோகத்தை ஒருவர் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார். அதனாலேயே ஒருவர்

கர்மயோகி அல்லது பக்தியோகி அல்லது ஞானயோகி மற்றும் ராஜயோகி என அழைக்கப்படுகிறார். இதனால் கர்ம யோகியாகவுள்ள ஒருவர் பக்தி, ஞானம், ராஜ யோகம் போன்றவற்றில் ஒதுக்கப்பட்டவராகி விடுவதில்லை. அதே போல் பக்தி யோகி அல்லது ஞானயோகி மற்றும் ராஜ யோகிக்குக் கர்மயோகம் போன்றவை விலக்கானவை அல்ல. ஏதாவது ஒரு யோகத்தைப் பயில்பவரிடம் மற்ற மூன்று யோகங்களும் சேர்ந்தே இருந்து கொண்டிருக்கும். உதாரணத்திற்குப் பக்தியோகத்தை எடுத்துக் கொள்வோம். பக்தி யோகம் பயில்பவர் கடவுளை வழிபட வேண்டும். மற்றும் பல கிரியைகளைச் செய்ய வேண்டும். இத்தகைய கிரியைகள் அல்லது செயல்களைச் செய்வதால் அவர் கர்மயோகமும் பயில்கிறார்.

அவர் சதா உண்மை எது - எது உண்மையானதல்ல என்று பகுத்தறிந்த வண்ணம் மனதைக் கடவுளின் மீதே நிலை நிறுத்த வேண்டும். பகுத்தறிந்து பார்க்கும் பயிற்சியே ஞான யோகத்தான். மேலும் அவர் தினசரி தனது வேலையிலும், வழிபாட்டிலும், தியானத்திலும் மனதை முறையாக நிலை நிறுத்த வேண்டும். இதன் மூலம் அவர் ராஜயோகமும் பயில்கிறார். இது போலவே ஏதாவது ஒரு யோகத்தைப் பயிலும்போது மற்ற மூன்று யோகங்களும் பயிலும் நிலை ஏற்படுகிறது. ஆகவே, கர்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகம், ராஜ யோகம் பிரிக்க முடியாதவை. அவை ஒன்றோடொன்று சார்ந்திருப்பவை.

**செவ்வாய், ஜூன், 27-1933**

**3. கடவுளையும், உண்மையான குருவையும் திருப்திப் படுத்துவதோ, அதிருப்தி கொள்ளச் செய்வதோ இயலாதவை.**

தெளிவுரை:-

அறியாமை காரணமாக நமது மனம் கற்பிக்கும் தோற்றமே "திருப்தி கொள்ளச் செய்தல்", "அதிருப்தி கொள்ளச் செய்தல்" என்பவை. கடவுளை எங்ஙனம் மன நிறைவு கொள்ளச் செய்வது? அவரை எவ்வாறு அதிருப்தியாளராக்குவது? கடவுளை மன நிறைவு கொள்ளச் செய்வதோ, மனநிறைவு இல்லாதவராக் குவதோ இயலாத ஒன்று. கடவுள் மாற்றமுடையவரா என்ன? ஒரு முறை அவர் மனத்தை நிறைவு கொள்ளச் செய்வதற்கும், அதிருப்தியாளராக்குவதற்கும்! இதுவல்ல உண்மை. அவர் மாற்றம் பெறுபவரல்ல! மாற்றங்கள் நம் மனத்தளவே உள்ளன. கடவுளின் "திருப்தி", "அதிருப்தி" என்பன நமது அறியாமை மனத்தின் அகந்தைத் தனம்! நற்பண்பு, தீய குணம், நன்மை தீமை போன்ற மூர்ண்பாடுகள் நம் மனத்தாலானவை. இந்த அகிலத்தில் ஒவ்வொரு ஆசையும், எண்ணமும், செயலும், நன்மை தீமை கலந்த கலவையே! எந்த ஒரு ஆசை, எண்ணம், செயலையும் முழுக்க முழுக்க நல்லது அல்லது முழுமை யாகக் கெட்டது என்று கூற முடியாது. ஒவ்வொன்றும் இந்த இரண்டும் கலந்த கலவையே. எந்த ஒரு ஆசை, எண்ணம், செயலையாவது நல்லது என முடிவு கட்டினால் அதில் கொஞ்சம் தீமையும் கலந்திருக்கும். கெட்டது என முடிவெடுப்பதில், சிறிதளவு நல்லதையும் காண இயலும். உண்மையென்னவோ எல்லாமே மனம் போடும் எடையைப் பொறுத்ததே.

உண்மையான குரு என்பவர் "பிரம்ம"த்தை உணர்ந்தவர். பிரம்மத்தை உணர்ந்தவர் பிரம்மமாகவே ஆகிறார். மேலும் அவர் முக்குணங்களையும் (சத்துவம், ராஜசம், தாமசம்) கடந்தவராகிறார். மற்றும் முரண்

பாடுகளுக்கும் அப்பாற்பட்டவராகி விடுகிறார். கடவுளை உணர்ந்தவரின் மனம் மாற்றங்களுக்கு ஆட்படுவதில்லை. எல்லாச் சூழ்நிலைகளிலும் அவர் மனத்தை ஒரே நிலையில் வைத்திருக்கிறார். ஒவ்வொன்றின் உள்ளும் புறமும் அவர் பிரம்மத்தை - பிரம்மம் ஒன்றை மட்டுமே காண்பதால், அவருக்கு நல்ல பொருளையும், நல்ல சம்பவங்களையும் காண்பதால் மகிழ்ச்சியும், தீயவைகளையும் பாதகமான சம்பவங்களையும் காண்பதால் மனங் கலங்கும் நிலையும் ஏற்படுவதில்லை. கடவுள் கருணையும், குருவின் கருணையும் பட்சபாதமற்று வீசும் காற்றுப் போன்றது. ஓடக்காரன் பாயை விரித்துத் தயாராக வைத்திருப்பானாயின் வீசும் காற்றின் துணையினால் தான் போய்ச் சேர வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேருகிறான். இதே போல் ஒருவர் தன் மனத்தைத் தூய்மைப்படுத்தித் திறந்த இதயத்துடன் காத்திருந்தால் கடவுளின் கருணையையோ அல்லது குருவின் கடாட்சத்தையோ பெறுகிறார். அதனால் ஆன்மாவை அறிகிறார். விடுதலைப் பேறு சித்திக்கிறது. ஆகவே, எல்லாமே மனத்தைத் தூய்மைப் படுத்துவதில்தான் உள்ளன.

புதன்கிழமை, ஜூன், 28-1933

4. கடவுள் நல்லவரும் அல்ல, கெட்டவரும் அல்ல. அவர் குணங்களுக்கு [illegible] அப்பாற்பட்டவர். எல்லா வகை எதிர்மறை முரண்பாடுகளுக்கும் அப்பாற்பட்டவர். காலத்தைக் கடந்தவர். வெளியின் [illegible] அப்பாற் பட்டவர். ஆதி காரணத்தையும் கடந்த அவர் [illegible]. அவர் அறிய முடியாதவர். எல்லையற்றவர். இரண்டாவதற்ற ஒன்றேயானவர்.

தெளிவுரை:-

கடவுள் ஒன்றே ஒன்றுதான். இரண்டாவது கிடையாது. மனம் - ஜடம் - பெயர்கள் - உருவங்கள் பிரகிருதி சக்தியின் (கடவுளின் படைப்புச் சக்தியின்) பரிணாமிப்பேயாகும் பிரகிருதி சக்திக்கு மூன்று குணங்கள் உள்ளன. (சத்துவம், இராஜசம், தாமசம்). இந்த மூன்று குணங்களே படைப்புக்குக் காரணமாகின்றன. படைப்பு என்ற ஒன்று இருக்குமிடத்தில், பெயரும் உருவ மும் உள்ள இடத்தில் இந்த மூன்று குணங்களும் உள்ளன. ஒரு உயிருக்கும் மற்றொரு உயிருக்கும் இடையே உள்ள மாறுபாடு, வித்தியாசத்திற்கு இந்தக் குணங்களே காரணம். ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்குமிடையே உள்ள பாகுபாட்டிற்கும் இந்தக் குணபேதங்களே காரணம். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உள்ள வித்தியாசத்திற்கும், ஒரு பெண்ணுக்கும் மற்றொரு பெண்ணுக்கும் இடையே உள்ள மாறுபாட்டிற்கும் இதுவே காரணம். ஒன்று போல் இல்லாத எல்லா நிலைகளுக்கும் காரணமாக இருப்பது குண பேதங்களே. இந்த மூன்று குணங்களும் சமமாக இருப்பது படைப்புக்கு முன்பிருக்கும் அசைவற்ற நிலை (Involution) இந்த நிலை பரிணமித்து எழும்போது உள்ள பரிணாம நிலையில் (Evolution) இந்தக் குணங்களின் சமநிலை கலைக்கப்படுகிறது. கடவுள் மூன்று குணங்களுக்கும் அப்பாற்பட்டவர். பிரகிருதி சக்திக்கு ஆட்படாத நிலையிலுள்ளவர். அவர் குணங்களற்றவர். அனைத்து எதிர்மறை முரண்பாடுகளுக்கும் அப்பாற்பட்டவர். எந்த விதக் குணங்களோ, குணங்களின் கூறுகளோ (Qualities) இல்லாதவராயினும், அவர் அனைத்திலும் வியாபித்து இருப்பவர். அவர் எங்கும் இருப்பவர். அவர் இல்லாத இடமில்லை. பொருளுமில்லை. அனைத்திலும் ஊடுருவி

இருக்கிறார். நல்ல பொருள்களில் மட்டுமே கடவுள் இருக்கிறார் என்று அறியாமையினால் சிலர் நினைக்கிறார்கள். அப்படியாயின் கெட்டவை எங்கு வசிக்கின்றன? அவ்வாறு நினைப்பது உண்மையாயின், கடவுள் "எங்கும் எதிலும் நிறைந்திருப்பவர்" என்று சொல்லுவது தவறு என்றல்லவா ஆகிவிடும்? நாம் கடவுளை எங்கும் வியாபித்து இருப்பவர் என்று சொல்லும்போது, அவர் எங்கும் எதிலும் நிறைந்திருப்பவர் என்றல்லவா பொருள்கொள்ள வேண்டும்? அவர் அப்பழுக்கற்றவர். ஏன்? கடவுள் மனம் - மன நிலையற்றவர். குணங்களும் அற்றவர். நல்லது - கெட்டது, தீய குணம் - நற்பண்பு, வேதனை - மகிழ்ச்சி, லாபம் - நஷ்டம் போன்ற பாகுபாடுகள் மனத்தில் மட்டுமே ஏற்படுபவை. அகண்டம் பூராவையும் ஆக்கும் நிலையில் வியாபித்துப் பரவிநிற்பது. ஆகாசம், இருப்பினும் காற்றில் உள்ள நல்ல வாசனை, துர்நாற்றங்களால் பாதிக்கப்படுவதில்லை. அதே போலக் கடவுள் மிகமிக சூக்கும நிலையில் அனைத்திலும் வியாபித்திருக்கிறார். அனைத்தின் சூக்கும சாரமாக வியாபித்துள்ளார். அவர் அனைத்திலும் வியாபித்திருப்பினும், அந்தப் பொருள்களின் நன்மை தீமைகளால் பாதிக்கப்படுவதில்லை. பொருள்கள் எல்லாம் மனம், குணங் களிலிருந்து பிறந்தவைதானே?

**புதன்கிழமை, 28 ஜூன், 1933**

5. ***அகண்டத்தின் சூக்கும ஆற்றல் - தூல எடை இரண்டின் கூட்டு எடை எப்போதும் மாறாமல் ஒரே நிலையில் உள்ளதாகும்.***

**தெளிவுரை:-**

*அகண்டத்தின் ஆற்றல் சக்தி, ஜடசக்திகளின் கூட்டு. மொத்த எடை ஒரே நிலையில் இருப்பது. அதைக் கூட்ட*

வோ குறைக்கவோ முடியாது. பெயர்களும் உருவங்களும் மட்டுமே அடிக்கடி மாறுதலடைபவை. உலகங்கள் தோன்றும் அல்லது மறையும். உயிர்கள் வரும் - போகும். உலகங்கள் உயிர்களின் தோற்றத்தினால் அகண்டத்தின் ஜட சக்தியும் ஆற்றல் சக்தியும் குறைவதில்லை. அவை மறைவதால் அகண்ட ஜடசக்தி ஆற்றல் சக்திகளின் நிறை கூடுவதுமில்லை. உலகில் தோன்றும் ஆற்றல் சக்தியும், அங்குள்ள உயிர்களின் தூல உருவங்களும், வளர்தலும் அலைகளின் மறைவின்போது பர வெளியில் சூக்கும நிலைபெற்றுத் தங்கியிருக்கின்றன. தாவரங்கள், மிருகங்கள் போன்றவற்றின் உடல்கள் மண்ணிலிருந்து தோன்றி வளர்ந்து, முடிவில் மண்ணிலேயே மடிந்து மறைந்து விடுகின்றன. அகண்டத்தின் ஜட, ஆற்றல் சக்தி கூடுவதோ குறைவதோ எப்போதும் இல்லை என்பதுவே உண்மையும் பேருண்மையும் ஆகும். தனிப்பட்டு இயங்கும் கிரகங்களில் மட்டும் கூடுவதும் குறைதலும் நிகழ்கின்றன; பர வெளியில் அல்ல. பர வெளியில் ஆற்றல் சக்தியோ ஜட சக்தியோ கூடுவதும் கிடையாது, குறைவதும் இல்லை.

**புதன் கிழமை, ஜூன், 28, 1933**

6. **பிரம்மம் - ஜீவா இரு நிலைத் தன்மை கொண்ட ஒரு பொருள்.** ஜீவாத்மாவும் (தனிப்பட்ட உயிரும்) பரமாத்மாவும் (மேன்மையான உயிரும்) இரு வேறு தன்மை கொண்டவை. இந்தக் கருத்துக்கு ஆதாரமாகச் சூரியனையும், பல்வேறு நீர் நிலைகளில் விழும் அதன் பிரதிபலிப்பையும் உதாரணமாகக் கூறுகின்றனர். சூரியனை, பரமாத்மாவுக்கும், அதன் பிரதிபலிப்பை ஜீவாத்மாவுக்கும் ஒப்பிடுகின்றனர்.

**மறுப்புரை:-**

சூரியனின் பிரதிபலிப்பு உண்மையானதே அல்ல. சூரியன் இன்றேல் பிரதிபலிப்பே இல்லை. சூரியன் என்ற ஒன்று இருக்கும்வரை "பிரதிபலிப்பு" இருக்கும். சூரியன் இல்லையெனில் ஒரு கணம்கூட அது தனித்து நிற்க இயலாது. சூரியன் வரவில்லையெனில் அதன் பிரதி பலிப்புந் தெரியாது. சூரியனும் அதன் பிரதிபலிப்பும் இரு வேறு பொருள்களாகத் தோற்றத்தில் காணப்படி னும் அவை உண்மையில் வெவ்வேறானவை அல்ல. சூரியன் இன்றேல் பிரதிபலிப்பு ஏது? சூரியன் புலன் களால் உணர முடிவது, பிரதிபலிப்பு உணர முடியாதது. முன்னது முழுக்க முழுக்கத் தானே தோன்றி விளங்குவது. பின்னது ஒன்றைச் சார்ந்து விளங்குவது. அது போன்றதே பிரம்மம். பிரம்மம் (மேன்மையான பரமான்மா) ஒரு தனி உயிர்ப் பொருள் மூலம் தோன்றி இயங்கும்போது ஜீவாத்மா (தனிப்பட்ட உயிர்) என்கிறோம். இதில் உண்மை என்னவெனில், பிரம்மம் எனும் பிரம்மம் மட்டுமே இருக்கிறது. பிரம்மத்தை அன்றி வேறேதும் இதில் இல்லை. எங்கும் வியாபித்துள்ள "ஆகாசம்" ஒரு ஜாடிக்குள்ளும் நிறைந்திருக்கும்போது, அதை ஜாடியில் உள்ள ஆகாசம் என்கிறோம். எங்கும் வியாபித்துள்ள ஆகாசத்தை ஜாடி பிரித்துக் காட்டி னாலும், ஆகாசம் உண்மையில் பிரிவினை அடைவ தில்லை. ஜாடி உடைந்தவுடன் ஜாடியின் அமைப்பு மறைந்து விடுகிறது. ஜாடியின் ஆகாசம் வெளியினூடே கலந்து பரவி நிற்கிறது. அது போலவே பிரம்மத்திற்கும் ஜீவனுக்கும் இடையில் தனி உயிரைத் தாங்கும் உடல் உள்ளவரைக்கும் பிரிவினைத் தோற்றம் நீடிக்கிறது. உடல் அழிந்ததும் அல்லது ஒருவன் "வீடுபேறு" உற்றதும்

பிரம்மம் மட்டுமே இருக்கிறது. ஆகவே தனக்கெனச் சொந்தமாகப் பெற்றிராத ஒரு பொருள், அதுதான் தோன்றி விளங்குவதற்கே வேறொன்றின் மீது சார்ந்திருக்க வேண்டிய நிலையில் அதைத் தனித் தன்மை கொண்டது எனக் கூறவே முடியாது.

**திங்கட்கிழமை, 3 ஜூலை, 1933**

**7. தரிசனம் என்றால் என்ன? கனவுத் தோற்றத்தை விழிப்பு நிலையில் காண்பதுவே "தரிசனம்" (Vision).**

**தெளிவுரை:-**

கனவில் ஒருவர் சிரிக்கிறார், வேதனையுறுகிறார், அழுகிறார். தன்னுடைய சூக்கும மனம் சூக்கும உடலின் உதவியால் இது நிகழ்கிறது. கனவில் ஒருவருடைய அனுபவங்கள் சூக்குமப் பொருள்களைப் பற்றியதாகவே உள்ளன. மனம் கனவு உலகத்தையும் அதன் விஷயங் களையும் படம் போட்டுக் காட்டுகிறது. தரிசனத்தின் போது ஒருவர் சூக்கும விஷயங்களை (கனவில் காணும் அதே விஷயங்களை) விழிப்பு நிலையிலேயே காண்கிறார். இந்தத் தரிசனங்கள் மனத்தின் ஒரு குறிப்பிட்ட நிலையில் மட்டுமே - அதாவது, ஆன்மிக சாதனையின் மூலம் (பயிற்சியின் மூலம்) கைவரப் பெற்ற நிலையில் மட்டுமே புலனாகின்றன. அந்தத் தரிசனம் ஒரு உருவத்தைப் பற்றியதாகவோ பல உருவங்கள் நிகழ்ச்சி களைப் பற்றியதாகவோ அல்லது இந்த இரண்டையுங் கடந்ததாகவோ இருக்கும். ஒருவர் இடையறாது ஒரு குறிப்பிட்ட தெய்வத்தின் உருவத்தையே நினைத்த வண் ணம் தியானம் செய்கிறார். அப்போது அவருடைய மனம் அந்த உருவத்தின் மீதே குவிந்து பதிகிறது. அந்த நிலையில் அந்தத் தெய்வ உருவத்தின் தரிசனம் கிட்டுகிறது. இந்தத் தரிசனத்தையே உருவ தரிசனம்

அல்லது சொரூப தரிசனம் என்கிறோம். மற்றும் சில சந்தர்ப்பங்களில் மனத்தின் ஒருமுகத்தன்மை எய்திய ஒருவருக்கு இதயத் தூய்மையும் கைவந்த நிலையில் தேவ - தேவியர் தரிசனமும், முனிவர்களின் தரிசனமும் அவர் அதைப்பற்றி நினைத்திராத நிலையிலேயே கிட்டுகிறது. அவர் அவர்களிடம் அளவளாவலாம். தனது திறந்த கண்களுடன் நிஜமாகவே பார்க்க முடியும். இது போன்ற காட்சியையே விளக்க தரிசனம் (Objective vision) என்கிறோம். ஆனாலும் இதைத் திடமான விளக்கத் தரிசனம் என்றும் கூற முடியாது. ஏனெனில், இந்தத் தரிசனத்தை ஒரு குறிப்பிட்ட ஆன்மிக சித்தி நிலை கைவரப் பெற்றவர் மட்டுமே காண முடியும். இந்த ஆன்மிக சித்தி நிலையுள்ளவருக்கு வெகு அருகில் நிற்கும் ஆன்ம சித்தி பெறாதவரால் இந்தக் காட்சியைக் காண முடியாது. ஆகவே, விளங்கும் விளக்க தரிசனத்தை இந்தத் தலைப்பிலுள்ள வார்த்தைகளுக்கும் அப்பாற் பட்ட விளக்கக் காட்சி என்றே சொல்ல வேண்டும். ஆகவே, ஒரு தரிசனம் உருவத்தினதாகவோ, விளக்கத் தினதாகவோ அதற்கும் மேலானதாகவோ இருக்கும்.

**வியாழன், 6, ஜூலை, 1933**

**8. கடவுளின் கருணை, குருவின் கருணை இரண்டுக்கும் வேறுபாடு கிடையாது.**

**தெளிவுரை:-**

குருவின் நிலை மிகவும் மேன்மையான உயர் நிலை. எல்லாருமே குருவாகிவிட முடியாது. ஒரு உண்மையான குருவைப் பிரம்மாவாகவும் (படைப்புக் கடவுளாகவும்), விஷ்ணுவாகவும் (காப்பவராகவும்), மகேஷ்வரராகவும் (பிரளயக் கடவுளாகவும்) விளக்கியுள்ளனர். இறை தரிசனம் பெற்றவரே உண்மையான குரு. இறை தரிசனம்

பெற்றவர் இறைவனாகவே ஆகிறார். ஆகவே கடவுளின் கருணைக்கும், குருவின் கருணைக்கும் இடையே வேறுபாடு கிடையாது.

**சனிக் கிழமை, 8 ஜூலை, 1933**

9. **விளைவும், எதிர்விளைவும்:** ஒரு உயிரின் மனம், உடல் செய்கைகள் ஒவ்வொன்றுக்கும் இரு பக்கங்கள் அல்லது நிலைகள் உள்ளன. அவையே விளைவும் எதிர் விளைவும் ஆகும். ஒரு சாதகன் (ஆன்மிகப் பயிற்சியை மேற்கொண்டவன், சாதனையின் போது தனக்குக் கிட்டும் விளைவினால் முழுப் பலத்தையும் எய்திய நிலையை உணர்கிறான். அவன் தான் எதை வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் செய்ய முடியும் என நினைக்கிறான். விவேகமும் (பகுத்தறிவு ஆற்றலும்), வைராக்கியமும் (பந்த பாசங்களில் பற்று வைக்காத நிலையும்) மிகவும் கூர்மையும், உறுதியும் பெறுகின்றன. உடல் மன நிலைகள் ஆரோக்கியத்துடன் விளங்குகின்றன. சுற்றுச் சூழலும் தனக்குச் சாதகமாகவே காணப்படுகிறது. அவர் ஆன்மிகத்தில் முன்னேறி வருவதாகவே நினைக்கும் நிலை ஏற்படுகிறது. ஆனால் இந்த முன்னேற்ற நிலை நீடித்து நிற்பதில்லை. திடீரென எதிர் பாராத விதத்தில் சாதகனுக்குப் பலத்த அதிர்ச்சி ஏற்படு கிறது. அதனால் வீழ்ச்சியும், அதைத் தொடர்ந்து தன் முன்னேற்றத்தில் தடையும் ஏற்பட்டு விட்டதாக அந்தச் சாதகன் நினைக்கிறார்.

எதிர்விளைவின்போது சாதகன் குழம்பிய நிலைக்கு ஆளாகிறார். சூழ்நிலைகளும் தனக்குப் பாதகமாவதை உணர்கிறார். தினசரி வேலைகளும் சரிவர நடை பெறுவதில்லை. உடல் - மன ஆரோக்கியமும் சமச் சீராக இருப்பதில்லை. அவர் நம்பிக்கை இழக்கிறார். அது

போன்ற நிலையில் அவர் பலவீனராகிறார். அவர் மனம் சோம்புகிறது. செயலிழந்து காண்கிறார். புலன்கள் மட்டும் விழிப்புடன் தீவிரமாகின்றன. ஒவ்வொரு புலனு ணர்வுப் பொருளுமே அவருக்குக் கவர்ச்சியாகப் புலப் படுகிறது. அதிலும் காம உணர்வின் கை மேலோங்கு கிறது. காலத்தை எப்படிக் கழிப்பது என்று தெரியாத மந்த நிலை, மனத்தின் பலவீனம், குரூரம் நிறைந்த சுபாவங்கள் சாதக சமயத்தில் அடக்கி வைக்கப்பட்டவை, அடங்கி இருந்தவை, இப்போது அவற்றுக்கான முழுப் பலத்துடன் உத்வேகத்துடன் சீறிக்கொண்டு வெளிப்படு கின்றன. அந்த நிலைக்காளான மனிதன் பொறுமை யிழந்து விடுகிறான். இனம் புரியாத கவலை அவனை ஆட்கொள்ளுகிறது. எந்த ஒரு காரணமுமின்றி, ஏன் என்று தெரியாத நிலையில் இந்த மனோநிலை தீவிர மடைகிறது. அது போன்ற சமயங்களில் நல்ல நண் பர்கள் மத்தியில் இருப்பதுகூட எரிச்சலாகி விடுகிறது. இதற்குச் சரியான விளக்கம் தெரியாத காரணத்தினா லும், மன ஆறுதல் கூறித் திருப்ப ஆளில்லாததினாலும், இது போன்ற கடும் எதிர் விளைவுகளின் போது பாழா கின்றனர். பலர் தற்கொலையும் செய்து கொள்கின்றனர்.

சாதகனுக்கு மட்டுந்தான் இத்தகைய எதிர் விளைவுகள் ஏற்படுகின்றன என்பதல்ல; மற்றவர்கள்கூட ஏதாவது ஒரு உருவத்தில் இத்தகைய எதிர் விளைவு களைச் சந்தித்தேயாக வேண்டும். விளைவும் - எதிர் விளைவும், முன்னேற்றமும், வீழ்ச்சியும் வாழ்வில் இயற்கை யாக நிகழ்பவை. ஒவ்வொருவருக்கும் இது நடந்தே தீரும். யாருமே இதைத் தவிர்க்க முடியாது. ஆனால், எதிர் விளைவுகள் நிகழும் காலத்தின் அளவு வெவ்வேறு நபர்களின் நிலைகளுக்கேற்ப வேறுபடும். சிலரிடம் அந்த

எதிர் விளைவின் காலம் ஓரிரண்டு நாட்களே இருக்கும். வேறு சிலரிடம் அது ஒரு வாரம் அல்லது இரு வாரங்களாகவும் நீடிக்கும். மற்றும் பலரிடம் அது பல மாதங்கள்கூடத் தொடர்ந்து நீடிக்கும். அது போன்ற நேரத்தில் அவர் எதிர் விளைவின் காலகதியில் சிக்கியிருப்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அப் போது ஏற்படும் வேதனைகள் விரைவிலேயே மறைந்து போய்விடப்போகின்றன என்ற எண்ணத்துடன் இருக்க வேண்டும். அடுத்து தினசரி செய்யும் ஆன்மிக சாதனைப் பயிற்சியை விடாமல் முறைப்படி செய்து கொண்டு வர வேண்டும். மேலும் தினந்தோறும் செய்யும் ஜபம், தபம் போன்றவற்றை எந்த வகையிலும் விடாமல் முயன்று செய்ய வேண்டும். அதற்கடுத்து மனம் உருகிப் பிரார்த்தனை செய்ய வேண்டும். ஆழ்ந்த ஈடுபாட்டுடன் கடவுளை வேண்டி, தன்னை நிகழும் அபாயத்திலிருந்து காப்பாற்றிச் சரியான பாதையில் கொண்டு செலுத்த வேண்டுமென முறையிட வேண்டும். நான்காவதாக அருளாளர்கள், பக்தர்கள் குழாமில் சேர்ந்திருக்க விழைதல் வேண்டும். அவர்களுடன் சேர்ந்திருப்பது நோய் தீர்க்கும் மருந்தின் பலனை அளிக்கும். இறுதியாக ஒருவர் பொறுமையுடன் நம்பிக்கை இழக்காமல் விடா முயற்சியுடன் இருக்கத் தனக்குத் தானே பழகிக் கொள்ள வேண்டும். தோல்விகளின்போது பொறுமையும், விடா முயற்சியும் மிகுந்த பலனளிக்கும். மேன்மை தரும். எப் போதும் அவை வெற்றிக்கு வழிகோலும் சிறப்புடைய பண்புகள் என்பதை நினைவில் நிறுத்த வேண்டும். வேதனை, சோதனைகளின்போது நம்பிக்கை, முயற்சி களைக் கைவிடுபவன் பாழடைந்து போவான். அவன் மீளாத நரகத்தில் அமிழ்ந்து விடுவது திண்ணம்.

**திங்கட்கிழமை, 17, ஜூலை, 1933**

## 10. ஞானம் இருவகை மெய்ஞ்ஞானம், அஞ்ஞானம்.

**தெளிவுரை :--**

ஞானம் இரு வகைப்படும். மெய்ஞ்ஞானம்- அஞ்ஞானம் ஆகும். ஒன்று, ஆன்ம விடுதலைக்கு அழைத்துச் செல்வது. மற்றொன்று பந்தத்தில் ஆழ்த்துவது.

பெரும்பாலான மனித ஜன்மங்கள் அஞ்ஞானிகளாகவே உள்ளனர். மெய்ஞ்ஞானத்தை ஒரு சிலரே பாடுபட்டுத் தேடி எய்துகின்றனர். தன்னுள் உறையும் "பேருண்மை"யை அறிந்து கொள்வதும் தெய்வீக தரிசனம் பெறுதலும் அவைகளால் நிலையான அமைதியையும் பேரானந்தத்தையும் பெறுவதுமே மெய்ஞ்ஞானம். அஞ்ஞானம் என்பது அறிந்து கொண்டோம் என நினைக்கும் உலகாயத ஞானமே. இந்த ஞானம் பொருள் சேர்ப்பது, பெயரும் புகழும் ஈட்டுவது, புலன் போகங்களைத் துய்ப்பது போன்றவைக்கு உதவும். மனித குலத்தில் பெரும்பாலோர் இந்த உலகாயத ஞானத்தையே முடிவானதென்று எண்ணி அதையே பின்பற்றுகின்றனர். ஒரு சாதாரண மனிதன் இதற்காகத் தனது ஆற்றலை எவ்வளவோ செலவிட்டு வீணடித்துக் கொண்டிருக்கிறான். அவற்றைக் கைக்கொள்ள எவ்வளவு துன்பங்கள், வேதனைகள், கஷ்டங்கள், நஷ்டங்கள் அனுபவிக்க வேண்டியுள்ளது அவனுக்கு! சாதரணனுடைய வாழ்நாள் முழுவதுமே உலகாயதப் பொருள்களைத் தேடுவதில் வீணடிக்கப்பட்டு, அதற்காக அவன் எவ்வளவு துன்பங்களையும் வேதனைகளையும் சுமந்து செல்கிறான்? அவனுக்கு அடி மேல் அடி விழுகிறது. சோதனை மேல் சோதனைகளைச் சந்திக்கிறான். அதையே நம்பி

நம்பின் கெடுகிறான். அய்யகோ - பரிதாபத்திற்குரிய மனிதனே! அஞ்ஞானத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டு நரகத்தில் அமிழ்ந்து துன்பப்படாதே! உண்மையான ஞானத்தைப் பெற முயலுக. கடவுளைப் பற்றிக் கொள். பேரமை தியையும், பேரானந்தத்தையும் அனுபவி!

**திங்கட்கிழமை - 17, ஜூலை, 1933**

11. எரியும் நெருப்பிலிருந்து நெருப்பின் முயற்சியின்றியே தீப்பொறிகள் தெறிப்பதுபோல் பிரம்மத்திலிருந்து "படைப்பு" நிகழ்கிறது. தனியே வந்த தீப்பொறிகள் சிறிது நேரம் சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றன - அணைந்து விடுகின்றன. அருட்பெருஞ்சோதியுடன் (Cosmic Fire) கலந்துவிடுகின்றன. அது போன்றதே படைப்பு.

**தெளிவுரை:-**

பிரம்மம் படைப்பின் ஆதிபெருங்காரணம். எந்த ஒரு நோக்கமுமின்றித் தன்னிச்சையில் தீப்பொறிகள் எரியும் நெருப்பிலிருந்து தெறிப்பது போலப் "படைப்பும்" யாதொரு நினைப்புமற்ற பிரம்மத்திலிருந்து சுயம்புவாகத் தானே தோன்றி வெளிப்படுகிறது. தெறித்தெழுந்த தீப்பொறிகள் தனியே சிறிது நேரம் ஒளி விடுகின்றன. பின்னர் அணைந்து பரவெளித் தீயில் (Cosmic Fire) கலந்து மறைகின்றன. அது போலவே படைப்பும் சிறிது காலமே (காலவரையற்ற பரம் பொருளின் காலத்துடன் ஒப்பிடுவோம்) இருந்து முடிவில் பிரம்மத்திலேயே இலயித்து விடுகிறது.

இந்த "இலயம்" அல்லது படைப்பில் தோன்றிய உயிர்கள் திரும்பிப் போய்ப் பிரம்மத்தில் கலப்பதையே மோட்சம் என்றும், "ஆன்ம விடுதலை" எனவும்

சொல்கிறோம். ஆகவே, படைக்கப்பட்ட எல்லா உயிர்களுமே என்றாவது ஒரு நாள் மோட்சத்தை எய்தியே தீரும்.

**செவ்வாய்க் கிழமை, 18, ஜூலை, 1933**

**12. மாறுபட்ட இடங்களுக்கேற்ப "அன்பு" மாறுபடுகிறது. அது மாறுபட்ட அளவுகளைக் கொண்டது.**

**தெளிவுரை:-**

அன்பு பலதரப்பட்டது. சுயமான அன்பு, தன் சொந்தத் தாயார், தந்தை, மூத்த சகோதரர்கள், இளைய சகோதரர்கள், தமக்கைகள், தங்கைகள், மனைவி, புத்திரர், புத்திரிகள், மாமன் - சிற்றப்பன்கள், சித்தி அத்தை பெரியம்மாக்கள், நண்பர்கள், மற்ற உறவினர்கள் மீது காட்டும் அன்பு. தான் சார்ந்துள்ள மதம், தன் சமூகம், தன் வீடு, பிறந்த ஊர், தன் நாடு, தன் தேசம், மானுட சாதி, மற்ற உயிர்கள் போன்றவற்றின் மீதுள்ள அன்பு. இந்த எல்லா வகை அன்பின் தாரதம்மியமும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. இரு வகையினது அன்பும் சமமாகவோ ஒரே சீராகவோ இருப்பதில்லை. அவை ஒன்றுக்கொன்று வித்தியாசப்படும். இந்த எல்லா வகை அன்பும் மூன்று பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை; இலேசான அன்பு, நடுத்தர அன்பு, ஆழ்ந்த அன்பு ஆகும். உதாரணத்திற்கு ஒருவர் தன் சொந்தப் பெற்றோரிடமும் மற்ற உறவினர்களிடமும் காட்டும் அன்பு இலேசானதாகவோ நடுத்தரமானதாகவோ, ஆழ்ந்ததாகவோ அளவில் மாறுபட்டு இருக்கும். இந்தப் பல்வகை அன்பின் தரங்களில் ஒருவர் தன் உயிர் மீது வைத்திருக்கும் அன்பு எப்போதும் ஆழ்ந்த அன்பின் தரத்தினதாகவே இருக்கும். மற்ற எல்லாவகை அன்பும் இந்தச் சொந்த உயிர் மீது வைத்துள்ள அன்பை

மையமாகக் கொண்டே வளைய வரும். சாதாரண மனிதனிடம் காணப்படும் இந்தப் பல தரப்பட்ட அன்பின் வேகம் மாறுபட்டே இருக்கும். ஆனால், இறையுணர்வு பெற்ற அல்லது பிரம்மத்தை உணர்ந்த மகான் எல்லா உயிர்களிடமும் சீரான ஒரே மாதிரியான ஆழ்ந்த அன்பையே காட்டுவார். அதனாலேயே ஒரு மகானை அணுகும்போது அனைத்து இதயங்களையும் ஈர்க்கும் சக்தி அவருக்கு இருக்கிறது.

**வியாழக் கிழமை, 20 - ஜூலை, 1933**

13. ***புலன் போகங்களை அனுபவிக்கும்போது சுவையாக இருக்கிறது. ஆனால், இந்தச் சுவை தற்காலிகமானது. புலன்களை வெல்வது அதாவது, நம்முடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது அதிக இன்பத்தைத் தருவதாகும். இந்த இன்பம் நீடித்து நிற்கக் கூடியது. சமாதி நிலையை எய்தியவுடன் எல்லா ஆசைகளும் தாமாகவே அறுபட்டுப் போகின்றன. இந்த நிலை ஆனந்தமானது. இந்த ஆனந்தமே நிலையானது.***

**தெளிவுரை:-**

புறப் பொருள்களினால் விளையும் எல்லாச் சுகங்களும், புலன் போகச் சுவைகளும் கண நேரம் இருப்பது-தற்காலிகமானது. இவைகளால் ஏற்படும் பின் விளைவுகள் பந்தமும் வேதனையும் ஆகும். எல்லாப் புலன் போகங்களுமே குறுகிய காலமிருப்பவை. இவற்றில் சில, சில கணங்கள் அல்லது நிமிடங்களே நிற்பவை. இந்தப் புலன்களின் மீதான ஆசையைக் கட்டுப்படுத்தித் தன் சுவாதீனத்தில் கொண்டு வருவது இன்பம் தர வல்லது. தன்னைத் தானே கட்டுப்படுத்தும் பயிற்சியைப் பயில்பவன் மன அமைதியைத் துய்க்கிறான். உறுதியான உள்ளுணர்வின் ஆற்றலை எய்துகிறான். ஒருவர் தனது

புலன்களைப் போகங்களில் அமிழ்த்திச் சுவைப்பதைவிட அதிக ஆனந்தம் அவர் அந்தப் புலன்களைக் கட்டியாள்வதில் கிடைக்கிறது. இந்த ஆனந்தம் நீடித்து நிற்கிறது. சமாதி நிலையை எய்திய பிறகு எல்லா ஆசைகளும் தாமாகவே விலகி விடுகின்றன. அதன் பிறகு மேன்மையான ஆனந்தமும் பேரானந்த அமைதியும் நிலைத்து நிற்கின்றன. சமாதிப் பேற்றின் ஆனந்தம் மற்றெல்லா ஆனந்த நிலைகளையும்விட மேன்மையானது.

**வியாழக் கிழமை, 20 ஜூலை, 1933**

14. ***ஆசைக்கு வெளியிலிருந்து வரும் முட்டுக்கட்டை கோபத்தை மூட்டுகிறது. ஆசையை நாமே கட்டுப்படுத்திக் கொள்ளும்போது உள்ளுணர்வின் ஆற்றல் பெருகுகிறது. வலுப் பெறுகிறது.***

**தெளிவுரை:-**

ஓர் ஆசைக்கு வெளியிலிருந்து வரும் தடங்கல் எரிச்சலைக் கிளப்புகிறது. அதன் பிறகு விளையும் மாற்றம் சினத்தை விளைவிக்கிறது. பகுத்தறிவைக் கொண்டு ஒருவர் ஆசையைக் கட்டுப்படுத்த ஆரம்பிக்கும் போது உள்ளுணர்வின் ஆற்றல் தோன்றுகிறது. ஒவ்வொரு முறை ஆசை வராமல் தடுக்கும்போதும் அந்த ஆற்றல் மேலும் மேலும் உரம் பெறுகிறது. கட்டுப்படுத்தாமல் அதன் போக்கில் விடப்படும் ஒவ்வொரு ஆசையும் ஒருவனைப் பலவீனனாக்குகிறது. மனத்தின் வலிமை சிதறடிக்கப்படுகிறது. மாறாக ஒருவர் ஏற்படும் ஆசைகளை அடக்கி ஆளும் ஒவ்வொரு முறையும் அவரது உள்ளுணர்வின் ஆற்றல் மேலும் மேலும் வலுப்பெற்று மன வலிமையும் மன ஒருமைப்பாடும் கிட்டுகிறது.

**வியாழக்கிழமை, 20 ஜூலை, 1933**

**15. ஞானம் ஆற்றல் மிக்கது. அறியாமை பலவீனமானது. ஆற்றல் வாழ்வு அளிப்பது. பலவீனம் மரணத்திற்கு வழி வகுப்பது.**

**தெளிவுரை:-**

ஞானம் இரு வகைப்படும். சாதாரண ஞானம். மேன்மையான ஞானம். சாதாரண ஞானம் என்பது சமூக ஞானம் அல்லது உலகாயத ஞானம். மேன்மை யான ஞானம் என்பது ஆன்மிக ஞானம் அல்லது இறை யுணர்வு பெறுவது. ஒரு மனிதன் கடவுள் தரிசனம் பெற் றுத் தன் ஆன்மாவை ஒவ்வொரு பொருளிலும் கண்ட வுடன் அச்சம் என்ற உணர்வு அவனிடம் அற்றுப் போ கிறது. இறை தரிசனம் பெற்றவர் மாபெரும் ஆற்றலுடன் உலா வருகிறார். இந்தத் தரிசன சக்தி எய்திய மனிதன் ஒருமுகப்பட்ட முழு மனத் திட்பத்தை உடையவனா கிறான். உண்மையான மன அமைதியையும், பேரானந் தத்தையும் அனுபவிக்கிறான். அறிவீனம் என்பது இழிந்த பலவீனத்தைத் தருவது. அறிவில் குறைந்தவனுக்கு இந்த உலகில் அஞ்சாத பொருள் ஏதுமிருப்பதில்லை. அவனு டைய இயல்பான சாவுக்கு முன்னர் பலமுறை இறந்து இறந்து பிழைக்கிறான். அவன் மனம் சஞ்சலித்த வண்ணம் சிதறுண்டு போகிறது. அமைதி அற்று விடு கின்றது. மனமானது ஒருமைப்பாட்டுக்குப் பதிலாகப் பேதங்களையே பார்க்கிறது. தொடரும் தொல்லை களுக்கு முடிவே இருப்பதில்லை.

உலகில் "பலவீனம்" என்பதுவே மிகப் பெரிய பாவம். பலவீனனுக்கு வளமாக வாழ முடிவதில்லை. ஆன்மிகத் தெளிவு கிஞ்சித்தேனும் கிட்டுவதில்லை. அவன் எங்கு சென்றாலும் வாழ முடியாத நிலை. பலவீன மனம்

படைத்த மனிதர்கள்தான் மிகவும் அதிக வேதனைக்கு ஆட்படுகிறார்கள். உடல் நலங் குன்றியவன் உலகாயத வாழ்விலோ ஆன்மிக நெறியிலோ முன்னுக்கு வரவே முடியாது. வேண்டுவதெல்லாம் வலிமை. வலிமை மிக்க உடல், வைரம் பாய்ந்த மனம், உறுதி மிக்க உள்ளுணர்வின் ஆற்றல் - மிக மிக இன்றியமையாதன. உண்மையான ஆற்றல் படைத்தவன் வெற்றியோடு விளங்குகிறான். வளமாக வாழ்கிறான். உடல் வனப்பும், மன வலிமையும் ஓங்கியுள்ளன. பலவீனனுக்கோ எங்கு சென்றாலும் தீராத வேதனைதான். வாழ்க்கையில் தோல்வி சாவைவிடக் கொடியது.

**வியாழக் கிழமை, 20, ஜூலை, 1933**

16. **பேருண்மை ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உரிய பொதுச் சொத்து. அது போன்றதே மாபெரும் மகான்களுடைய அருளுரைகளும்! எந்த ஒரு மனிதனோ, தனிப்பட்ட சாதியோ, எந்த ஒரு பிரிவினரோ, தனிப்பட்ட இனமோ இவை தமக்கே உரியன என்று சொந்தம் பாராட்ட முடியாது.**

**தெளிவுரை:-**

தட்ப - வெப்பம், ஒளி - இருள், நீர், காற்று, ஆகாயம் போன்றவை ஒவ்வொரு உயிருக்கும் சொந்தமான பொதுச் சொத்துக்கள். எந்த ஒரு மனிதனோ, சாதியோ, பிரிவோ, இனமோ, தேசமோ இவை தமக்கே உரியவை என உரிமை கொண்டாட முடியாது. அது போலவே "பேருண்மை"யும் ஒவ்வொரு உயிருக்கும் உரிமையானது. நேர்மையான வழியில் சென்று நிலையான நெறி தவறாத முயற்சியை மேற்கொள்பவர்களுக்குப் பேருண்மையின் பலன் கிட்டுகிறது. சாதி, இனம், நிறம், ஆண் - பெண் இரு பாலார், தேசம்

போன்றவை பேருண்மைப் பேற்றை எய்துவதற்கான வழிக்குத் தடையாக இருப்பதில்லை. எந்த ஒரு ஆணோ அல்லது பெண்ணோ உண்மையுடன் பாடுபட்டால் அதை எய்த முடியும். அதற்கான பாதை ஒவ்வொருவருக்கும் திறந்தே இருக்கிறது.

மகான் என்பவர் இறை தரிசனம் பெற்றவர். கடவுள் அல்லது முடிவான பேருண்மை ஒன்றே ஒன்றுதான். இரண்டாவது கிடையாது. எல்லா மகான்களுமே "பேருண்மை என்பது ஒன்றே" எனப் பறைசாற்றியுள்ளனர். மகான்கள் கூறும் மொழியும், பாணியும் மாறுபடும். ஆனால், அவைகளின் பொருள் ஒரே உண்மையைப் பற்றியதாகவே இருக்கும். ஒரு மகான் ஒரு குறிப்பிட்ட தேசம், இனம், ஆண் அல்லது பெண், சாதி, பிரிவு அல்லது நிறத்துக்கு மட்டுமே சொந்தமானவர் அல்ல. அவர் கடவுளைப் போன்று அனைத்துக்கும் அப்பாற்பட்டவர். மகான்களின் அருளுரைகள் பொதுவில் மனித குலம் பூராவுக்கும் பயனளிப்பவை. அது ஒரு குறிப்பிட்ட தேசம் அல்லது மனிதன் போன்றவற்றுக்கு மட்டுமே உதவும் என்பதல்ல. இவைகளை ஓர் இனம், நாடு போன்ற பேத நிலைக்கு உட்படுத்தவே முடியாது. இவ்வாறு பிரிவினை கொண்டு பேசினால் அது அதிகப் பிரசங்கித்தனம்.

**ஞாயிறு, 23, ஜூலை, 1933**

17. ***கவிதை தெய்வீகத்தின் வாசனையை முகர்கிறது. விளையும் பரவச நிலை அதைச் சிறிதளவே சுவைக்கிறது. ஆனால், சமாதி நிலை இவைகளையெல்லாம் கடந்து செல்லும் நிலை. இந்நிலை அந்த இனியதைச் சுவைத்து மேலும் சுவைத்து அந்தச் சுவையைப் பிரித்தெடுக்க முடியாத சுவையோடு சுவையாக***

**இரண்டறக் கலககுங்கும் நிலை. சுவைத்து, மறு முறையும் சுவைத்து அதிலேயே இலயித்து விடுகின்றார். தீஞ்சுவைக் கவிதைப் பரவசத்தில் இலயித்து, பரவசம் சமாதியில் ஆழ்ந்து விடுகின்றது.**

**தெளிவுரை :-**

கவிஞன் கற்பனையில் வாழ்கிறான். அவனது கவிதையில் எவ்வளவோ அழகு இருக்கும். அந்தக் கவிதைக் கருத்துக்கள் உன்னதமும், ஈர்ப்பும் நிறைந்திருக்கும். இருந்தும் அந்தக் கவிஞன் கற்பனை உலகில் தான் சஞ்சரித்துக் கொண்டிருப்பான். அந்தக் கவிஞன் கடவுளையும் அவருடைய சிறப்பையும், ஆற்றலையும், ஈடு இணையற்ற பாசுரங்களில் புகழ்வான். வெகு தூரத்திலிருந்தபடி ஒரு மலரின் வாசனையை நுகரும் நிலையைவிட இது மேலான நிலையல்ல. இதைவிடப் பரவச நிலை மேலும் ஒரு படி அதிகமானது. அது கவிதை பாடும் நிலையைவிட உயர்ந்த நிலை. பரவசப்பட்ட நிலை பெற்ற மனிதன் கற்பனை நிலை மனிதனை விட மிகவும் உயர்ந்தவன். எப்படி? கற்பனை நிலை வெகு தூரத்திலுள்ள இனிமையானதொரு பொருளை உணர்த்துகிறது. ஆனால், முழுதும் புரிந்து கொள்ள இயலாத சமிக்ஞை நிலை.

இந்த உணர்வு பரவச நிலையை விளைவிக்கின்றது. பரவச நிலை என்பது தூரத்திலுள்ள அந்த இனிய பொருளைக் கையிலெடுத்துச் சிறிதே சுவைக்கும் நிலை. ஆனால், சமாதி நிலை இவைகளை யெல்லாங் கடந்து செல்லும் நிலை. இந்த நிலை அந்த இனியதைச் சுவைத்து, மேலும் சுவைத்து, மன நிறைவு பெறும் அளவுக்குச் சுவைத்து - அந்தச் சுவையைப் பிரித்தெடுக்க முடியாது - சுவையோடு சுவையாக இரண்டறக் கலந்த நிலை.

அதாவது, சமாதி நிலையில் ஒருவன் உண்மையான பேரானந்த நிலையை அனுபவித்து எல்லையற்ற பரவெளியில் சங்கமிக்கும் நிலை.

இதை ஒரு படி மேலேயே விளக்கலாம். தெய்வப் பாசுரம் அல்லது தெய்வீகக் கவிதை ஒருவரைப் பரவச நிலைக்குக் கொண்டு விடுகிறது. அந்தப் பரவச நிலை தொடர்ந்தால் சமாதி நிலையைக் கிட்டச் செய்கின்றது. தினந்தோறும் ஒருவர் தெய்வீகப் பாசுரங் களைப் பாடி வந்தால், அது அவருடைய மனத்தைத் தூய்மைப்படுத்துகிறது. இதே நிலை நீடித்தால் அவர் அந்தப் பாசுரங்களின் பொருளில் இலயித்து விடுகிறார். இந்த இலயித்த நிலை பரவச நிலைக்குக் கொண்டு செல்கிறது. இந்தப் பரவசநிலை மீண்டும் மீண்டும் பெருகி வரத் தொடர்ந்து பயின்று வந்தால் அது சமாதி நிலையைச் சித்திக்கச் செய்கிறது. கவிஞனோ, தெய்வீகப் பாசுரங்கள் இசைப்பவனோ இந்தப் பரவச நிலையை வளர்த்துக் கொண்டால், அவருக்குப் பாடும் நிலை மாறி விடுகிறது. பாடும் நிலை நிலையாகி (பரவசப்பட்ட நிலையாகி) பாடுவது அறவே அமிழ்ந்து மறைந்து நின்று விடுகிறது. எப்படி? பாடல்கள் பாவ நிலையில் (பரவசத்தில்) ஆழ்ந்து அமிழும்போது மனம் சமாதி நிலைக்குள் கரைந்து போகிறது. பாவ நிலையும் கரைந்து விடுகிறது. ஆகவே, கவிதை பரவசத்தில் இலயித்து, பரவச நிலை சமாதிக்குள் சங்கமிக்கிறது.

**புதன் கிழமை, 26 - ஜூலை, 1933**

**18. அறியாமை இரு வகைப்படும். தூய அறியாமை. மாசு நீங்காத அறியாமை.**

**விளக்கவுரை:-**

அறியாமை என்பது இரு வகைப்படும். அதாவது, முரட்டுத்தனமான அறியாமை, பண்பட்ட அறியாமை ஆகும். முதலில் சொன்ன அறியாமைத்தனம் அநாகரிகமான படிப்பறிவில்லாதவர்களிடம் இருப்பது. அதுவே முரட்டுத்தனமான அல்லது மாசு நீங்காத அறியாமை.

பின்னது நாகரிகமான படித்தவர்களிடம் காணப் படும் பாமரம். இதுவே தூய அறியாமை அல்லது நாகரிகமான அறியாமை

ஒருவர் நன்றாகப் படித்தவராக இருக்கக்கூடும். பல விஷயங்களில் நிபுணத்துவம் பெற்றிருப்பார். சாத்திரங்களை கற்றறிந்தவராகவும், இருப்பார். இவ்வளவு இருந்தும் "முடிவான பேருண்மைப் பொருள்" என்ன என்பதை விளங்கிக் கொள்ளாதவராகவே இருப்பார். கடவுள் தரிசனம் கிட்டாத வரைக்கும் அவர் அறிவு முற்றுப்பெறாததாகவே இருக்கும். புத்தக அறிவு எவ்வளவு இருப்பினும் அறிவு நிலையில் அவர் முழுமை பெறவில்லை என்பதுவே உண்மை. உண்மையான ஞானம் இறையுணர்வு பெற்ற பின்னரே கிட்டுகிறது. ஆகவேதான் அறிவீனம் இரு பிரிவுகள் கொண்டது என்று கூறினோம். முரடர்களின் அறிவீனம், நாகரிகமானவர்களின் அறிவீனம் என்றோம்.

**வியாழக் கிழமை, 27 ஜூலை, 1933**

19. **விடியலின் தங்க நிறக் கிரணங்கள் சூரியனின் தோற்றத்துக்குக் கட்டியம் கூறுகின்றன. கவிஞனின் சிதறிய சிந்தனை கவிதை பிறப்பதற்குக் கட்டியம் கூறுகிறது. ஒரு மனிதனின் நற்குண - நற்பண்புகள் அவனிடம் பேரறிவு அல்லது ஞானம் பிறக்கப் போவதை முன்னறிவிப்புச் செய்கிறது.**

**தெளிவுரை:-**

விடியற்காலையில் கீழ் வானத்தில் தங்க நிறம் பளிச் சிடுவதைக் காணலாம். அதைப் பார்த்ததும் ஒருவர் சூரியன் உதயமாகப் போவதைக் கண்டு கொள்கிறார். ஒரு கவிதையைப் புனைவதற்கு முன்னர் அந்தக் கவிதைக் கான மையக் கருத்தும், சிந்தனையும் கவிஞனின் மனத்தில் சிதறிக் கிடக்கின்றன. இந்தச் சிதறிய கருத்துக்களின் தோற்றம் கவிதை ஒன்று பிறக்கப் போவதை அடையாளங் காட்டுகிறது. "எந்த ஒரு மனிதனோ அல்லது எல்லா மனிதர்களுமோ ஞானம் பெறலாம்" என்பது இயலாது. குணமென்னுங்குன்றேறிச் சுடர்விடும் பண்பாளனுக்கு மட்டுமே ஞானம் சித்திக்கும். "பேருண்மை" தரிசனம் கிட்டும். தூய்மை, தெய்வீகம், சத்தியம், அடக்கம், கற்பு, ஒழுக்கம், ஈகை, அமைதி, தன்னடக்கம் போன்ற குண நலன்கள் ஒருவனிடம் கூடிவரும்போதே அவனிடம் வால றிவு அல்லது ஞானம் உதயமாகப் போகிறது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

**வியாழக் கிழமை, 27, ஜூலை, 1933.**

20. ***அளவுக்கு மீறுவது தோல்வி தரும். வெளிச்சங்காட்ட விளக்கு எப்படியோ அப்படித்தான் ஆத்மாவிற்கு (உயிருக்கு) உடல் அமைந்துள்ளது.***

**தெளிவுரை:-**

அளவுக்கு மீறிப் போவது வீணாகிவிடும். உடலைப் பற்றிய கவலையாகவே இருந்து அதைக் கொழுக்க விட்டால், அது ஆபத்தானது. கண்டதைத் தின்று அதைக்குறித்த நினைவாகவே இருந்தால் கேடு விளையும். அத்தகைய ஒருவர் ஆன்மிக உயர்வுக்கான பாதையைத் தவற விடுகிறார். அவரால் வாழ்வின் இலட்சியத்தின் எல்லையைப் போய்ச் சேரவே முடியாது. குறிக்

கோளைத் தவற விடுகிறார். அதற்காக அடியோடு உடல் நலத்தை நோன்பிருந்து அலட்சியப் படுத்துவதும் கூடாது. இந்த அலட்சியப் போக்கினால் மோட்சமோ ஆன்ம விடுதலையோ கிட்டி விடாது. இவரும் பாதையைத் தவற விடுபவரே! இந்த இரண்டுமே அளவுக்கு மீறிய நடைமுறைகளாகும். இவைகளுக்கு இடைப்பட்ட இயல்பான நடைமுறையே நல்லதாகும்.

அதாவது, உடல் நலத்தில் அளவு கடந்த கவனத்தைச் செலுத்துவதும் தவறு. அடியோடு நோன்பு, விரதம், பத்தியம் என ஒதுக்குவதும் கூடாது. ஒரு விளக்கை எடுத்துக் கொள்வோம். அது எதற்காக இருக்கிறது? நல்ல வெளிச்சம் காட்டுவதற்காக உள்ளது. பிரகாசமான ஒளியைப் பெற அதைச் சுத்தமாகத் துடைத்து வைத்துக் கொள்ள வேண்டும். திரியைச் சிட்டம் கட்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கண்ணாடிச் சிமிழைப் புகை இல்லாமல் தும்பு தூசைத் துடைக்க வேண்டும். பிடிக்கும் அளவு எண்ணெயை நிரப்பிக் கொள்ள வேண்டும். இவைகளை யெல்லாம் கவனத்துடன் செய்தால் விளக்கிலிருந்து நல்ல வெளிச் சத்தைப் பெறமுடியும். மாறாக இவைகளில் ஏதாவ தொன்றைச் செய்யாமல் தவற விட்டாலும் - விளக்கு எரிந்தாலும் - ஒளி மங்கலாகவே இருக்கும். இது போன்றே கடவுள் தரிசனத்தைப் பெற உடலின் தூய்மையும், பாதுகாப்பும் இன்றியமையாதனவாயுள்ளன.. விளக்கைப் போன்று உடலைக் கவனி! அதற்குத் தேவையான உணவு, பானம், குளியல், உடை, ஓய்வு போன்றவைகளைக் கொடு. இதில் எதையும் விட்டு விடாதே! அதற்காக உடல், புலன்களின் மீது அளவுக்கு மீறிய பற்றை ஏற்படுத்திக் கொள்ளாதே. இது உடல்

நலத்துக்கான குறைந்த பட்சத் தேவைகளையும் கவனிக்காமல் அலட்சியப் படுத்தும் போக்கிற்குச் சமமானதாகும்.! இரண்டுமே குறிக்கோளை எய்த உதவாது. இந்த இரண்டுக்கும் இடையிலான மிதமான போக்கே சரியான பாதை. மிதமான போக்கைக் கடைப்பிடிப்பவர்களே வாழ்க்கையின் குறிக்கோளை எய்துவர். நல்வாழ்வுடன் விளங்குவர்.

**செவ்வாய்க்கிழமை, 8 ஆகஸ்டு, 1933.**

21. ***கவிதையும் தத்துவமும் பரம்பொருள் எனும் வட்டத்தின் எல்லையை மட்டுமே நெருங்குகின்றன. பரவச நிலை அந்த வட்டத்துக்குள் பிரவேசிக்கிறது. "சமாதி" வட்டத்தின் மையத்தை அடைகிறது.***

**தெளிவுரை:-**

"பரம்பொருள்" என்பதை இங்கே ஒரு "வட்டம்" எனக் கொள்வோம். "கடவுள்" என்பதை இந்த வட்டத்தின் "மையப்புள்ளி"யாகக் கொள்வோம்.

ஒரு கவிஞன் இனம் புரியாத நினைவாற்றலின் உந்துதலால் பாடுகிறான். ஒரு தத்துவவாதி கற்பனா சக்தியுடன் காலங் கழிக்கிறான். கவிஞனின் இந்தத் தன் விளக்கம் பெறாத நினைவாற்றலும், தத்துவவாதியின் கற்பனா சக்தியும் காரண காரியத்துடன் கூடிய உண்மையானதாகவும், அருள் வாக்கின் சக்தி பெற்றதாகவும் இருக்கும். இருந்தும் இந்த இருவகையினருமே "கடவுள்" நிலை மையத்திற்கு வெகு தூரத்திலேயே இருப்பவர்களாகின்றனர். அவர்களுடைய கவிதைகளும் காரண காரிய விளக்கங்களும் பரம் பொருளெனும் வட்ட விளிம்பில் சுற்றி வரும் சுழல் சொற்கள். முடிவுக்குள் இயங்கும் "மனம்" முடிவற்ற ஒன்றின் உண்மையை அறிய முடியாதே. மனம் இயங்காமல் அமைதி நிலை கூடி

வரும்போது ஒருவர் இந்தப் "பரம்பொருள்" என்ற ஒன்றை அனுபவத்தில் அறிகிறார். அதன் ஆனந்த நிலையை அனுபவிக்கவும் செய்கிறார். "பரம்பொருளை" விளக்க முடியாது. காரண காரியத்தைக் கொண்டு அறியவும் முடியாது. ஆனால், அதை மெய்யுணர்வாகப் பெறலாம் (ஸ்பரிசித்து உணரலாம்). இது சமாதி நிலையில் மட்டுமே கைவரப் பெறும்.

பரவசநிலை எய்தியவர் இவர்களைவிட மேலானவர். ஆன்மிக உயர்வில் கவிஞர் அல்லது தத்துவவாதியைவிட ஒரு படி மேலே இருப்பவர். எப்படி? பரவச நிலை எய்தியவர் பரம்பொருள் எனும் வட்டத்தின் விளிம்பையுங் கடந்து உள்ளே சென்றவர். அங்கிருந்தபடி கொஞ்சம் தூரமானாலும் "முடிவான பேருண்மை"க் காட்சியின் பார்வை அவர் கண்ணுக்குப் படுகிறது. ஆனால், சமாதி நிலை எய்தியவர் இவர்கள் அனை வரையுமே மிஞ்சிவிடுகிறார் ஏன்? அவர் முடிவான பேருண்மைக்கே போய்ச் சேர்ந்து விடுகிறார். அவர் அந்தப் "பேருண்மை"யை நேருக்கு நேர் காண்கிறார். "சமாதி" என்பது "பரவெளி" அல்லது " பரம் பொருள்" வட்டத்தின் மையப் புள்ளியைச் சேரும் நிலையாகும்.

**திங்கட்கிழமை, 28, ஆகஸ்ட், 1933**

22. ஒரு பொருள் - **அது ஒரு கருத்தாகவோ அல்லது கருத்தைக் குறிக்கும் விஷயமாகவோ இருப்பின் - அதன் மீது வைக்கும் விருப்பு வெறுப்புக் கேற்றபடிதான் மனத்தின் எண்ணப் பதிவுகள் மாறுபடும்.**

**தெளிவுரை:-**

ஒவ்வொரு ஆசையும், எண்ணமும், செயலும் மனதில் ஒரு எண்ணப்பதிவை பதிக்கின்றது. இந்த எண்ணப்

பதிவு, அது ஒரு பொருளாக இருப்பினும், கருத்தாக இருப்பினும், அந்தக் கருத்துக்கான விஷயமாயினும், நாம் அதன் மீது காட்டும் விருப்பு, வெறுப்புக்கேற்ற வகையில் பதிவுகளும் மாறுபடும். உதாரணத்திற்கு அழகும் சுவையும் மிக்கதொரு ஆப்பிள் பழத்தை எடுத்துக் கொள்வோம். பல்வேறு மக்கள் இந்த ஆப்பிளைப் பல வகைகளில் மதிப்பிடுகின்றனர்.

1. ஒருவர் ஆப்பிளைச் சுவைக்கிறார். அதன் சுவையை மிகமிக விரும்புகிறார்.
2. மற்றொருவர் ஆப்பிளைச் சுவைத்தும், அந்தச் சுவையை வெகுவாக ரசிக்கவில்லை.
3. மூன்றாமவர் ஒரு ஆப்பிளைச் சுவைத்துப் பார்த்தும், அவருக்கு அதன் சுவை மீது விருப்பமே ஏற்படாமற் போகிறது.
4. ஒருவர் ஆப்பிளைச் சுவைக்கவில்லை. அதன் அழகைக் கண்டு ரசிக்கிறார்.
5. மற்றொருவர் ஆப்பிளைச் சாப்பிடவில்லை. அதன் வண்ணத்தைக் கண்டு ரசிக்கிறார்.
6. ஒருவர் ஆப்பிளைச் சுவைத்துப் பார்க்கவும் விரும்பவில்லை. மேலும் அதன் வாசனை - வண்ணம் எதனாலும் அவர் கவரப் படவில்லை.

இந்த ஆறு வகையினரை எடுத்துக் கொண்டால், ஒரு ஆப்பிள் இவர்கள் மனத்தில் பதித்த எண்ணப் பதிவுகள் ஆறு வகையினதாக இருக்கும். இந்த ஆறு விதப் பதிவுகளையும், பலத்த-இடைத்தர அழுத்தமான இடைத்தரமான இலேசான இடைத்தரமுள்ள, இலேசான என்ற வகையில் கூறலாம். அதே போல் ஒரு வெளிப்புறப்

பொருளின் மீதான எண்ணப் பதிவும் நம் மனத்தின் விருப்பு வெறுப்புகளுக் கேற்றபடியே பதியும். கனவுப் பதிவுகளுங்கூட இவ்வாறு மாறுபடும்.

**திங்கட் கிழமை, 4, செப்டம்பர், 1933**

**23. இந்த உலகில் ஒருவர் தன் உடல், புலன்கள், புலன் பொருள்கள் மீது வைக்கும் ஆசையே எல்லாக் கஷ்ட நஷ்டங்களுக்கும் காரணம்.**

**தெளிவுரை:-**

ஆசையே சம்சார உலக பந்தங்களுக்குக் காரணம். ஆசையே தன் உடல், புலன்கள், புலன் பொருள்கள் மீதான பற்றுதலுக்கும் காரணமாகிறது. ஆசைகளினால் மனத்தின் சக்திகள் சிதறுண்டு போகின்றன. ஆசை ஒருவரின் மன நிம்மதியைக் கெடுக்கிறது. அவரை வேதனையில் ஆழ்த்துகிறது. அனைத்து ஆசைகளையும் விட்டொழித்த மனம் வலிமை பெற்று அமைதியும் ஆனந்தமும் அடைகிறது. புலன்களும் அவைகளின் பொருள்களும் இடைவிடாது மனத்தை வெளியே இழுத்துச் செல்கின்றன. மனமும் புலன்களின் வழியே வெளியே திரிகிறது. புலன்களையும், புலன் பொருட்களையும் அனுபவிப்பதற்கான ஆசையின் காரணமாகவே மனத்திற்கு இந்த வெளி மேய்ச்சல் குணம் உண்டாகிறது புலன் போகங்களுக்கு ஆசைப்படாதிருந்து விட்டால் மனம் ஒரு நிலையில் நின்றுவிடும். புலன்களும் அதை வெளியே இழுத்துச் செல்வது நேராது. இயலவும் இயலாது. அப்போதுதான் ஒருவர் அவைகளின் யஜமானனாக இருக்க முடியும். அடிமைப் பட்டு அல்லலுற வேண்டியதில்லை. உடல், புலன்கள், புலன் பொருட்கள் மீதான ஆசையும் பற்றுதலுந்தான் உலகில் அனுபவிக்கும் வேதனைக்கும் துன்பத்துக்கும் காரணம்.

செவ்வாய்க் கிழமை, 24, அக்டோபர், 1933

24. "மனோவேகம்" என்ற வார்த்தையில் வரும் "மனத்தின் வேகம்" என்பதே தவறுதலான வார்த்தை. சாதாரண மனம் எண்ணிய இடத்திற்கு உடலை விட்டே போவதில்லை. அது மூளை மையத்தில் எண்ணத்தில் உதித்ததைப் படம் போட்டுக் காட்டுகிறது. மனத்தின் செய்கை விவரங்களைத் தெள்ளத் தெளிய அறியாததாலேயே எல்லோரும் "மனோவேகம்" என்ற வார்த்தையைத் தவறுதலாகப் பயன்படுத்துகிறார்கள்.

தெளிவுரை:-

ஒரு தனிப்பட்ட எண்ணத்தை எடுத்துக் கொள்வோம். அதாவது, "தன் வீட்டில் உள்ள தாயார்" என்ற எண்ணம் என்று கொள்வோம். அது உன் மனத்தில் உதிக்கிறது. அதன் தெளிவான தோற்றம் பெற உன் மனம் உன் வீட்டின் காட்சியைப் படம் போடுகிறது. அங்கே அதற்கு முன் கடைசியாக உன் தாயை நீ பார்த்த உட்கார்ந்து, தூங்கும், நடக்கும், அல்லது பேசும் நிலையிலுள்ள காட்சியையயும் படம் போடுகிறது. "வீட்டில் உள்ள தாயார்" என்ற இந்த எண்ணம் நீ வீட்டிலிருந்து வந்து ஒரு ஆண்டோ அல்லது இரண்டு ஆண்டுகளோ கழித்துத் தோன்றுகிறது என வைத்துக் கொள்வோம். இந்த இடைக் காலத்தில் உன் வீட்டில் எவ்வளவோ மாற்றங்கள் நடந்திருக்கக் கூடும். உன் தாயாரின் உடல் நிலையிலும் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கும். ஆயினும் வீடு, தாயாரின் எண்ணம் வந்தவுடனேயே - இது ஓரிரண்டு ஆண்டுகள் கழித்து வந்தால்-உன் வீட்டிலும், தாயாரிடத்திலும் ஏற்பட்ட மாற்றங்களை உன்னால் பார்க்க முடிகிறதா? முடியாது. அத்தகைய மாற்றங்கள் உன் கண்ணுக்குப் புலப்படா. மனம்

உண்மையிலேயே எண்ணம் சென்ற இடத்திற்குச் செல்வதாயின், உன் வீடு, தாயாரை அப்போதுள்ள நிலையில் பார்க்க இயலும்

மற்றொன்று பார்ப்போம். நீ கேள்விப்பட்ட ஒரு இடத்தின் பெயர் உன் காதில் படுகிறது. உன் காதில் பட்டதும் அந்த இடத்தைப் பற்றிய விவரம் ஏதாவது உன்னால் புரிந்து கொள்ள முடிகிறதா? முடியாதல்லவா? எண்ணம் போகும் இடத்திற்கு உன் மனம் உண்மையிலேயே செல்லக் கூடுமானால், பெயரைக் கேள்விப்பட்டதும் இந்தப் புதிய இடத்தை உன்னால் படம் பிடிக்க முடியும். இதிலிருந்து மனம் எண்ணிய இடத்திற்குப் பயணம் செய்வதில்லை. உடலை விட்டுப் போவதே இல்லை என்பது தெளிவாகிறது. உண்மையில் நடப்பது என்ன? எண்ணத்தின் இயல்புக்கு ஏற்பவும், சேகரிக்கப்பட்ட முன் அனுபவத்திற்கு ஏற்பவுமே மனம் மூளை மையத்தில் அதைப் படம் போட்டுக் காட்டுகிறது.

முன்னர் ஒரு சமயத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து கொண்டு அனுபவித்த காட்சியைப் பாவனையினால் உன் எண்ணத்தின் தோற்றங்களைத்தான் பார்க்கிறாய். இத்தகைய மனம் படம் போட்டுக் காட்டும் காட்சி அந்தக் குறிப்பிட்ட இடத்திலேயே உன்னை நீ இட்டுச் செல்லும் பாவனைகளால் உன் மனந்தான் அந்த இடத்திற்குப் பயணம் செய்கிறது என்பது புரிந்து கொள்ள முடியாததால் விளைவது. ஆகவே, "மனோ வேகம்" என்ற வார்த்தையே தவறானது.

சாதாரண மனம் (மாசு படிந்த மனம்) தூல உடலை விட்டு வெளியே போய் வர முடியாது. ஆனால் ஒரு யோகி - சித்திகள் கைவரப்பெற்ற நிலையில் எண்ணிய பொழுதில், நினைத்த இடத்திற்குத் தன் சூக்கும உடல்,

மனத்துடன் சென்று, அங்குள்ள உண்மை விவரங்களைக் கண்டறிந்து வரலாம். எண்ணத்தில் உதித்ததைக் காண அவர் தன் சூக்கும உடலுடன் மனத்தை இணைத்துக் கொண்டு தூரத்திலுள்ள இடங்களுக்கும் விரும்பும்போது போய் வரலாம். ஆனால் சாதாரண மனிதனால் இயலாது. ஆகவே, "மனோவேகம்" என்ற வார்த்தையின் பொருள் தவறானது.

**வெள்ளிக் கிழமை, 27, அக்டோபர், 1933**

25. ***இயமம் - நியமம் ஆகியவற்றின் அறநெறி முறைகளுக்கு யார் ஒருவர் கட்டுப்பட்டு அதன்படி நடந்து கொள் கிறாரோ, அவர் மற்ற எல்லா வித நெறிமுறைகளையுமே முழுதும் கடைப்பிடிப்பவராகிறார்.***

**தெளிவுரை:-**

இயமம், நியமம் இவ்விரண்டிற்குமானவை: கொல்லாமை சத்தியம், தன்னடக்கம், கள்ளாமை, பொருள் யாசிக்காமை, போதுமென்ற மனம், தூய்மை, தவம், கற்றறிதல், கடவுள் பக்தி, இவைகளில் ஏதாவது ஒன்றில் நிறைவு பெற்றாலே மற்றுமுள்ளவற்றிலும் தாமாகவே ஒழுக்கம் வந்து விடும். "பிரம்மச்சரிய ஒழுக்கத்தை எடுத்துக் கொள்வோம். எண்ணம், சொல், செயலில் பிரம்மச்சரியம் ஒழுக வேண்டும். இதன்பொருள் என்ன? ஒருவர் புலன்கள், ஆசைகள், எண்ணம், பேச்சு, செயல்கள் எல்லாவற்றையும் முழுமையாகத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்பதேயாம். யார் ஒருவர் தன் மனம், புலன்கள், எண்ணச் செய்கைகளின் எஜமானனாக இருக்கிறாரோ, அவர் மட்டுமே பிரம்மச்சரியத்தை உண்மையாக அனுசரிக்க முடியும். ஓர் உண்மையான பிரம்மசாரி உண்மையுடனும், எல்லா உயிர்களிடத்தும் கருணையுடனும், நடக்க வேண்டும். எந்த ஒரு

பொருளையும் பரிசாகவோ மற்ற வகையிலோ பெறுவது கூடாது. திருட்டு எண்ணம் வரக்கூடாது. எப்போதும் மனநிறைவு கொள்ள வேண்டும். எதையும் அபகரிக்கக் கூடாது. தவம் பயில வேண்டும். அறநெறி நூல்கள் சாத்திரங்கள் கற்க வேண்டும். கடவுளைப் பக்தியுடன் வழிபட வேண்டும். ஒரு கண்டிப்பான பிரம்மச்சாரி அனைத்திலுமே நிறைவுடன் இருப்பார். இதே போன்றதுதான் அகிம்சை அல்லது கொல்லாமையும். அகிம்சைக் கொள்கையை பூரணமாகக் கடைப்பிடிப்பவர் எந்த ஒரு உயிரையும் எண்ணம் சொல் செயலால் ஊறு விளைவித்துத் துன்புறுத்தவே கூடாது. இதன் பொருள் என்ன? ஒருவர் தனது புலன்கள், மனம், ஆசைகள், எண் ணங்களில் முழுமையான கட்டுப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டும் என்பதுதான். அகிம்சை கொள்கையுள்ளவர் பிரம்மச்சரியம் அனுசரிக்க வேண்டும். உண்மையை கடைப் பிடிக்கவேண்டும். எதையும் திருடுவது கூடாது. போதுமென்ற மனநிறைவுடனிருத்தல் வேண்டும். தூய்மையுடன் இருப்பது போன்றவைகள் இன்றியமை யாதவை. இயமம், நியமத்திற்கான எல்லா நெறிமுறை களையும் சரிவரப் பின்பற்ற மனம், புலன்கள், ஆசைகள், எண்ணங்கள் மீதான கட்டுப்பாடு மிக மிக அவசியம். புலன்கள் மனம் போன்றவற்றின் எஜமானனாக இருப்ப வரால் மட்டுமே இயமம் நியமத்திற்கான வரை முறைகளைக் கடைப்பிடித்து ஒழுக இயலும். அத்தகைய மனிதன் எல்லாவற்றிலும் ஒழுக்கம் மிக்கவனாக இருப்பான்.

**திங்கட்கிழமை, 30 அக்டோபர், 1933**

**26. மேலான வழிபாடு எது? ஆண்டவனை இடைவிடாது தியானித்தலாகும். அல்லது ஒருவர் தனது**

**பேரண்மை இயல்பின் மகத்துவத்தில் ஆழ்ந்திருப்பது அல்லது ஆன்ம உணர்வுடன் எப்போதுமிருப்பது ஆகும்.**

**தெளிவுரை:-**

அனைவருமே பல்வேறு நோக்கங்களுடன் கடவுளை வழிபடுகின்றனர். சிலர் துன்பம், வேதனைகளின்போது கடவுளை வழிபடுகின்றனர். உடல்நலத்துடன் வாழவும், செல்வத்திற்காகவும், பெயர், புகழ், வளமை போன்ற வற்றிற்காகவும் துதிக்கின்றனர். மற்றும் சிலர் ஞானம் பெறவும், தூய்மை எய்தவும், ஒழுக்கத்துடன் வாழவும், தூய அன்புடன் இருக்கவும், நேரியபாதையில் செல்லவும், மோட்சத்திற்காகவும் ( வீடு பேற்றுக்காகவும்) வழிபடு கின்றனர். ஆனால் இந்த அனைத்து வழிபாட்டு முறை களுமே ஏதாவதொரு குறிக்கோளை அடையவே அமைந் துள்ளன. பார்த்தால் இவை அனைத்துமே சுயநலத் திற்காக நடை பெறுகின்றன. ஆனால் உண்மையான, அனைத்துக்கும் மேலான வழிபாடு எது? இடையறாது கடவுளைப் பற்றியே சிந்தித்திருத்தல் ஆன்மாவின் மகத்துவத்திலேயே இடையறாது இலயித்திருத்தல், தனது ஆத்மாவின் பேருண்மையியல்பிலேயே மூழ்கி இருத்தல் ஆகும். இத் தன்மைத் தான வழிபாட்டில் யாசிப்போ, சுயநலத் தன்மையோ கிடையாது. ஆதலின் தன்னில் தானான இந்த வழிபாட்டு முறையே உயரியது. மேலான வழிபாடாகும்.

**வியாழக்கிழமை, 2, நவம்பர், 1933**

**27. ஒரு நேர்க்கோட்டை முடிக்காமல் நீட்டிக்கொண்டே போனால் அது ஒரு வட்டத்தில் முடிகிறது என்று சொல்லப்படுகிறது.**

**மறுப்புரை:-**

முடிவு என்பது வட்டமுமல்ல சதுரமுமல்ல. எந்தவகையிலும் சேராத ஒன்று. "உண்மைதான் அது" என்று சொன்னால் அது முடிவற்ற ஒன்றாக இருக்க முடியாது! "முடிவற்ற ஒன்று" "எல்லையில்லாத ஒன்று"க்கு ஆரம்பமுமில்லை முடிவுமில்லை. எண்ணத்திலோ அல்லது கற்பனையிலோ கூட எல்லையற்ற ஒன்றை (Infinity) தன் சிந்தனையால் நோக்க முடியாது. ஒரு எல்லைக்குள் இயங்கும் மனத்தினால் எல்லையற்ற ஒன்றைக் கருத்தில் கொண்டுவர இயலாது. எல்லையற்றது என்பது ஒப்புவமை இல்லாதது. இரண்டாவது அற்ற ஒன்றே ஒன்று. ஆரம்பம், முடிவு பெற்ற எந்த ஒரு பொருளும் -- அதைக் கண்ணால் பார்த்து கருத்துக்குள் கொண்டுவர முடியும் -- அளவிட்டுக்கூற முடியும் என்றால் அது முடிவு பெற்ற ஒன்றாகிவிடுகிறது.

எல்லை காண முடியாத ஒன்றுக்கு ஆரம்பமோ, முடிவோ இல்லாதபோது அந்த எல்லையில்லாத வரைகோட்டை எப்படி நீட்டிக் கொண்டே போக முடியும்? அதற்கு ஆரம்பப் புள்ளி எப்படி இருக்க முடியும்? எங்கே போய் முடியும்? ஆரம்பம் முடிவு என்ற கருத்தே எல்லையற்ற ஒன்றின் விஷயத்தில் அபத்தமானது - பொருளற்றது. யாரேனும் ஒருவர் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே முடிவற்ற நேர்கோட்டை வரைய ஆரம்பித்திருந்தால் இன்னும் அவர் அதை வரைந்து கொண்டே போகிறார். முடிவைப் போய்ச் சேராமல் வரைந்து கொண்டே போக வேண்டியதுதான்! எல்லையற்ற பொருள் மாபெரும் உருண்டையாக இருக்குமாயின் அதன் மீது போடப்படும் கோடு கண்டிப்பாக ஒரு வட்டமாகிச் சந்திக்கும்.

ஆனால் எல்லையற்றதற்கு வட்டம் என்ற கருத்தைப் புகுத்துவதே தவறு. ஏனெனில், எந்த ஒரு வட்டமும் - அது எவ்வளவு பெரிதாயினும் அது ஒரு முடிவுக்கு வருமேயொழிய, முடிவு பெறாத ஒன்று ஆகாதல்லவா?

**வியாழக் கிழமை, 16, நவம்பர், 1933**

28. ***தனக்குத் தானே உண்மையாக இருப்பவர் எல்லோரிடத்தும் உண்மையுடனிருப்பார். சிறிய விஷயங்களிலும் தாராளமாக நடந்து கொள்பவர் பெரியவைகளிலும் தாராளமாக இருப்பார். சிறிய முக்கியமல்லாதவற்றைப் புறக்கணிப்பவர் முக்கியமான பெரியவைகளையும் புறக்கணிக்கத்தான் செய்வார். ஆகவே தான், ஒன்றின் முடிவுக்கு எவ்வளவு அக்கறை காட்டுகிறோமோ, அதே அளவு அக்கறையை அதை அடைவதற்கான முயற்சியிலும் காட்ட வேண்டும்.***

**தெளிவுரை:-**

கடவுளிடம் பக்தி சிரத்தையுள்ள உண்மையும், நேர்மையும் மிக்க ஒருவர் எப்பொழுதுமே நேர்மையாகவும் வெளிப்படையாகவும் நடந்து கொள்வார். அவர் உண்மையே பேசுவார். எத்தகைய சோதனையிலும் துணிவுடன் அதைக் கடைப்பிடிப்பார். இவருடைய எண்ணங்கள், பேச்சு, செயல்களில் அளப்பரிய ஆற்றலும் நேர்மையுமே கலந்திருக்கும். இதில் எந்தவிதமான இழிதன்மையோ, குறுகிய மனப்பாங்கோ கலந்திருக்காது. சூதுவாது ஏதும் இருக்காது. எது சரியானது என்று அவர் மனதில் படுகிறதோ, அதையே அவர் பேசுவார். அவர் சொல்வதைச் செய்து காட்டுவார். அவர் எண்ணங்கள், பேச்சுகள், செயல்கள் அனைத்துமே ஒன்றுக் கொன்று முரண்படா. உண்மையுடன் பொருந்திப் போவதாகவே இருக்கும்.

உண்மையான ஒருவரிடம் சூதுவாது இல்லாத காரணத்தால் - தன்னைத்தானே உண்மைக்கு மாறாமல் பழக்கிக் கொள்வதால் அனைத்திலும், எல்லோரிடத்தும் உண்மையாகவே செயல்பட முடிகிறது. தாராள மனத்துடன் கூடிய ஓர் உண்மையான மனிதன் சிறிய விஷயங்களில் மட்டுமின்றிப் பெரியதிலும் ஒரே மாதிரி நடந்து கொள்கிறார். இரண்டுக்குமே சமமான மதிப்புத் தருகிறார்.

மனம் பொறுப்பைத் தட்டிக் கழிக்கக் கூடிய வகையில் உருவாகியிருக்கிறது என்பது என்னவோ உண்மை! மனத்திற்கு உண்மைகளை நேருக்கு நேர் சந்திக்கப் பிடிப்பதில்லை! அது நழுவிச் செல்வதற்கான நொண்டிச் சாக்குகள், சந்து பொந்துகளைத் தேடிக்கொண்டிருக்கும். ஆகவேதான், ஒருவர் கடிவாளத்தை உறுதியாகப் பற்றி, அதன் மீது நிலையாக அமர்ந்து அடக்க வேண்டும். சிலவற்றைச் சிறியது - முக்கியமில்லாதது என்று கவனத்தைச் செலுத்தாமல் விட்டால், இந்த வழக்கமே பலமாகிப் பெரிய முக்கிய விஷயங்களையும் அசட்டை செய்து ஒதுக்கிவிடும். மனத்திற்குச் சரியான பயிற்சி இல்லாததால்தான் திடீரென்று பெரிய முக்கிய விஷயங்கள் வரும்போது அவைகளைத் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்ற எண்ணம் தோன்றுவதே துர்லபமாகி விடுகிறது. ஒன்றின் பயனுக்கு எவ்வளவு முக்கியத்துவம் தருகிறோமோ, அதே அளவு முக்கியத்துவம் அதை அடைவதற்கான வழி முறைகளுக்கும் அளிக்க வேண்டும். விளைவை அசட்டை செய்து போதிய எச்சரிக்கையுடன் செயல்படா விட்டால் அதன் முடிவு வேதனையும் துன்பமுமேயாகும். உதாரணத்திற்கு உணவு சமைப்பதை எடுத்துக் கொள்வோம். தயாரிக்கும் உணவின் பயன் பசியாறுவதற்குச் சுவையுடன் கூடிய சத்துணவை உண்பதே

யாகும். சுவையுடன் கூடிய சத்துணவைச் சாப்பிட ஒருவர் அதற்குத் தேவையான பொருட்களைச் சேமித்து அதை மிகுந்த அக்கறையுடன் சமைக்க வேண்டும். இதில் ஊக்கம் செலுத்தா விட்டால் அதன் விளைவு (உண்ணும் உணவு) சுவை குன்றிவிடும். சாப்பிடும் ஆர்வமும் குறைந்து போகும். அதனால் உடல் நலமும் கெடும்.

மழைத் துளியை எடுத்துக் கொள்வோம். எண்ணற்ற இந்த மழைத் துளிகள் சேர்ந்து வெள்ளம் உண்டாகிறது. ஆனால், இந்தச் சிறு துளிகள் ஒன்று சேராவிட்டால், தண்ணீர்ப் பெருக்கும் கிடையாது. அதே போல் மனம் சிறிய, பெரிய, தேவையான, தேவையற்ற விஷயங்களில் மிகுந்த அக்கறை செலுத்தும்போது, அது உரம் பெற்றுச் செயலாற்றலையும், விழிப்புணர்வையும் எய்துகிறது. சிறியது. அற்பமானது என்று எதையும் ஒருவர் அசட்டையுடன் ஒதுக்கக் கூடாது. எவருக்குமே உடனே வெற்றி கிட்டுவதில்லை. அதே போலத்தான் தோல்வியும்! அற்பமானது என நாம் அலட்சியப்படுத்துபவைகளும், சிறியது என ஒதுக்கும் குறைபாடுகளும் நாளடைவில் ஒன்று சேர்ந்து முடிவில் பெரும் வீழ்ச்சியாகிவிடும். இவ்வாறே எண்ணற்ற சிறிய வெற்றிகள் நாளடைவில் ஒன்று திரண்டு மாபெரும் வெற்றிக்கு வழி வகுக்கும். "ஒன்றை அடைய எவ்வளவு அக்கறை காட்டுகிறோமோ அவ்வளவு பெற முடியும்!"

**சனிக்கிழமை, நவம்பர், 25, 1933**

**29. மகிழ்ச்சி அல்லது ஆனந்தம் இருவகைப்படும். அதாவது, கலப்புள்ளதும் கலப்பற்றதும் அடிமைத் தனமும், சுதந்திரமும் ஆகும். உயரிய மகிழ்ச்சி என்பது சுதந்திரமானது. அது புலன்கள், புலன் பொருள்களுக்கு அப்பாற்பட்டது.**

**தெளிவுரை- :**

வெளிப்புறப் பொருள்களினால் கிடைக்கும் எல்லாப் புலன் போகங்களும், மகிழ்ச்சியும் கண நேரமே இருப்பவை. கலப்புள்ளவை. கட்டுப்பட்டவை. அனுபவிப் பவனிடமிருந்து அந்த மகிழ்ச்சி தரும் பொருள்களைப் பறித்தவுடனே வேதனையை உண்டாக்குகின்றன. ஒன்றினால் கிடைக்கும் இதைப் போன்ற மகிழ்ச்சி தரும் நிலைகள் சந்திரனும், கிரகங்களும் சூரியனிடமிருந்து பெறும் ஒளியைப் போன்றதாகும். பிரதிபலிக்கும் இத் தகைய ஒளி உண்மையானதல்ல. அவை நிலைத்து நிற்பவையல்ல. அது சூரியனைப் பொறுத்தே அமைவது. ஒருவர் வெளிப் பொருள்களைச் சாராமல், தன் ஆன்மாவிலிருந்து மட்டுமே பெறும் ஆனந்தம் தூய்மையானது. எளிமையானது. கலப்பில்லாத சுதந்திரத் தன்மை கொண்டது. நீடித்து நிற்பது. உயர்தரமானது. அது புலன்களையும், மனத்தையும் கட்டுப்படுத்துவதனாலீ, தன்னுள்ளிருந்தே வரக்கூடியது. இந்த மகிழ்ச்சியெனும் ஆனந்தம் சூரிய ஒளி போன்றது. சூரியன் தன் ஒளியை வேறெந்த வெளிப் பொருளிலிருந்தும் பெறுவதில்லை. அது சுதந்திரமானது, சுயம்புவானது.

**சனிக்கிழமை, 25, நவம்பர், 1933**

**30. பற்றற்ற தன்மையில் நிறைவு கண்டால், அது பரிபூரண சரணாகதி. பரிபூரண சரணாகதி எனில் அதுவே சுயகட்டுப்பாடு.**

**தெளிவுரை-**

"பற்றற்ற நிலை" என்பதின் பொருள் ஒருவர் தனது மனம் புலன்களைச் சுய கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வருதல். ஒருவர் இது போன்ற முழுமையான கட்டுப்பாட்டைப் பெறாத வரையில், அனைத்து

ஆசைகளையும் மனத்தளவில் துறத்தல் என்பது இயலாது. பூரண சரணாகதி நிலைத்த ஒருவர் எல்லா ஆசைகளையும் துறந்தவர் ஆவார். அவர் மனம் போன போக்கில் போவதில்லை. அவர் உலர்ந்து, உதிர்ந்து போன சருகு எப்படிக் காற்றோடு போகிறதோ, அவ் வாறு தெய்வீக உந்துதலினால் செயல் படுகிறார். ஆதலால் ஆசைகளால் விரட்டப்படும் தன் சொந்த மனத்தின் விருப்பு வெறுப்புகளால் அலைக்கழிக்கப் படுவ தில்லை. ஆகவே முழுச் சரணாகதி நிலைத்தவர் என்ப வர் ஆசைகளுக்கு அப்பாற்பட்டவர் எனலாம். தனது மனம் புலன்களை அடக்கியாளும் எஜமானர் ஆகிறார். எனவே, பற்றற்ற தன்மையே பரிபூரண சரணாகதி - பரிபூரண சரணாகதியே சுயக் கட்டுப்பாடு.

**திங்கட்கிழமை, 27, நவம்பர், 1933**

31. ***எல்லா உலகாயதக் கேளிக்கைகளும் தம்முடன் துன்பங்களையும் இணைத்து வருகின்றன. துன்பத்தின் விளைவைக் கூட்டுச் சேர்த்துக் கொள்ளாத ஆனந்த நிலை ஆன்மிக மகிழ்ச்சியேயாகும்.***

**தெளிவுரை- :**

எல்லா உலகாயத மகிழ்ச்சிகளும் புலன்களிட மிருந்து புலன்போகங்களால் உண்டாக்கப் படுபவை. எவ்வளவு புலன் போகங்களை அனுபவித்தாலும் அவை மனிதனுக்கு மனநிறைவைத் தருவதில்லை. எல்லாப் புலன் போகக் களியாட்டங்களும் கண நேர இன்பமே. இவை களின் பின்விளைவு துன்பமும், வேதனையுமேயாகும். ஆனால், ஆன்மிக மகிழ்ச்சி நீடித்து நிற்பது. அதனால் எந்தக் கெடுதலும் விளைவதில்லை. ஆன்மீக மகிழ்ச்சி அல்லது பேரானந்தம், புலன் - புலன் பொருட்களிட மிருந்து தோன்றுவதல்ல. அதன் உண்மை யென்ன வெனில், அதுவே மேலான பேரானந்த நிலையாகும்.

**செவ்வாய்க்கிழமை, 28, நவம்பர், 1933**

32. ***எண்ண அலைகள் தாமாகவே எழுகின்றன. தாமாக எழும் இந்த எண்ண அலைகளின் இயல்புக்கு ஏற்ப, தூக்கத்தில் மனம் படம் போட்டுக் காட்டும் நுண்ணிய காட்சியையே "கனவு" என்கிறோம்.***

**தெளிவுரை-:**

மூலாதாரம் அல்லது சிறுநீர்க் குழாயும் குதமும் தோராயமாகச் சந்திக்கும் இடத்தில் "சித்தம்" எனும் மனக் கோப்பின் பீடம் உள்ளது. மனத்தின் சேமிப்பு இடம் "சித்தம்". ஒருவருடைய முற்பிறவி - இப்பிறவி அனுபவங்கள் அனைத்தும் சித்தத்தில் பதிந்திருக்கின்றன. குண்டலினி சக்தியே (மனிதனின் ஆதார சக்தி) "சித்தம்". இந்தக் குண்டலினி சக்தியே எல்லா நாடி நரம்புகளுக்கும் சக்தியை வினியோகிக்கின்றது. அனைத்து மனச் செய்கைகளுக்கும் இதுவே சக்தி ஊட்டுகிறது. இதய மூளை மையங்களில் தோன்றும் எல்லா எண்ணங்களும் ஆசைகளும் தமக்கான விவரங்களைச் சித்தத்திலிருந்தே பெறுகின்றன. இதுபோன்ற ஆசைகளும் எண்ணங்களும் நாடி (நரம்பு) மூலமாக நகர்ந்து செல்கின்றது. இந்த நாடி மூளை இதய மையத்துடனும், சித்தத்துடனும் இணைக் கப்பட்டுள்ளது. இதுவே சரசுவதி நாடி. அது குதத்தி லிருந்து புறப்படுகிறது. உடலின் முன் பக்கத்தில் மேல்புறம் நோக்கி ஓடுகிறது. அதாவது, தொப்புளின் இடது புறமாக இருதயத்தைத் தொட்டுக் கொண்டு ஓடி, இடது காதின் பின்புறமாகச் சென்று மூளையுடன் சேருகிறது. குண்டலினிக் கதிர்கள் இடையறாது இந்த நாடி வழியாகவும் மற்ற நாடிகளின் வழியாகவும் நகர்ந்த வண்ணம் உள்ளன. சித்தத்திலிருந்து சரசுவதி நாடி மூலமாக நகரும் குண்டலினிக் கதிர்கள் தாமாகவே சில

நுட்பமான ஆசைகளை எடுத்துச் செல்கின்றன. அதாவது சித்தத்தில் பதிந்துள்ள ஆசைகளே அவை. குறிப்பாக சூடுண்டாக்கும் உணவு, பானம் போன்றவையால் குண்டலினிச் சக்தி சூடு அடைகிறது. அந்த நிலையில் தாமாக எழும் எண்ணக் கதிர்கள் அதீத வலுவடைகின்றன. இந்தச் சுயமாக எழும் எண்ணக் கதிர்கள் விழிப்பு நிலையிலுள்ள மனிதனில் செயல் படும்போது அவன் "மனம்" தடுமாற்றத்திற்கு ஆளாகிறது. தாமாக எழும், இதே எண்ணக் கதிர்கள் தூக்கத்தில் வேலை செய்யும் நிலையில் இந்த நுண்ணிய ஆசைகள் மூளை மையத்தை வந்தடையும்போது, மனம் அதற்கேற்ற மனக் காட்சிகளைத் தோற்றுவிக்கிறது. இதையே கனவு என்று சொல்கிறோம். பெயரும் சூக்கும உருவங்களும் எப்பொழுதும் ஒன்றையொன்று தழுவி இருப்பவை. ஒரு பெயர் என்றால் அதற்கென ஒரு உருவமும் உண்டு. ஆசையும், எண்ணமும் உள்ளபோது அவைகளுக்கான சூக்கும உருவமும் உண்டு. உண்மையில் சொல்லப் போனால் மனத்தின் கற்பனையில் ஒரு ஆசை எண்ணம் தோன்றும் போது அதற்கான ஒரு உருவமும் தோன்றுகிறது. ஆகவே, உறக்கத்தின்போது தாமாக எழும் சூக்கும எண்ணக் கதிர்கள் மூளை மையத்தை அடையும்போது மனம் அதற்கான குறிப்பிட்ட உருவத்தையோ அல்லது காட்சியையோ தோற்றுவிக்கிறது. அவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட அந்தக் குறிப்பிட்ட உருவம் அல்லது காட்சியையே கனவு என்கிறோம். கனவின்போது இந்த அனுபவங்களை மனம் அவருடைய சூக்கும உடல் மூலம் பெறுகிறது. அப்போது புத்தி மந்த கதியில் வேலை செய்கிறது. கடந்த - நிகழ் காலங்களில் நிறைவு பெறாமல் ஒதுக்கப்பட்ட ஆசைகள் கனவின்போது நிறைவடைகின்றன.

**புதன் கிழமை, 6, டிசம்பர் - 1933**

33. **மேலான குறிக்கோளை அடைய உதவும் உழைப்பு; நிரந்தரமான ஆனந்தத்தை அளிக்கும் உழைப்பு; தன்னலமற்ற உழைப்பு பயன் கருதாமல் உழைக்கும் உழைப்பு; தூய அன்போடு உழைக்கும் உழைப்பு; உழைப்பிற்காகவே எனும் இவைகளே "கர்மயோகம்".**

**வியாழக்கிழமை, 7, டிசம்பர், 1933**

34. **பலமாக வேரூன்றிய ஆசையே எண்ணம்.**

**தெளிவுரை-:**

எண்ணத்தின் சூக்கும உருவமே ஆசை. ஆசையிலிருந்து எண்ணம் உதிக்கிறது. ஆசையைக்கூட இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். சூக்குமமானது, தூலமானது. முதலில் சூக்கும ஆசை மூளை மையத்தில் ஒரு வகை ஆவலை ஏற்படுத்துகிறது. இந்த நிலையில் வரப் போகும் எண்ணமும் அதன் பொருளும் மூளை மையத்தில் ஆவல் கொள்ளுவதோடு நிற்கிறது. இந்த ஆவலுக்கேற்ப மனம் மூலாதாரத்திலுள்ள சித்தத்திற்கு (மனக்கோப்பிற்கு) அதன் விவரத்தைப் பெறுவதற்கான குறிப்பை அனுப்புகிறது. விவரம் கிடைத்தவுடன் அது இதய மையத்தை வந்தடைகிறது. ஒருவர் விவரத்தைப் புரிந்து கொள்கிறார். இந்த நிலையில் சூக்கும ஆசை தூல ஆசையாகிறது. ஒருவர் தோன்றவிருக்கும் எண்ணத்தின் பொருளை புரிந்து கொள்கிறார். இதே தூல ஆசை மூளை மையத்தை அடையும்போது அது ஒரு எண்ணமாகிறது. இப்பொழுது அவர் அதன் முழுப் பொருளையும், எண்ணத்தின் உள்நோக்கத்தையும் புரிந்து கொள்கிறார். உடனே அதைச் சொல்லாகவோ செயலாகவோ வெளிப்படுத்துகிறார்.

**சனிக்கிழமை, 9, டிசம்பர், 1933**

**35. சாதாரணமாக மனிதனின் வாழ்வில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஐந்து நிலைகள் உள்ளன. அவைகளாவன: விழிப்புநிலை, கனவுநிலை, கனவுகளற்ற தூக்கநிலை, துரியநிலை, யோக நித்திரை, இவைகளுக்கும் மேல் ஆறாவதாக ஒரு நிலை உண்டு. அது விழிப்பில் கனவு நிலை.**

**தெளிவுரை:-**

சாதாரணன் ஒவ்வொரு நாளும் மூன்று நிலைகளை அனுபவிக்கிறான். விழிப்பு நிலை, கனவு நிலை, ஆழ்ந்த உறக்க நிலை. கடவுளை உணர்ந்தவன் அல்லது நிர்விகல்ப சமாதி நிலையை எய்தியவன் நான்காவதான துரிய அல்லது மேலான உயிர்ச்சார நிலையை அறிந்திருக்கிறான். சாத்திரங்களின் கூற்றுப்படி ஒரு நபரிடம் இந்த நான்கு நிலைகள் மட்டுமே இருப்பதாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன. யோகம் கற்பிக்கும் குருகுலம் மட்டும் மற்றொரு நிலையான "யோக நித்திரை நிலை"யையும் ஒப்புக் கொள்கிறது. இந்த நிலை தியானத்தின்போது ஏற்படும் ஒருவகை மயக்க நிலை. இந்த மயக்க நிலையில் சாதகன் (ஆன்மிகப் பயிற்சியாளன்) நித்திரையில் ஆழ்ந்து விடுகிறான். (அவன் உலகத்தையே மறந்து விடுகிறான்). அப்போது அவன் மனம் தியானம் செய்யும் உருவத்தில் தங்கிச் செயலற்று விடுகிறது. அதாவது, தியானத்திற்கான உருவம் இருக்கவே செய்கிறது. ஆனால், மனம் ஒருமைப்பாட்டின் ஆழ் நிலைத் தன்மையை இழந்து உறக்க நிலை எய்தி விடுகிறது. மனித வாழ்வில் விளக்கப்பட்ட இந்த ஐவகை நிலைகளைத் தவிர்த்து விழிப்பு நிலையில் கனவு காணும் நிலை பெற்ற ஆறாவது வகையும் ஒன்று உண்டு.

இந்த நிலையில் சாதகன் கண்ணயர்ந்து எழுகிற பயனைப் பெறுகிறான். ஆனால், அதே சமயம் அவன் உறங்கிக் கொண்டிருக்கும் அறையினுள் மனிதர்களின் நடமாட்டத்தையும் அவர்கள் பேசுவதையும் அறிந்து கொள்கிறான். அவர்கள் பேச்சைக் கேட்க முடியும். பதில் சொல்ல இயலுவதில்லை. பேச்சுகளின் பொருள் புரிந்தாலும் அவை வெகு தொலைவில் பேசுவது போல் தோன்றுகிறது. அத்தகைய நிலையிலிருந்து விழித் தெழுபவர் தூக்கத்தில் அறிந்தவைகளை ஓரளவு புரிந்து கொள்கிறார். தூங்கி எழுந்ததும் * களைப்பாறிய சுறுசுறுப்பைப் பெற்றுவிடுகிறார்.

**சனிக்கிழமை, 9, டிசம்பர், 1933**

36. ஆகாயம் இந்த அகிலத்தில் மேன்மேலும் தூலமடைந்து பரிணமிக்கும்போது காற்று, நெருப்பு, நீர், மண் போன்றவகளாகின்றன. அதே போல ஜீவனும் சூக்கும நிலையில் பரிணமிக்கும்போது புத்தி, உள்ளுணர்வு, அகந்தை, மனம் என்றாகிறது.

**ஞாயிறு, 10, டிசம்பர், 1933**

37. ***உயிர் வாழ்வினர் என்ற வகையில் நாமெல்லாம் ஒரே வகையினர். ஆயினும் தரத்தில் மாறுபட்டவர்.***

**தெளிவுரை**-:

உயிருள்ளவை என்ற வகையில் ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும், ஒரு பெண்ணுக்கும் மற்றொரு பெண்ணுக்கும், ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும், மனிதனுக்கும் மிருகத்திற்கும் இடையில் எவ்வித வித்தியாசமுமில்லை. உயிர் என்பது அனைத்திற்கும் ஒன்றே. ஆனால், அவை தன்மைகளில் பெரும் வித்தியாச முடையவை. தரத்தின் இந்த மாறுபாடுகள் ஆக்கிரமித்து

நிற்கும் குணத்தின் தன்மைக்கு ஏற்ற மனோ வளர்ச்சியினால் விளைபவை. தனி மனிதர்களின் உள்ளத்தூய்மை, மன வளர்ச்சிக்கு ஏற்ப மனம், புத்தி, உள்ளுணர்வின் ஆற்றல், அகந்தை ஆகியவை பெரிதும் மாறுபடுகின்றன. இம்மாறுபாடுகளே ஒரு உயிருக்கும் மற்றொரு உயிருக்கும் இடையில் பிரித்துக் காட்டும் மாற்றங்களுக்குக் காரணமாகின்றன.

**திங்கட் கிழமை, 11, டிசம்பர், 1933**

38. **கடலில் செல்லும் நீராவிப் படகில் அளவுக்கு மீறிய பளுவை ஏற்றும்போது அது மூழ்கி விடுகிறது. அது மிகமிகக் குறைந்த அளவு பளுவைச் சுமக்கும்போதும் மூழ்கிவிடக்கூடிய அபாயம் உண்டு. ஆனால் அந்த நீராவிப் படகில் உரிய அளவு பாரத்தை ஏற்றினால், அது எளிதாகவும் எவ்வித அபாயமில்லாத பாதுகாப்புடனும் கடலில் செல்கிறது. அதே போல் உடலை நீராவிக் கப்பலுக்கு ஒப்பிட்டால், உணவும், பானமும் அதில் ஏற்றும் சுமைக்கு ஒப்பாகும். உட்கொள்ளும் உணவும் பானமும் அதிகமாகவும் சத்தில் குறைந்தும் இருந்தால் ஒருவர் இயல்பான மனோ உடல் வலிமையைப் பாதுகாக்க முடியாது.**

உணவும் பானமும் தேவைக்குக் குறைவாக உட்கொண்டால், அந்த நபர் பலவீனனாகவும் இருப்பான். அவனால் திடமான மனோ உடல் கட்டுக் கோப்புடன் மகிழ்ச்சிகரமாக இருக்க முடியாது. குறைந்த உணவு உட்கொள்பவன் எப்போதும் சாப்பிட வேண்டும் என்ற அவாவுடன் இருப்பான். அதனால் மனத் தளர்ச்சி உண்டாகிறது. ஒருவருடைய உணவும் பானமும் சமச்சீருடனும், சத்துள்ளதாகவும் இருக்க வேண்டும். இப்படிப்பட்டவனே நல்ல மனோநிலையுடன், திடகாத்திரனாகவும் திகழ்வான்.

**திங்கட் கிழமை, 11, டிசம்பர், 1933**

**39. சித்தம் அல்லது மனக் கோப்பு என்றால் என்ன?**

**பதில்:-**

கடந்த - நிகழ்கின்ற காலங்களின் எல்லா வகை மனோ அனுபவங்களும் (மனத்தில்) உறங்கிக் கொண்டிருக்கின்றன. இதையே சித்தம் என்கிறோம். இதை வேறு வகையிலும் விளக்கலாம். ஆயிரமாயிரம் பூர்வ பிறவிகளிலும், இப்பிறவியிலும் விளைந்த அனுபவப் பதிவுகளின் சேமிப்பு நிலையமென்றும் இதைக் கூறலாம்.

**தெளிவுரை:-**

இறப்பு என்பது தூல உடலின் அழிவை மட்டுமே குறிக்கும். ஒரு மனிதன் இறக்கும்போது சூக்கும உடல், புத்தி, மனம், அகந்தை ஆகியவை அழிவதில்லை. அவை ஜீவாத்மாவில் அவைகளுக்கான காரண உருவில் தங்கியுள்ளன. புதிய பிறவியின்போது அவை மீண்டும் தோன்றுகின்றன. ஆகவே, ஒருவருடைய, விருப்பமும், எண்ணமும், பேச்சும் செய்கையும் சேர்ந்து இதே ஆசை, எண்ணம், பேச்சு செயல் அனைத்தும் ஒட்டு மொத்தமாக மனக் கோப்பில் தங்கி விடுகின்றன. காலப்போக்கில் ஒருவர் ஒரு நிகழ்ச்சி அல்லது சம்பவத்தை மறந்து விடக்கூடும். அதைக் கொண்டு இவை அடியோடு போய்விட்டன என்று கூற முடியாது. அவை சித்தம் அல்லது மனக் கோப்பிற்குள் புகுந்து அவற்றுக்கான காரண உருவத்துடன் தங்கி இருக்கின்றன.

ஒரு சாதாரண மனம் மூன்று மாறுபட்ட நிலைத் தடங்களில் இயங்குகிறது. அதாவது, நினைவு நிலைத்தளம், நினைவு கூரும் நிலைத்தளம், மறதி நிலைத்தளம். இந்த மூன்று நிலைத் தளங்களுமே

சித்தத்தில் (மனக்கோப்பில் மட்டுமே) உள்ளன. ஒரு சாதாரண மனிதனில் இது மூலாதாரச் சக்கரத்தில் இருக்கிறது. சித்தம் எல்லா வகைப் பதிவுகளின் சேமிப்பு நிலையம். மூளை மையத்தில் ஒரு சில புதிய எண்ண அதிர்வுகள் மட்டுமே தங்கியுள்ளன. இதய மையத்தில் பழைய நினைவுகளின் அதிர்வுகள் தங்கியுள்ளன. பெரும்பாலும் மனம் இந்த அதிர்வுகளைப் பற்றிக் கொண்டே நினைவுகளைத் தோற்றுவிக்கின்றது. ஆனால் நினைவின் பதிவுகள் எப்போதும் சித்தத்திலேயே தங்கியுள்ளன. பழைய விவரங்களை அறிய மனம் எப் போதும் சித்தத்தையே நாட வேண்டியுள்ளது. மனத்தின் நினைவு நிலைத்தளத்திலுள்ள விவரங்களைச் செயல் படுத்த ஒருவர் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதில்லை. ஆனால், மனத்தின் பழைய நினைவுகளுக்கான நினைவு நிலைத்தளத்திலுள்ள விவரங்களை அறிய ஒருவர் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். ஒரு சாதாரணன் மனத்தின் மறதி நிலைத்தளத்திலுள்ளதை மணிக் கணக்கில் ஆழ்ந்து சிந்தித்து முயன்றாலும் செயல்படுத்தி விவ ரத்தைப் பெற முடியாது. இதே சாதாரணனின் மனத் தின் மறதி நிலைத்தளத்தில் குவிந்துள்ள பதிவுகளே அவ னுடைய நடத்தையாக வெளிப்படுகின்றன. இந்த மறதி நிலைத்தளத்திலிருந்தே ஒருவர் கனவு உலகத்தின் காட்சி களுக்கான விவரங்களைப் பெறுகிறார். எனினும் மனத் தின் செய்கைகளுக்கான நான்காவது நிலைத்தளம் என்ற ஒன்றும் உண்டு. அதுவே "மேலான உயிர்ச்சார நிலைத் தளம்" ஆகும். ஒருவர் நிர்விகல்ப சமாதி நிலை எய்திய வுடன் அவர் மனம் இந்த நிலைத்தளத்தில் இருந்துதான் செயல்படுகிறது. அப்படிப்பட்டவர் சித்தத்தில் உள்ள முழு விவரங்களையும் அறியும் ஆற்றல் பெற்றவராகத் திகழ்கிறார். அவருடைய மனத்தில் மறதி நிலைத்தளம்

என்பதே இல்லை. அவர் சித்தத்தை ஆள்பவராக இருப்பதால் எல்லாம் அறிந்தவராகத் திகழ்கிறார்.

**திங்கட் கிழமை, 11, டிசம்பர், 1933**

### 40. சாதாரண மனித மனம் ஒரு குட்டிக் குரங்கின் அலைபாயும் தன்மையைப் போன்றது.

**தெளிவுரை :**

இயற்கையாகவே ஒரு இளம் குரங்கு எப்பொழுதும் நிலையற்று இயங்கும். அதனால் எப்பொழுதும் சும்மா இருக்க முடியாது. அது ஏதாவது ஒன்றைச் செய்து கொண்டே இருக்கும். இதே போல் ஒரு சாதாரணனின் மனம் நிலையாக நிற்காது. அது இடையறாது புலன் போகங்களை எண்ணியவாறே இருக்கும். ஒரு சாதாரண மனிதனின் சஞ்சல மனம் அவனுடைய கடந்த கால பெயர் புகழிலும், கடந்துபோன துர்அதிர்ஷ்ட சம்பவங்களிலும், கடந்த கால மகிழ்ச்சிகளிலும், மனத்திற்கு நிறைவு தரும் எதிர்பார்ப்புகளிலும், முயற்சி எடுக்காமல் நின்று போன திட்டங்கள் போன்ற பலதரப்பட்ட விஷயங்களிலும் அலை மோதிக் கொண்டிருக்கும். மனம் ஓரே நிகழ்ச்சி அல்லது சம்பவத்தில் நிலைத்து நிற்காமல் போனால் சினிமாவில் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து வரும் படங்கள் போல எண்ணிலடங்கா எண்ணங்கள் ஒன்றை அடுத்து மற்றொன்று வந்து போய்க்கொண்டே இருக்கும். மனம் ஏதாவதொரு குறிப்பிட்ட பொருளிலோ, விஷயத்திலோ, சம்பவம் அல்லது நிகழ்ச்சியிலோ ஆர்வம் காட்டுவதாக வைத்துக் கொள்வோம். அப்போது மனம் அந்தக் குறிப்பிட்ட பொருள், விஷயம், சம்பவம் அல்லது நிகழ்ச்சியில் மட்டும் நிலைத்துவிடும். அதனால் அந்தக் குறிப்பிட்ட பொருள் போன்றவற்றைக் குறித்துத் தொடர்ந்து வரும்

நிலையான எண்ணங்களே மனத்தில் எழும். மனம் உடனே எளிதாக தான் விரும்பியவற்றில் ஆழ்ந்து விடுகிறது. விழிப்பு நிலையில் சாதாரண மனம் மிகவும் சுறுசுறுப்புடனிருக்கும். ஏதாவதொன்றைப் பற்றி நினைக்காமல் ஒருகணம்கூட அதனால் இருக்க முடியாது.

**திங்கட்கிழமை, 11, டிசம்பர், 1933**

41. ***ஒவ்வொரு ஆசையும், எண்ணமும், சம்பவமும், செயலும் அதற்கான காலம், வெளி, காரணத்தில் ஊன்றிக் கொள்கின்றன.***

**தெளிவுரை:-**

படைப்பு அல்லது ஒன்று உயிர்ப்பு பெற்று வருவது குறிப்பிட்டதொரு கால கட்டத்தில் நிகழ்கிறது. ஒன்றின் பிறப்பு காலத்தைக் குறிக்கிறது. அதன் வாழ்நாள் "வெளி"யைக் குறிக்கிறது. அது உலகை விட்டு வெளியேறுவது காரணத்தைக் குறிப்பிடுகிறது. ஒவ்வொரு ஆசை, எண்ணம், சம்பவம், செயல் போன்றவற்றிற்கு ஆரம்பம் உண்டு. அது சிறிது காலமே வாழ்ந்து பிறகு முடிவடைகிறது. "ஆசை எண்ணம்" மிகமிகச் சூக்குமமானவை: எனினும் அவைகளுக்கென ஒரு "ஆரம்ப நிலை" உள்ளது. அவை சில காலம் வாழ்கின்றன. பிறகு முடிகின்றன. ஆகவே 'தூலப் பொருள்கள் மட்டுமே காலம், வெளி, காரணங்களில் பதிந்துள்ளன என்பது மட்டுமன்று. ஆசைகள் எண்ணங்கள் போன்ற சூக்குமமானவைகளும் காலம், வெளி காரணங்களைப் பெற்றுள்ளன. ஒவ்வொரு மனச்செய்கையும் காலம், வெளி, காரணங்களைப் பெற்றிருக்கின்றன.

**திங்கட்கிழமை, 11, டிசம்பர், 1933**

42. ***உண்மையைச் சொல்லப் போனால் கடவுள் இன்றி உயிர் இல்லை. ஆனால் நாம் இந்த உண்மையை மறக்கக் கூடிய நிலைக்கு ஆளாகிறோம். கடவுள் இல்லாத வாழ்க்கை, நாற்றமெடுத்த பிணக்குவியலிலும், குப்பையிலும் நெளியும் புழுவுக்கு ஒப்பாகிறது..***

**தெளிவுரை:-**

*கடவுள் ஒருவரே. அவர் எங்கும் வியாபித்து இருப்பவர். முடிவற்றவர். அவர் எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்பவர். கடவுள் இல்லாத உயிர் இல்லை. கடவுளால்தான் உலகில் உயிர் வாழ்கிறது. உண்மையைச் சொல்லப் போனால், ஆன்மாவே (தனிப்பட்ட உயிர்) கடவுள். இதுவே பேருண்மையாக இருந்த போதிலும் ஒரு உயிர் அதன், இந்த உண்மை இயல்பை மறந்து விடுகிறது. தூய மனம் அதன் புலன்களோடும், புலன் பொருள்களேடும் தொடர்பு கொள்ளும்போது மாசு படுகிறது. அதனுடைய சக்திகளும் சிதறிப் போகின்றன. மனம் தன்னை ஆத்மா என்பதற்குப் பதிலாக உடல் புலன்களோடு பந்தப்படுத்திக் கொள்கிறது. இந்தத் தவறான எண்ணம், உலகில் ஏற்படும் சொல்ல முடியாத துன்பங்களுக்குக் காரணமாகிறது. ஆகவே ஒரு மனிதன் தன்னுடைய பேருண்மை இயல்பை (கடவுள் என்பதை) மறந்து விடுவதால் நரக வேதனையில் உழல்கிறான். அது போன்ற வாழ்க்கை துன்பகரமானது. எந்தவித மதிப்பும் இல்லாதது. குப்பையில் உற்பத்தியாகி, குப்பையிலேயே உழலும் ஒரு புழுவுக்கும், கடவுளை மறந்து புலன் போகங்களில் மூழ்கிவிடும் மனிதனுக்கும் இடையில் எந்தவித வித்தியாசமும் கிடையாது.*

**செவ்வாய் கிழமை, 12, டிசம்பர், 1933**

### 43. *காலம், வெளி, காரணத்தில் நினைவு ஆற்றலும் பொதிந்துள்ளது.*

**தெளிவுரை :-**

*ஏற்கெனவே சொல்லியபடி ஒவ்வொரு எண்ணத்தின் செய்கையும் காலம், வெளி, காரணத்தில் அடங்கியுள்ளது. நினைவும் மனத்தின் சூக்குமச் செய்கைகளில் ஒன்றாகும். காலம், வெளி, காரணம் இல்லாவிட்டால் நினைவும் இல்லை. நினைவின் பொருளாவது கடந்தகால ஆசைகள், எண்ணங்கள், சொற்கள், செயல்களை நினைவு கூட்டிக் கொள்வது. அதாவது நம்முடைய சித்தத்தில் (மனக்கோப்பில்) பதிந்திருக்கும் பதிவுகளை நினைவுக்குக் கொண்டு வருவது. கடந்தகால ஆசைகள் போன்றவற்றை நினைவுபடுத்திக் கொண்டவுடன் மனத்தில் அதற்கான விவரம் தெரிகிறதோ அதுவே காலத்தின் கணிப்பு ஆகும். நினைவுக்குக் கொண்டு வந்த விவரம் மனத்தில் சிறிது காலம் தங்கியுள்ளது. இவ்வாறு தங்கியுள்ள காலமே அதற்கான "வெளி"யைக் குறிப்பிடுகிறது. இவ்வாறு பெறப்பட்ட விவரம் சிறிது காலத்திற்குப் பின்னர் வேறொரு எண்ணம் உண்டானதும் அதற்கு இடமளித்து விட்டு மறைந்து போகிறது. நினைவின் இதுபோன்ற "மறைவு" காரணத்தைக் குறிக்கிறது. ஆகவே ஒவ்வொரு நினைவும் வெளி, காலம், காரணங்களில் அடங்கியுள்ளது.*

**புதன்கிழமை, 13, டிசம்பர், 1933**

### 44. *பொதுவாக சாதாரண எண்ணங்கள் கோர்வையாக எழுவதில்லை. ஆனால் ஒருவர் எதைப்பற்றியாவது (அல்லது எந்த ஒரு பொருளைப் பற்றியாவது) தீவிரமாக*

***நினைக்கும்போது இத்தகைய எண்ணங்கள் கோர் வையாக வரும். அல்லது ஒன்றோடொன்று தொடர் புடையனவாக அமையும்.***

**தெளிவுரை:-**

*சாதாரணமாகவே ஒரு மனிதனுடைய மனம் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு அலைந்து திரியும். ஒரு பொருளிலிருந்து மற்றொன்றுக்குத் தாவும். இதனால் எண்ணிலடங்கா எண்ணங்கள் அவன் மனத்தில் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமலேயே பொங்கி எழு கின்றன. ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கு மிடையிலும், ஒரு எண்ணத்திற்கும் மற்றொரு எண்ணத் திற்குமிடையிலும் சம்பந்தா சம்பந்தமில்லாமல் இருக்கும். இவை சிதறிய எண்ணங்கள் எனப்படும். குறிப்பிட்ட ஒன்றில் ( அல்லது ஒரு பொருளில்) ஒரு மனிதன் அக் கறை காட்டும் போதும், ஒன்றைப் பற்றி (அல்லது ஒரு பொருளைப் பற்றி) ஆழ்ந்து சிந்திக்கும்போதும் அந்தக் குறிப்பிட்ட ஒன்றைப்பற்றிய (அல்லது பொருளைப் பற்றிய) எண்ணங்களே அலை அலையாக உண்டாகும். அத்தகைய எண்ணங்களே ஒன்றோடொன்று தொடர்பு டையதாகவும், இணைந்து வருவதாகவும் இருக்கும்.*

**புதன்கிழமை, 13, டிசம்பர் 1933**

***45. பெயரும் சூக்கும உருவமும் ஒரு நாணயத்தின் இரு புறங்களைப் போன்றது. அவை பிரிக்க முடியாதன.***

**தெளிவுரை-:**

*ஒரு பெயர் உண்டு என்றால் அதற்கு ஒரு உருவமும் உண்டு. பெயரும் உருவமும் இன்றி மனத்தினால் ஒரு பொருளை எண்ணிப் பார்க்க முடியாது. ஒருவர் ஒரு பெயரைக் கேட்டதும் அவர் மனம் கேட்ட பெயரின்*

சூக்கும உருவத்தை மூளை மையத்தில் கற்பித்துக் கொள்கிறது. கேட்ட பெயரின் சூக்கும உருவத்தைத் தவிர்த்து வேறு அர்த்தமோ அல்லது அறிவுத் தெளிவோ மனத்தில் பிரதிபலிப்பதில்லை. சூக்கும உருவத்தோற்றம் சரியானதோ தவறானதோ எனினும் கேட்ட பெயரின் மனோ உருவம் எப்படியும் உருவாகியே தீரும். மனத்தில் தோன்றும் மனோ உருவம் இல்லாத, பெயர் மட்டுமிருந்தால் அது பொருளற்றது. உதாரணத்திற்கு "கடவுள்" என்ற பெயரை எடுத்துக் கொள்வோம். ஒரு சாதாரண மனிதன் கடவுளைப் பார்த்ததில்லை. இருப்பினும் அவன் கடவுளை மேன்மையுள்ளவராகவும், பேராற்றல் படைத்தவராகவும் எண்ணுகிறான். அவன் அவருக்குச் சுயமாக ஒரு உருவத்தை (கற்பனை உருவத்தை) தன் அறிவின் எல்லைக்கு ஏற்ற வகையில் உருவாக்குகிறான். அதன்பிறகே "கடவுள்" என்ற பதத்தின் அர்த்தம் அவன் மனத்தில் பிரதிபலிக்கிறது. உண்மையில் ஒரு மனம் உருவமற்ற ஒன்றை எண்ணி நினைத்துப் பார்க்க முடிவதில்லை. மனம் எப்போதும் முரண்பட்டே செயல்படுவது. அதனால் அது ஒரு உருவமுள்ள பொருளை மட்டுமே நினைக்க முடிகிறது. தோன்றும் உருவம் எவ்வளவு சூக்குமமானதாயினும் ஒவ்வொரு ஆசையும் எண்ணமும் மனத்தினால் எளிதில் புரிந்து கொள்ள முடிவது மூளை மையத்தில் இவைகளுக்கான கற்பனை உருவம் உதிப்பதால்தான்! ஆகவே பெயரும் சூக்கும உருவமும் ஒன்றன் பின் ஒன்றாக எழுபவை. அவை பிரிக்க முடியாதவை.

**புதன்கிழமை, 13, டிசம்பர் 1933**

**46. பல்வேறு உயிர்களின் மனத்தூய்மையின் அளவுக்கேற்ப மனோசக்தியும், அறிவாற்றலின்**

**பகுத்தறியும் சக்தியும் மாறுபடுகின்றன. அந்த அறிவின் மாறுபாடுகளுக்கு ஏற்பவே பல்வேறு உயிர்களுக் கிடையே காணும் மாறுதல்களும் அமைகின்றன.**

**தெளிவுரை :-**

தூய மனம், மன ஒருமைப்பாட்டுச் சக்தியை எய்துகிறது. அதன் விளைவாக மனத்தின் ஆற்றலும் சக்தியும் ஒன்று திரண்டு செயல்படுகிறது. அறிவு கூர்மையாகிறது. பகுத்தறிவின் சக்தியும் மேம்படுகிறது. எனவே ஆன்மாவின் தூய ஒளி அதனில் பிரதிபலிக் கிறது. ஆனால் மாசு நிறைந்த மனம் இதற்கு நேர்மாறாக இருக்கிறது. அத்தகைய மனத்தின் சக்தி சிதறுண்டு போகிறது. புத்தியும் அறிவின் சக்தியும் மந்த சக்தியைப் பெறுகிறது. அத்தகைய மனத்தை கலங்கல் தண்ணீருக்கு ஒப்பிடலாம். கலங்கலான தண்ணீரை மூன்று வெவ்வேறு கண்ணாடிப் பாத்திரங்களில் எடுத்துக் கொள்ளுங்கள். முதல் கண்ணாடிக் குப்பியில் எடுத்த தண்ணீரை அப்படியே வைத்துக் கொள்ளுங்கள். இரண்டாவது கண்ணாடிக்குப்பியில் உள்ள தண்ணீரை ஒரு முறை வடிகட்டுங்கள். அதே மாதிரி மூன்றாவது குப்பியையும் உங்களால் முடிந்த அளவுக்கு நன்றாக வடிகட்டுங்கள். நீங்கள் உமது பிரதி பிம்பத்தை முதல் பாத்திரத்தில் உள்ள நீரில் பார்த்தால், உங்கள் முகம் தெரியாது. அப்படித்தான் தெரிந்தாலும் அது தெளிவாகத் தெரியாது. இரண்டாவது பாத்திரத்தில் பிரதிபிம்பம் நன்றாகத் தெரியும். ஆனால் மூன்றாவது பாத்திரத்தில்தான் பிரதி பிம்பம் மிகமிகத் தெளிவாகத் தெரியும். சுத்தப்படுத்தப்பட்ட தண்ணீரில் பிரதிபலிப்பு சுத்தமாக இருக்கும். இதேபோல் மனத்தினுடைய சக்தி, பகுத்தறியும் ஆற்றல், அறிவின் தெளிவு பல்வேறு.

உயிர்களில் அவைகளின் தூய்மையான நிலை அல்லது தூய்மையற்ற தன்மையைப் பொறுத்தே பரிமளிக்கிறது. தூய்மை அல்லது தூய்மையற்ற மனமே ஒரு உயிருக்கும் மற்றொரு உயிருக்கும், ஒரு இனத்திற்கும் மற்றொரு உயிரினத்திற்கும் இடையே காணப்படும் மாறுபாட்டிற்கு முழுக் காரணமாகிறது. மனத்தின் இத்தகைய தூய்மையான - தூய்மையற்ற தன்மையினாலேயே ஒரே பொருளை பல தரப்பட்டவர்கள் பல்வேறு விதமாக விமர்சிக் கிறார்கள். இந்த அகிலம் என்பது ஒன்றுமே இல்லை - ஒருவருடைய மனத்தின் சொந்தப் படைப்பேயாகும்! ஒரு மகான் இந்த அகிலத்தில் ஒன்றே ஒன்றைத்தான் காண்கிறார். அதாவது கடவுள் - கடவுளை மட்டுமே! ஆனால் ஒரு தனிப்பட்ட சாதாரணன் ஒற்றுமையில் வேற்றுமையைக் காண்கி றான். இது அவனுடைய மாசுற்ற மனத்தின் விளைவு!

**புதன்கிழமை, 13, டிசம்பர் 1933**

47. **எல்லா அனுபவங்களும், பல்வேறு விஷயங்களின், பொருள்களின், சம்பவங்களின் அறிவுத் தெளிவும் சித்தத்தில் (மனக்கோப்பில்) அதனதன் புறாக் கூண்டுகளில் அடுக்கப்பட்டிருக்கின்றன.**

**தெளிவுரை:-**

எல்லா கடந்தகால, நிகழ்கால எதிர்கால அனுபவங்களும் பல்வேறு மாறுபட்ட பொருள்கள், விஷயங்கள், சம்பவங்களுக்கான விவரங்கள் சித்தத்தில் (மனக்கோப்பில்) அவைகளின் காரண உருவங்களுடன் தங்கியுள்ளன. ஒரு குறிப்பிட்ட விஷயம், பொருள் அல்லது சம்பவம் குறித்த விவரங்கள் அதற்கான தனித் தனி புறாக்கூண்டில் சீராக அடுக்கப்பட்டு உள்ளன. மாதிரிக்கு "அம்மா" என்ற சொல் உச்சரிக்கப்படுகிறது

என வைத்துக் கொள்வோம். நீங்கள் அம்மா என்கிற சொல்லை மட்டுந்தான் கேட்கிறீர்கள். காது அந்தச் சொல்லைப் பற்றிக் கொள்கிறது. கேட்கும் சூக்குமப் புலன் அந்தக் குறிப்பிட்ட வார்த்தையின் ஒலியை மூளை மையத்திற்குக் கொண்டு செல்கிறது. அதன் பிறகும் நீ கேட்ட வார்த்தையின் விவரத்தை உனது மனம் உணரவில்லை. அது ஏதோ அந்தச் சொல் கேட்டது என்ற அளவிலேயே நின்றுவிடுகிறது. பிறகு மனம் சித்தத்திற்கு (மூலாதாரத்திலுள்ளதற்கு) "அம்மா" என்ற சொல்லின் ஒலி அலையை அனுப்புகிறது. அவ்வாறு அனுப்பப்படும் ஒலி "அம்மா" என்ற சொல்லின் விவரம் அடங்கியுள்ள புறாக் கூண்டில் தேடிப் பார்க்கிறது. இந்த புறாக் கூண்டை அது கண்டுபிடித்தவுடன் அதற்கான விவரத்தைப் புரிந்து கொள்கிறது. உடனே அது திரும்பி இதய மையத்தை அடைகிறது. அவ்வாறு அடைந்த வுடன் உங்களுக்குச் சொல்லின் விவரம் புரிகிறது. அதன் பிறகே "அம்மா" என்கிற வார்த்தையின் அர்த்தம் மனத்தில் சூக்கும உருவில் தோன்றுகிறது. உடனே உங்களுக்கு அந்த வார்த்தையின் அர்த்தம் தெரிந்து விடுகிறது. இந்தச் சூக்குமப் பொருள் மூளை மையத்தைச் சென்றடைந்தவுடன் அங்கேதான் "அம்மா" என்ற சொல் லின் தெளிவான அர்த்தத்தைக் கண்டு கொள்கிறாய். இப்பொழுது மூளை மையத்திலுள்ள மனத் திற்கும் சித்தத்தில் உள்ள குறிப்பிட்ட புறாக்கூண்டிற்கும் இடையில் இணைப்பு ஏற்படுகிறது. பின்னர் அடுக்கடுக் காகத் தொடர்ந்து வரும் "அம்மா" என்ற சொல்லைப் பற்றிய எண்ணங்கள் உதிக்கின்றன. அதன் பிறகு மட்டுமே "அம்மா" என்கிற சொல்லின் பொதுப்படை யான பொருளையோ அல்லது ஒரு குறிப்பிட்ட விவரத்தையோ பெறுகிறீர்கள். நீங்கள் பேசும், எழுதும்

அல்லது கருதும் ஒவ்வொரு சொல்லின் விவரமும் மேலே கூறப்பட்ட முறைப்படியே அதனதன் புலன் உணர்வுகளிலிருந்து தொடங்குகிறது. · மனம் சித்தத்திலுள்ள இந்தக் குறிப்பிட்ட புறாக்கூண்டிலிருந்து விவரத்தைப் பெறாதவரை அதைப்பற்றிய எந்தவிதப் பிரதிபலிப்பும் ஏற்படுவதில்லை. எனவே விவரம் புரியாத நிலையில் நின்று போகிறது. இது உண்மையாக இல்லாவிட்டால், அதாவது ஒருவர் சித்தத்தில் உணராமல் ஒரு சொல்லின் பொருளை உடனே புரிந்து கொள்ள முடியுமெனில் சித்தத்திற்கோ, நினைவிற்கோ, தேவையே இருக்காது! ஆனால் ஒரு விஷயம், பொருள் அல்லது சம்பவம் குறித்த கடந்த கால நினைவுகள் இல்லாவிடில் அவைகளின் விவரத்தைப் புரிந்து கொள்ள இயலாது என்பது நமக்குத் தெரிந்ததே! ஞாபகம் என்ற ஒன்று இல்லாவிடில் ஒரு குறிப்பிட்ட விஷயம், பொருள் போன்றவற்றுடன் விவரமறியத் தொடங்கும் ஒவ்வொரு சமயத்திலும் அது ஒரு புதிய விஷயமாகவே தோன்றும். முன்கூட்டித் தெரிந்திராத ஒரு விஷயம், பொருள், சொல் போன்றவற்றின் விவரத்தை நாம் உடனே புரிந்து கொள்கிறோமெனில் அது நாம் முன்னர் விவரித்த முறைப்படி நடப்பதேயாகும். நாம் ஒவ்வொரு புதிய விஷயம், பொருள், சொல் போன்றவற்றை மேற்கூறிய முறையில்தான் புரிந்து கொள்கிறோம். ஆனால் நாம் அனுபவத்திலிருந்து தெரிந்து கொள்வது யாதெனில் ஒரு புதிய அதிசய விஷயம் நமக்கு உடனே பிடிபடுவதில்லை. இதன் காரணம் என்னவெனில் மனம் இந்தப் புது மையை அறியச் சித்தத்தில் தேடும் வேலையை ஆரம்பிக் கிறது. அதற்கான விவரமுள்ள புறாக்கூண்டை தேடுகிறது. இதைப்பற்றிய கடந்த காலப் பதிவுகள் ஏதும்

இல்லாததால் அதற்கான பதிலைக் காண முடியாமல் திரும்புகிறது. இதனால் புதிய விஷயம், பொருள் சொல் போன்றவைகள் நமக்குப் புரியாத புதுமையானதாக ஆகிவிடுகிறது. ஆனால் மனம் இப்போது இந்தப் புதிய விஷயம் போன்றவற்றின் பதிவை பதிய வைத்துக் கொள்கிறது. இதே விஷயம் போன்றவை இரண்டாவது முறை வரும்போது அதற்கான விவரத்தைச் சித்தத் திலிருந்து பெற்றுப் புரிந்துகொள்ள முடிகிறது. இதை விவரிப்பதற்கு வெகு நேரமாகிறது. ஆனால் மனம் சித்தத்திலிருந்து தேவைப்பட்ட விவரத்தை நொடியில் பெற்று விடுகிறது. ஒவ்வொரு விவரம் அல்லது நினைவை சித்தத்திலிருந்து பெற மனம் வெகுவேகமாக இயங்கு வதால் மேலே விவரிக்கப்பட்ட நடைமுறையை ஒருவரால் புரிந்து கொள்ளவே முடிவதில்லை. இதற்கு மனச்செய் கையைக் கூர்ந்து கவனிக்கும் திறன் தேவை. அதற்காக ஒருவர் மனத்தூய்மையைப் பெற வேண்டும். மனத்தின் சூக்கும நிலையையும், ஒருமுகப்பட்ட ஆற்றலையும் எய்த வேண்டும். அதன்பின்னரே மனத்தின் மிக நுண்ணிய சூக்கும ஆற்றலைப் புரிந்து கொள்ள இயலும்.

**ஞாயிறு, 17 டிசம்பர், 1933**

48. **அறிவு**, (**புத்தி**) **என்றால் என்ன**?

**பதில்**-:

மனத்தின் சிந்திக்கும் ஆற்றலே "புத்தி" என்று அழைக்கப்படுகிறது. "அறிவு" (புத்தி) எல்லாப் பொருள் களைப் பற்றியும் செயல்பட்டு அதைப்பற்றிய விவரத் தைத் தருகிறது. அறிவு மூளை மையத்தில் காலம், வெளி, காரணங்களில் இயங்குகிறது. அதனால் நாம் காலம், வெளி காரணத்தை அறிவினால் புரிந்து கொள்கிறோம்.

நாம் அறிவின் மூலமாக ஒவ்வொன்றையும் பகுத்தறிந்து, ஆய்ந்து முடிவெடுக்கிறோம். அதன் செயல்களாவன: பகுத்தறிதல்; கூர்ந்து கவனித்தல்; சந்தேகித்தல்; நம்பிக்கை கொள்ளல்; முடிவுக்கு வருதல் - இறுதியில் ஒரு தீர்வுக்கு வருதல் ஆகும்.

**ஞாயிறு, 17, டிசம்பர், 1933**

49. **உள்ளுணர்வு** (Will) **என்றால் என்ன?**

**பதில்:-**

உள்ளுணர்வு அல்லது உள்ளுணர்வின் ஆற்றல். மனத்தின் ஆற்றல்களில் ஒன்றாகும். உள்ளுணர்வின் ஆற்றல் இதய மையத்தில் இயங்குகிறது. இயக்க சக்தியை உபயோகிக்கும் மனத்தின் செயலுக்கு "உள்ளுணர்வு" என்று பெயர். அறிவின் ஆய்வின்படி புலன்களையும், உடலையும் இயக்குவித்தலும், இயக்காமலிருப்பதும் உள்ளுணர்வின் ஆற்றலாகும். உள்ளுணர்வே எல்லாக் கட்டளைகளையும் நிறைவேற்றுகிறது. எல்லா ஆசைகளையும், காமம், காதல், பேராசை, வெறுப்பு, கோபம், பயம், ஆர்வம், அவா, பரபரப்பு, அனுதாபம், வைதல், உதாசீனம், பெருமை, மயங்குதல், பூரிப்பு, வெறுப்பு, அதிசயம், குரூரம், வியப்பு, நன்றியுணர்வு, பணிவு, பதிலுக்குப் பதில் பேசுதல், வெட்கம் முதலிய உணர்ச்சி வயப்படும் உணர்வுகளையும் முடித்து வைக்கிறது. "உள்ளுணர்வு" என்பது இருவகைப்படும். அதாவது சூக்குமம், தூலம் ஆகும். நாம் ஒரு குறிப்பிட்ட பொருளையோ அல்லது விஷயத்தையோ விரும்பும்போது உள்ளுணர்வு சூக்குமமாகச் செயல்படுகிறது. இந்த விருப்பம் அல்லது ஆசை ஒரு எண்ணமாக வரும்போது அதைப்பற்றி ஒரு முடிவான செயலுக்கு வருகிறோம். அப்போது உள்ளுணர்வின் ஆற்றல் தூல உருவில் செயல்படுகிறது.

உள்ளுணர்வின் ஆற்றல் பலதரப்பட்ட மக்களிடையே அவரவர் மனத்தின் தூய்மை நிலை அல்லது தூய்மையற்ற நிலைக்கு ஏற்ப மாறுபடுகிறது.

**ஞாயிறு, 17 டிசம்பர், 1933**

**50. "ஞாபகசக்தி" என்றால் என்ன?**

**பதில்:-**

ஆசைகள், எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள், போன்ற முன்னால் தேக்கி வைக்கப்பட்ட அனுபவங்களை மனக்கோப்பிலிருந்து (சித்தத்திலிருந்து) நடைமுறைக்கு அல்லது மூளை மையத்திற்குக் கொண்டு வரும் மனத்தின் செய்கையை "ஞாபகசக்தி" என்கிறோம். ஒவ்வொரு ஆசை, எண்ணம், செயல், சம்பவம், நிகழ்ச்சியும், பார்த்தவை, கேட்டவை, கவனித்தவை எல்லாமே மனத்தில் பதிக்கப்பட்டுவிடுகின்றன. அத்தகைய பதிவை மீண்டும் நினைவிற்குக் கொண்டு வருவதையும், செயல் படுத்துவதையுமே "ஞாபகசக்தி" எனப்படுகிறது. மனத்தில் பதிந்த பதிவு மிகத் தெளிவாகவும், போதுமானதாகவும் இருக்கக்கூடும். அது தெளிவற்றும், விவர மற்றும், மங்கலாகவும், திரை மூடியும், விளக்கமில்லாமலும் இருக்கக்கூடும். இந்த வித்தியாசங்கள் மனத்தின் தூய்மை நிலைக்கும், தூய்மையற்ற நிலைக்கும், மனத்தின் வலிமையைப் பொருத்தும் ஏற்படுகின்றன. மேலும் இவை நாம் அவைகள் மீது (ஆசைகள் போன்றவற்றின் மீது) கொண்டுள்ள அக்கறை, ஆர்வம், முக்கியத் துவத்தைப் பொருத்தும் உண்டாகின்றன. எல்லா ஆசைகள், எண்ணங்கள், செய்கைகள் போன்றவற்றின் பதிவுகள் சித்தத்தில் (மனக்கோப்பில்) அவைகளுக்கான காரண உருவில் தங்கியுள்ளன. பதிவு மிகவும் இலேசானதாயினும் அது மறைவதில். அது சித்தத்தில் இருந்தே தீருகிறது.

நினைப்பதாலும், மனத்தின் உள்ளுணர்வைச் செயல்படுத்துவதாலும் நாம் சித்தத்திலிருந்து நினைவுப் பதிவுகளை ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறோம். ஞாபக சக்தியின் வலிமை உடல் நலக் குறைவாலும், யோகத்தினாலும், மனோ வியாதியினாலும், பிரம்மச் சரிய இழப்பினாலும் மாறுதலடைகிறது.

**ஞாயிறு, 17, டிசம்பர், 1933.**

51. **மேலான அல்லது அகண்ட உயிர்ச்சாரமே சிவம். (கடவுள் அல்லது பரம ஆன்மா) தனிப்பட்ட உயிர்சாரம் சீவன் (சீவ ஆன்மா). உடலும், புலன்களுடன் பந்தப்படுத்திக்கொள்ளும் உயிர்ச்சாரத்தின் தன்மையையே "அகந்தை" என்கிறோம்.**

**தெளிவுரை:-**

நிர்விகல்ப சமாதி நிலையில் பொருள், அதற்கான விஷயம், விவரங்கள் அனைத்துமே முழுமையாக ஐக்கியமாகி விடுகின்றன. அதன் பிறகு காண்பதெல்லாம் தன்னில் தானேயான உயிர்ச்சார மகாசமுத்திரம் மட்டுமே. இந்த நிலையில் இரு நிலைக்கு இடமேயில்லை. ஒருவர் இச்சமயத்தில் மிகவும் மேலான அல்லது அகண்டாகார உயிர்ச்சாரத்தில் திளைத்திருக்கிறார். இந்த அகண்டாகார உயிர்ச் சாரத்தையே "சிவம்", கடவுள், பிரம்மம் என்றெல்லாம் அழைக்கிறோம். மனம் இந்த சமாதிநிலையை எய்தாமல் ஒன்றாமல் உடலளவில் ஒட்டியிருக்கும்போது இதே அகண்டாகார உயிர்ச்சாரமும் உடலில் தங்கிய உணர்வுடன் தனது சுதந்திர எல்லையிலாப் பரந்து விரிந்த இயல்பை மறந்து விடுகிறது. அதன்பிறகு அதை சீவன் (தனி உயிர்) என்றழைக்கிறோம். மனம் உடல் புலன்களுடன் பந்தப்பட்டு அவற்றைத் தன்னுடையது என்று எண்ணும்

நிலையே "அகந்தை" எனப்படும். மனம் சீவான்மாவின் கருவி. அது தனக்கான உயிர்ப்பையும், ஒளியையும் சீமான்மாவிலிருந்து பெறுகிறது. சீவான்மா அதன் கருவியாகவுள்ள மனத்தின் மூலம் உலகத்தைக் காண்கிறது. அறிந்தும் கொள்கிறது. சீவன் தனிப்பட்ட உடல், புலன்களுடன் தன்னை மனத்தின் மூலமாக இணைத்துக் கொள்ளும்போது அதை "அகந்தை" என்கிறோம்.

**ஞாயிறு, 17 டிசம்பர், 1933**

52. ***ஒருவர் தனது உடல், புலன்கள், வெளி உலகம் அனைத்தையும் அடியோடு மறந்த நிலையில் எல்லா ஆசைகள், எண்ணங்கள், முரண்பாடுகள் அனைத்தையும் விட்டுவிலகியுள்ள தன்மையில் தானே மேலான "பிரம்மம்" என்ற உயர்வில் நிற்கிறார்.***

**தெளிவுரை:-**

மேலான "பிரம்மம்" அல்லது "பரமான்மா" என்பதின் உண்மையைப் புரிந்து கொள்வது மிகவும் கடினம். இதை நிர்விகல்பசமாதி நிலையில் மட்டுமே அனுபவத்தில் புரிந்துகொள்ள முடியும். அப்போது ஒருவர் தனது சொந்த உடல், புலன்கள், வெளி உலகம் எல்லாவற்றையும் முழுமையாக மறந்து விடுகிறார். மனம் ஆன்மாவில் ஒன்றுகிறது. ஆகவே எந்த ஒரு ஆசைக்கும், எண்ணத்திற்கும், முரண்பாட்டிற்கும் இடமே இல்லாமல் போகிறது. அந்த நிலையில் "ஒன்றே ஒன்று" மட்டுந்தான் நிற்கிறது. இந்த நிலையே பேருண்மை நிலை, மேலான பிரம்மநிலை எனலாம். இத்தகைய மேலான "தானே பிரம்மம்" என்ற நிலையை நிர்விகல்பசமாதியில் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். ஒரு ஞானி மேலான உண்மையைப் பகுத்துப் பகுத்துப் பார்த்து பேருண்மைப்

பொருளை அறிதல் முறையில் தன்னைப் பரப்பிரம்மம் என்று சொல்லிக் கொள்ள முயல்வார். இடையறாத "பேருண்மை" உண்மையற்ற நிலைகளைப் பகுத்தறிந்து கொண்டே போவதால் மட்டுமே தானே பிரம்மம் ஆகும் உயர்வைப் பெற முடியாது. அவரால் அந்த நிலையைப் புரிந்து கொள்ள இயலாது. பிரம்ம நிலையின் பொருளும் விளங்காது. அவர் அதற்காக முயல்கிறார் என்று வேண்டுமானால் சொல்லலாம்.

**ஞாயிறு, 17, டிசம்பர், 1933**

53. **ஒருவருடைய ஆசை, எண்ணத்தின் இயல்புக்கேற்ற மனம் அவருடைய சூக்கும உடலைக் கொண்டு தான் அடைய விருப்பங்கொண்ட பொருளின் சூக்கும உடலுடன் அனுபவிக்கவோ அல்லது வேதனைப்படவோ செய்கிறார்.**

**தெளிவுரை:-**

ஏற்கெனவே கூறியுள்ளபடி பெயரும் சூக்கும உருவமும் எப்போதும் ஒன்றையொன்று தழுவி இருப்பவை. பிரிக்க முடியாதவை. உதாரணத்திற்கு ஒரு அழகிய பொருளுக்கு ஆசைப்பட்டு நினைக்கும்பொழுது அதனுடைய மனோ பிம்பத்தை நம்முன் கொண்டு வரு கிறோம். நாம் விரும்பி அந்தப் பொருளை அனுபவிக்க வேண்டும் என்று எண்ணினால் நமது சூக்கும உடல் மூல மாக அதைச் செய்து முடிக்கிறோம். பல்வகைப்பட்ட அனுபவிப்புகள் உள்ளன. முதலில் உடலளவிலான தூல அனுபவிப்புகள் நிகழும் இரண்டாவதாக சூக்குமப் புலன்களால் தொடுவது, பார்ப்பதின் மூலமாக சூக்கும உருவங்களை அனுபவிக்கும் நிலை ஏற்படுகிறது. பிறகு மனத்தளவிலான அனுபவிப்புகளுக்கு வருவோம். அதாவது நாம் பார்வைக்கு வெகு தூரத்திலுள்ள ஒரு

குறிப்பிட்ட பொருளை நினைக்கிறோம். நமது சூக்கும உடல்களின் துணையுடன் மனத்தளவில் அவற்றை அனுபவித்து மகிழ்கிறோம். ஆக மனம் ஒரு சூக்கும சக்தி, தூல நிலை உதவியின்றி மனம் தானாகச் செயல்பட முடியாது. அந்தத் தூலப் பொருளை சூக்கும உடலில் அது பெறுகிறது. மனம் எப்போதும் சூக்கும அல்லது தூல உடல் புலன்களின் மூலமே செயல்படும். ஒரு கெட்ட ஆசையும் எண்ணமும் எழும்போது அந்தக் கெட்ட பொருளின் சூக்கும உருவம் மூளை மையத்தில் தோன்றுவதால் நமது சூக்கும உடல்களால் மனோ வேதனையை அனுபவிக்கிறோம். ஆகவே ஒரு ஆசை எண்ணத்தின் இயல்புக்கு ஏற்ப மனமானது ஒருவருடைய சூக்கும உடலின் மூலமாக நினைத்து ஆசைப்பட்ட பொருளின் சூக்கும உருவத்துடன் மகிழ்ச்சியுறுவதோ வேதனைப்படுவதோ ஏற்படுகிறது.

**திங்கட்கிழமை, 18, டிசம்பர், 1933**

### 54. எல்லையில்லாப் பரவெளி என்றால் என்ன?

**பதில்:-**

எல்லையற்றது என்பது ஒன்றே ஒன்றுதான். இரண்டாவது இல்லாதது. எல்லையற்றது என்பது இரண்டாக இருக்க முடியாது. அப்படி இருக்க முடியும் என்றால் அதை முடிவற்றது என்று சொல்ல முடியாது. முடிவற்ற ஒன்றுக்கு ஆரம்பமும் இல்லை. முடிவும் இல்லை. முடிவற்றவை இரண்டு எனில் ஒன்றை மற்றொன்றுடன் ஒப்பிட முடியும். இரண்டும் ஒரு எல்லைக்குள் வந்துவிடும். எல்லைக்குள் வந்து விட்டால் அதற்கு முடிவும் ஆரம்பமும் ஏற்பட்டு விடுகிறது. எல்லை யற்றது எங்கும் வியாபித்து நிற்பது. பிறப்பற்றது; வளர்ச் சியற்றது; அழிவற்றது; இறப்பற்றது; ஆண் பெண் பேத

மற்றது. ஒரு எல்லைக்குள் இயங்கும் மனம் எல்லையில்லாப் பரவெளியை கற்பனையால்கூட நினைக்க முடியாது. முடிவற்ற ஒன்றுடன் ஒப்பிட்டோமானால் அப்பர வெளியில் உள்ள கோடானு கோடி உலகங்களுடன் நாம் வாழும் உலகம் அணு அளவே. பரந்த கடலின் நீர்க்குமிழ்கள் போல எல்லையில்லாப் பரவெளியில் ஒவ்வொரு கணமும் நம்முடையதைப் போன்ற கோடானுகோடி உலகங்கள் தோன்றித் துகள்களாகிய வண்ணம் இருக்கின்றன.

**செவ்வாய்க்கிழமை, 19, டிசம்பர், 1933**

**55. *நிர்விகல்பசமாதி என்றால் என்ன? எங்கே எப்போது அது நிகழ்கிறது? அது எவ்வாறு உணரப்படுகிறது?***

**பதில்:-**

*நிர்விகல்ப சமாதியைப் பல்வேறு பெயர்களால் அழைக்கிறோம். அதாவது, அசம்பிரக்ஞாத சமாதி, நிர்வாணம், துரியநிலை அல்லது ஆழ்ந்திருக்கும் தியான நிலை. நிர்விகல்ப சமாதி ஒரு ஒப்புயர்வற்ற நிலை. அது சாதாரண மனித மனத்திற்கு எட்டாதது. இந்த நிலையை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. ஏனெனில் மனமும், புத்தியும் அங்கே எட்டவே முடியாது. கற்பனை கூட அங்கே செயலிழந்து போகிறது. இந்தச் சமாதி நிலை புலன் உணர்வுக்குப் பிடிபடாதது. அறிவின் எல்லைக்கும் அப்பாற்பட்டது. ஆனால் அது ஒரு தனிப்பட்ட நிலை. அது ஒரு மேல்படி, தன்னிகரற்ற நிரந்தரமான முக்தி. இந்த நிர்விகல்பசமாதி நிலையை உள்ளபடி விளக்க முடியாது. ஆனால் அது அனுபவத்தில் மட்டுமே விளங்கும். அதனை உணர்ந்து ஆனந்திக்க முடியாது.*

நாடிகளும் (நரம்புகளும்) உடம்பும் தூய்மை பெறும் போழுது, ஆசைகள், மாசுகள், பந்தங்கள், முரண் பாடுகளை மனம் உதறித் தள்ளும்போது; குண்டலினி சக்தி (மனிதனின் ஆதார சக்தி) கடைசி மையத்தை (சகஷ்ரத்தை) அடையும் நிலையை, ஒருவர் இந்த உன்னத நிலையில் (நிர்விகல்பசமாதியை) எய்துகிறார். விளையும் ஒவ்வொரு ஆசையும் - நல்லதாயினும், கெட்டதாயினும் இந்தப் பெரும் நிலையை எய்துவதற்குத் தடைக் கல்லாகும். ஒவ்வொரு ஆசைக்கும் தேவை ஏற்படுகிறது. அது ஒரு குறைபாட்டை ஏற்படுத்தி விடுகிறது. நிலை யான மன நிறைவு இருந்துவிட்டால் தேவை என்பது இல்லை. விருப்பமென்பதும் இல்லை. எதுவுமே இல்லை. இந்த உன்னத நிலையை எய்துவதற்கு முன்னர் மோட் சத்திற்கான (ஆன்ம விடுதலைக்கான) ஆசையைக்கூட ஒருவர் துறந்துவிட வேண்டும்.

சாதகன் (ஆன்மிகப்பயிற்சியாளன்) ஒரு குறியை முன் நிறுத்தி தியானத்தைத் துவங்குகிறான். நிர்விகல்ப சமாதி நிலையை எய்துவதற்கு முன்னர் கடவுளின் உருவ மற்ற நிலையை அல்லது பிரம்மத்தை மனத்துக்குள் கொண்டு வர முடியாது. இந்த முக்திப்பேற்றின் நிலையை எய்துவதற்கு முன்னர் பெயரும் உருவமும் தவிர்க்க முடியாததாகிறது. பேத நிலை நீடிக்கிறது. ஆகவே ஒரு சாதகன் ஒரு உருவத்தை வைத்தே தியானத்தைத் துவங்க வேண்டும். அந்த உருவம் கற்பனையில் கொண்டுவரக் கூடியதாகவோ தூல உருவம் பெற்றதாகவோ இருக்கும். அது ஒரு தேவன் அல்லது சக்தியின் உருவமாகவும், யந்திரங்களாகவும் (மந்திரத்தகடுகளாகவும்), ஜோதி சொரூபமாகவும், சில மந்திரங்களாகவும் (தெய்வீகப் பெயர்களாகவும்)

முடிவில் "நான் யார்" என்பதில் துவங்கி உடலுமல்ல, புலன்களுமல்ல, அகந்தையுமல்ல, உள்ளுணர்வின் ஆற்றலுமல்ல, அறிவுமல்ல, பஞ்ச பூதங்களுமல்ல என்ற வகையில் தியானம் செய்து மனத்தை ஆன்மாவில் கொண்டு வந்து நிறுத்துவர். எந்த வழியைப் பின்பற்றினாலும் ஒருவர் இடை விடாது பாடு படவேண்டும். உடல், நாடி, மனம் போன்றவற்றின் தூய்மையை அடைய வேண்டும். (நிலையான பிரம்மச்சரியத்தை அல்லது கற்பு நெறியைக் காக்க வேண்டும்.) நிர்விகல்பசமாதி நிலையை அடைய குண்டலினி சக்தியை முழுமையாக மேல்நிலைக்கு, சக்க ரங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும். இதற்குப் பிரம் மச்சரியம் மிகமிக இன்றியமையாதது. எண்ணம், சொல், செயலில் நிலையான பிரம்மச்சரியத்தை கடைப் பிடிக்கா விட்டால் இந்த உன்னத நிலையை யாருமே அடைய முடியாது.

குண்டலினி சக்தி முழு அளவில் ஆறாவது மையத் திற்குச் (ஆக்ஞா சக்கரத்திற்குச்) சென்றடையும் போது, அதாவது மூளை மையப்பகுதியைச் சென்றடையும் போது (புருவமத்தி) மனமானது தியான உருவத்தில் நிலைத்து நிற்கிறது. அல்லது பகுத்தறிந்து கொண்டே போய் பேருண்மையைப் புரிந்து கொண்ட எண்ணத்தின் நிலையில் ஒன்றி நிற்கிறது. பேச்சு நின்று விடுகிறது. வெளி உலகத் தொடர்பு அற்றுப் போகிறது. தியான உருவத்தையும் தாண்டி மேலே போகிறார். தியான உருவத்தின் சூக்குமப் பொருளைப் பிடித்துக் கொண்டு தொடர்கிறது. அந்த நிலையில் ஒருவருக்கு எங்கும் வியாபித்து நிற்கும் வெள்ளி நிற வெளிச்சம் தெரிகிறது. அதையே தெய்வீக ஒளி என்கிறோம். இந்த நிலையில்

மூச்சு விடுதல் தானாகவே குறைந்து ஒரே ரீதியில் இழைகிறது. இப்போது மனம் அந்தத் தெய்வீக ஒளியில் ஒன்றி நிற்கிறது. அவ்வாறு ஒன்றி நிற்பது தொடர்ந்து நீடிக்குமாயின் மனம் தெய்வீக ஒளியில் சங்கமித்து விடுகிறது. உடலைப் பற்றிய நினைவு கரைந்து மறைந்து விடுகிறது. அல்லது உடலைப் பற்றிய நினைவு பெருத்துக் கொண்டே போய்ப் பரந்த எல்லையற்ற வெளியில் ஒன்றி விடுகிறது. மனத்தைத் தெய்வீக ஒளியிலேயே நிலைத்து நிற்கச் செய்வதால் அந்த ஒளி மறைந்து விடுகிறது. மூச்சு தானாகவே நின்று போகிறது. மனம் ஒளி என்றும், ஒளியற்றதென்றும் கூற முடியாத நிலையிலுள்ள எல்லையற்ற பரவெளியில் கரைந்து மறைந்து விடுகிறது.

உலகாயதத்தில் உழலும் மக்களுக்கு இது அபூர்வமானதாகத் தெரியும். நிர்விகல்பசமாதியில் மூச்சு நின்று போகிறது என்பதை அனுபவத்தில் காணாதவர்களுக்கு அபூர்வமானதாகவும் இருக்கும். அதோடு இதயத் துடிப்பும் உடல் இயக்கமும்கூட நின்று விடுகிறது. ஆனால் இதில் அதிசயப்படுவதற்கு ஒன்றுமில்லை. மருத்துவ விஞ்ஞானம் நாடி சக்திக் கதிர்களின் இயக்கத்தை ஒப்புக் கொள்கிறது. வாழும் உடம்பில் அதற்குள்ள முக்கியத்துவத்தையும் உணர்ந்து விட்டது. ஆனால் இந்த நாடிக்கதிர்கள் உற்பத்தியாகும் "மின் இயக்கி சாதனத்தை" பற்றியோ அல்லது அதன் மையமோ இவர்களுக்குத் தெரியாது. ஒரு சாதாரண மனிதனில் மூலாதாரச் சக்கரம் (தோராயமாக குதமும் சிறுநீர் வெளிப்படும் உறுப்பும் சந்திக்குமிடம்) இந்த மின் இயக்கிச் சாதனத்தின் இருப்பிடம். இதுவே உடலில் இயங்கும் ஆதாரசக்தியின் சேமிப்பு இடமும் மையமும்

ஆகும். குண்டலினி சக்தி (மனிதனின் ஆதாரசக்தி அல்லது உடலின் மையசக்தி, இவைபற்றி அறிய இந்த ஆசிரியரின் "ஆதாரசக்தி" அல்லது குண்டலினிசக்தி" என்ற நூலைப் படிக்கவும்) நாடியோட்டங்களின் இயக்க சாதனமாகும் குண்டலினி சக்தியின் நிலையான மையம் சகஸ்ராசம் (தலையின் உச்சி), அதன் இயக்க மையம் மூலாதாரச்சக்கரம். இந்தச் சக்தி மூலாதாரச்சக்கரத்தில் இருக்கும் வரை அது இருபத்து நான்கு மணிநேரமும் இயங்கிக்கொண்டே இருக்கிறது. நாடிக்கதிர்களை உற்பத்தி செய்து அலைகளைப் "புலன் உணர்வுகளின் இயக்க நாடிகள் வழியாக மேலும் கீழும் ஓடச் செய்கிறது. உடலை இயக்குவது குண்டலினி சக்தியின் ஓட்டமேயாகும். மூச்சு இழைதல் அதனுடைய ஒரேஒரு செயல். குண்டலினி உயிர்மூச்சின் ஆதார சக்தியாகும். உடலின் எல்லா சக்திகளுக்கும், அதுவே தாய். நுரையீரலை இயக்கும் நாடிக்கதிர்களே ஒருவர் விடும் மூச்சிற்கு காரணம். வாழும் உடலில் குண்டலினி சக்தியின் தூல அமைப்பு மூச்சு இழைவதால் உண்டாகும் அசைவுகளேயாகும். இந்த அசைவுகளை விட மிக நுட்பமானது நாடிக்கதிர்கள் எண்ணங்கள், ஆசைகள். இவை நாடிக்கதிர்களைவிட மிகவும் அதிக நுட்பத் தன்மை பெற்றவை. குண்டலினி சக்திக்கும் மனத்திற்கும் இடையே மிக நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இவ்வாறே மனத்திற்கும் எண்ணத்திற்கும், எண்ணத் திற்கும் நாடிக்கதிர்களுக்கும், நாடிக்கதிர்களுக்கும் மூச்சு இழையும் அசைவுகளுக்கும் நெருக்கம் அதிகம்.

சாதாரண மனிதனில் சுழுமுனை நாடிக்கும் (நரம் புக்கும்), மூலாதாரச்சக்கரத்துக்கும் இடையிலுள்ள வழி மூடி இருக்கிறது. இந்த நாடியே எல்லா நாடிகளையும்

விட மிகமிக நுட்பமானது. எல்லா நாடிகளை விட மிக முக்கியமானது. சாதாரண மனிதனில் அது இருக்கிற இடந்தெரியாமலிருக்கிறது. சுழுமுனைநாடி குதத்தின் பின் பக்கத்தில் அமைந்துள்ளது. அது முதுகுத் தண்டுடன் இணைந்துள்ளது. அதாவது அது மூளைத் தண்டுடன் இணையும் முதுகுத்தண்டுக்குள் அமைந்துள்ளது. முதுகுத்தண்டின் மையக்குழாயின் மூலம் ஓடுகிறது. தலை உச்சிவரை அது தொடர்கிறது. ஏற்கெனவே சொல்லியபடி, குண்டலினி சக்தி முழுமையாக சகஸ்ராரத்தைச் சென்று அடையும்போது மட்டுமே நிர்விகல்பசமாதி நிலையை எய்துகிறார். குண்டலினிசக்தி சுழுமுனை நாடிக்குள் புகுந்து முழுமையாக சகஸ்ராரத்தை அடைந்து அங்கே ஒன்றி விடுகிறது. அந்த நிலையில் நாடிக்கதிர்களின் உற்பத்தியும் இயக்கமும் முழுமையாக நின்று போகிறது. நாடிக்கதிர்களின் இயக்கம் நிறையவும், நுரையீரல்கள், இருதயத்தின் இயக்கமும் தாமாகவே நின்று விடுகிறது. ஒரு மனிதன் நிர்விகல்பசமாதி நிலையில் உடல் இயக்கமோ மூச்சு இயக்கமோ இன்றி சுலபமாக வாழ்கிறான். இதுவே நிர்விகல்பசமாதி நிலையில் மூச்சு எப்படி நிற்கிறது என்பதின் விளக்கமாகும்.

இந்த நிலையில் உடல், பொருள், அறிவுக்கான உணர்வுகள் அனைத்துமே முழுமையாகக் கரைந்து விடுகின்றன. உடல் உணர்வு அற்றுப் போகிறது. புலன்கள், அசைவதற்கான சுவடுகளே இருப்பதில்லை. உள்ளுணர்வின் ஆற்றல், புத்தி எல்லாமே செயலிழக்கின்றன. மனம், சித்தம் (மனக்கோப்பு) முழுவதுமே பரம ஆன்மாவில் சங்கமித்து விடுகின்றன. சீவான்மா (தனி மனித உயிர்) பரம்பொருளில் (மேலான உயிர்) கலந்து விடுகிறது. பெயர்களும் உருவங்களும் நிறைந்த உலகமே மறைந்து

விடுகிறது. "எண்ணற்றவை" என்பவையே அப்போது இல்லை. ஏன்? ஒன்றேஒன்று என்ற நிலையுமில்லை. ஆயினும் இந்தச் சமாதி நிலை தூக்க நிலையல்ல. நினைவு இழப்பு நிலையுமல்ல. கனவு நிலையுமல்ல. இது பலவீனத்தினாலோ நோயினாலோ ஏற்படுவதல்ல. இறப்பினாலோ மயக்கத்தினாலோ அல்ல. அந்த நிலைகளில் இது எதுவுமே இல்லை. இது தன்னில் தானாக விளையும் ஒரு அபூர்வ அனுபவம். இது ஆழ்ந்த உறக்கத்தில் முழுமை பெற்ற விழிப்பு நிலை. அது ஆழ்ந்த உறக்கநிலை எனினும் விழிப்புணர்வுடன் கூடியநிலை (சாதாரண விழிப்புணர்வு நிலையல்ல; தன்னில் தானாகவுள்ள அகண்ட வெளியைக் காணும் விழிப்பு நிலை). இது முன்னுக்குப் பின் முரணான விளக்கமாக இருக்கக்கூடும். ஆனால் முழுக்க முழுக்க நிஜமானது. இந்த நிலையை ஒருமுறை எய்திய ஒருவன் உலகாயத நிலைக்கு மீண்டும் இறங்கி வந்தவுடன் அவன் பூரண ஞானம் பெற்றவன் ஆகிவிடுகிறான். இதே நிலையை எய்திய ஒரு சாதாரண நபரினால் உலகாயத உறவு நிலைக்குக் கீழிறங்கி வர முடிவதில்லை. அதாவது குண்டலினி சக்தியை கீழ் மையங்களுக்குக் கொண்டு வர இயலுவதில் இந்த நிலை பெற்றவன் இருபத்தோரு நாட்கள் மட்டுமே வாழ முடியும். பிறகு உடலைவிட்டுப் பிரிந்தே விடுகிறான். எனினும் சில உயரிய ஆத்மாக்கள் உத்தம நிலையில் கடவுளின் அவதாரங்களாகவும், தூதுவர்களாகவும், மாபெரும் ஞானிகளாகவும் தோன்றுகிறார்கள். அவர்கள் இந்த உலகில் மாபெரும் தெய்வீகப் பணியை முடித்து விட்டுச் செல்லவே பிறக்கிறார்கள். அத்தகைய பெரியோர்கள் நிர்விகல்பசமாதி நிலையை எய்திய பிறகும்கூட உலகாயத உறவு நிலைக்குக் கீழிறங்கி வந்து

தெய்வீக இரகசிய முறையில் மீண்டும் உடலுக்குள் புகுந்து வாழ்கிறார்கள். இந்த அவதார புருஷர்கள் குண்டலினி சக்தியை ஆறாவது, அதிகம் போனால் ஐந்தாவது சக்கரத்திற்கு (புருவத்திற்கும் நெஞ்சுப் பகுதிக்கும் இடையில்) கொண்டு வருகிறார்கள். அவ்வாறு இறங்கிய நிலையில் தூய்மையடைந்த அகத்தையையும், அதனோடுகூடிய அந்தக் கரணங்கள், தூய மனத் தையும் பெற்று மீண்டும் வாழ்வாங்கு வாழ்கிறார்கள். ஒருமுறை நிர்விகல்பசமாதி நிலையை எய்திய அனுபவத்தைப் பெற்று உலகாயத உறவு நிலைக்கு இறங்கி வந்தாலும், உலகிலுள்ள பெயர்களுக்கும் உருவங்களுக்கும் இடையே வாழ்ந்தாலும், அவர் உலகாயத, ஆன்மீக மானுட, தெய்வீக மயக்கங்களில் கலப்பதில்லை.. அவர் மனம் முழுவதுமே கடவுள் நினைவிலேயே இலயித்தபடி எந்த நிலையிலும் மாறுபடாத அமைதியுடன் வாழ்கிறார்.

**சனிக்கிழமை, 24, டிசம்பர் 1933.**

56. **ஓர் எண்ணம் மனத்தில் எப்படி உதிக்கிறது?**

**பதில்** :-

கீழ்க்காணும் ஆறு வழிகளில் மனத்தில் எண்ணம் தோன்றுகிறது.

1. உள்ளுணர்வு ஆற்றலின் உந்துதலால்.
2. மூளை, இருதய மையங்களில் தங்கி உழன்று கொண்டிருக்கும் சூக்கும எண்ண அலைகளைப் பற்றிய மனத்தின் இடைவிடாத சிந்தனையினால்.
3. புலன்களில் ஏற்படும் உணர்வுகளால்
4. குண்டலினி சக்திக் கதிர்களால் தோற்றுவிக்கப் படும், சுயமாக எழும் எண்ணங்களால்.

5. வெளிப்புலன் பொருட்களோடு புலன்கள் தொடர்பு கொள்வதால் ஏற்படும் உணர்வுகளால்.

6. சில நேரங்களில் உண்டாகும் ஒரு ஆசை, எண்ணம், சொல், பொருள், இடம் அல்லது சம்பவம் அதேபோன்ற கடந்த கால ஆசை, எண்ணம், செயல், பொருள், இடம் அல்லது சம்பவத்தைப் பற்றியவை. (இவை பற்றிய விரிவான விளக்கங்களுக்கு ஆசிரியரின் "The Mysteries of Man, Mind and Mind - Funtion & "The End of Philosophy" போன்ற புத்தகங்களைப் படிக்கவும்)

**வெள்ளிக்கிழமை, 5, ஜனவரி, 1934.**

**57. எண்ண வடிவத்திற்கும், கனவு உருவத்திற்கும் இடையே எவ்வித வித்தியாசமும் கிடையாது.**

**தெளிவுரை :-**

ஒவ்வொரு ஆசையும் எண்ணமும் மூளை மையத்தில் ஒரு சூக்கும உருவத்தைத் தோற்றுவிக்கிறது. நாம் ஆசைப்பட்டு எண்ணிய பொருளின் மனோ உருவத்தைக் கொண்டே நமது ஆசை, எண்ணத்தின் விவரத்தைப் புரிந்து கொள்கிறோம். கனவு உலகம் என்பது மனம் உமிழ்த் தோற்றமே. குவித்து வைக்கப்பட்ட கடந்தகால ஆசைகளின் பதிவுகள் மனக்கோப்பில் புதைந்துள்ளன. இவை தூக்கத்தின்போது குண்டலினி சக்தியினால் தாமாக எழும் எண்ணக் கதிர்களின் காரணமாக மேலெழுந்து வருகின்றன. இவற்றை மூளை மையத்தில் மனமானது படம் போட்டுக் காட்டுகிறது. ஆகக் கனவு உலகமும் சிந்தனா உலகமும் ஒன்றே. இவ்விரண்டிலும் சூக்கும விஷயங்களைப் பற்றிய அனுபவங்களே மூளை மையத்தில் படமாகத் தெரிகின்றன.

**வெள்ளிக்கிழமை, 5, ஜனவரி, 1934**

**58 மனத்தில் சந்தேகம் எவ்வாறு உதிக்கிறது?**

**பதில் :-**

உதாரணமாக ஒரு சொல் காதில் விழுகிறது என வைத்துக் கொள்வோம். கேட்கும் சூக்குமப்புலன் ஒலி அலையை மூளை மையத்திற்குக் கொண்டு செல்கிறது. மனம் அந்தச் சொல்லைப் பற்றிக் கொள்கிறது. பின்னர் அந்தச் சொல்லைப் பற்றிய விவரத்தை அறிய ஒருவகை சமிக்ஞையை மனக்கோப்பில் உள்ள அதற்கான புறாக் கூண்டுக்கு அனுப்புகிறது. அவ்வாறு அனுப்பப்படும் சமிக்ஞை அவசரப்பட்டு அதற்கான கூண்டைக் கண்டு பிடிக்க முடியாமல் வேறொரு கூண்டிலுள்ள தவறான விவரத்தைக் கொண்டு வருவதால் விளைவதே சந்தேகம். சந்தேகத்தைத் தொடர்ந்து சரியான விவரம் பெறுவதற்கான ஆவல் கிளர்ந்தெழுகிறது. சரியான விவரத்திற்கான ஆவல் எழுவது மனத்தின் முயற்சியே. அந்தக் குறிப்பிட்ட சொல்லுக்கான சரியான விவரம் அடங்கியுள்ள கூண்டைக் கண்டுபிடிக்க முனைகிறது. கேட்ட சொல்லின் உண்மையான விவரத்தைக் கண்டுபிடித்தவுடன் சந்தேகம் மறைந்து விடுகிறது.

**வெள்ளிக்கிழமை, 5, ஜனவரி, 1934**

59. மனம் என்னும் கண்ணாடி உடலாகிய பரணையில் பதிக்கப்பட்டிருக்கிறது. இந்த மனக் கண்ணாடியில் ஆன்மா தானாகவே பிரதிபலிக்கிறது. கண்ணாடி மங்கலாகவும், அழுக்கேறியும், தூசு படிந்தும் இருக்கும் போது பிரதிபலிப்பைச் சரியாகக் காட்டத் தவறி விடுகிறது. மிக அதிகமாக அழுக்கடைந்திருந்தால் அது பிரதி பலிப்பையே காட்டத் தவறி விடுகிறது. ஆனால்

கண்ணாடி சுத்தமாகவும் பிரகாசமாகவும் இருந்தால் அது எதிரில் வரும் எதையும் நுணுக்கமாகப் பிரதி பலித்துக் காட்டுகிறது. அதேபோல் மனக் கண்ணாடி எவ்வித ஆசைகளுமின்றி தூய்மையாக இருந்தால் ஆன்மாவின் பிரகாசம் முழுமையாக அதில் பிரதிபலிக் கப்படுகிறது. மனக் கண்ணாடியில் விளங்கும் இத்தகைய ஆன்மப் பிரகாசமே கடவுளை அறிந்த நிலை அல்லது ஆன்மாவை உணர்ந்த நிலையாகும்.

**புதன்கிழமை, 24, ஜனவரி, 1934**

**60 மனத்தின் தூய நிலை அல்லது மாசு படிந்த நிலைக்கேற்ப சிந்தனா சக்தி மாறுபடுகிறது. மேலும் எண்ணிய எண்ணத்தின் முக்கியத்துவத்தை அனுசரித்தும், அதன் மீது வைக்கும் அக்கறையைப் பொறுத்தும் மாறுபடுகிறது.**

**தெளிவுரை:-**

ஒவ்வொரு எண்ணமும் சூக்கும சக்தி படைத்தது. ஒருவர் எண்ணியவுடன் அவர் எண்ணும் எண்ணத்தின் சூக்கும சக்தியை வெளியே அனுப்புகிறார். மனத்தின் தூயநிலை அல்லது மாசு நிலைக்கேற்பவும், எண்ணத்தின் மீது வைக்கும் அக்கறையைப் பொறுத்தும் அதன் மீது வைக்கும் முக்கியத்துவத்தைப் பொறுத்தும் அந்த எண்ண சக்தியின் வேகம் மாறுபடுகிறது. விளக்கமாகச் சொல்வோமாயின் எண்ண சக்திகள் அனைத்தையுமே மூன்று பிரதான தலைப்புகளின் கீழ்க் கொண்டு வரலாம் அதாவது இலேசான, மத்தியதரமான, தீவிரமான எனலாம். மனம் மாசுற்றிருக்கும் போது ஒருவர் மேல் போக்காக ஒன்றை எண்ணினால் அந்த எண்ணத்தின் வேகம் குறைவாகவே இருக்கும். மனம் மாசடைந்திருக்கும் பொழுது ஒருவர் தீவிரமாகச் சிந்தித்தாலும், மனத்தின்

தூய்மை நிலையில் ஒருவர் மேற் போக்காக எண்ணினாலும் அது போன்ற எண்ணத்தின் தன்மை மத்தியதரமாகவே இருக்கும். மனம் தூய்மையுடன் ஒரு முகப்பட்ட நிலையில் எண்ணத்தின் மீது மிகுந்த அக்கறை காட்டி கவனம் செலுத்தும்போது எண்ணத்தின் வேகம் தீவிர கதியில் இருக்கும். அத்தகைய எண்ண வேகத்தின் முன் எதுவுமே நிற்க முடியாது. அவர் எதைச் செய்ய முற்படுகிறாரோ, எதற்காக ஆசைப்படுகிறாரோ, எதை நினைக்கிறாரோ அதன் பலனை உடனே அனுபவிக்க முடியும். திண்மையாக எணணப்படும் நல்லெண்ணங்களைக் கொண்டு இந்தியாவில் வாழும் ஒருவன் இங்கிலாந்திலோ அல்லது அமெரிக்காவிலோ வாழும் ஒரு மனிதனுக்கு உதவி செய்ய முடியும்..

இதேபோல முறையுடன் கூடிய ஒருமுகப்படுத்தப் பட்ட தீவிர மனோ சக்தியால் தூரத்து நாடுகளிலோ அல்லது இடங்களிலோ உள்ள ஒருவரை கெட்ட எண்ணங்களை அனுப்பி அழித்தும் விடலாம்.

**புதன்கிழமை, 24, ஜனவரி, 1934**

61. ஒரு பொருளைப் பற்றிய ஏட்டுக்கல்வியை அனுபவத்தில் பயிலாமற் போனால் அதனால் எந்தவிதமான பயனோ மதிப்போ கிடையாது. பசியுள்ள ஒருவன் ருசி யுள்ள உணவு வகைகளை ஏட்டிலெழுதிப் படித்து விட்டால் பசி ஆறிவிடாது.

நிறையப் படித்து புத்தக அறிவை மட்டும் வைத்துக் கொண்டு அதனால் ஒரு பண்டிதனாகி (நிபுணனாகி) அதைத் தனது நடைமுறை வாழ்வில் கடைப் பிடிக்காமற் போனால் இந்த எதையும் சாதிக்க

முடியாது. எண்ணிலடங்காத புத்தகங்கள் உள்ளன. ஆனால் மனித ஆயுளோ மிகவும் கொஞ்சம். புத்தகங்கள் அனைத்தையும் ஒருமுறை படிப்பதற்கு இயலாது. ஒரே ஒரு புத்தகத்தை மட்டும் படித்த ஒருவன் அதை நன்றாகக் கிரகித்துக் கொண்டு அந்த ஒரு புத்தகம் போதிக்கும் படிப்பினையை எண்ணம், சொல், செயலில் நடைமுறை வாழ்க்கையில் கடைப்பிடிப்பவன், வெறும் புத்தக அறிவைப் பெற்ற முட்டாளைவிட மிக மேலானவன். ஆகவே ஒருவனின் இப்படிப்பட்ட கல்வி அறிவை விடச் சிறிதளவு சாதனையே மேலானது.

**புதன்கிழமை, 24, ஜனவரி, 1934**

62. நாக்கின் ருசிக்கும் புலன்களின் (பிறப்புறுப்புக் களின்) தொடு உணர்வுக்கும் மிக நெருக்கமான தொடர் புள்ளது. ருசியைக் கட்டுப்படுத்தாதவன் காம உணர்வு களையும் கட்டுப்படுத்த முடியாது. காரசாரமான உணவு வகைகளை அலைந்து சாப்பிடுபவன் தன்னையறியாமலே தனக்குள் காம உணர்வுகளுக்கு இடமளித்து விடுகிறான். உணவைக் கட்டுப்படுத்தும் பழக்கத்தை ஒருவன் ஏற்படுத் திக் கொண்டால் அவனால் தூக்கத்தையும் எளிதாக வெல்ல முடியும்.

**ஞாயிறு, 25, பிப்ரவரி, 1934.**

63. **சத்துவ, தமோ குணங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசமின்றிப் பார்வைக்கு ஒரே மாதிரி இருக்கிறது. ஆனால் அவை இயல்பில் பெருமளவு மாறுபாடுள்ளவை.**

**தெளிவுரை:-**

வெளிப்பார்வைக்குச் சத்துவ குணக்காரனும், தமோ குணக்காரனும் ஒரே மாதிரி புலப்படுகிறார்கள். இதனால் சாதாரண மக்கள் தமோ குணக்காரனை சத்

துவ குணம் படைத்தவனென்று தவறாகக் கருதி விடு கிறார்கள். சத்துவகுண மனிதனும் தமோ குண மனித னும் தோற்றத்தில் ஒரே மாதிரி காணப்பட்டாலும் அவர்களுடைய உள்ளத்தினால் மாபெரும் மாறுபாடு களைக் கொண்டவர்கள். இது உச்சி வெயிலின் வெளிச் சத்திற்கும் நடுநிசி கும்மிருட்டுக்கும் உள்ள வித்தியா சத்தைப் போன்றது. சத்துவ குணக்காரனின் மனம் தூய்மை, அமைதி, நிம்மதி, மென்மை, தெளிவு, ஒருமுகச் சிந்தனை ஆகியவற்றால் நிரம்பியது. மிக சக்தி வாய்ந்தது. ஆனால் தமோ குணக்காரனின் மனதில் அழுக்காறு, தாமதம், மந்தநிலை, சோம்பல், சஞ்சலம், சலனம் ஆகியவை நிரம்பியிருக்கும். சத்துவகுண - தமோ குண மனிதர்களுக்கிடையேயுள்ள வேறுபாடு இதுதான்!

**வியாழக்கிழமை, 10 மே, 1934**

64. ***புலன் போகப் பொருட்கள் அளப்பரியன. அதை அனுபவிக்க வேண்டுமென்ற ஆசைக்கும் அளவேயில்லை. ஆனால் யார் ஒருவன் தனக்குள் எல்லா ஆசைகளையும் கட்டுப்படுத்தி மட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, அனுபவித்து விட வேண்டுமென்று நினைத்தாலும் தீவினைக்கு உட்படுவான். அத்தகையவன் நெருப்பை அணைக்க வெண்ணெயைப் பயன்படுத்தும் முட்டாளுக்கு ஒப்பானவன்.***

**தெளிவுரை:-**

மனம் ஐந்து தூல, ஐந்து சூக்குமப் புலன்களால் உலகத்திலுள்ள பெயர்களையும் உருவங்களையும் புரிந்து கொள்கிறது. உலகம் புலன் போகப் பொருட்கள் நிரம்பியது. எண்ணிலடங்காதன. புலன்கள் போகப் பொருட்களிடம் ஓய்ச்சல் ஒழிவின்றி மனத்தை இடை யறாது வெளியே இழுத்துச் செல்கின்றன. அதனால்

எண்ணற்ற ஆசைகளைத் தோற்றுவிக்கின்றன. ஒருவன் நிம்மதியையும் மகிழ்ச்சியையும் பெற விரும்பினால், அவன் ஆசைகளைக் கட்டுப்படுத்தி அடக்கிப் புலன்களிடம் அணுகாமல் மனத்தைத் தன்வயப்படுத்த வேண்டும். மாறாக மனத்தைத் தன்னிச்சையாக புலன் போகப் பொருள்களிடம் ஓட விட்டால், அவன் தனது வாழ்க்கையை துன்பமயமாக்கிக் கொள்கிறான். அளவுக்கு மீறிப் புலன் போகங்களை அனுபவிக்கும் ஒருவன் நிம்மதி அடைய முடியாது. அதனாலேயே மனம் அமைதியிழந்து வலிமைகுன்றி பல்வேறு வியாதிகளால் பீடிக்கப்படுகிறான். மனம் போனபடி புலன் போகங்களை அனுபவிக்கும் போக்கானது, நெருப்பை அணைக்க நெய்யை ஊற்றும் முட்டாளின் செய்கையைப் போன்றதாகும். நெய் நெருப்பின் ஜுவாலையை அதிகமாக்கும்; அதை அணைக்காது. இதேபோல் புலன் போகங்களும் மனிதனுடைய ஆசைகளை அதிகமாக்கி நிம்மதியிழக்கச் செய்து வேதனையை உண்டாக்கும். அவை அவனுக்கு நிரந்தரமான மகிழ்ச்சியைத் தரா து.

**வியாழக்கிழமை, 10, மே, 1934**

65. ***மின்சாரம் உலகம் முழுவதும் வியாபித்து நிற்கிறது. ஆயினும் அதன் சக்தியை ஒரு மின் இயக்கி சாதனத்திலும், மின்கம்பிகள் மூலமாகவுமே உணர முடிகிறது. அதேபோலக் கடவுள் அகிலம் பூராவிலும் வியாபித்து நிற்கிறார். அவர் எங்கும் இருக்கிறார். ஆனாலும் அவருடைய சக்தி, புனிதம் போன்றவை, கோயில்களிலும், தெய்வீக மனிதர்களிடமுமே காணப்படுகின்றன.***

**தெளிவுரை:-**

*மின்சாரம் சூக்கும உருவில் உலகம் முழுவதுமே வியாபித்துள்ளது. இப்படிப்பட்ட மின்சாரம் சாதாரண*

மனிதர்களின் கண்ணுக்குப் புலனாவதில்லை. அவர் களுக்கு அதன் அதிர்வும் தெரிவதில்லை. ஆனால் அதே மின்சாரத்தை மின்இயக்கி சாதனத்தின் மூலம் கொண்டு வந்து இயக்கப்பட்டு மின் கம்பிகள் மூலம் ஓட்டும்போது ஒருவரால் அதன் அதிர்ச்சியின் கடுமை உணரப்படுகிறது. அதேபோல கடவுளும் அகிலம் முழுவதும் வியாபித்து நிற்கிறார். உண்மையைச். சொல்லப் போனால் கடவுளின் இருப்பு இல்லாமல் எந்த ஒரு பொருளுமே இல்லை. இருந்தும் இந்த கடவ ளின் இருப்பு சக்தி மிகமிகச் சூக்குமமாக உள்ளதால் சாதாரண மனிதரால் இதை உணர்ந்து புரிந்து கொள்ள முடிவதில்லை. கடவுள் சக்தியின் ஆற்றல், புனிதத் தன்மை, தெய்வீக உண்மை போன்றவை கோயில் தலங்களிலும் அருளாளர்களிடமும் மகான்களிடமும் கண்டு உணர்ந்து அனுபவிக்க இயலும்.

**வியாழக்கிழமை, 10, மே, 1934**

**66. தூய்மை அளவில் மாறுபடுவது. எல்லா ஆசைகள், எண்ணங்களிலிருந்து மனத்தை விலக்கி விடுவிப்பதே உயர்வகைத் தூய்மையாகும்.**

**தெளிவுரை:-**

தூய்மையின் தரம் மாறுபடுவன. அவை அகம், புறம், என இரு வகைப்படும். தினசரி குளிப்பது, சுத்தமான ஆடைகளை உடுப்பது, தூய உணவு உட்கொள்வது, நல்ல நீரைப் பருகுவது போன்றவை புறத்தூய்மையைச் சேர்ந் தவை. கடவுள் சிந்தனை, உயர்வைத் தந்து பெருமை சேர்க்கும் நலந்தரும் ஆசைகள், எண்ணக் கனவுகளை வளர்த்துக் கொள்ளுதல், அறிவை வளர்க்கும் நல்ல புத்த கங்களைப் படித்தல், இனிய - நல்ல உதவும் வார்த்தை களைப் பேசுதல் போன்றவை அகத்தூய்மையின் பாற்படும்.

இந்த இருவகைத் தூய்மையில் அகத்தூய்மை மிகவும் மேலானது. ஆனால் ஒரு மனிதனின் உண்மையான முன்னேற்றத்திற்கு இவ்விரு வகைத் தூய்மையுமே இன்றியமையாதவை. இருந்தும் இவ்விருவகைத் தூய்மை நிலைகளுமே (அகம் - புறம்) ஆரம்ப நிலையைச் சேர்ந்ததாகவே கருதமுடியும். மனத்தை அமைதியுடன் கூடிய நிம்மதியில் ஆழ்த்துவதற்கு நல்ல பெருமை சேர்க்கும் பயனுள்ள ஆசைகளும் எண்ணங்களுங்கூட தடைக் கற்களாகவே செயல்படுகின்றன. ஒவ்வொரு ஆசையும் எண்ணமும் எவ்வளவு உயரியதாயினும் அலைகள் தடாகத்தின் நீர்ப்பரப்பில் எழும் சிற்றலைகள், அதன் அமைதியைக் கெடுப்பதைப் போன்றதேயாகும். உதாரணத்திற்கு அலைகளற்ற ஏரியின் நீர்ப்பரப்பை எடுத்துக் கொள்வோம். நீங்கள் அதை உற்று நோக்கினால் சுற்றிலுமுள்ள மரம், மலை, ஆகாயம் போன்றவை அதில் பளிச்சென்று பிரதிபலிப்பதைப் பார்க்கலாம். ஒரு கல்லை அதில் வீசி எறிந்தவுடன் நீர்ப்பரப்பில் சலனம் ஏற்பட்டு அலையும். அந்த நிலையில் தெளிவாகத் தெரிந்த பிரதி பிம்பத்தைக் காண்பது கடினம். அது போலவே மனத்திலெழும் ஒவ்வொரு ஆசையும், எண்ணமும் நல்லதே யானாலும் கெட்டதாயினும் மனத்தில் சலனத்தை ஏற்படுத்துகிறது. அவை அமைதியும், சாந்தமும், குடிகொண்டிருந்த மனத்தை அலைக்கழிக்கவே செய்கின்றன. "சமாதி" என்னும் நிலையே (நிர்விகல்பசமாதி) உயர்தர உன்னத மனத்தூய்மை நிலை. அந்த நிலையில் எல்லா எண்ணங்களும் அமைதி பெறுகின்றன. மனம் ஆன்மாவில் ஒன்றுகிறது. அதற்கப்பால் நிற்பது தன்னில் தானான ஒரே பரம்பொருள் நிலை. தன்னுள் தானாக நின்று

இயங்கும் உயிர்ச்சாரப் பெருங்கடல் என்பதும் இதுவே. இத்தகைய உன்னத சமாதியை எய்தி மனத்தின் மேலான தூய்மை நிலையைப் பெற ஒருவர் மோட்சத்திற்கான (ஆன்மவிடுதலைப் பேற்றுக்கான) ஆசை அல்லது எண்ணத்தையுங் கூடத் துறந்துவிட வேண்டும். ஒருவர் தன் மனத்திலுள்ள எல்லா வித ஆசைகளையும் நன்மை பயப்பதாயினுங்கூட அவற்றையும் சேர்த்து விட்டொ ழித்தால் மட்டுமே உன்னத மனத்தூய்மையை எய்த முடியும். உத்தம நிலை தரும் உன்னத மனத்தூய்மைக்கு எந்தவித ஆசையுமின்றி மனத்தை விடுவிக்க வேண்டும். இத்தகைய நிலையில் மட்டுமே மனம் சலனமின்றி அமைதியையும், பளிங்கின் பிரகாசத்தையும் பெறும்.

**ஞாயிறு, 7, அக்டோபர், 1934.**

**67. மனம், உள்ளுணர்வின் ஆற்றல், புத்தி ஆகியவை எல்லையுடையது, எல்லையற்றது என்ற இருவேறு நிலைகளைக் கொண்டவை.**

**தெளிவுரை:-**

மனம், உள்ளுணர்வின் ஆற்றல், புத்தி ஆகியவை ஒரு தனி மனிதனில் இயங்கும்வரை அது ஒரு வரையறைக்குள் இயங்குகிறது. தனிப்பட்ட உயிர்களில் அவற்றின் இயக்கங்கள் மாறிக் கொண்டே இருக்கின்றன. அவற்றின் இருப்பிடம் என்னவோ பரவெளியின் மனம், உள்ளுணர் வாற்றல் (இச்சாசக்தி) தூலறிவு ஆகியவைகளில் தான். பரவெளி மனம், உள்ளுணர்வாற்றல், புத்தி ஆகியவை எல்லையற்றது. மாறுபடாதது. ஒரே நிலையிலிருப்பதும் ஆகும். தனிப்பட்ட உயிருள்ள உடல் அழிந்தாலும், வரையறைக்குள் இயங்கும் மனம், உள்ளுணர்வாற்றல், புத்தி அழிவதில்லை. அவை பரவெளியின் மனம், உள்ளு ணர்வாற்றல் புத்தியுடன் இணைந்து தங்கி விடுகிறது.

ஆகவே மனம், உள்ளுணர்வாற்றல், புத்தி, ஆகியன முடிவுற்றது முடிவற்றது என்ற இரு வேறு நிலை பெற்றவை.

**திங்கள், 8, அக்டோபர், 1934**

**68. பெயர், உருவம், விவரம் (அர்த்தம்) ஒன்றுடன் ஒன்று இணைந்தவை; பிரிக்க முடியாதவை.**

**தெளிவுரை:-**

ஒருவர் ஒரு குறிப்பிட்ட சொல்லை உச்சரிப்பதாக வைத்துக் கொள்வோம். நன்றாக இயங்கும் செவி மட்டுமே (ஒரு ஒலியைக் கேட்கும்போது நல்லபடியாக இயங்கும் ஒரே ஒரு காதால் மட்டுமே நாம் அதைக் கேட்கிறோம். இரண்டு செவிகளால் அல்ல) அந்த ஒலியைக் கேட்கிறது. கேட்கும் சூக்குமச் செவி ஒலி அலையை மூளை மையத்திற்கு எடுத்துச் செல்கிறது. அங்கே மனம் ஒலி அலையை வாங்கிச் சித்தத்திற்கு (மனக்கோப்புக்கு) அதற்கான குறிப்புப் பதிவை அனுப்புகிறது. கேட்ட சொல்லின் விவரத்தைப் பெற முயல்கிறது. சொல்லின் விவரம் கண்டுபிடிக்கப்பட்டவுடன் அதற்கான ஒலிக் குறிப்பு மூளை மையத்திற்குத் திரும்பி வருகிறது. மனம் சொல்லின் விவரத்திற்கு (அர்த்தத்திற்கு) ஏற்ற மனோ உருவத்தை மூளை மையத்தில் படம் போட்டுக். காட்டுகிறது. அதன் பிறகே நாம் சொல்லின் பொருளை புரிந்து கொள்கிறோம். உண்மையிலேயே மனம் ஒரு பொருளைத் தானாக தெரிந்து கொள்வதோ, விவரத்தைப் புரிந்து கொள்வதோ, உருவமும், பெயரும் இல்லாமல் ஒன்றின் விவரத்தை (அர்த்தத்தை) உணர்த்த முடிவதோ இல்லை. இவை மூன்றுமே எப்பொழுதும் பிரிக்க முடியாதவை.

**திங்கட்கிழமை, 8 அக்டோபர், 1934**

**69. வறுமை, செல்வச் செழிப்பு, அறிவின்மை ஆகியவை பாபத்திற்கும், உலகத் துன்பங்களுக்கும் காரணமானவை. இதற்குச் சரியான நிவாரணமாக உள்ளது அறிவுத் தெளிவே.**

**தெளிவுரை:-**

உலகில் நாம் காணும் எல்லாத் துன்பங்களுக்கும், வேதனைகளுக்கும், மனிதர்களுடைய தீயசெயல்களும், பாபச் செயல்களுமே காரணமாக உள்ளன. ஒருவர் விதைப்பதையே அறுவடை செய்கிறார். உலகில் விளையும் பாபங்களுக்கு ஏழ்மை, ஏராளமான செல்வம், அறியாமை ஆகியவையே முக்கிய காரணங்களாகும். ஒரு சாதாரணன் வறிய நிலையில் இருக்கும்போது தன் உடலையும் உயிரையும் காப்பாற்றிக் கொள்வதற்காக வாவது நாளும் அனேக தீய செயல்களைச் செய்த வண்ணம் இருக்கிறான். ஆனால் பணக்காரனோ எதிர்க் கரையில் உலவுகிறான். அவனிடமுள்ள செல்வம் அனேக மாக ஒவ்வொரு நாளும் எண்ணற்ற அக்கிரமங்களைச் செய்யத் தூண்டுகிறது. பணம் உலகத்தையே ஆட்டிப் படைக்கும் சக்தி வாய்ந்தது. இந்தச் சக்தியை உரிய முறையில் பயன் படுத்துவது என்பது அவ்வளவு எளிதானதல்ல. பெரும்பாலானவர்களின் விவகாரங் களில் இது தகாத முறையில் பயன்படுத்தப்படுகின்றன. ஏழையாகட்டும் பணக்காரனாகட்டும் அறிவீனத்தினா லேயே பாபக் கிருத்தியங்கள் செய்யப்படுகின்றன. ஒரு மனிதன் ஏழையானாலும் பணக்காரனானாலும் அவனுக்குப் போதுமான சுய அறிவு இருப்பின் அவன் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொண்டு கெட்ட வழி

களிலிருந்து ஒதுங்கிக் கொள்கிறான். ஆதலால் அறிவுத் திறனே வறுமையினாலும், பணத்தினாலும் தூண்டப் படும் கெட்ட வழிகளிலிருந்து காப்பாற்ற வல்லது.

**செவ்வாய்க்கிழமை, 9 அக்டோபர், 1934**

**70. ஒன்றின் மீது உயிருக்கு இணையாக வைக்கும் மாறாத பற்றே காதல் எனப்படுவது.**

**தெளிவுரை:-**

மனம் தனக்குத் தேவையான சக்திக்கு முழுக்க முழுக்க குண்டலினி சக்தியையே (மனிதனின் ஆதார சக்தி அல்லது குண்டலினி சக்தியையே) சார்ந்திருக்கிறது. குண்டலினி சக்தியே பல்வேறு மனச்செயல்பாடு களுக்குத் தேவையான சக்தியை உண்டாக்குகிறது. மனம் தனக்குத் தேவைப்படும் சக்திக்குக் குண்டலினி சக்தியைச் சார்ந்திருந்தாலும் அந்த மனம் குண்டலினி சக்தியையும் இயக்குகிறது. மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மின் இயக்கி சாதனம் போன்றது குண்டலினி சக்தி. உற்பத்தி யாகும் மின்சாரம் மீண்டும் எப்படி மின் இயக்கி சாதனத்தை இயக்க உதவி புரிகிறதோ அதே போலக் குண்டலினி சக்தியும் மனமும் ஒன்றையொன்று இயக்கிக் கொள்பவை. உணர்ச்சி வயப்படும் சுபாவம் என்பது வேறொன்றுமில்லை. குண்டலினி சக்திக் கதிர்களின் அதீத ஓட்டம், குறைந்த ஓட்டம் ஆகிய இரண்டின் காரணமாகவேயாகும். ஒன்றைப்பற்றி மனம் முடிவெடுப் பதைப் பொறுத்தே பிராணசக்தி அல்லது குண்டலினி சக்திக் கதிர்களின் அதீத வேகமும், சமநிலை ஓட்டமும் அமைகின்றன. உதாரணத்திற்கு அழகிய கவர்ச்சிகரமான ஒரு பொருள் நம் எதிரில் இருக்கிறது. கண் அதைக் கண்டவுடன் சூக்குமப் பார்வைப் புலனின் உதவியுடன் அதை மூளை மையத்திற்கு அனுப்புகிறது. மனம் அதன்

உருவத்தை வாங்கிக் கொள்கிறது. மனக்கோப்பிலிருந்து அதைப் பற்றிய விவரத்தைப் பெறுகிறது. பிறகு எதிரிலுள்ள அழகிய பொருளை புத்தியின் உதவியினால் அறிந்து கொள்கிறோம். மனம் அதன்மேல் ஆசைப் படுகிறது. இந்தக் கவர்ச்சி காரணமாக மனம் குண்ட லினி சக்தியைத் தட்டுகிறது. உடனே சக்திக் கதிர்களை உண்டாக்கி உடல் பூராவும் பரவ விடுகிறது. பரவும் கதிர்கள் இதயத்தில் படும்போது அதை மென்மையான வழியில் துடிக்கச் செய்கிறது. இதயத் துடிப்பில் ஏற்படும் மாறுபாடுகள் குண்டலினி சக்திக் கதிர்கள் இதயத்தைத் தட்டும் வேகத்தைப் பொறுத்தே அமைகிறது. புத்தியின் முடிவுக்கு ஏற்ப மனத்தின் வேகம் அமைகிறது. மனத்தின் இந்த வேகத்தைப் பொறுத்தே குண்டலினி சக்திக் கதி ரோட்டங்களின் வேகம் நிகழ்கிறது. ஆகக் காதலில் குண்டலினிக் கதிர்கள் மென்மையாகச் செயல்படு கின்றன. இந்த சீரான மெல்லிய பிராண ஓட்டத்தை மூன்று பிரதானப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இலகு வானது, மத்தியதரமானது, தீவிரமானது. இதைப் பொறுத்தே காதலினால் ஏற்படும் மகிழ்ச்சி இலே சாகவும், மத்திமமாகவும், தீவிரத்தன்மையுடனும் இருக்கும்.

**செவ்வாய், 9, அக்டோபர், 1934**

71. **ஒரு பொருளைக் குறித்த பிராண ஓட்டத்தில் இடைஞ்சல் ஏற்படும் போது அதுவே கோபம் எனப்படுகிறது.**

**தெளிவுரை:-**

மன இயக்கமும், குண்டலினி சக்தியின் செயல்பாடும் காதல் (70) பற்றி ஏற்கனவே மேலே கூறிய விரிவுரையைப் போன்றதே. ஆனால் வெறுப்பில் குண்ட லினி சக்திக் கதிர்கள் மந்த கதியிலும் ஒழுங்கற்றும்

வேலை செய்கிறது. இது போன்ற பிராணனின் தடைபடும் ஓட்டம் இதயத்துடிப்பிலும் மூச்சு இழை வதிலும் ஒழுங்கற்ற நிலைமையைத் தோற்றுவிக்கிறது. இந்த ஒழுங்கீனமான மூச்சு இழையுந்தன்மை வலியை உண்டாக்குகிறது. இந்த வலியை மூன்று முக்கிய தன்மைகளாகப் பிரிக்கலாம். மெதுவானது, மத்திய தரமானது, தீவிரமானது.

**வியாழக்கிழமை, 11, அக்டோபர், 1934.**

72. "பிரம்மச்சாரி" என்ற வார்த்தையை சுலபமாகவும், தவறாகவும் உபயோகிக்கிறார்கள்.

1. படிக்கும் மாணவர்களை - எத்துறையிலிருந்தாலும் அவனை;

2. மறைமுகமாக உடலுறவு கொண்டு திருமணமாகாம லிருப்பவனை;

3. மறைமுக உடலுறவு இல்லாமற் போயினும் அதற்கு மறைமுக ஆசை கொண்டிருப்பவனை;

4. செய்கையில் மட்டும் பிரம்மச்சரியத்தை அனுபவிக்கும் ஒரு ஆன்மிகவாதியை பிரம்மச்சாரி என்கிறோம்.

ஆனால் எண்ணம், சொல், செயலில் யார் ஒருவன் பிரம்மச்சரியத்தை அல்லது கற்பு நெறியைக் கடைப்பிடிக் கிறானோ அவனே உண்மையான பிரம்மச்சாரி. "பிரம்மச்சரியம்" என்ற சொல்லுக்கு இலக்கணமாகத் திகழும் உத்தமமான பிரம்மச்சாரி இவரே.

**சனிக்கிழமை, 24, நவம்பர், 1934**

73. கோடானுகோடி அணுக்களால் உருவாக்கப்பட்டதே ஒரு மனிதன் அல்லது மிருகத்தின் உடல். இது போன்ற கோடானுகோடி உடல்கள் சேர்ந்ததே பிரபஞ்சம் அல்லது பிரம்மாண்டம். எண்ணற்ற பிரம்மாண்டங்கள்

சேர்ந்தது ஒரு அகிலம் அல்லது எல்லையில்லாப் பர வெளியைத் தோற்றுவிக்கிறது. உயிருடலை ஆள்வது ஜீவன் அல்லது ஆன்மா. உலகை ஆள்பவரை "சிவன்" என்கிறோம். பிரம்மாண்டத்தை ஆட்சி புரிபவர் பிரம்மா. எல்லையற்ற பரவெளியைக் கடவுள் அல்லது பரமாத்மா அல்லது பிரம்மம் என்கிறோம். பரந்த கடலின் பரப்பில் ஒவ்வொரு விநாடியும் எண்ணற்ற குமிழ்கள் தோன்றிச் சிதறுகின்றன. அதேபோலப் பரவெளியில் ஒவ்வொரு விநாடியும் கணக்கற்ற வடிவங்கள், உலகங்கள், பிரம்மாண்டங்கள் உதிக்கின்றன, மடிகின்றன.

**சனிக்கிழமை, 24, நவம்பர், 1934**

74. **எல்லையற்ற பரவெளியைப் பகுக்க முடியாது. அது காலம், வெளி, மூலத்திற்கும் அப்பாற்பட்டது.**

**தெளிவுரை:-**

எல்லையற்றதைப் பகுத்துப் பிளந்தாலும் அது எல்லையற்றதாகவே இருக்கிறது. ஆனால் உண்மை என்னவோ பரவெளியைப் பிரிப்பது என்பதே முடியாது. அது இரண்டாவது அற்ற ஒன்றே ஒன்று. அதற்கு ஆரம்பமும் இல்லை. முடிவும் இல்லை. பகுத்துப் பிளக்க முடியுமென்பது எதுவாயினும் அதற்கு ஒரு எல்லை கிடைத்துவிடும். முடிவுள்ள ஒன்று காலம், வெளி, மூலத்திற்குக் கட்டுப்பட்டே அமையும். ஆனால் முடிவற்றது என்பதற்கு ஆரம்பமோ முடிவோ இல்லாதிருப்பதால் அது காலம், வெளி, மூலத்திற்கெல்லாம் அப்பாற்பட்டது. காலம், வெளி, மூலம் என்பதின் கருத்து மனத்தளவில் மட்டுமே இருக்கிறது. முடிவற்றது பரவெளி மனத்திற்கு அப்பாற்பட்டது. அது இந்த மூன்றுக்குள் அடங்காதது.

**சனிக்கிழமை, 24, நவம்பர், 1934**

**75. ஒரேவிதமான தெய்வீகச் சுடர் ஒவ்வொரு உயிரினத்துள்ளும் இருக்கிறது. எல்லையற்ற ஒரே பரம்பொருள் விரிந்து எண்ணற்ற உருவங்களாகப் பரிணமிக்கிறது. பெருஞ்சுடர் கடவுளின் சொரூபம். சிறுபொறி சாதாரண சீவன்.**

**தெளிவுரை:-**

எல்லையற்ற ஒன்று அல்லது கடவுள் அல்லது பிரம்மம் அணையா சோதி. அணையா சோதியிலிருந்து எண்ணற்ற சுடர்ப்பொறிகள் சோதியின் முயற்சியின்றியே தாமாகவே வெளிக் கிளம்புகிறது. சுடர்கள் வெளிவந்து சிறிது நேரம் தனியாகவே ஒளிர்கிறது. பின்னர் அது தனது சுய ஒளிக்கே திரும்புகிறது. அகிலத்தில் காணும் எல்லா உயிரினங்களும் கடவுள் அல்லது பிரம்மத்திலிருந்து வெளி வருகிறது. கடவுளிலிருந்து அவை வருகின்றன. கடவுளுள் வசிக்கின்றன. முடிவில் கடவுளிடமே போய்ச் சேருகின்றன. சுடர்விடும் சோதியில் கிளம்பும் சுடர்களை பார்ப்பதற்கு சிறிது நேரம் தனிப்பட்டவையாகத் தோன்றினும் அவை பெருஞ்சோதியிலிருந்து தனிப்பட்டவை அல்ல. எண்ணிலடங்கா சீவன்கள் தோற்றத்தில் தனிப்பட்டு வாழ்வதாகக் காணினும், உண்மையில் அவை கடவுளின்றி தனியே வாழ்வதில்லை. இது ஜாடிக்குள் இருக்கும் ஆகாசம் வெளியிலும் எங்கும் வியாபித்துள்ளதைப் போன்றதாகும். எங்கும் பரவியுள்ள ஆகாசம் ஜாடிக்குள் இருக்கும்போது அதை ஜாடி ஆகாசம் என அழைப்பதைப் போன்றதாகும். ஆனால் ஜாடியை உடைத்தவுடன் ஜாடிக்குள் இருக்கும் ஆகாசம் எங்கும் வியாபித்துள்ள ஆகாசத்துடன் ஒன்றி விடுகிறது. இதே போல உயிர்

உடலுக்குள் உள்ள கடவுளை ஜீவன் என்கிறோம். இந்த ஜீவசாரம் வெளியேறியதும் அது கடவுள் ஆகிறது. ஒவ்வொரு தீச்சுடரும் தனித்து வாழ தனக்கென்று ஒரு காலவரை கொண்டிருக்கிறது. ஜீவனும் உயிர்வாழ தனக்கென வயது வரம்பு கொண்டுள்ளது. இந்தத் தனக்கென்ற உயிர் வாழ்க்கையை பல்வேறு உடல்களில் அது அனுபவிக்கிறது. அதற்கு ஒரு முடிவு உண்டு. பல்வேறு உடல்களில் தங்கியுள்ள வாழ்க்கையே பந்தம் எனப்படுகிறது. இந்த பந்தம் அற்றுப் போவதையே மோட்சம் என்கிறோம். சாதாரண ஜீவன் சோதியின் ஒரு சிறுபொறி போன்றது. தெய்வீக அவதார ஜீவன் ஒளிவீசும் பெருஞ்சோதியைப் போன்றது. இந்த இருவகை நிலையும் ஒரே இனமானதாயினும் அளவில் பெரிய வித்தியாசம் கொண்டவை. அதாவது தூய்மை, ஆற்றல் போன்றவற்றின் அளவுக்கேற்ற வித்தியாசம்!

**செவ்வாய்க்கிழமை, 27, நவம்பர், 1934**

**76, உலகில் உலகாயதப் பொருள்கள் எப்படி படைக்கப் பட்டு, வாழவைத்துப் பின்னர் அழிக்கப்படுகிறதோ அதே போல எல்லையில்லாப் பரவெளியிலும் உலகங்கள் தொடர்ந்து தோற்றுவிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு அழிக்கப்படுகின்றன.**

**தெளிவுரை:-**

இவ்வுலகில் சில பொருட்கள் உயிர் பெற்று உற்பவிக்கின்றன. சில சிறிது காலம் உயிருடனிருக்கின்றன. வேறு சில இடையறாது அழிக்கப்பட்டு வருகின்றன. படைப்பு, வாழ்வு, அழிவு இவ்வுலகில் ஓய்வு ஒழிச்சலின்றி இடையறாது நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. அதேபோல எல்லையில்லாப் பரவெளியிலும் எண்ணிலடங்கா உலகங்கள் படைக்கப்படுகின்றன. எண்ணி

லடங்கா உலகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. கணக்கற்ற உலகங்கள் அழிந்த வண்ணம் உள்ளன. பரவெளியில் உலகங்களின் இந்தப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில்கள் எப்போதும் நடந்து கொண்டே இருக்கின்றன.

**புதன்கிழமை, 28 நவம்பர், 1934**

**77. தூலம் இல்லாமல் சக்தி இயக்கம் இல்லை. சக்தி இன்றித் தூலம் இயங்காது.**

**தெளிவுரை:-**

சக்தி சூக்குமமானது. அது தூலத்தின் உதவியின் றிச் செயல்பட முடியாது. தூலமும் தான் மட்டும் இயங்குவதென்பது இயலாது. ஆக கலந்து உரமாக்கப்பட்ட சக்தி அல்லது ஆற்றலே தூல இயக்கம்.

**புதன்கிழமை, 28, நவம்பர், 1934**

**78. எல்லையில்லாப் பேரண்டத்தில் கண்டங்கள் கிடையாது.**

**தெளிவுரை:-**

எல்லையில்லாப் பரவெளி ஒன்றே ஒன்றுதான். இரண்டாவது இல்லாதது. அது எங்கும் வியாபித்து நிற்பது. முடிவற்றது. பகுதிகள் அற்றது. ஒரு வஸ்துவைப் பங்கு போட்டு பகுதிகளாக்க முடியுமானால் அதை எல்லையற்றது எனச் சொல்ல இயலாது. அது ஒரு எல்லை வகுக்கப்பட்டதாகி விடுகிறது. பகுதிகளைத் தெரிந்து கொண்டாலே முழுவதையும் தெரிந்து கொள்ள முடியும். ஒன்றைப் புரிந்து கொள்வது என்பது அதை ஒரு எல்லைக்குள் கொண்டுவருவது ஆகும். எல்லை வகுக்கப்பட்ட ஒன்று எல்லையில்லாப் பரவெளி ஆக முடியாது. அது எல்லைக்குள் அடங்கி விடக்கூடியது.

**புதன்கிழமை, 28, நவம்பர், 1934**

**79. தூலத்தில் சக்தியின் இயக்கம் நேரும் போது எல்லா உருவங்களும் உற்பவிக்கின்றன.**

**தெளிவுரை:-**

ஐந்து சூக்கும பூதங்களும், ஐந்து தூல பூதங்களும் உள்ளன. அதாவது ஆகாசம், காற்று, நெருப்பு, நீர், மண் ஆகும். ஆற்றல் அல்லது சக்தி சூக்கும பூதங்களுக்குக் காரணமாக உள்ளன. சூக்கும பூதங்களை இயக்கும் ஆற்றலினால் தூல பூதங்கள் உண்டாக்கப்படுகின்றன. தூல ஆகாசத்தை எடுத்துக் கொண்டோமானால் அவை சூக்கும பூதங்களினால் (தன் மாத்திரைகளினால்) நிரப்பப்பட்டுள்ளன. கீழ்க்கண்ட விகிதாசாரத்தில் அவை உள்ளன. 1\2 சூக்கும ஆகாசத்துடன் 1\8 சூக்குமக் காற்றும் 1\8 சூக்கும நெருப்பும், 1\8 சூக்குமத் தண்ணீரும் 1\8 சூக்கும பூமியும் உள்ளன. தூல பூதங்களை இயக்கும் சக்தியினால் இந்த அகிலத்தில் காணப்படும் ஒவ்வொரு உருவமும் தோன்றுகின்றன.

**வியாழக்கிழமை, 29, அக்டோபர், 1934.**

**80. எல்லையற்ற பரவெளியைக் காணமுடியாது. ஆனால் அதைச் சமாதி நிலையில் உணரலாம்.**

**தெளிவுரை:-**

மனம் ஒரு வரையறைக்குள் இயங்குவது. அதனால் எல்லையில்லாப் பரவெளியைக் காண முடியாது. காண்பது எனில் அது ஒரு எல்லைக்குள் இருக்கும். எல்லைக்குள் இருக்கும் ஒன்று எல்லையற்றதாக இருக்க முடியாது. எல்லையற்றது என்பது எல்லாப் பொருள்களுக்கும் மூலப்பொருளானது. காண்பது எனில் அதற்கு ஒரு வடிவம் உண்டு. ஒரு பொருள் எப்படி வடிவம் கொண்

டிருக்கும்? அது நடக்க முடியாத ஒன்று. ஒரு பொருளை நாம் நம்முடைய மனம், புத்தி, அகந்தை ஆகியவற்றின் உதவியுடன் அறிகிறோம். அறியும் ஒவ்வொன்றும் காலம், வெளி, காரணத்தைக் கொண்டுள்ளது. மனத்திற்கும் காலத்திற்கும் வெளிக்கும், காரணத்திற்கும் அப்பாற் பட்டது எல்லையற்றது. ஆகவே அதை அறிவது என்பது இயலாது. ஆனால் அது நிர்விகல்ப சமாதி நிலையில் மட்டுமே உணரக் கூடியது. இதயம் தூய்மை பெற்று மனம் ஒருமுகப்பட்ட நிம்மதியை அடையும்போது ஒரு வர் சமாதியை எய்துகிறார். அந்த நிலையில் அவர் எல்லையற்றதை உணருகிறார்.

**வெள்ளிக்கிழமை, 30, நவம்பர், 1934**

81. ஆற்றலின் ஒரு பகுதி தூல உடலையும், புலன் களையும், சூக்கும உடலையும் இயக்குகிறது. சக்தியின் அந்தக் கூறுக்கு மனம் என்று பெயர். மனத்தைச் செயல்பட வைக்கலாமா அல்லது வேண்டாமா என்பதை உணர்த்தும் சக்திக்கு உள்ளுணர்வு என்று பெயர். பகுத்தறிந்து விவரத்தைப் புரிய வைக்கும் சக்தியின் கூறுக்கு புத்தி என்று பெயர்.

**செவ்வாய்க்கிழமை, 4, டிசம்பர், 1934**

82. **புத்திக்கும் புத்திசாலித்தனத்திற்கும் உள்ள வேறுபாடு:-**

ஒரு மனிதன் புத்தி மிக்கவனாக இருக்கலாம். ஆனால் புத்தி சாதுர்யம் குறைந்தவனாக இருப்பான். அவன் அதிகம் படித்திருக்கக்கூடும். பரந்த அறிவு பெற்ற வனாக விளங்குவான். ஆயினும் அவன் சாதுர்ய மற்றவனாக இருப்பான். வேறொருவன் படிப்பாளியாக இருக்க மாட்டான். அவன் படிப்பறிவு இல்லாத

வனாகவும் இருக்கக்கூடும். எனினும் அவன் புத்திசாதுர்யத்துடன் திகழ்வான். புத்தியும் புத்திசாலித்தனமும் மனத்தின் பகுத்தறியும் ஆற்றலின் இரு கூறுகள். உரிய காலத்தில் சடுதியில் சரிவரப் புரிந்து கொள்வது, பொருத்தமாகப் பேசுவது, சரியான பொருத்தமுள்ள முடிவெடுப்பதும் அதைச் செயல் படுத்தும் சக்தி போன்றவை புத்திசாலித்தனமாகும்.

**வியாழக்கிழமை, 13, டிசம்பர், 1934**

83. **எல்லா இனப் பாகுபாடுகளும் குறுகிய நோக்கம் கொண்டவை. நிறைவுடையனவும் அல்ல. இத்தகைய இனப்பிரிவுகள் அவதாரப் பிறவிகளையும், அல்லது மாபெரும் ரிஷிகளையும் தங்களுடைய குறுகிய இனம் சார்ந்தவர்களாகக் காட்டிக் கொள்வது பாபமானது மட்டுமல்ல, இழுக்கானதுங்கூட.**

தெளிவுரை:-

ஒவ்வொரு மதப்பிரிவும் மாபெருந் தலைவனைக் கொண்டுள்ளது. மதப்பிரிவுகள் அவதார நாயகனாக விளங்குபவருடைய பெயரையோ அல்லது கடவுள் தரிசனம் பெற்ற மகான் பெயரையோ கொண்டு விளங்குகிறது. இத்தகைய பெரும் மதத்தலைவர்கள் சாதி, சமயம்,இனம், கொள்கைகள், பாகுபடுகளைக் கடந்தவர்களாவர். அவர்களுக்கு உலகம் முழுவதுமே ஒரு கனவுக் காட்சியாக விளங்குவது. அந்த நிலைபெற்ற அவர்கள் தங்கள் சொந்த உடல்களையும் தனதெனச் சொல்லாதவர்கள். எந்த ஒரு மதப்பிரிவு, கொள்கை அல்லது சித்தாந்தத்தையும் சமமாகக் கருதுபவர்கள். இந்த மாபெரும் மகான்கள் உண்மையான வாழ்க்கை வாழ்பவர்கள். தர்மத்தைப் பிரசாரம் செய்பவர்கள். கடவுள்

தரிசனம் பெற்றவுடன் உலகைவிட்டுச் செல்பவர்கள். அவர்கள் உலகை நீத்த பிறகு அவர்களுடைய சீடர்கள் தலைவரின் பெயரில் தனித்தனி மதப்பிரிவுகளை உருவாக்கி விடுகின்றனர். அவைகளுக்கான தனித்தனி சட்டதிட்டங்களை வகுத்துக் கொண்டு தமது ஆசாரிய நாயகர்களை தங்களின் குறுகிய வளையத் திட்டங்களுக் குள் குறுக்கி விடுகின்றனர். இத்தகைய நிறுவனங்கள் அல்லது சமயத் தோற்றங்கள் ஊழல் வகையைச் சார்ந்த ஒன்றாகும். இந்தப் பிரிவினைகள் எவ்வளவு விழிப்புடன் இயங்கினாலும், அதன் உறுப்பினர்கள் மிகவும் திறமைசாலிகளாக இருந்தாலும் அந்த நிறுவனங்களில் ஒருவகை ஊழல் ஊடுருவல் செய்தே தீரும். ஏதாவது ஒருவகைக் குறைபாடு இல்லாத சமய நிறுவனம் இந்த உலகில் இருப்பதே இல்லை. அத்தகைய ஒவ்வொரு சமயப் பிரிவும் தனது தலைவன்தான் அவதார நாயகன் என்று சொல்லிக் கொள்ளும் தன்மை மிகவும் வேடிக் கையானது. அவதார நாயகன். எனக்கூறும் அதே நேரத் தில் அவரைத் தங்கள் பிரிவின். ஒரு குறுகிய வரையறைக் குள் ஆக்கிக் கொள்வது அதைவிட வேடிக்கையானது. குறுகிய மனப்பான்மை, சகிப்புத்தன்மையில்லாத நிலை ஆகியவைகளே கடவுள், மதத்தின் பெயரால் நடக்கும் கொலை பாதகங்களுக்கும் இரத்தக் களறிகளுக்கும் காரணங்களாக உள்ளன. ஆகவே ஒரு மாபெரும் அவதார நாயகனை தங்களுடைய இனத்தின் எல்லைக் குட்பட்டவர் என்று சொல்வது பாபமும் இழுக்குமானது.

**வியாழக்கிழமை, 13, டிசம்பர், 1934**

84. எல்லையற்றதை அளவிட்டுச் சொல்ல முடியாது. ஒன்றை மனத்தின் எல்லைக்குள் கொண்டு வருவது அதை ஒரு எல்லைக்குட்படுத்துவதாகும். நாம் மனத்தின்

உதவியினால் ஒன்றை எண்ணிப் பார்க்கிறோம். ஆனால் எல்லையற்றது, ஒரு எல்லைக்குள் இயங்கும் மனத்திற்கு அப்பாற்பட்டது. மேலும் எண்ணிப் பார்க்கும் பொருளை விட எண்ணிப் பார்ப்பவர் பெரியவராக இருத்தல் வேண்டும். ஒரு பொருள் வைக்கும் பாண்டம் அந்தப் பொருளை விடப் பெரிதாக இருக்க வேண்டும். மனம் எல்லையில்லாததை எண்ணிப் பார்க்க முடியுமெனில், அது எல்லையற்ற பரம்பொருளைவிடப் பெரிதாக இருக்க வேண்டும். ஆனால் எல்லை பெற்ற மனம் எண்ணும் பொருள் ஒரு எல்லைக்குள் அடங்கியதாக இருக்கும். எல்லையற்ற பொருளாக இருக்க முடியாது.

**வெள்ளிக்கிழமை, 12, ஜனவரி, 1935**

85. **மேலான பரம்பொருள் செயல்படுவதுமில்லை. உணர்வதும் இல்லை. கடவுளின் படைப்பாற்றலே (பிரகிருதி சக்தியே) உலகங்களையும், உலக உயிர்களையும் படைக்கிறது, பராமரிக்கிறது, கலைத்து விடுகிறது.**

**தெளிவுரை:-**

மேலான பரம்பெருள் எல்லையற்றது. நிரந்தரமானது. மாற்றமற்றது. அசைவற்றது. பிறப்பற்றது. ஆண் பெண் பேதமற்றது. உருவமற்றது. எல்லாவற்றையும் கடந்தது. ஒன்றே ஒன்றானது. அதற்குக் குணங்களில்லை. மூவகைக் குணங்களையும் கடந்தது. அது முழுமையானது (பிராணன்). பகுதிகளற்றது. அது மனமற்றது (அமனமானது) வரையறை அற்றது. ஆனால் அதனுடைய படைப்பாற்றலே (பிரகிருதி சக்தியே) உலகங்களையும், உலக உயிர்களையும் படைப்பதும், பராமரிப்பதும், அழிப்பதுமாக உள்ளது. அதே பிரகிருதி மனமாகவும்,

தூலப் பொருளாகவும் பரிணமிக்கிறது. பிரகிருதி சக்திக்கு மூன்று குணங்கள் உள்ளன. சத்துவம், ராஜசம், தாமசம் ஆகும். இந்தக் குணங்களே பிரகிருதியின் சார மாகவும் பண்பாகவும், படைப்புக்கான காரணங்களாக வும் உள்ளன. இந்த மூன்று குணங்களிடமிருந்தே அகிலா ண்டமும் தோன்றுகிறது. வானத்தைக் குடையாகக் கொண்டிருக்கும் வெளியில் புலப்படும் எல்லாமே இந்த குணங்களைக் கொண்டதாகவே உள்ளன. இந்த குணங் கள் சமநிலையில் இருக்கும்போது உலகம் அழிகிறது (பிரளயம்). அந்த நிலையில் படைப்பு என்பதே இருப்பது இல்லை. அப்போது பிரகிருதி சக்தி அசைவற்ற அமைதி நிலையைப் பெறுகிறது. இந்தக் குணங்கள் சமநிலையை இழக்கும் போதும் அதன் காரணமாக ஒன்றையொன்று மோதுவதாலும் ஒரு வகை சலனம் உண்டாகிறது. அந்த நிலையில் படைப்பு தொடங்குகிறது. ஆகவே மேலான பரம்பொருள் பரந்த அகிலாண்டத்தைப் படைப்பதற் காகச் செயல்படுவதுமில்லை; உணர்வதுமில்லை.

**சனிக்கிழமை, 13, ஜனவரி, 1935**

86. "பிரம்மச்சரியம்" என்கிற வார்த்தைக்கு உடல் உறவு கொள்ளாமலிருப்பது என்பதே பொதுவான கருத்து. உடல் உறவைப்பற்றிய எண்ணம், சொல், செயலைத் தவிர்ப்பதும் பிரம்மச்சரியத்தைச் சேர்ந்ததே. ஆனால் அதற்கு ஆழ்ந்த பரந்த பொருளும் உண்டு. ஒன்றை அதன் இயல்பிலேயே வைத்திருப்பது, ஒரு பொருளை தூய்மை கெடாமல் பாதுகாப்பது போன்றவையும் பிரம் மச்சரியமே. மனத்தால் பிரம்மச்சரியம், ஆசை, எண்ணத் தில் பிரம்மச்சரியம், பேச்சில் பிரம்மச்சரியம், கேட்பதில் பிரம்மச்சரியம், பார்வையில் பிரம்மச்சரியம், ருசியில் பிரம்மச்சரியம், முகர்வதில் பிரம்மச்சரியம், செயலில்

பிரம்மச்சரியம் போன்றவையும் இதில் அடங்கும். மனத்தை எல்லாவித ஆசைகள், எண்ணங்களிலிருந்தும் விடுவிப்பது; மனத்தை நிலையான கட்டுப்பாட்டில் வைத்திருப்பது; மனத்தை அதனுடைய தூய்மை இயல்பிலிருந்து மாறாமல் வைத்திருப்பது ஆகியவை மனத்தளவிலான பிரம்மச்சரியமாகும். நல்ல கண்ணியமான பயனளிக்கும் ஆசைகளும், கடவுளைக் காண்பதற்கான ஆர்வமும், கடவுளின் நினைவும், ஆசைகள் எண்ணங்களை முழுமையாகக் கட்டுப்படுத்துதல் ஆகியவை ஆசை, எண்ணத்திற்கான பிரம்மச்சரியம். அளவான பேச்சு, அதுவும் மெதுவாகவும், இனிமையாகவும், நட்புறவுடனும் எப்போதும் உண்மையே பேசுவதும், அடக்கத்துடன் பேசுவதும் "பேச்சின் பிரம்மச்சரியம்" ஆகும். கடவுள் நாமாவையும் ஆற்றலையும் பெருமைகளையும் கேட்டலும், செவிமடுப்பதைக் கட்டுப்படுத்திக் கொள்வதும் கேள்வி ஞான பிரம்மச்சரியம். அறுசுவை உணவிற்கு அலையாமல் தேவையான எளிய சத்துள்ள உணவை வீணடிக்காமல் உண்பதும், போதை தரும் பானங்களை அருந்தாமலிருப்பதும், நாக்கின் சுவைக்கு இலக்காகாமல் இருப்பதும் சுவை ருசிக்கான பிரம்மச்சரியம். இனிய நறுமண சுகந்தங்களை முகர விரும்பி அலையாமல், மூக்கின் முகர்தலுக்கு அடிமையாகாமல் இருப்பதே முகர்தலில் பிரம்மச்சரியம். செய்யும் ஒவ்வொரு செயலையும் சேவையாகவும், ஒவ்வொரு சிறு காரியத்தையும் பற்றுதலின்றி, பயனை எதிர்பாராமல் செய்வது செயலில் பிரம்மச்சரியம்.

**புதன்கிழமை, 23, ஜனவரி, 1935**

**87. உணர்ச்சிவயப்படும் ஒவ்வொரு முறையும் (குறிப்பாக காதல் காமத்தின் போதும், சிறிதளவு கூடுதல் அல்லது குறைவாக) விந்து அதற்கான சேமிப்பு இடத்திலிருந்து வெளியேறுகிறது.**

**தெளிவுரை:-**

உணர்ச்சி வயப்படும்போது ஏற்படும் வேகம் தன்மைகளில் மெதுவாகவும், நடுத்தரமானதாகவும், தீவிர கதி கொண்டதாகவும் மாறுபடுகிறது. ஒவ்வொரு உணர்ச்சியின் போதும் (குறிப்பாக காதல் அல்லது காமம்) விந்து இருப்பிடத்திலிருந்து வெளியேற்றப்படுகிறது. காதல், காமத்தின் வேகம் மந்தமாக இருந்தால் விந்து இலேசான துமிகளாக சேமிப்பிலிருந்து வெளியேறுகின்றன. காதல் காம உணர்ச்சியின் வேகம் நடுத்தரமானதாக இருப்பின் விந்துவின் சிலதுளிகள் வெளியேறிவிடும். காதல் காமத்தின் வேகம் பலமானதாக இருந்தால் உணர்ந்த நிலையில் முழு அளவு விந்து சேமிப்பிலிருந்து வெளிப்படும். ஆகவே உணர்ச்சி வயப்படும் சுபாவமுள்ள மனிதன் உறுதியான பிரம்மச்சாரியாக இருக்க முடியாது.

**சனிக்கிழமை, 26, ஜனவரி, 1935**

88. **எல்லையற்றதைக் கற்பனையில் காண முடியாது.**

**தெளிவுரை:-**

எல்லைக்குள் இயங்கும் மனத்தின் இயக்கமே கற்பனை. கற்பனை எவ்வளவோ பரந்து விரிந்ததாக இருப்பினும் அது ஒரு எல்லைக்கு உட்பட்டதுதான்! மனம் முடிவுள்ள ஒன்று. அதனால் எல்லையற்றதின் உண்மையான அளவைக் கற்பனைக்குள் கொண்டு வர முடியாது. மனம் முடிவுள்ள ஒன்றை மட்டுமே கற்பனை செய்ய முடியும். ஒவ்வொரு கற்பனையும் ஒரு எல்லைக்குள் அடங்கியதாகவே இருக்கும். அதனால் எல்லையற்ற ஒன்றைக் கற்பித்துப் பார்க்க முடியாது.

**வெள்ளிக்கிழமை, 18, பிப்ரவரி, 1935**

***89. இயக்கம் என்பது வேகத்தின் இயல்பு அல்லது "சக்தி." தூலப்பொருளின் மீதான இயக்கசக்தி அனாதி காலந் தொட்டு முடிவின்றிச் சுழன்று கொண்டிருக்கிறது. அதன் காரணமாகப் படைத்தல், காத்தல், அழித்தல் தொடர்ந்து நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன.***

**தெளிவுரை:-**

*இயக்கம் என்பது சக்தியின் இயல்பான வேகம். சக்தியின் இயக்கத்திலிருந்தே பெயர்களும் உருவங்களும் உண்டாகின்றன. ஓய்வு ஒழிச்சலின்றித் தூல வடிவின் மீதான இந்த இயக்கம் முடிவே இல்லாமல் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. முன்னர்க் கூறியுள்ளது போல் இந்த இயக்க சக்தியினால் உலகங்களும், உலகத்தின் உயிர் களும் படைக்கப்பட்டு, காக்கப்பட்டு, அழிக்கப்படு கின்றன. கடவுளோடு கூடவே இந்தப் படைத்தல், காத்தல், அழித்தல் எனும் இயக்கம் நடந்தவண்ணம் உள்ளன. இந்தச் செய்கையின் மூவகை நிகழ்வுகளும் நடக்காத நேரமே இல்லை. எனவே படைப்பின் ஆரம்பத்தையோ முடிவையோ கண்டுபிடிக்க இயலாது. அவ்வாறு கண்டு பிடிக்க முயலும் செய்கை, கடவுளின் பிறப்பு, வளர்ச்சி, இறப்பினைக் காண முயல்வதாகும். இது மிகவும் அர்த்தமற்ற செய்கை. உலகங்களும், உலகாயதப் பொருள்களும் ஆரம்பமும் முடிவும் உடையன. இவைகளைத் தெரிந்து அறிய இயலும். ஆனால் கடவுள் எல்லையற்றவர். ஆரம்பமும், முடிவும் இல்லாதவர். இதை வேறுவிதமாகச் சொல்லப் போனால் படைத்தல், காத்தல், அழித்தல் எனும் கருத்து அறியாமையால் உதிப்பது! ஒருவர் சமாதி நிலையை (நிர்விகல்ப சமாதியை) எய்தும் போது எல்லாவகை*

முரண்பாடுகளுமே மறைந்து விடுகின்றன. பிறகு படைத்தல், காத்தல், அழித்தல் எனும் கருத்தே எழாது. சமாதி நிலையில் இரண்டாவது என்பதற்கே இடமில்லை. அந்நிலையில் உயிர்ச்சார மகாசமுத்திரம் மட்டுமே நிற்கிறது. தன்னைத்தானே உணரும் பேருண்மை இயல்பைத் தெரிந்து கொள்ளும் செயலையே மோட்சம் அல்லது வீடுபேறு என்கிறோம். இந்தச் சமாதி நிலையில் வீடுபேறு பந்தம் என்பவை பொருளற்றதாகின்றன.

**திங்கட்கிழமை, 21, பிப்ரவரி, 1935**

90. **ஆசையே பந்தத்திற்குக் காரணம். அகந்தையே ஆசைக்குக் காரணம்.**

**தெளிவுரை:-**

ஆசையினாலேயே பந்தம் உண்டாகிறது. அகிலாண்டம் என்பது ஆசைகள் நிறைந்தது. மனநிறைவு தரும் அழகிய பொருளை அடைவதற்கு நாம் ஆசைப்படுகிறோம். செல்வத்தைச் சேர்ப்பதற்கு அவாவுறுகிறோம். புலன் போகங்களை அனுபவிக்க ஆசைபட்டுக் கொண்டே இருக்கிறோம். ஒருநாள் இருபத்துநான்கு மணி நேரத்திற்குள் எண்ணத் தொலையாத ஆசைகள் ஒன்றன்பின் ஒன்றாக ஒரு சாதாரண மனிதனின் மனத்தில் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. இத்தகைய எண்ணிலடங்கா ஆசைகள் மனத்தின் சக்தியைக் குலைக்கின்றன. இப்படிப்பட்ட மனம் அதன் திடத்தையும், தூய்மையையும் இழக்கிறது. ஆசைகளே மனத்தை மாசு படுத்துகிறது. இந்த மாசுகளே ஒரு மனிதனை அறியாமைக்கும், பந்தபாசங்களுக்கும் வலிக்கிறது. ஆசைகளற்ற மனம் துல்லியமான தூய்மையை நிர்வகிக்கிறது. எளிதில் சமாதியையும்

விடுதலையையும் எய்துகிறது. "நான்", "என்னுடையது" என்கிற நினைப்பே எல்லா ஆசைகளுக்கும் காரணம். "நான்" என்கிற கருத்தை மையமாகக் கொண்டு ஒருவர் எல்லாவகைப் பொருட்களையும் பெற ஆசிக்கிறார். "நான்" என்கிற கருத்து மறையும்போது எல்லா ஆசை களும் தானாகவே அடிபட்டுப் போகின்றன. ஒவ்வொரு ஆசையும் ஒரு தேவை ஆகிறது. ஒவ்வொரு தேவையும் அகந்தை காரணமாக வருகிறது. ஆகவே ஆசை பந்தத்திற்குக் காரணம். அகந்தையே ஆசைக்குக் காரணம்.

**செவ்வாய்க்கிழமை, 22, பிப்ரவரி, 1935**

91. ***ஒரு ஏழை தனது வறுமை காரணமாகப் பணக்கார னுக்கு அடிமையாகிறான். ஒரு பணக்காரன் பணத்தி னால் உழைப்பை மறந்து உடலை வளர்த்துக் கொண்டே சோம்பேறித்தனத்தினால் வேலைக்காரனுக்கு அடிமையாகிறான்.***

**தெளிவுரை:-**

ஒரு ஏழை தனது வயிற்றுப் பாட்டிற்காகவும், தனது மனைவி மக்களைக் காப்பாற்றுவதற்காகவும் பணக்கார னிடம் அடிமையாக உழைக்கிறான். தரித்திரமே இத்தகைய அடிமைத்தனத்திற்குக் காரணம். ஒரு பணக் காரனும் தனது ஒவ்வொரு சிறு வேலைக்குக்கூட வேலைக்காரனை எதிர்பார்க்கிறான். வேலைக்காரனில் லாமல் அவனால் எதையுமே செய்ய முடியாது. ஆகவே அவன் ஒரு அடிமைக்கு (வேலைக்காரன்) அடிமையா கிறான். பணத்தினால் ஏற்பட்ட சோம்பேறித்தனமே பணக்காரனின் அடிமைத்தனத்திற்குக் காரணம்.

**புதன்கிழமை, 23, பிப்ரவரி, 1935**

**92. புலன் போகங்களில் தீவிரம் காட்டுந்தன்மையும் ஒரு வகை ஒருமைப்பாடுதான். அப்படிப்பட்டவன் தன் மனத்தை நல்வழியில் திருப்பிச் செலுத்துவானாயின் அவன் முயலும் எதிலும் வெகு எளிதில் வெற்றி பெற இயலும்.**

**தெளிவுரை:-**

புலன் நுகர்விலும் பின்வாங்காத தன்மை ஒருவனுடைய ஆழ்ந்த ஈடுபாட்டுத் திறனைக் காட்டும் அறிகுறியாகும். புலன் போகத்திற்காகப் பைத்தியம் பிடித்து அலைவதென்பதும் சுலபமானதல்ல. ஆசைப் படும் பொருள் மாறுபடுந்தன்மையது. மனம் ஒரு பொருளிலிருந்து மற்றொன்றிற்கு அலைந்தவண்ணம் இருக்கக் கூடியது. எவ்வளவு அழகும், கவர்ச்சியும் நிறைந்த தாயிருப்பினும் மனம் அந்தப் பொருளில் ஆசையும் பற்றும் கொள்வது சில காலமே. அந்தப் பொருளை அடைந்த பிறகு மனம் வேறொரு புதிய கவர்ச்சிப் பொருளுக்குத் தாவுகிறது. ஆகவே மனம் ஒரே ஒரு பொருளில் நிலைத்து நிற்பது கிடையாது. ஒரே ஒரு பொருளை அடையத் தீவிரம் காட்டுவது என்பது மனம் அந்த ஒரே பொருளில் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் நிரந்தரமாக நிற்கிறது எனலாம். இதுவே மனத்தின் மிக உயர்ந்த ஒருமைப்பாட்டு நிலையைக் காட்டுகிறது. இப்படிப்பட்ட உயரிய ஒருமைப்பாட்டு நிலையை எய்துபவன் எத்துறையிலும் தன் மனத்தை ஒரு முகப்படுத்திச் செலுத்தி வெற்றி பெறுகிறான். அவன் அதை எளிதில் அடையவும் செய்யலாம். வெற்றிக்கான பிரதான வழி மன ஒருமைப்பாடேயாகும். உதாரணமாக மகான் துளசிதாசரின் கதையைப் பார்ப்போம்.

துளசிதாசர் தன் மனைவியின் மீது மிகுந்த பாசம் வைத்திருந்தார். அவர் அவள் மீது தீவிரக் காம இச்சை கொண்டிருந்தார். முடிவில் அவளில்லாமல் அவரால் உயிர் வாழ முடியாது என்றாயிற்று. நாளாவட்டத்தில் மனைவி அவரிடம் அருவருப்பைக் காட்டத் தொடங்கினாள் அவரைத் தூஷித்தாள். ஒரு பெண்ணின் அழிந்து அழுகிப் போகக் கூடிய உடலைத் தேடி அலைவதைவிடக் கடவுளைக் காதலிக்கும்படி உபதேசித்தாள். துளசிதாசர் அவமானப்பட்டார். தன்னுடைய தவறை உணர்ந்து மனைவியை விடுத்து உலகைத் துறந்தார். மனைவியிடம் காட்டிய அதே மோக வெறியுடன் பகவானை நேசித்து தெய்வ தரிசனம் பெற்றார்.

**வியாழக்கிழமை, 24, பிப்ரவரி, 1935**

93. தூய்மை பெற்ற மனம் மாபெரும் சக்தி வாய்ந்தது. அது சுவர்களையும், பாறைகளையும், மலைகளையும் ஊடுருவிச் செல்லக் கூடியது. அது சூரிய மண்டலத்தையும் அடையக்கூடியது. ஏன்? சந்திர மண்டலத்தையும், நட்சத்திர மண்டலத்தையும் தொடர்ந்து ஊடுருவும் ஆற்றலுடையது. ஆயினும் அதற்கு எல்லையற்றதை அறிய முடியாது.

**செவ்வாய்க்கிழமை, 9, ஏப்ரல், 1935**

94. **"சோம்பேறித்தனம்" என்ற சொல்லின் பொருள் என்ன?**

**பதில்:-**

விழிப்பு நிலையில் மனம் ஒரு கணம்கூட ஓய்ந்திருப்பதில்லை. ஒரு மனிதன் பார்ப்பதற்கு ஒன்றுமே செய்யாதது போலத் தோன்றுவான். ஆனால் உள்ளூற

அவன் மனம் ஓய்வு ஒழிச்சலின்றி ஆகாயக் கோட்டைகள் கட்டிய வண்ணமிருக்கும். இப்படியிருக்கும் போது "சோம்பேறித்தனம்" என்ற சொல்லுக்கு அர்த்தம் சரியல்ல. செயலிழந்தவனாகக் காணப்படும் ஒருவன் அவன் எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள், மனித சமுதாயத்தின் பார்வைக்கு "சோம்பேறி"யாகத் தோன்றும்.

**செவ்வாய்க்கிழமை, 23. ஏப்ரல், 1935**

95. காதல், காமம், வெறுப்பு, கோபம் போன்ற எல்லா உணர்ச்சிகளுமே உடலின் இருதய மையத்தில் செயல்படுகின்றன. மனத்தின் அறிவுத்திறன் மூளை மையத்தில் இயங்குகிறது. இந்த இரண்டு மையங்களும் அவைகளுக்கான அறிவாற்றலை சேமிப்புக் கிடங்கான சித்தம் அல்லது மனக்கோப்பிலிருந்து பெறுகின்றன. ஒரு சாதாரண மனிதனின் மூலாதாரச் சக்கரத்தில் (தோராயமாக குதமும், சிறுநீர்க்காலும் சந்திக்குமிடத்தில்) இருக்கிறது.

**வெள்ளிக்கிழமை, 10, மே, 1935.**

96. ஒரு சம்பவம், நிகழ்ச்சி, செயல், சொல் அல்லது எண்ணம் அவைகளுக்கான காரண நிலையில் இருப்பதையே சித்தம் (மனக்கோப்பு) என்று சொல்கிறோம். குறிப்பிட்டதொன்றுக்குச் செயல்பட நினைப்பதே ஒரு ஆசையாகிறது. அவ்வாறு செயல்பட முனையுந்திறன் மூளை மையத்தை அடைந்ததும் அது தூல உருப்பெற்று "எண்ணம்" ஆகிறது. அந்த எண்ணம் தெளிவாகும் போது அது "நினைவாற்றலாகி விடுகிறது" அந்த எண்ணத்தை உச்சரிக்கும்போது அது ஒரு "வார்த்தை" அல்லது பேச்சாக வருகிறது. அந்த எண்ணத்தை வெளிப்படுத்த முனையும் போது அது ஒரு "செயல்" ஆகிறது.

**சனிக்கிழமை, 31, மே, 1935.**

97. ***மிகப் பெரியதற்கும் மாபெரும் அளவினதாயும், சிறியதிலும் மிகச் சின்னஞ்சிறியதாயும் உள்ளதை கற் பனைக்குள் அடக்க முடியாது. அப்படிபட்டவரே கடவுள்.***

**தெளிவுரை:-**

*பெரியதிலும் மிகப்பெரியதாயுள்ளதை மனத்தினால் கற்பிக்க முடியாது. சிறியதிலும் மிகச்சிறியதாயுள்ளதும் மனத்தின் கற்பனைக்கு அப்பாற்பட்டதே. கடவுள் பெரிய திலும் மிகப்பெரியவர். சிறியதிலும் சின்னஞ்சிறியவர். ஆகவே மனத்தினால் அளப்பதற்கு அரியவர்.*

**சனிக்கிழமை, 31, மே, 1935.**

98. *இரண்டு எல்லைகளைத் தொடும் இணைப்பின் நிலை அல்லது இரண்டு எல்லைகளுக்குள்ளே கட்டுப்படும் நிலையைச் சராசரி நிலை எனலாம்.*

**ஞாயிற்றுக்கிழமை, 12, ஜுலை, 1935.**

99. ***ஒவ்வொரு முறை கோபத்திற்குள்ளாகும் போதும் பகுத்தறியுந்தன்மை பறிபோகிறது. கோபத்திற்கு ஆளாகும் ஒருவன் அடிக்கடி மதியிழந்து பேதலிக்கிறான்.***

**தெளிவுரை:-**

*மனமும், புத்தியும் ஒரே நிலையில் செயல் படும்போது நாம் சரியான முடிவுகளை எடுக்கிறோம். ஒவ்வொரு தரமும் கோபத்திற்குள்ளாகும் போது பகுத் தறியுந் தன்மையை ஒருவன் பறிகொடுத்து விடுகிறான். எப்பொழுதெல்லாம் ஒருவன் சினத்திற்கு ஆளா கிறானோ அப்போது மனமும் புத்தியும் சினத்தின் வேகத்திற்கேற்ப அளவு மீறியோ, நிலை குலைந்தோ செயல்படுகிறது. இதுவே நாம் தவறான முடிவுகளை*

எடுக்கக் காரணமாகிறது. சினத்தின் ஆதிக்கத்தால் புத்திக்கு உண்மைகள் தெரிவதில்லை. சரியான முடிவுக்கும் வருவதில்லை. அதனால் கோபக்காரன் உண்மையைக் காணத் தவறி விடுகிறான். தவறான முடிவுகளை எடுக்கிறான். அப்படிப்பட்டவன் அடிக்கடி ஏமாற்றப் படுகிறான். கயவர்களிடமும், தாசிகளிடமும் எளிதில் மாட்டிக் கொள்கிறான்.

**செவ்வாய்க்கிழமை, 8, செப்டம்பர், 1936**

100. சிற்றின்பம் புலன் இன்பங்களில் ஆற்றல்மிக்கது. விந்து சக்தி உடல், மனத்தினுடைய இன்றியாமையாத சக்தி சிவமும் சக்தியும். அதாவது கடவுளும் அவரின் படைப்புச் சக்தியும் தூல வடிவில் இணைவதே சிற்றின்பம். சிவமும் சக்தியும் காரண நிலையில் இணைவது பேரானந்தம். பேரானந்தம் அல்லது பிரம்மானந்தம் என்பது புலனும் அது நுகரும் பொருளும் இல்லாமலேயே தடைபடாத இன்பத்தை அளிக்கும் பேரின்ப நிலையாகும். விந்துச் சக்தியை ஆத்ம சக்தியாக (ஓஜஸ்சக்தி அல்லது அதீத மனோ சக்தியாக) மேம்படுத்தாதவரை ஆன்மிகத் தெளிவு கிடைக்காது. ஆகவே, உறுதியான பிரம்மச்சரியமே அதாவது எண்ணம், சொல், செயலிலான பிரம்மச்சரியமே தெய்வீக தரிசனத்திற்கான மார்க்கம்.

**புதன்கிழமை, 23, செப்டம்பர், 1936.**

101. நீராவியானது மேகம், நீர், பனிக்கட்டி போன்ற வடிவங்களைப் பெறுகிறது. அது போலவே ஒரே சக்தியானது மனம், பஞ்ச பூதங்களாகத் தோன்றுகிறது. இன்றைய விஞ்ஞானம் சூக்கும சக்தியையும், தூல உருவங்களையும் பாகுபடுத்தி ஆராய்ச்சி செய்ததினால் மின்னணுக்களையும், உயிரணுக்களையும் கண்டுபிடித்து

விட்டது. அவர்கள் இன்னும் ஒருபடி முன்னேறினால் உன்னதப் பரம்பொருளான சக்தியையே அடைந்து விட முடியும். உண்மையில் ஒரே ஒரு உன்னதப் பரம்பொருள் எனும் சக்தி மட்டுமே உண்டு. இந்த உன்னத சக்தியிடமிருந்தே பல்வேறு பெயர்களோடும் உருவங்களோடும் கூடிய உலகங்கள் பரிணமித்தன.

**வியாழக்கிழமை, 24, செப்டம்பர், 1936**

102. ***பிரகிருதி (தனிமனிதனின் உயிரில் படைப்பு சக்தியாக இயங்கும் சக்தி) புருஷனுடன் (கடவுள் அல்லது பிரம்மத்தில்) மீண்டும் இணைவதையே நிர்விகல்ப சமாதி என்கிறோம்.***

**தெளிவுரை:-**

பிரகிருதி சக்தியும், புருஷனும் (கடவுளும்) இணையும் நிலையே நிர்விகல்பசமாதி. கடவுட்சக்தியே (பிரகிருதி சத்தி) பரமாணுவையும், உயிரணுவையும் பரிணமிக்கிறது. மனிதனில் இயங்கும் புருஷன் பிரகிருதி சக்தி ஆகிய இரண்டின் இருப்பிடம் தலையின் உச்சியில் இருக்கிறது. (தலை உச்சியே சகஸ்ராரமாகும்). மனத்தையும் உடலையும் தோற்றுவிப்பது சக்தியேயாகும். பரிணாம வளர்ச்சியின் போது "சக்தி" படிப்படியாக தூலமாகிக் கொண்டே வந்து முடிவான தூல நிலையில் மூலதார சக்கரத்தில் தங்குகிறது. பிறகு அது தனி மனித உடலையும் மனத்தையும் இயக்குகிறது. "சக்தி" கீழ்நிலை மையத்தில் தங்கி உடலையும் மனத்தையும் இயக்கும் வரை முரண்பாடுகள் மேலோங்கியுள்ளன. அதுவரை அவரை ஒரு வகை மயக்கம் ஆட்டிப் படைக்கிறது. ஆனால் படிப்படியாக சக்தி மேலேறி உச்சச் சக்கரத்தை அடைந்து புருஷனோடு மீண்டும் இணைகிறது. அந்த

நிலையில் ஒருவர் நிர்விகல்ப சமாதியை எய்துகிறார். சக்தியும் புருஷனும் இணைந்த நிலையில் மனமும், சித்தமும் கூட (மனக்கோப்பும்) இணைகின்றன. அதன்பின்னர் தன்னில் தானான உயிர்ச்சார மகாசமுத்திரம் மட்டுமே உள்ளது.

**சனிக்கிழமை, 26, செப்டம்பர், 1936.**

103. **மரணம் என்பது உருவ மாற்றந்தான். மரணத்தில் உயிர்ச்சக்தியோ, உடலைச் சார்ந்த பஞ்சேந்திரியங்களோ மாற்றம் பெறுவதில்லை.**

**தெளிவுரை:-**

மரணம் என்பது உருவ மாற்றமே. உடல் மட்டுந்தான் மாறுதலடைகிறது. உடல் அழியும் போது ஜீவன், மனம், புத்தி, அகந்தை, உடலை உருவாக்கும் பஞ்சேந்திரியங்கள் ஆகியவை அழிவதில்லை. இவை எல்லாமே அவைகளுக்கான காரண உருவில் அப்படியே உள்ளன.

**வியாழக்கிழமை, 15, அக்டோபர், 1936.**

104. **ஒன்றே ஆன பேருண்மையை மனித குலம் அறியாமையினால் பல்வேறு உருவங்களாகக் காண்கிறது. அவர்களுக்கு ஒன்று பலவாகத் தோன்றுகிறது. பரம் பொருள் ஒன்றேதான். இரண்டாவது அற்ற ஒன்றே ஒன்று! பக்தன் இந்த பரம்பொருளைக் கடவுள் என்கிறான். ஞானி பிரமம் என்கிறான். சாக்தன் சக்தி என்கிறான். வேதாந்தி பரமாத்மா (மேலான பரம்பொருள்) என்றழைக்கிறான். பகுத்தறிவாளன் "இயற்கை" என்கிறான். விஞ்ஞானி இதை "ஆற்றல்" அல்லது "சக்தி" என்கிறான். கிறித்துவன் "சொர்க்கத்தின் தந்தை" என்கிறான். முகம்மதியன் அதை "அல்லா" என்கிறான். வேறு சிலர் "பேருண்மை" அல்லது "முடிவற்றது" என்**

கிறார்கள். ஆனால் ஒருவர் எந்தப் பெயரிட்டு அதை அழைத்தாலும், எந்த உருவத்தில் நினைத்தாலும், மேலான பரமான்மா ஒன்றேதான். உண்மையில் கடவுளின் உண்மையான இயல்பை ஒரு எல்லைக்குள் இயங்கும் மனித மனத்தினால் கற்பனை செய்ய இயலாது. அது பெயருக்கும் உருவத்திற்கும் அப்பாற் பட்ட அகண்டாகாரப் பொருள். அது பிறப்பற்றது. வளர்ச்சி யற்றது. அழிவற்றது. மரணமற்றது. ஆண் பெண் பேதமற்றது. ஆரம்பமோ இடையோ, முடிவோ இல்லாத அதை முழுவதுமாக அறிவது இயலாது. மனித குலத்தினர் அந்த ஒன்றான பரம்பொருளை அவரவர் மனத்தூய்மைக்கும், சுவைக்கும், மனோ வளர்ச்சிக்கும், போக்கிற்கும் ஏற்ற பல்வேறு பெயர்களிலும், உருவங் களிலும் கற்பித்துக் கொள்கின்றனர். அந்த ஒரே பரம் பொருளைப் பல்வேறு பெயர்கள் உருவங்கள் மூலமாக அடைகிறார்கள். உணர்கிறார்கள். உருவமற்ற எல்லை யற்ற பரம்பொருளை சுயரூபத்தில் காண முடியாது. நினைவில் நிறுத்த வேண்டுமானால் அதற்கு ஒரு குறிப்பிட்ட உருவம் தரப்பட வேண்டும். ஆகவே ஒரு சாதாரணன் எல்லையற்றவரை அல்லது கடவுளை பல்வேறு பெயர்கள் உருவங்கள் மூலமாக அடைகிறான். ஒருவர் எந்தப் பெயரை எடுத்துக்கொண்டாலும், எந்த உருவத்தை நினைத்தாலும் அதை அடைய உண்மை, பொறுமை, விடாமுயற்சி, அவசியம். பாதைகள் மாறலாம். பெயர்களும் உருவங்களும் மாறலாம். ஆனால் முடிவான பேருண்மையை அடையுமிடம் ஒன்றேதான்.

**வெள்ளிக்கிழமை, 16, அக்டோபர், 1936**

105. **காலம், வெளி, மூலத்தின் கருத்து மனத்தில்தான் உறைகிறது. உயிரில் அல்ல.**

**தெளிவுரை:-**

காலம், வெளி, மூலம் மனத்தோடு கூடவே உதிக்கின்றன. மனத்தில் உறைகின்றன. மனத்தோடு கூடவே மறைகின்றன, மயக்கம், ஆழ்ந்த உறக்கம், போதைநிலை, சமாதிநிலை ஆகிய சமயங்களில் ஒருவனுக்கு காலம், வெளி, மூலம் எதுவுமே தெரிவதில்லை. இவைகளின் விளக்கம் விழிப்புநிலை, கனவு நிலையில் மட்டுமே தோன்றுகிறது. உயிரின் தன்மை மனத்திற்கு எட்டாதது. காலம், வெளி, மூலம் ஆகியவற்றின் தோற்றம் மனத்தில் மட்டுமே உறைவது. அவை உயிரை எட்ட முடியாது.

**சனிக்கிழமை, 17, அக்டோபர், 1936.**

106, ***காலம், வெளி, மூலத்தின் தோற்றங்கள் பலதரப் பட்ட உயிர்கள், மனநிலைகளுக்கேற்ப மாறுபடுகின்றன.***

**தெளிவுரை:-**

காலம், வெளி, மூலத்தின் தோற்றங்கள் பலதரப் பட்ட உயிர்கள், மனநிலைகளுக்கு ஏற்ப மாறுபடுகின்றன. காலம், வெளி, மூலத்தின் தோற்றங்களுக்கான விழிப்பு நிலைக் கற்பனை, கனவு நிலைக்கற்பனையிலிருந்து மாறு படுகிறது. இந்தத் தோற்ற நிலைகள் துக்கத்திலும், மகிழ்ச்சியிலும் வேறுபடுகின்றன. பலதரப்பட்ட வாழ் வின் எல்லைகளிலும்கூட இவைகளின் தோற்றமும் கற்பனையும் மாறுபடுகின்றன. மனிதனின் ஒரு நிமிட காலம் புழு, பூச்சிகளுக்கு பல வருடங்கள். கடவுளின் ஒரு நாள் மனிதனுக்கு ஒரு நூற்றாண்டு. எனவே காலம், வெளி, மூலத்தின் தோற்றம் எப்போதும் ஓரே மாதிரி இருப்பதில்லை.

**புதன்கிழமை, 28, அக்டோபர், 1936,**

107. ***உயரிய ஆன்மிகத் தளத்தில் பரமான்மா அல்லது தன்னில்தானாக உள்ள உயிர் உறைகிறது. அந்த நிலையில் எல்லா பேதங்களும், பாகுபாடுகளும் மறைகின்றன. உயரிய நிலையை எய்துவதற்கு முன்னர் மட்டுமே பேதங்கள் இருக்கின்றன.***

**தெளிவுரை:-**

*நிர்விகல்பசமாதி நிலையில் தன்னில்தானாக உள்ள உயிர் அல்லது தன்னில்தானான உயிர்ச்சார மகாசமுத்திரம் உள்ளது. அப்போது. இரண்டாவதற்கு இடமே இல்லை. அந்நிலையில் இடம், பொருள் விவரங்களின் தோற்றம் மறைந்து போகின்றன. பேதங்களும் பாகுபாடுகளும் நிர்விகல்பசமாதியை எய்துவதற்கு முன்புள்ள கீழ் நிலைத்தளங்களில் காணப்படுகின்றன. சமாதிநிலையில் இருப்பதில்லை.*

**புதன்கிழமை, 28, அக்டோபர், 1936.**

108. ***அன்பு உங்களை உயர்த்துகிறது. வெறுப்பு அழிக்கிறது. எல்லோரையும் நேசியுங்கள் - யாரையும் வெறுக்காதீர்கள்!***

**தெளிவுரை:-**

*ஒவ்வொரு எண்ணமும் சக்தி வாய்ந்தது. ஒவ்வொரு எண்ணத்தின் போதும் ஒருவர் அவர் மனத்திலிருந்து குறிப்பிட்ட அளவுள்ள சக்தியை வெளியே அனுப்புகிறார். விண்வெளி இதுபோன்ற எண்ண அலைகளால் நிரப்பப்பட்டுள்ளன. ஒருவர் எதையுமே நினைக்காமலிருந்தால் அவர் தன் மனத்துக்குள் எண்ண அலைகள் புகுவதற்கு இடமளிப்பது இல்லை. அவருடைய நிலை*

மூடிய அறைக்குள் வசிப்பவரின் நிலைக்கு ஒப்பானது. ஆனால் ஒன்றை நினைத்ததும் அவர் குறிப்பிட்ட அளவு சக்தியை வெளியே அனுப்புகிறார். அதே சமயம் அவருடைய மனத்துக்குள் வெளிப்புற எண்ண அலைகள் வந்து புகுவதற்கு இடமளித்து விடுகிறார். நல்ல, கண்ணியமிக்க பரந்த எண்ணங்களை நினைப்பதன் மூலம் ஒருவர் நல்ல எண்ண அலைகளை வெளியில் பரவ விடுகிறார். அந்த அலைகள் வெளியில் பரவி யார் இதே போன்று எண்ணுகிறார்களோ அவர்களுக்கு உதவுகிறது. அதே வேகத்தில் பரவெளியில் பரவியிருக்கும் இது போன்ற சிறந்த எண்ண அலைகள் எண்ணியவரின் மனத்தில் நுழைந்து அவரை உயர்த்துகிறது. ஒரு நல்ல எண்ணத்தை அனுப்புவதனால் நீங்கள் இதே மாதிரி எண்ணங் கொள்ளும் அனேகருக்கு உதவுகிறீர்கள். நீங்களும் பயனடைகிறீர்கள். அதேபோல் சூதும் வாதும் நிறைந்த எண்ணங்களை அனுப்பினால் அது பலரை வேதனைக் குள்ளாக்குகிறது. அதே சமயம் அது உங்களையும் பாதிக்கிறது. அன்பு உங்களை உயர்த்துகிறது. வெறுப்பு அழிக்கிறது. ஆகவே எல்லோரிடமும் அன்பு பாராட்டுங்கள். யாரையும் வெறுக்காதீர்கள்.

**திங்கட்கிழமை, 9, நவம்பர், 1936.**

109. **பயத்துக்கும், பலவீனத்திற்கும் அறியாமையே காரணம். நன்மை - தீமை, ஒழுக்கம் - ஒழுக்கமின்மை, துன்பம் - மகிழ்ச்சி போன்றவையும் அறியாமையால் விளைவதே. பகுத்தறிவினால்தான் இவற்றை விரட்ட வேண்டும்.**

**தெளிவுரை:-**

பயமும் பலவீனமும் அறியாமையின் வெளிப்பாடுகள். ஒருவருக்கு பேதங்கள் உண்டாகும் போது

இவை உதிக்கின்றன. அறிவு மங்கும்போது அவர் ஒற்றுமையில் வேற்றுமையைக் காண்கிறார். முரண் பாடுகளையே காண்கிறார். அறிவு ஆட்சி செய்யும் போது அறியாமை சிதறுகிறது. அறியாமை மறைந்ததும், பயம், பலவீனம், முரண்பட்ட எல்லாவித எண்ணங்களும் மறைந்து போகின்றன. அந்த நிலையில் மட்டுமே ஒருமைப்பாட்டைக் காண்கிறார்.

**செவ்வாய்கிழமை, 10, நவம்பர், 1936.**

110. ***அத்வைதம் (ஒன்றான நிலை) நேருக்கு நேர் நின்று போரிடுவதைப் போன்றது. விசிஷ்ட அத்வைதமும் (வரையறைப்படுத்திய ஒருமை நிலை), துவைதமும் (இருநிலை) மறைந்து நின்று தாக்கும் நவீன போரைப் போன்றவை.***

**தெளிவுரை:-**

உடலும் உள்ளமும் பலவீனமாக உள்ள ஒருவன் (பயங்காளியும் கோழையும்) ஒரு போர் வீரனாக முடியாது. சிறிதளவே பயிற்சி பெற்ற போர் வீரன் மறைந்து தாக்கும் உத்தி பயின்ற போராளியாகலாம். ஆனால் நன்றாகப் பயிற்சி பெற்ற போர்வீரன், அதாவது போரில் வல்லவன் நேருக்கு நேர் நின்று போரிடத் தயங்க மாட்டான். இத்தகைய யுத்தம் மிக்க துணிவும் திறமையும் கொண்டதாகும். இதே போல் யார் வேண்டு மாயினும், எல்லோராலும் சமயப் பயிற்சியைக் கையாள முடியாது. தூய்மையும், உறுதியும் உடையவர்களால் மட்டுமே சுயக் கட்டுப்பாட்டுடன் கூடிய விரத வாழ்க்கையை மேற்கொள்ள முடியும். மேலும் சமய வாழ்க்கை நெடியது. சோர்வைத் தருவது. அதற்கு இடையறா முயற்சியும், பொறுமையும் இன்றியாமை

யாதவை. பேருண்மையைக் காண விரும்பும் ஒவ்வொரு ஆன்மிகவாதியும் ஆபத்தின்றி துவைதம், விசிஷ்டாத்வைதம் பாதைகளைக் கடைப்பிடிக்கலாம். ஆனால் அத்வைத வழியை மேற்கொள்பவர்கள் மனம், உள்ளத்தின் தூய்மையைப் பெற வேண்டும். புலன்கள் மனம் மீதான உறுதியான கட்டுப்பாட்டைக் கொண்டுவர வேண்டும். பகுத்தறிவின் ஆற்றலை வளர்த்துக் கொண்டு புத்திக் கூர்மையுடன் செயல்பட வேண்டும். இப்பண்புகளின்றி ஒருவர் அத்வைதப் பாதையில் ஆன்மிகம் பயின்று முன்னேற முடியாது. அத்வைதம் நேருக்கு நேர் போரிடுவதைப் போன்றது. துவைதமும், விசிஷ்டாத்துவைதமும் மறைந்து நின்று தாக்குவதைப் போன்றது.

**செவ்வாய்க்கிழமை, 17, நவம்பர், 1936.**

111. ***வாசமில்லாத மலர், பண்பு இல்லாத அழகு, ஆட்சி அற்ற அரசன், குழந்தை இல்லாத வீடு, மகான் இல்லாத தேசம், தியாகமற்ற சந்நியாசம், பேரானந்தம் அற்ற சொர்க்கத்தைப் போன்றவை.***

**தெளிவுரை:-**

சொர்க்கம் பேரானந்த பூமி. மகிழ்ச்சி இல்லையேல் அது சொர்க்க பூமி ஆகாது. அவ்வாறு ஒன்று இருக்குமாயின் அது கேவலமானது. உபயோகமில்லாதது. ஒரு மலர் அழகாக இருக்கலாம். ஆனால் அதில் வாசனை இல்லையானால் அதற்கு மதிப்பில்லை. அழகைவிட அடக்கம் அதிக மதிப்புடையது. ஒரு ஆண் அல்லது பெண் மிக அழகாக இருக்கலாம். ஆனால் அவன் அல்லது அவளுடைய அழகில் இனிமையையும், உயர்வையும் இழந்து அவனோ அவளோ ஒழுங்கீனர்களாகிவிடுவர். அரசுரிமையும் அதிகாரமும் இல்லாத அரசன் பெயருக்கு மட்டுமே அரசன். அந்தப் பதவிக்கு

அர்த்தமில்லை. குழந்தை இல்லாத வீடு சோலை இழந்து பாலைவனம் போல் காட்சி அளிக்கும். ஒரு தேசத்தின் செழிப்புக்கு ஒரு மகானின் அருள் இன்றியாமையாதது. ஒரு மகான் பல்வேறு வழிகளால் தேசத்தைப் பாதுகாக்கிறார். தேர்ந்த ஞானியின் பாதுகாப்பை இழந்த நாடு ஆபத்துகளுக்குள்ளாகிறது. ஒரு சந்நியாசி (துறவி) பந்தங்களை உதறியவனாக இருக்க வேண்டும். பந்தபாசங்களைத் துறக்காத சந்நியாசம் பொருளற்றது.

**ஞாயிற்றுக்கிழமை, 22, நவம்பர், 1936.**

**112. கண்டனம், பாராட்டு ஆகிய இரண்டுமே பாபக் கிருத்தியம்.**

***அன்பு வளர்ப்பது; வெறுப்பு வெட்டுவது இரண்டுமே பயனை அளிக்காது.***

**தெளிவுரை:-**

ஒருவன் ஒரு ஆண் அல்லது பெண்ணை உள்ளார்ந்த அன்புடன் நேசிக்கும்போது அவன் நேசிப்பவரின் மேல் பாசத்தை வளர்த்துக் கொள்கிறான். எனவே பகுத்தறியுந்தன்மையை இழக்கிறான். அதனால் அவன் விருப்பங் கொண்டவளிடம் உள்ள தவறுகளை உணராத அளவுக்கு குருடனாகி விடுகிறான். அவன் அவள் மீது கொண்டுள்ள அன்பின் காரணமாக அவளிடமுள்ள குற்றங் குறைகளையும் நல்லவைகளாகப் பாராட்டுமளவுக்குப் போய்விடுகிறான். மேலும் ஒருவனைப் பற்றிய உண்மையை உணராமலேயே மக்கள் அவனை அடிக்கடி புகழ்கிறார்கள். பிரச்சாரத்தின் பால் கவரப்பட்டு அளவுக்கு மீறிப் புகழ்கிறார்கள். அவ்வாறான வெறும் பிரச்சாரத்தினால் ஒருவர் பொய் புரட்டுக்கு ஆளாகிப் பாபத்தை ஏற்கிறார். ஒரு ஆண் அல்லது பெண்ணை ஒருவன் வெறுக்கும் போது வெறுக்

கப்பட்டவரிடமுள்ள நற்பண்புகளையும் கெட்டவை களாக்கித் திரித்துக் கூறுகிறான். அப்படிப்பட்டவன் வெறுக்கப்பட்டவரிடம் உள்ள நல்ல மதிப்பு மிக்க செயல்களை பலவீனங்களாக்கிப் பெரிதுபடுத்துகிறான். அதனால் அவன் தன்னால் வெறுக்கப்பட்டவனிடம் உள்ள நற்பண்புகளைக் காணத் தவறி விடுகிறான். பொய்ப்பிரச்சாரம் செய்கிறான். அதனால் பாபம் வந்து சேருகிறது. கண்டனம், பாராட்டு இரண்டுமே இருவேறு மிகைகள், அவை ஒருதலைப்பட்சமானவை. பாபச் செயல்கள், இரண்டுமே ஒருவனைத் தரம் குறைத்துவிடும். தாழ்த்தி விடும். நேர்மையானவன் உண்மைகளைச் சரி வரக் காண்கிறான். மற்ற மனிதர்களையும் பொருள் களையும் நன்றாக எடைபோட்டு மதிப்பீடு செய்கிறான்.

**ஞாயிற்றுக்கிழமை, 22, நவம்பர், 1936.**

113. **வைராக்கியம் (துறவு) இருவகை. அதாவது உள்ளும், புறமுமானது. ஆன்மப் பயிற்சிக்கு இரண்டுமே இன்றி யமையாதவை. அது போலவே தியாக உள்ளம் அல்லது வைராக்கியம் வெளிப்புறத் தியாகத்தைவிட மிக முக்கிய மானது.**

**தெளிவுரை:-**

துறவு இரு வகைப்படும். உள்ளும் புறமுமானது அவை. வீடு வாசல், தந்தை தாய், உற்றார், உறவினர் அனைத்தையும் அறவே விடுத்து தேவைகளைக் குறைத்துக் கொண்டு, தனிமையில் கிடைப்பதைக் கொண்டு திருப்தியுடன் வாழ்வதே வெளிப்புறத் துறவு. இவ்வகைத் துறவு உள்ளத்தால் துறந்து வாழும் வைராக்கியத்தை விடச் சுலபமானது. ஒருவர் வெளித் தொடர்புகளை அறவே துண்டித்துக் கொள்ளலாம். ஆனால் அதே நபர் உள்ளத்தில் நிறைவேறாத ஆசை

களாலும், எண்ணங்களினாலலும் நிம்மதியற்று இருப்பார். இந்தச் சூக்கும ஆசைகளும், எண்ணங்களும் தம்மையும றியாமல் ஒருவரை நாளாவட்டத்தில் புலன் போகங்களில் கொண்டு சேர்த்துவிடும். உள்ளத்தால் ஒன்றை விடுவதே உண்மையான துறவு. மனத்தளவில் துறப்பதற்கு மிகுந்த துணிவும் வலிமையும் வேண்டும். புலன்களையும், மனத்தையும் கட்டுப்படுத்த வேண்டும். இது உண்மையில் ஒரு கடினமான போராட்டமாகும். உள்ளார்ந்த துறவு பழகாமல் வெளிப் புறத் தியாகத்தைப் பயில்வது ஆபத்தானது. அழிவில் கொண்டு சேர்த்து விடும். மாறாக ஒருவன் உள்ளத்தால் தியாகம் (பற்றுக்களைத் துறத்தல்) செய்யும் போது பலவகை புலன்போகப் பொருட்களின் மத்தியில் ஒருவிதப் பாதிப்பும், பற்றும், பயமும் இன்றி வாழலாம்.

**திங்கட்கிழமை, 23, நவம்பர், 1936**

114. **வேலை வேலைக்காகவே, அன்பு அன்புக்காகவே, ஞானம் ஞானத்திற்காகவே, வழிபாடு வழிபாட்டிற்கே. தியானம் தியானத்திற்கே! எனில் ஆன்மிகத்தில் மிக உன்னதமான பயனைப் பெறலாம்.**

**தெளிவுரை:-**

பற்று, ஆசை, பயனை எதிர்பார்த்தல் அனைத்துமே ஒருவருடைய அமைதியைக் குலைத்து இந்த அகிலத்தில் துன்பம், வேதனை, அடிமைத்தனத்தை உண்டாக்குகிறது. திடநம்பிக்கையுடன் மனநிறைவோடு பற்றற்று பயனை எதிர்பாராது செய்யும் வேலைக்கு மிக உன்னதமான பயன்கிட்டும். உண்மையான அன்பிற்கு பயமோ, வெறுப்போ, பிரதிபலனோ தெரியாது. ஒரு உண்மை யான காதலன் அவன் காதலியை இதயபூர்வமாக தான் ஏன் அவ்வாறு அன்பு செலுத்துகிறோம் என்கிற

பிரக்ஞையே இல்லாமல் எதையுமே எதிர்பாராமல் காதலிக்கிறான். அது போன்ற அன்பின்பாற்பட்ட காதல் எப்போதும் பெருமைப் படத்தக்க மேன்மையான பலனைத் தருகிறது. ஞானம் இரு வகைப்பட்டவை. கீழ்நிலை; மேல்நிலை! கீழ்நிலை ஞானத்தைக் கொண்டு மேல்நிலை ஞானத்தை (தெய்வீக ஞானம்) அளிக்கிறது. ஒருவர் புத்தகங்கள் மூலமாகவும், ஆசான்கள் மூலமாகவும் பெறுவது கீழ்நிலை ஞானம். கீழ்நிலை ஞானத்தைப் பெற்றவுடன் ஒருவர் பெருமிதத்துடன் அகம்பாவம் கொள்ளக்கூடாது. மாறாக ஒருவர் அடக்கத்தைப் பயின்று, அகந்தையை அடக்கி எவ்வித பலனையும் எதிர்பாராமல் உயர்ந்த மேன்மையான கொள்கைக்காகத் தன் அறிவைப் பயன்படுத்த வேண்டும் அதாவது பெயர், புகழை ஈட்டவேண்டுமென்ற அவாவை உதறித்தள்ள வேண்டும். அது போன்ற ஞானம் துரிதப் பயனை அளிக்கின்றது. முன்பே சொல்லியபடி கடவுளிடம் பயனை எதிர்பாராது சரணடைந்து இடைவிடாது செய்யும் பிரார்த்தனை உயரிய தன்மையுடையது. இது போன்ற பிரார்த்தனை தன்னலமற்றது. சிறந்தது. உயர்ந்தது, இது போன்ற பிரார்த்தனை ஒருமனிதனுக்கு உயரிய வரங்களை நல்குகிறது. மனம் எப்போதும் சலித்துக் கொண்டே இருப்பது, தியானத்தின் போது எளிதாக ஒருமைப்படும் விளைவை அளிக்கிறது. ஆனால் எதிர்விளைவின் போது மனக் கட்டுப்பாட்டை இழக்கிறார். வெறுப்பு மேலிடுகிறது. பொறுமையை இழக்கிறார். அடியோடு தியானத்தை விட்டு விடும் அளவுக்குப் போகிறார். அதனால் தனது சாதனையையே கெடுத்துக் கொள்கிறார். அவர் பொறுமையையும், விடாமுயற்சியையும் கடைப்பிடிக்க

களாலும், எண்ணங்களினாலலும் நிம்மதியற்று இருப்பார். இந்தச் சூக்கும ஆசைகளும், எண்ணங்களும் தம்மையும அறியாமல் ஒருவரை நாளாவட்டத்தில் புலன் போகங்களில் கொண்டு சேர்த்துவிடும். உள்ளத்தால் ஒன்றை விடுவதே உண்மையான துறவு. மனத்தளவில் துறப்பதற்கு மிகுந்த துணிவும் வலிமையும் வேண்டும். புலன்களையும், மனத்தையும் கட்டுப்படுத்த வேண்டும். இது உண்மையில் ஒரு கடினமான போராட்டமாகும். உள்ளார்ந்த துறவு பழகாமல் வெளிப் புறத் தியாகத்தைப் பயில்வது ஆபத்தானது. அழிவில் கொண்டு சேர்த்து விடும். மாறாக ஒருவன் உள்ளத்தால் தியாகம் (பற்றுக்களைத் துறத்தல்) செய்யும் போது பலவகை புலன்போகப் பொருட்களின் மத்தியில் ஒருவிதப் பாதிப்பும், பற்றும், பயமும் இன்றி வாழலாம்.

**திங்கட்கிழமை, 23, நவம்பர், 1936**

114. ***வேலை வேலைக்காகவே, அன்பு அன்புக்காகவே, ஞானம் ஞானத்திற்காகவே, வழிபாடு வழிபாட்டிற்கே. தியானம் தியானத்திற்கே! எனில் ஆன்மிகத்தில் மிக உன்னதமான பயனைப் பெறலாம்.***

**தெளிவுரை:-**

பற்று, ஆசை, பயனை எதிர்பார்த்தல் அனைத்துமே ஒருவருடைய அமைதியைக் குலைத்து இந்த அகிலத்தில் துன்பம், வேதனை, அடிமைத்தனத்தை, உண்டாக்குகிறது. திடநம்பிக்கையுடன் மனநிறைவோடு பற்றற்று பயனை எதிர்பாராது செய்யும் வேலைக்கு மிக உன்னதமான பயன்கிட்டும். உண்மையான அன்பிற்கு பயமோ, வெறுப்போ, பிரதிபலனோ தெரியாது. ஒரு உண்மையான காதலன் அவன் காதலியை இதயபூர்வமாக தான் ஏன் அவ்வாறு அன்பு செலுத்துகிறோம் என்கிற

பிரக்ஞையே இல்லாமல் எதையுமே எதிர்பாராமல் காதலிக்கிறான். அது போன்ற அன்பின்பாற்பட்ட காதல் எப்போதும் பெருமைப் படத்தக்க மேன்மையான பலனைத் தருகிறது. ஞானம் இரு வகைப்பட்டவை. கீழ்நிலை; மேல்நிலை! கீழ்நிலை ஞானத்தைக் கொண்டு மேல்நிலை ஞானத்தை (தெய்வீக ஞானம்) அளிக்கிறது. ஒருவர் புத்தகங்கள் மூலமாகவும், ஆசான்கள் மூலமாகவும் பெறுவது கீழ்நிலை ஞானம். கீழ்நிலை ஞானத்தைப் பெற்றவுடன் ஒருவர் பெருமிதத்துடன் அகம்பாவம் கொள்ளக்கூடாது. மாறாக ஒருவர் அடக்கத்தைப் பயின்று, அகந்தையை அடக்கி எவ்வித பலனையும் எதிர்பாராமல் உயர்ந்த மேன்மையான கொள்கைக்காகத் தன் அறிவைப் பயன்படுத்த வேண்டும். அதாவது பெயர், புகழை ஈட்டவேண்டுமென்ற அவாவை உதறித்தள்ள வேண்டும். அது போன்ற ஞானம் துரிதப் பயனை அளிக்கின்றது. முன்பே சொல்லியபடி கடவுளிடம் பயனை எதிர்பாராது சரணடைந்து இடைவிடாது செய்யும் பிரார்த்தனை உயரிய தன்மையுடையது. இது போன்ற பிரார்த்தனை தன்னலமற்றது. சிறந்தது. உயர்ந்தது, இது போன்ற பிரார்த்தனை ஒருமனிதனுக்கு உயரிய வரங்களை நல்குகிறது. மனம் எப்போதும் சலித்துக் கொண்டே இருப்பது, தியானத்தின் போது எளிதாக ஒருமைப்படும் விளைவை அளிக்கிறது. ஆனால் எதிர்விளைவின் போது மனக் கட்டுப்பாட்டை இழக்கிறார். வெறுப்பு மேலிடுகிறது. பொறுமையை இழக்கிறார். அடியோடு தியானத்தை விட்டு விடும் அளவுக்குப் போகிறார். அதனால் தனது சாதனையையே கெடுத்துக் கொள்கிறார். அவர் பொறுமையையும், விடாமுயற்சியையும் கடைப்பிடிக்க

வேண்டும். தொடர்ந்து எந்தப் பயனையும் எதிர் பாராமல் சாதனையை (தியானத்தை)ச் செய்யவேண்டும். அத்தகைய தியானம் மன நிம்மதியைத் தந்து சாதனையின் உயர்வுக்கு உதவுகிறது.

செவ்வாய்க்கிழமை, 24, நவம்பர், 1936.

115. ***துவைதக் கடவுளை கடந்தகால அரசனுக்கு ஒப்பிடலாம். விசிஷ்டாத்வைதத் தெய்வத்தை கடந்தகால, தற்காலச் சக்கரவர்த்திகளுக்குச் சமமாகச் சொல்லலாம். அத்வைதத்தைத் தற்கால குடியரசுத் தலைமைக்கு ஒப்பிடலாம்.***

**தெளிவுரை:-**

தொன்மையான காலத்தில் அரசர்களும், சக்கரவர்த்திகளும் மிகவும் அதிகாரம் உள்ளவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய ஆட்சியில் எதை வேண்டுமாயினும், எப்படி வேண்டுமாயினும் செய்யலாம். யாருமே அவர்களிடம் எதையுமே கேட்க முடியாது. மக்களுக்கு அரசாட்சியின் நிர்வாகத்தில் எவ்வித உரிமையும் கிடையாது. ஆனபோதிலும் நவீன அரசர்களும், சக்கரவர்த்திகளும் அவர்களுடைய பட்டங்களைத் தக்க வைத்துக் கொண்டிருந்தாலும் அவர்களின் ஆட்சி - அதிகாரம் மக்களால் பெருமள வுக்குக் குறைக்கப்பட்டுள்ளது. ஆனால் குடியரசு நாட்டில் அரசனுக்கோ சக்கரவர்த்திக்கோ இடமே இல்லை. அங்கே மக்களாட்சிதான். துவைதத்தில் பக்தன் அவன் வணங்கும் கடவுளுக்கு உன்னத இடத்தை அளிக்கிறான். அவன் எல்லாவித உதவிக்கும் வழிகாட்டுதலுக்கும் முழுமையாகக் கடவுளையே நம்பு

கிறான். விசிஷ்ட - அத்வைதத்தில் பக்தன் தான் வணங்கும் தெய்வத்தைப் போற்றினாலும் தானும் அந்தக் கடவுளைச் சார்ந்தவனே என நினைக்கிறான். அவனுக்கும் அவன் வணங்கும் தெய்வத்துக்கும் இடையே அதிக இடைவெளி காண்பதில்லை. விசிஷ்ட- அத்வைதத் தெய்வம் இன்றைய அரசனைப் போல் பெரும் பகுதி அதிகாரமற்று உள்ளார். அத்வைதம் குடியரசு நாட்டைப் போன்றது அங்கே அரசனுக்கோ சக்கரவர்த்திக்கோ இடமில்லை. திறமையுள்ள ஒரு தனி மனிதன் நாட்டை பரிபாலிக்க தேர்ந்தெடுக்கப்படுகிறான். அதேபோல் அத்வைதத்தைப் பயிலுபவன் பிரம்மத்தையே (பரமான்மாவை) பற்றிக் கொள்கிறான். தன்னைப் பிரம்மமாகவே கருதுகிறான். கடவுள் எனும் தனித்தன்மைக்கே இடமளிப்பதில்லை. அவன் தன் ஆன்மாவே பிரம்மம் எனும் இடையறாத கருத்தில் திளைத்திருக்கிறான். அவன் எப்போதும் பிரம்மானந்தத்திலேயே மூழ்கி இருக்கிறான்.

**செவ்வாய்க்கிழமை, 1, டிசம்பர், 1936**

**116. உலகாயத மனிதனும், ஞானியும் முறையே தலைப் பிரட்டைக்கும் (தவளைக் குஞ்சுக்கும்), தவளைக்கும் ஒப்பாவர்.**

**தெளிவுரை:-**

தலைப்பிரட்டை தண்ணீரில் மட்டுமே வாழ முடியும். அதை த்தண்ணீரிலிருந்து வெளியேற்றியதும் அது இறந்து விடும். ஆனால் தவளை தண்ணீரில் வாழ்வதைப் போலவே தரையிலும் எவ்வித இடர்ப்பாடும் இல்லாமல் உயிருடன் இருக்கும். உலகாயத மனிதன் புலன் பொருள்கள், புலன் போகங்களிடையே மகிழ்ச்சியோடு வசிக்கிறான். இவைகளின்றி அவனால்

வாழ முடியாது. சாதாரண மனிதனுக்குப் புலன்கள் போகங்கள் இல்லாமல் வாழ முடியாது. ஆகவே உலகாயத மனிதன் தலைப்பிரட்டையைப் போன்றவன். தலைப்பிரட்டை தண்ணீரில் மட்டுந்தான் வாழும். ஆனால் துறவி தவளையைப் போன்றவர். அது தண்ணீரில் வாழும். ஆனால் அதன் உடலில் ஈரம் ஒட்டாது. ஒரு துறவி புலன்கள், புலன் பொருட்களில் எவ்விதப் பற்றுமின்றி உலகில் வாழ்கிறார். அவர் நினைத்த மாத்திரத்தில் உலகத்தை விட்டுவிட இயலும். தன் உடல், புலன்களை மறந்து மனத்தை உயரிய நிலைத்தளங்களுக்கு எடுத்துச் சென்று எல்லையில்லா பரவெளியில் கலந்துவிட இயலும்.

**செவ்வாய்க்கிழமை, 1, டிசம்பர், 1936**

117. ***பல்வேறு செயல்களைப் புரிந்து பலதரப்பட்ட பெயர்களைப் பெறுவது ஒரே மனந்தான். மனமே எல்லாப் புலன்களையும் செயல்பட வைக்கிறது.***

**தெளிவுரை:-**

மனம் அதற்கான உயிரையும் ஒளியையும் ஆன்மாவிலிருந்து பெறுகிறது. ஆன்மா அதன் கருவியான மனத்தின் மூலம் உலகத்தை அறிகின்றது. மனம் ஐம்புலன்களின் மூலம் உலகத்தைப் புரிந்து கொள்கிறது. மனம் புலன்களுடன் இணைக்கப்படாதவரை புலன்கள் தாமாகவே செயல்படுவதில்லை. உண்மையில் மனமே எல்லாப் புலன்களையும் செயல்படுத்துகிறது. மனத்தின் உதவியின்றிப் புலன்கள் தாமாகவே இயங்கக் கூடுமெனில் மனம் ஆன்மாவில் ஒன்றும் ஆழ்ந்த உறக்கத்தின்போது அவை செயல்பட வேண்டும். ஆனால் ஆழ்ந்த உறக்க

நிலையில் எந்த ஒரு புலனுமே இயங்குவதில்லை என்பது நாம் அறிந்த ஒன்று. ஐந்து தூல, சூக்குமப் புலன்களை இயக்கும்போது மனத்தை புலன்களின் பல்வேறு பெயர்களாலேயே அழைக்கிறோம். மனமானது உடல், புலன்களோடு சேர்ந்த ஒன்று எனத் தன்னை நினைக்கும் போது அதை "அகந்தை" என்கிறோம். மனமே ஆசையாகவும், எண்ணமாகவும் இயங்குகிறது. தூல உடலை இயங்கச் செய்யவும், இயங்காமலிருக்கச் செய்யவும் உந்தும் சக்திக்கு உள்ளுணர்வின் ஆற்றல் என்று பெயர். மனம் ஒன்றைப் பகுத்தறிந்து, முடிவெடுத்து விவரத்தைத் தெரிவிக்கும்போது அதற்குப் புத்தி என்று பெயர். மனம் பல பொருள்கள், இடங்கள், சம்பவங்கள், நிகழ்ச்சிகள் போன்றவற்றைச் சேகரித்து அதன் அனுபவங்களைச் சேர்த்து வைக்கும்போது அது "நினைவாற்றல்" எனப்படுகிறது.

மனம் நினைவாற்றலை மூவகை வெவ்வேறு தளங்களில் பதிய வைக்கிறது. அதாவது நினைவு நிலைத் தளம், நினைவு கூட்டும் நிலைத்தளம், மறதிநிலைத் தளம் ஆகும். இந்த மூவகை நிலைத்தளங்களுமே (மூலாதாரச் சக்கரத்திலுள்ள) சித்தத்தில் (மனக்கோப்பில்) இருக்கிறது. மனம் இதய மையத்தில் ஆசை, உள்ளுணர்வு, அகந்தை போன்ற நிலைகளில் இயங்குகிறது. அது மூளை மையத்தில் எண்ணம், புத்தி, அறிதல் போன்ற நிலைகளைப் பெறுகிறது. அது மூளை மையத்தில் எண்ணங்களின் சூக்கும உருவங்களைப் படம்போட்டுக் காட்டுகிறது. அது கனவுலகக் காட்சியைக் காட்டுகிறது. கனவுலக அனுபவங்களையும் அனுபவிக்கிறது. இவ்விரண்டுமே சூக்கும உடலின் உதவியால் மூளை மையத்தில் பிரதிபலிக்கிறது.

**திங்கட்கிழமை, 7, டிசம்பர், 1936.**

**118. ஒரு மனிதனுக்கு உறையும் வீடு எப்படியோ அதே போன்றதுதான் ஆன்மா அல்லது உயிருக்கு உடல்.**

**தெளிவுரை:-**

ஒருவனுக்கு வசிப்பதற்காக வீடு அமைந்துள்ளது. அவன் அந்த வீட்டில் வசிக்கும் வரைக்கும் அதைப் பராமரித்து வைத்துக் கொள்கிறான். அந்த வீட்டை விட்டு வெளியேறியதும் அவனுக்கு அந்த வீட்டினிடத்தில் மதிப்பு இல்லை. அதை ஒதுக்கி விடுகிறான். இதே போல ஆன்மா தங்குவதற்கே உடல் உள்ளது. ஆன்மா உடலைவிட்டு நீங்கியதும் அதற்கு மதிப்பு இல்லை. அழிந்து போகிறது. உடலில் உயிர் தங்கி இருக்கும் வரைக்கும் உடலைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது அதற்குத் தக்க உணவும், பானமும் அளித்து நல்ல ஓய்வு கொடுத்துச் சுத்தமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் உடலுக்குள் உள்ள ஆன்மா மகிழ்ச்சிகரமாக அங்கே தங்க முடியாது.

**திங்கட்கிழமை, 7, டிசம்பர், 1936.**

**119. ஒரு ஞானியானவர் சத்திரத்தில் தங்கும் சுற்றுலாப் பயணியைப் போன்றவர். ஆனால் உலகாயத மனிதனோ அந்த சத்திரத்தின் சொந்தக்காரன்.**

**தெளிவுரை:-**

சுற்றுலாப் பயணம் செய்யும்போது அந்தப் பயணி ஒரு சத்திரத்திற்குச் செல்கிறான். அதிலுள்ள ஒரு அலங்கரிக்கப்பட்ட அறையில் சில நாட்கள் தங்குகிறான். அவன் மனம் கொண்ட மட்டும் அங்கே கிடைக்கும் எல்லா வசதிகளையும் மகிழ்ச்சியோடு அனுபவிக்கிறான். எந்த விதக் கவலையோ, பற்றோ இன்றித் தங்கு

கிறான். அவன் சத்திரத்தை விட்டு வெளியேறும்போது கவலையின்றி வெளியேறுகிறான். அதே போல் ஒரு ஞானி பெயரும், உருவமும் கொண்ட இவ்வுலகில் பற்றின்றி வாழ்ந்து, அதை விட்டுப் பிரியும்போது எந்தவிதப் பாதிப்புமின்றி வெளியேறுகிறார். ஆனால் உலகாயத மனிதன் சத்திரத்தின் சொந்தக்காரன். அவன் அந்தச் சத்திரக் கட்டிடத்தையும், நிர்வாகத்தையும் மிக வும் பற்றுவைத்து நிர்வகிக்கிறான். மிகுந்த கவலையுடன் அங்குள்ள பல்வேறு வேலைகளைக் கவனிக்கிறான். இவ் விதச் சொந்த பந்தத்தின் காரணமாக எப்போதும் அதைப்பற்றிய முன்னெச்சரிக்கையுடன் கூடிய ஆர்வத் தினால் தனது சொந்த சுக அனுபவங்களைக்கூட அனுப விப்பதில்லை. மாறாக இடையறாது தொல்லைகளுக்கும், துன்பங்களுக்கும், வேதனைக்கும் ஆளாகிறான்.

**திங்கட்கிழமை, 1, பிப்ரவரி, 1937**

**120. செல்வந்தர்களோ, ஏழைகளோ உண்மையான ஆன் மிகவாதிகளாக இருக்க முடியாது, நடுத்தரக் குடும்பங்களி லிருந்து மிகப் பெரிய ஆன்மிகஞானிகளும், உலக மேதை களும் தோன்றுகிறார்கள்.**

**தெளிவுரை:-**

குபேர சம்பத்து படைத்தவனும், கீழ்ப்பட்ட தரித்திரனும் இருவேறு நிலைப்பட்ட இரு துருவங்களைப் போன்றவர்கள். ஏற்கெனவே சொல்லியபடி தூய்மை, கற்பு நெறி, உண்மை போன்றவையே மதக்கோட் பாட்டுக் கட்டுமானத்தின் அடித்தளம். பணம் உலக மகாசக்தி. ஆனால் இந்தச் சக்தியை வைத்துக் கொண்டு ஒருவர் நிலை தடுமாறாமல் இருக்க முடியாது. இந்தச் சக்தி அடிக்கடி தவறாக உபயோகிக்கப்படுகிறது. அது ஒருவனுடைய அகம்பாவத்தை அதிகரிக்கச் செய்கிறது.

அவன் தக்கமுறையில் பகுத்தறிந்து முடிவெடுக்கும் மனோ ஆற்றலை இழக்கிறான். அவனைப் பலதரப்பட்ட புலன் போகங்களில் மூழ்கடித்து தீமை விளைவிக்கிறது. மிகச்சிலரே பணத்தினால் விளையும் கேடுகளிலிருந்து தப்பித்துக் குறிக்கோள் வாழ்வை மேற்கொள்ள முடியும். சந்தேகமின்றி இதற்கு விதிவிலக்காகி பெருமைப் படக்கூடியவர்கள் ஒருசிலர் உள்ளனர். ஆனால் பெரும்பாலானவர் விஷயத்தில் பணக்காரரிடையே இழுக்கடைவதையே காண்கிறோம். அப்படிப்பட்ட வறுமையும் இதே விளைவைத் தரவல்லது. எல்லா வகைக் கொடிய செயல்களைத் தூண்டச் செய்வது. இதற்கு விதிவிலக்கானவர்களும்« சிலர் உண்டு. ஆனால் பொதுவாகச் சோரம், இழிசெயல், கையாடல், திருடுதல் போன்ற குணங்களே ஏழைகளிடையே நிலவுகின்றன. பெரும்பாலான ஞானிகளும் உலகமேதைகளும் நடுத்தர வாக்கத்தினரிடமிருந்தே உதிக்கிறார்கள்.

**வெள்ளிக்கிழமை, 2, பிப்ரவரி, 1937**

121. ***கடவுளை அறியாத நிலையில் சித்து விளையாடினால் அவர் துன்பங்களுக்கு உள்ளாகிறார்.***

**தெளிவுரை:-**

*முக்கிய சித்துகள் எட்டு வகைப்படும். சின்னஞ் சிறு சித்துகள் பல உள்ளன. ஒருவன் ஆன்மீகத்தில் முன்னேறும்போது குண்டலினி சக்தி முழு அளவில் மேல் நிலைச் சக்கரங்களுக்கு ஏறிச் செல்கிறது. அப்போது அவருக்கு இந்தச் சித்திகள் கைவரப் பெறுகின்றன. இத்தகைய பல்வேறு சித்தாற்றல்கள் பல்வேறு மையங்களில் செயல்படுகின்றன. பல்வேறு சக்கரங்களுக்குச் சக்தி வந்தடையும்போது இந்தச் சித்துகள் வெளிப்படுகின்றன. ஆனால் இத்தகைய சித்தாடல்கள்*

கைவரப் பட்டதினால் ஒருவருக்கு மெய்ஞானமோ கடவுளை உணர்ந்த நிலையோ கிட்டியதாகாது. ஒரு சாதகன் (ஆன்மீகவாதி) கடவுளை உணரும் நிலை வருவதற்கு முன்பே இந்தச் சித்துக்களை வைத்து விளையாடுகிறான். நமக்கு ஐந்து தூல புலன்களும், ஐந்து சூக்குமப் புலன்களும் உள்ளன. இந்தப் புலன்களை அடக்கி ஆளாமல் கண்டவாறு ஆட்டிப் படைத்தால் அவன் அழிவைத் தேடிக் கொள்கிறான். இத்தகைய சித்துக்களின் ஆற்றல்களில் எதாவது ஒன்றை அவன் கையாள்கிறான் எனில் அவன் விரும்பியவாறு விரும்பிய போதெல்லாம் எல்லாப் புலன் போகங்களையும். அனுப விக்கிறான் என்று பொருள். அதே சமயத்தில் இந்தப் புலன் போகங்களை அவனால் மீண்டும் ஒதுக்கித்தள்ள எளிதில் இயலுவதில்லை. சாதகர்கள் இத்தகைய சித்து களை அடிக்கடி உபயோகிக்க வேண்டும் என்ற தூண்டு தலுக்கு ஆளாகிறார்கள். அவர்களுடைய ஆன்மிகப் பயிற்சியே அடியோடு. நாசமாகிறது. நரக வேதனைக் குள்ளாகிறார்கள். கடவுளை அறியாத சித்து வேலைகள் ஒரு மனிதனுக்கு துன்பத்தையே விளைவிக்கிறது.

**செவ்வாய்க்கிழமை, 2 பிப்ரவரி, 1937.**

**122 கண்டபடி கூடிப்பழகுவதால் விளைவது வம்பளப்பு, தாராளமாகப் பழகுவது, வம்பளப்பது ஆகியவற்றினால் ஏற்படும் விளைவே சலனமனமும், நிலையற்ற தன்மையும் ஆகும்.**

**தெளிவுரை:-**

மனத்திற்கு தனக்கென்றதொரு வடிவமோ நிறமோ கிடையாது. அது எண்ணத்திற்கேற்ற உருவத்தையும் நிறத்தையும் எடுத்துக் கொள்கிறது. ஆதலில் நாம் எண் ணங்களை உருவாக்கியபடியே இருக்கிறோம். நாம் என்ன

நினைக்கிறோமோ அதுவாகவே ஆகிறோம். ஒரு புதியவரிடம் நாம் தாராளமாகப் பேசுவதில்லை. ஆனால் ஒருவரோடு நாம் நெருங்கிப் பழக ஆரம்பித்து நெருக்க மான உறவு கொள்ளத் தொடங்கியதும் நாம் வம்பு பேச ஆரம்பித்து விடுகிறோம். இது போன்ற வம்பளப்புகள் மனதைச் சலனப்படுத்தி அலைக்கழிக்கிறது. நிலையற்ற மனம் நம்முடையய நிலையற்ற தன்மைக்கும் காரணமா கிறது. சிலர் பல்வேறு தரமான மனிதர்களிடம் எளிதில் கலந்து பழகுவதைச் சுபாவமாகவே வைத்திருப்பதும் உண்டு. அவர்களிடம் அதிகமாகப் பேசி விவாதிக்கும் அளவுக்கு போய்விடுவர். இத்தகைய வழக்கமுடையவர் களின் மனமும், குணமும் நிலையற்றதாகவே இருக்கும். அதாவது அவன் கலந்து பழகும் மனிதர்களிடமுள்ள நல்லதும் கெட்டதுமான குணங்கள் தாமாகவே அவனைப் பற்றிக் கொள்கிறது. அதன் விளைவே அவனை ஆட்டிப்படைக்கிறது. அதிகமாகப் பேசுவதும் நிலையற்ற மனமும் கொண்டவர்களால் ஒரு காரியத்தை உருப்படியாகச் செய்ய முடியாது. அவர்கள் பகற்கனவு காண்பவர்கள். கற்பனைக்கோட்டையைக் கட்டி வாழ்க் கையை வீணடித்துக் கொள்கிறார்கள். ஏனெனில் அவர்கள் சக்தி முழுவதையும் நீண்ட நெடிய பேச்சால் பாழடித்துக் கொள்கிறார்கள்.

**திங்கட்கிழமை, 15, பிப்ரவரி, 1937.**

123. மனிதரிடம் பூர்வாசனை கனவு நிலையிலும், விழிப்பு நிலையிலும் இயங்குகிறது. அது குழந்தைகளிடமும், வைத்தியக்காரர்களிடமும், மிருகங்களிடமுங்கூடச் செயல் படுகிறது. பகுத்தறிவு அறிவாளிகளிடம் முழுமையாகவும், சாதாரண மனிதனிடம் சிறிதளவும் வேலை செய்கிறது. அது கனவு நிலையிலுங்கூட இதே போல வேலை செய்

கிறது. அது முட்டாள்களிடமும் கீழ்த்தர உயிரினங்களி டமும் கீழ்மட்ட நிலைகளில் செயல்படுகிறது. அதனு டைய இயக்க எல்லை முட்டாள்களிடமும், சின்னஞ் சிறு குழந்தைகளிடமும், மிருகங்கள், புழு பூச்சிகளிடமும் அடிமட்டத்திலேயே நிற்கிறது. பகுத்தறியும் பாங்கு குடிகாரர்களிடமும் (போதை மயக்கத்தில் உள்ளவர்களி டமும்), பைத்தியங்களிடமும் இயக்கம் இழந்து நிற்கிறது. தெய்வீக ஞானம் முனிவர்களிடமே உள்ளது. அதாவது நிர்விகல்பசமாதி நிலை எய்திய ஞானிகளிடமே இருக்கும். தெய்வீக ஞானம் அருள் நிலை கொண்டவர்களிடம் கூட காணமுடியாது. அருளாளர் ஞானியல்ல. அவர் சாதாரண மனிதனுக்கும் ஞானிக்கும் இடைப்பட்டு நிற்பவர். அருள்நிலை குண்டலினி தலை உச்சிக்கு அரைகுறையாகச் சென்றடையும்போது அருள் வரு கிறது. தலைஉச்சிக்குக் குண்டலினி சக்தி முழுமையாக வந்தடையும் போது ஞானம் தோன்றுகிறது. ஞானம் சித்தித்தவர் வீடுபேறு பெற்றவர். ஆனால் அருளாளர் நிலை அது போன்றதல்ல. அருளாளர் பந்தத்தளைக்குட் பட்டவராகவே இருக்கிறார்.

**புதன்கிழமை, 17, பிப்ரவரி, 1937**

124. ஆன்மிகப் பாதை மிக மிக நெடியது. களைப்பை உண்டாக்குவது, சோர்வைத் தருவது. இந்தப் பாதையில் செல்ல மிகுந்த வலிமையும், துணிவும் தேவை. ஒவ்வொரு முறை வெற்றியும் (வெற்றித்துணுக்குகளும்) தன்னுடன் தோல்வியையும் பற்றி வரும். ஆனால் பொறுமையும், தோல்வியின் போது விடாமுயற்சியும் வீழ்ச்சிகளை மிதித்துக் கொண்டு முடிவான குறிக்கோளுக்குப் பத்திர மாக அழைத்துச் செல்கிறது.

**திங்கட்கிழமை, 22, பிப்ரவரி, 1937**

125. எல்லா ஆசைகள், எண்ணங்கள், உணர்ச்சிகள், புலன் செய்கைகள், பேச்சுகள் பிராண சக்தியின் பல்வேறு செயற்பாடுகள் பிராணனின் இது போன்ற செயல்கள் கட்டுப்படுத்தி மிதப்படுத்தும்போது அவை எளிதில் ஓஜஸ் சக்தியாக (மாபெரும் மனோசக்தியாக) மாற்ற மடைகிறது. இந்த ஓஜஸ்சக்தியே ஒரு மனிதனுக்கு பெருமையையும், புகழையும் தேடித் தருகிறது. அளப்பரிய ஆற்றலையும் தெளிந்த ஞானத்தையும், அறிவுக் கூர்மையையும் தருகிறது.

**ஞாயிறு, 7, மார்ச், 1937.**

126. பகுத்தறிவுத் தெளிவுக்கும், ஒன்றிய சிந்தனைக்கும் இடையே வித்தியாசம் ஏதுமில்லை. இந்த இரண்டுமே உண்மையில் ஒன்றேதான்.

**தெளிவுரை:-**

உண்மையற்றவைகளை ஒதுக்கிக் கொண்டே போய் பேருண்மையைக் கண்டு அதில் நிலைத்து விடுவதே பகுத்தறியும் பண்பு. பகுத்தறிவுத் தெளிவை எய்தியவன் மேலான பேருண்மையில் மனதை நிலை நிறுத்துகிறான். அதாவது ஒருமைப்பாட்டு மனோ நிலையை எய்துகிறான். ஆகவே பகுத்தறிவுத் தெளிவும், ஒன்றிய சிந்தனையும் ஒன்றேதான்.

**செவ்வாய்க்கிழமை, 9, மார்ச், 1937**

127. சம்சாரம் எனும் மரத்திற்கு (உலகாயத வாழ்க்கைக்கு) அறியாமையே ஆணிவேர். அறியாமையிலிருந்தே தான் எனும் நினைப்பு தோன்றுகிறது. இந்த தன் முனைப்பினால் பார்த்ததும் பார்க்காததும் அனுபவித்ததும் அனுபவிக்காததுமான பலதரப்பட்ட ஆசைகள் உண்டா

கின்றன. இத்தகைய ஆசைகளே உலகில் எல்லாத் துன்பங்கள், வேதனைகள், தொல்லைகள், அல்லல்க ளுக்குக் காரணம். ஆகவே சம்சாரம் என்கிற ஆணி வேரை விவேகம், வைராக்கியம் என்கிற வாள் கொண்டு அறுக்க வேண்டும். அதாவது பகுத்தறிவாலும், பந்த பாசங்களை விடுவதாலும் இது சித்திக்கும். அறியாமை விலகும் போது ஞானோதயம் கிட்டுகிறது. அந்த நிலையில் ஒரு ஞானி தன் பேருண்மை இயல்பை தரி சிக்கிறான். இந்த உலகத்தைப் பார்க்கும் அவன் பார்வை முழுவதுமாக மாற்றமடைகிறது. அதன் பிறகு அவன் எத்தகைய துன்பங்களாலும் பாதிக்கப் படுவதில்லை.

**திங்கட்கிழமை, 13, ஜூன், 1937.**

128. ***புலன்களின் இயக்கமும், புலன்போகப் பொருள் களும் அற்ற நிலையில் தடையில்லாத நீண்ட ஆனந் தத்தை அனுபவிக்கும் நிலைக்கே சமாதி என்று பெயர்.***

**தெளிவுரை:-**

சமாதி ஆனந்தம் புரியாத நிலையையுடையது. அது அனுபவத்தில் மட்டுமே உணரக்கூடியது. இந்தப் பேரானந்த நிலையைப் பிறருக்கு விளங்க வைக்க வார்த் தைகளே இல்லை. சாதாரண மனம், புத்தி, கற்பனை களுக்கு எட்டாத, உண்மையை உணர இயலாத அதி நுட்பமானது அது. எப்படியாயினும் மனம் தூய்மை அடைந்து . சூக்கும நிலைபெற்று ஒருமுகப்படும்போது இதன் அனுபவம் கிட்டுகிறது. அதை அனுபவித்தவர்கள் மட்டுமே, அதனால் உண்டாகும் சொர்க்கானுபவத்தை உணரமுடியும். இருப்பினும் இந்த ஆனந்த நிலையைப் பற்றிய ஒரு தோராயமான விளக்கத்தைத் தர முயல் வோம். ஒருவர் ஐந்து தூலப் புலன்களும், ஐந்து சூக்குமப் புலன்களும் இணைந்து ஒருமுகப்பட்டு இடையறாத

பேரின்பத்தில் கால வரையின்றி மூழ்கி இருத்தல் போன்றது இது. அதே சமயத்தில் இந்த ஆனந்தம் புலன்களும் புலன்போகப் பொருள்களும் அற்றுப் போன நிலையில் நிகழ்வது என்பதையும் மனதிற்கொள்ள வேண்டும். இதுபோன்ற உணர்வும், விளக்கமும் பேரானந்த சமாதி நிலையைப் பற்றிய தோராயமான கருத்தைத் தரும்.

**சனிக்கிழமை, 17, ஜூலை, 1937.**

129. ***பக்தி (வழிபாடு) பொலிவு இரண்டையும் ஒரே இடத்தில் காண்பது அரிது. சிறிதளவு பக்தியுடன் அழகும் சேர்ந்தால் அது அவரிடம் தெய்வீகப் பொலிவையும், தோற்றத்தையும் தருகிறது.***

**தெளிவுரை:-**

பக்தியும், பொலிவும் ஒரே இடத்தில் இருப்பதில்லை. அப்படி இருக்குமானால் அவரிடம் பொலிவும், கவர்ச்சித் தோற்றமும் ஆயிரம் மடங்காகக் கூடிவிடும். உதாரணத்திற்குச் சிறிதளவே பக்தியுடைய ஓர் அழகான கன்னிப் பெண்ணை எடுத்துக் கொள்வோம். கொஞ்சம் பக்தியுடன் கூடிய அழகும் இளமையும் அந்தப் பெண்ணின் பொலிவையும், வசீகரத்தையும் அதிகரிக்கிறது. அவளைக் காண்பவர்கள் அவளை ஒரு பரிபூரண பக்தையாகவே ஏற்றுக் கொள்கின்றனர். அபூர்வமான இந்தகைய பக்தியும் அழகும் இணைந்த நிலையை கீழ்க்கண்டவாறு விளக்கலாம். பிரதானிகள் புடைசூழ அரசனும், அரசியும் அரசவையில் கம்பீரமாக அமர்ந்திருக்கும் காட்சியைப் போன்றது. இது மேலும் கூறுவோமாயின் பனித்துளிகள் பதித்த அன்றலர்ந்த ரோஜாவுக்கும் இதை ஒப்பிடலாம்.

புதன்கிழமை, 4, ஆகஸ்டு, 1937,

130. தூய உயிர்ச்சார உணர்வு நிலையின் இருப்பும், மூச்சு இழைதல், இரத்த ஓட்டம், நாடிக்கதிர்களின் ஓட்டம் போன்ற உடலுக்குள் செயல்படும் அனைத்து இயக்கங்களும் கனவு நிலை, கனவற்ற உறக்க நிலை, விழிப்பு நிலைகளில் ஒரே மாதிரி உள்ளன. கனவற்ற ஆழ்ந்த உறக்க நிலையில் ஒருவர் (உயிர்) ஆத்மானந்தத்தை அனுபவிக்கிறார். ஆனால் ஞான அனுபவ அறிவு இன்மையால் அவர் விழித்தெழுந்ததும் அதை மறந்து விடுகிறார். சமாதியில் ஞான அனுபவ அறிவினம் அழிந்து விடுகிறது. அதன்பிறகு அவர் தங்குதடையின்றி ஆன்ம ஆனந்தத்தை அனுபவிக்கிறார். மென்மையான நிலையில் எல்லா உடல் இயக்கங்களும், உள்ளும் புறமும் மூச்சு இழைதல் இதயத்துடிப்பு உட்பட அனைத்துமே நின்று விடுகிறது. மனம் முழுமையாகத் தானாகவே ஆன்மாவில் ஒன்றி விடுகிறது. அதன் பிறகு எஞ்சி நிற்பது தன்னில் தானான ஆன்மாவே. உயிர்ச்சார மகாசமுத்திரத்தில் ஒடுங்குவதுதான். ஆழ்ந்த உறக்க நிலையாலன்றிச் சமாதி நிலையில் ஒருவர் தூய உயிர்ச்சார ஆனந்தத்தை உணர முடியும். ஒருவன் களைப்பினால் படுத்து உறங்கி விடுகிறான். மயக்கநிலை, போதைநிலை, ஆழ்ந்த உறக்கநிலை ஆகியவற்றுக்கிடையே அதிக வித்தியாசம் இல்லை. இந்த அனைத்து நிலைகளிலுமே சாதாரணர் உயிருணர்வு அற்றவராக உள்ளார். அப்போது மனம் தானாகவே ஆன்மாவில் கண நேரம் தங்குகிறது. இந்த நிலையில் அறியாமை அழிந்து போகவில்லை. (மனக் கோப்பும்) ஒன்றவில்லை. ஆனால் சமாதி நிலையில் இவையெல்லாம் அற்று விடுகின்றன. ஆகவே அறியாமை அழியும்போது சமாதி கிட்டுகிறது. அறியாமை உள்ள

போது ஆழ்ந்த உறக்கமாகிறது. ஐந்து தூலப் புலன்கள் ஐவகை சூக்குமப் புலன்களுடன் கூடிய தூல உடல் மூலமாக மனம் செயல்படுவதை விழிப்பு நிலை என்கிறோம்.

சூக்கும உடல், சூக்குமப் புலன்களின் மனோ உலகில் நிகழும் சூக்கும மனத்தின் இயக்கங்களே கனவு உலகம் அல்லது கனவு நிலையாகும்.

அறியாமையைப் பின்னணியாகக் கொண்டு காரண நிலையுடன் கூடிய மனம் புத்தியைக் கொண்டு இயங்கும் காரண உடலின் இயக்கத்துக்கு "கனவுகளற்ற ஆழ்ந்த உறக்க நிலை" என்று பெயர். மனம், புத்தி, உள்ளுணர்வின் ஆற்றல், அகந்தை, அறியாமை ஆகிய அனைத்தும் அற்றுப் போன நிலையில் தன்னில்தானாகவுள்ள மேன்மையான உயிர்ச்சார உணர்வு அல்லது தன்னில் தானான உயிர்ப்பு அல்லது தன்னில் தானாகவுள்ள உயிர்ச்சார மகாசமுத்திரமாகி நிற்கும் நிலையே நிர்விகல்பசமாதி.

**சனிக்கிழமை, 7, ஆகஸ்டு, 1937.**

**131. மதவெறி தான் பெற்ற குஞ்சுகளிடம் காக்கைக்குள்ள பற்று போன்றது. வேறு இனப் பறவைக் குஞ்சுகளிடம் அது ஈவிரக்கம் இல்லாத தன்மை போன்றதும்கூட**

**தெளிவுரை:-**

ஒரு காகம் தன் சொந்தக் குஞ்சுகளிடம் தீவிரப் பற்று கொள்கிறது. அவைகளின் உயிருக்கு ஆபத்து நேரும் போது தாய்க்காகம் தன் குஞ்சுகளைக் காப்பாற்ற தன் உயிரையும் கூட இழப்பதற்குத் தயாராகி விடுகிறது. மாறாக அது வேறு இனக்குஞ்சுகளை ஈவு இரக்கமின்றி குத்திக்குதறி விடுகிறது. வேறு இனக்குஞ்சுகளைக் கொல்வதில் அதற்குக் கொஞ்சம்கூட கவலை இருப்பதில்லை.

அப்பாவிப் பறவைக்குஞ்சுகளின் வேதனை குறித்து கிஞ்சித்தும் இரக்கம் காட்டுவதில்லை. உண்மையில் அவ்வாறு கொல்வதில் அது மகிழ்ச்சியையே அடைகிறது. அதேபோல ஒரு மதவெறியன் ஒரு குறிப்பிட்ட தனது மதத்தை தீவிரமாக நேசித்து அதையே பெரிதெனக் கருதுகிறான். அவனுக்குள்ள தீவிரப்பற்றின் காரணமாக அதை மட்டுமே பின்பற்ற விரும்புகிறான். தேவைப்படின் அதற்காகத் தனது உயிரையே இழக்கவும் பின்வாங்குவதில்லை. எவ்வளவு குற்றங்குறை குரூரங்கள் இருப்பினும் தன் சொந்த மத அபிமானிகளிடம் அவன் அன்புடனும், கண்ணியத்துடனும் நடந்து கொள்கிறான். அதே சமயத்தில் வேறு மதத்தைப் பின்பற்றும் மிக நல்ல புனித ஆத்மாக்களிடம்கூட அனுதாபம் காட்டுவதில்லை. அவர்களிடம் நியாயமற்று நடந்து கொள்வான்.

**ஞாயிற்றுக்கிழமை, 8, ஆகஸ்டு, 1937**

132. ***ஆன்மா காணும் கனவே அதன் பகற்பொழுது. கனவு முடிந்தால் பகலும் முடிகிறது.***

**தெளிவுரை:-**

நடைமுறை உலகம் என்பது ஒருவருடைய மனம் உமிழ்த்தோற்றமேயாகும். இந்த அகிலத்தின் பெயர்களையும், உருவங்களையும் நீக்கிவிட்டால் மீதமாக நிற்பது கடவுள். கடவுள் - மட்டுமேதான். தூய்மையற்ற மனம் அறியாமை காரணமாக ஒற்றுமையில் வேற்றுமையைக் காண்கிறது. அகிலத்தின் பெயர்களையும் உருவங்களையும் பார்த்து மனம் ஏமாறுகிறது. அழுக்குற்ற மனத்திற்கு இந்த உலகம் உண்மையாகத் தோன்றுகிறது. ஆனால் மனத்தின் சாட்சியாக மட்டுமே உள்ள ஆன்மா ஏமாறுவதில்லை. உலகின் நிலையற்ற பொருள்களால் ஏமாற்றப்படுவதும் இல்லை.

ஆகவே அழுக்கற்ற மனத்திற்கு உண்மையாகத் தோன்றுபவை ஆன்மாவிற்கு கனவு போன்றது. சமாதி நிலையில் ஆன்மாவின் பேருண்மை இயல்பை ஒருவர் உணருகிறார். ஆன்மாவின் கனவெனப்படுவது அதோடு முடிந்து போகிறது. மனம் தூய்மை பெறுகிறது. ஒருமுகப்பட்டுத் தானாகவே ஆன்மாவில் ஒன்றி விடுகிறது இத்தகைய ஒன்றிய நிலையில் ஆன்மாவின் (மனத்தின்) பகல்போதும் முடிவடைந்து விடுகிறது.

**திங்கட்கிழமை, 16, ஆகஸ்டு, 1937.**

133. ***கடலில் சிற்றலைகளும் பேரலைகளும் எழுவதைப் போல் ஆசைகளும் எண்ணங்களும் மனத்தில் உதிக்கின்றன.***

**தெளிவுரை:-**

சிற்றலைகளும் பேரலைகளும் இல்லாத போது கடல் அமைதியாகவும், சலனமற்றும் இருக்கிறது. கடலின் சிற்றலை பேரலை போன்று மனத்திற்கு ஆசைகளும் எண்ணங்களுமாகும். மனத்தின் அமைதியும் சாந்தமும் குடிகொண்ட நிலையை ஆசைகளும், எண்ணங்களும் அலைக்கழிக்கின்றன. அது மட்டுமன்று அதன் ஆற்றல்களையும் சிதறடிக்கின்றன. ஆசைகள் எண்ணங்கள் முழுவதும் அடங்கிய பிறகு மனம் பளிங்கு போன்ற தூய நிலையையும், வலிமையையும் மீளவும் பெறுகிறது. அதன்பிறகு ஆத்ம தரிசனம் கிடைக்கிறது.

**செவ்வாய்க்கிழமை, 24, ஆகஸ்டு, 1937.**

134. ***வண்ணத்துப் பூச்சிகள் அழகுக்கு அடிமையாகி மடிகின்றன. தேனீக்கள் நறுமணத்தில் (சுவைமிக்க நறுமணம்) மயங்கி மடிகின்றன. மான்கள் ஒலியினால் கவரப்பட்டு வாழ்வை முடித்துக் கொள்கின்றன. மீன்கள்***

சுவைக்கு அடிமையாகி உயிரை இழக்கின்றன. யானைகள் தொடு உணர்வினால் ஈர்க்கப்பட்டு சாவுக்கு பலியாகின்றன. ஆனால் மனிதனோ தன் ஐம்புலன்களும் சமச்சீர் முழுமையுடன் வளர்ச்சியுற்று அவைகள் அனைத்துக்குமே அடிமைப்படுகின்றான். இதனால் மனிதனின் நிலை எவ்வளவு இக்கட்டிற்கு உள்ளாகிறது? ஆனால் மற்ற உயிரினங்களைவிட மனிதனுக்குப் பகுத்தறிவு அதிகப்படியாக இருக்கிறது. அதனால் பகுத்தறிவைக் கொண்டுதான் நினைத்த மாத்திரத்தில் எல்லாப் புலன்களையும் அடக்கியாள முடியும்.

தெளிவுரை:-

மனிதனைப்போல் மிருகங்களிடமும் புழு பூச்சிகளிடமும் ஐம்புலன்களும் முழுமையான வளர்ச்சி பெற்று இருப்பதில்லை. உதாரணத்திற்கு வண்ணத்துப்பூச்சிகள், தேனீக்கள், மான்கள், மீன்கள், யானைகளை எடுத்துக் கொள்வோம். வண்ணத்துப் பூச்சிகளுக்குப் பார்க்கும் புலன் முழுமையான வளர்ச்சி பெற்றது. மற்ற நான்கு புலன்களை ஒப்பிடும்போது அவை குறைவானது. மலர்கள் போன்ற அழகிய பொருள்களால் அவை கவரப் பட்டு வாழ்வை இழக்கின்றன. தேனீக்களுக்கு முகரும் சக்தி அதிகமாக உள்ளது. பூக்கள் போன்றவற்றின் இனிய சுவையில் மயங்கிச் சிக்கி மடிகின்றன. மற்ற புலன்களை விட மான்களின் கேட்கும் சக்தி கூர்மையானது. மணியோசை போன்ற இனிய நாதத்தால் கவரப்பட்டு அவைகள் வெளியே வந்து உயிரிழக்கின்றன. மீன்களிடம் சுவைக்கும் சக்தி மிகுதியாக இருப்பதால் அவைகள் தூண்டிலில் சிக்கி இறக்கின்றன. யானைகளுக்கு ஐம் புலன்களுமே வளர்ச்சி பெற்றுள்ளன. ஆயினும் தொடு உணர்வுப் புலன் அதிகம். அதன் பலனாக தொடு உணர்

வில் மயங்கி அதற்குப் பலியாகிறது. ஆனால் மனித இனத்தில் ஐம்புலன்களுமே சமச்சீராக வளர்ச்சி பெற்றுள்ளன. அவைகள் எல்லாவற்றுக்கும் மனிதன் கட்டுப்பட்டு விடுகிறான். மிருகங்கள், புழுபூச்சிகள் அவைகளுக்குள்ள பந்தத்தினால் மாண்டு மடிவதைப் பார்த்தோம். ஆகையால் மனிதன் எல்லாப் புலன்களுக்கும் பந்தப்பட்டவனாகி விட்ட நிலையில் ஆபத்துகள், மரணம் போன்ற பிடிகளிலிருந்து தப்பி எவ்வாறு மீள முடியும்? அவன் ஐம்புலன்களுக்கு அடிமைப் பட்ட நிலையில் ஒவ்வொன்றுக்கும் அவன் பலியாகும் கட்டாயம் உள்ளதல்லவா? ஆனால் மனிதனிடம் தனிப்பட்டதொரு திறமை இருக்கிறது. அவனுக்கு பகுத்தறியும் ஆற்றல் தரப் பட்டுள்ளது. பகுத்தறியும் மனிதனிடம் மட்டுமே அந்த அளவிலாத வளர்ச்சியுள்ளது. எனவே அதன் உதவி யால் தவறிலிருந்து நல்லதையும், கெட்டதிலிருந்து நல்லதையும், தீமையிலிருந்து நன்மையையும் தேர்ந்தெடுத்து ஆபத்துகள், படுகுழிகளிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். மேலும் அவன் மனதை ஒழுங்கு படுத்திப் புலன்களை அடக்கி ஆண்டு ஆபத்தையும் மரணத்தையும் தவிர்க்க முடியும். புலன் போகங்களுக்கு அடிமையாகும் மனிதன் அழிந்து போவான். அவன் மிருகங்களையும், புழுபூச்சிகளையும் விடக் கேவலமாகிறான், நரகவேதனையை அனுபவிக்கிறான்.

புதன்கிழமை, 15, டிசம்பர், 1937

135. உண்மையான மாபெரும் ஆன்மிகக் குருமார்களும், சீர்திருத்தவாதிகளும் ஏற்கனவேயுள்ள பாதைகளுக்குத் துணையாக நிற்கிறார்களேயொழிய அவைகளைக் களைந்து விட முற்படுதில்லை.

ஒரு குழந்தைக்குக் கற்றுத்தரும்போது அவனுக்கு முன்னதாகவேயிருக்கும் அறிவையும், ஊக்கத்தையும் தெரிந்து கொண்டு அதன் அடிப்படையில் மேற் கொண்டு பாடத்தைப் புகட்டுகிறோம். வேறுவிதத்தில் பாடத்தைக் கற்பிக்க ஆரம்பித்தால் அது வீணான தாகும். பெரியவர்களைப் போல் புரிந்து கொள்ளும் ஆற்றல் அவர்களுக்கு இருக்கிறது எனக் கற்பனை செய்து கொள்ளக் கூடாது. அப்படி நினைத்து நாம் கற்றுத்தரத் தொடங்கினால் அது ஒரு தடங்கலாகவே அமையும். ஏன் அவர்களுடைய மனோ வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் சாகடித்துவிடும். ஒரு தனி மனித னின் செல்வம் ஆன்மிகம் போன்றவற்றின் வளர்ச் சியைப் பொறுத்தே தேசத்தின் வளர்ச்சி அமைகிறது. முதலில் நாம் ஒரு நபரை அல்லது தேசத்தை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். அதன்பிறகே நாம் எந்த விதக்கட்டுக்கோப்பை நினைக்கிறோமோ அதற்கான அடிப்படையை அமைக்க வேண்டும். தேசத்தின் உயி ரோட்டம் எவ்வழியில் பாய்கிறது என்பதை முதலில் கண்டு கொள்ள வேண்டும். எங்கெங்கு குறைபாடிருக் கிறது என்பதைக் கண்டறிய வேண்டும். தேசிய உயி ரோட்டத்திலுள்ள ஓட்டைகளையும், குற்றங்களையும் சீராக்கித் தங்குதடையின்றி ஓடுவதற்கான வழிகளைச் செய்ய வேண்டும். இத்தகைய முயற்சியினால் மட்டுமே ஒரு தேசத்தை உயர்த்தி நிறுத்த முடியும். மாறாக நாம் இவற்றைச் செய்யத் தவறி தேசத்திற்கு ஒவ்வாத திடீர் மாற்றங்களையும் சீர்திருத்தங்களையும் புகுத்தக் கூடாது. அது தேசத்திற்கு சுமக்க முடியாத பளுவாகி தீங் கிழைத்துவிடும். கண் மூடித்தனமாக பொறுப்பில்லாமல் தேசம் இதை ஏற்குமோ என்று எண்ணாமல் திடீரென

திணிக்கப்படும் கண் மூடித்தனமான சீர்திருத்தங்கள் சமூகத்தைப் பாழடித்துச் சீர்குலைத்துவிடும். உண்மையும் உயர்வும் மிக்க ஆன்மிகக் குருமார்களுக்கும், சீர் திருத்தவாதிகளுக்கும் இது நன்றாகத் தெரியும். ஆகை யினால் அந்தச் சமயத்திற்கு ஏற்ற போதனைகளைப் பரப்புகிறார்கள். மக்களின் நம்பிக்கைக்கும் ஆர்வத்திற் கும், மனப்போக்கிற்கும் ஏற்றவாறு அனைவருமே ஏற்கும் வகையில் போதிக்கிறார்கள். அந்தப் போதனைகள் வேரூன்றி, முளைவிட்டு, கிளைத்து விடுகிறது. நற்பயனை நல்குகிறது. ஒரு மனிதன் அல்லது தேசமே ஏற்கனவே பெற்றுள்ள பண்புக்கு ஏற்ப அதை வளர்த்து விரிவு படுத்துகிறது.

**வியாழக்கிழமை, 16, டிசம்பர், 1937.**

136. ***நம்மைச் சுற்றிச் சுற்றிவரும் சூழ்நிலையும், கடந்த கால கர்மவினையையும் (முற்பிறப்புகளின் செயல்கள்) பொறுத்தே நமது குணநலன் அமைகிறது.***

**தெளிவுரை:-**

ஒருவருடைய பண்பின் வளர்ச்சி முழுக்க முழுக்க சூழ்நிலையைப் பொறுத்தே அமைகிறது. ஒருவர் நல்ல அல்லது கெட்ட பெற்றோர்களுக்குப் பிறக்கலாம், செல் வச்செழிப்புள்ள அல்லது ஏழ்மையும் அறியாமையும் மிக்க குடும்பத்தில் பிறக்கலாம். நல்ல அல்லது தீய நண்பர்கள் மத்தியிலோ, சமூகத்தின் சூழலிலோ வளரலாம். பிறப்பு, குடும்பம், சமூகம், நண்பர்கள் எல்லாம் சேர்ந்தே ஒருவரு டைய நடத்தையை உருவாக்குவதுகூட அவருடைய முன் வினைப்பயனை (முற்பிறவிகளின் செயல்களை) பொறுத்ததே.

வெள்ளிக்கிழமை, 17, டிசம்பர், 1937.

137. **ஒரு ஆசை தூலம், சூக்குமம் அல்லது காரணம் உடையதாக இருக்கலாம் அதன் வேகம் மெத்தன மாகவோ, நடுத்தரமாகவோ அல்லது தீவிர கதித் தன்மை படைத்ததாகவோ இருக்கும்.**

**தெளிவுரை:-**

ஒரு ஆசை இதய மையத்தோடு நின்று இயங்கும். அந்த நிலையில் அது எண்ணமாக உருவாவதில்லை. ஆனால் ஒருவர் அந்த ஆசையை இன்னதென உணரும் நிலை பெறும்போது அது தூல வடிவத்தைப் பெற்ற தாகிறது. ஆசையானது இதய மையத்திலிருந்து விலகி மூளை மையத்தை அடைந்ததும் அது ஒரு எண்ணமாக உருவாகிறது. ஒரு சராசரி மனிதனிடம் உருவாகும் எல்லாவித ஆசைகள், எண்ணங்கள், செயல்கள், நிகழ்ச் சிகள் போன்றவற்றின் கடந்தகால பதிவுகள் சித்தத்தில் (மனக்கோப்பில்) பதிந்து அவற்றின் காரண உருவத்து டன் மூலாதாரச் சக்கரத்தில் தங்கியுள்ளன. மனம் வெளிப்புறத்திலிருந்து சில விவரங்களைப் பெறும் போது அவற்றுக்கான கடந்த காலச் செயல் அல்லது சம்பவத் தின் விவரத்தை அறியச் சித்தத்தை நாடுகிறது. விவரம் அறிய விரும்பும் ஆசைக்கான பொருள் மூலாதாரச் சக்க ரத்துக்கும் (குதமையம்) அனாகதச் சக்கரத்துக்கும் (இதய மையம்) உட்பட்டு நின்றால் அது ஒரு சூக்கும ஆசையா கிறது. இந்த ஆசையின் அழுத்தம் மாறுபடும். அது தன் மையில் மெலிதாக, நடுத்தரமுடையதாக அல்லது தீவிர மானதாகவும் இருக்கலாம். மெலிதான ஆசை மேலெ ழுந்த வாரியான எண்ணமாகிறது. அது போன்ற ஆசை ஒருவரை செயல்படுத்த ஊக்குவிக்காது. அதை எளிதில் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும். நடுத்தரத் தன்மை

யுடைய ஆசை சற்றே உறுதி கலந்த எண்ணத்தைத் தோற்றுவித்துச் செயல்பட வைக்கும். இருப்பினும் சிறிதளவு முயற்சித்தால் அந்த எண்ணத்தை அடக்கிச் செயலை நிறுத்தி விடலாம். அதிதீவிரமான ஆசை வலுவான தீவிர எண்ணத்தை உருவாக்குகிறது.' அது ஒருவரை நிம்மதியிழக்கச் செய்து உடனடியாகச் செயலில் இறக்கி விடுகிறது. தீவிர உறுதியான எண்ணத்தை சாதாரணனால் வெல்ல முடியாது. அது ஒருவனை கைப்பாவையாக்கி ஆட்டிப் படைக்கும்.

**புதன்கிழமை, 26, ஜனவரி, 1938.**

138. மனத்தின் சிதறிய சக்திகளை ஒன்று திரட்ட முயல்வதே ஒருமைப்பாடு ஆகும். ஆழ்ந்த ஒருமைப்பாட்டின் போது துன்பம் அல்லது இன்பத்தின் பாகுபாடுகளை உணர்வதில்லை. இன்னும் சற்று அதிக ஆழ்ந்த ஒருமைப்பாட்டின்போது மனம் ஒரே புள்ளியில் லயித்து நிற்கிறது. அது அப்போது உடல் புலன்களின் பிடிப்பிலிருந்து விலக்கிக் கொள்கிறது. உச்சநிலை ஒருமைப்பாட்டின் போது மனம் முழு அளவில் ஆன்மாவில் ஒன்றி விடுகிறது. அதன் பிறகு எஞ்சி நிற்பது தன்னில் தானாகவுள்ள உயிர்ச்சார மகாசமுத்திரம்.

**புதன்கிழமை, 26, ஜனவரி, 1938.**

139. ஓர் ஆசை, எண்ணத்தின் இயல்புக்கேற்ப மனமானது மூளை மையத்தில் ஒரு சூக்கும வடிவத்தைப் படம் போடுகிறது. ஆசை, எண்ணம், சூக்கும வடிவம் ஆகியன எப்பொழுதும் ஒன்றையொன்று தழுவி நிற்பன. சமாதி நிலையில் மட்டுமே (நிர்விகலபசமாதியில் மட்டுமே) மனம் ஆசை, எண்ணம், வடிவமைப்பிலிருந்து விடுபட்டு நிற்கிறது. சமாதி எய்துவதற்கு முன்பு சாதாரண நிலைகளில் ஒருவர் கடவுளை அருவ நிலையில் எண்ணிப்

பார்க்க இயலாது. அவர் ஒரு உருவத்தின் உதவியையே நாடவேண்டி உள்ளது.

பலதரப்பட்டவர்களின் கடவுள், கடவுளின் உருவம் பற்றிய எண்ணங்கள் அவரவர் தன்மைக்கும் மனப் போக்கிற்கும் தூய்மைக்கும் வளர்ச்சிக்கும் ஏற்றவாறு மாறுபடுகிறது. கற்பிக்கும் உருவம் தூலமானதாகவோ, சூக்குமமானதாகவோ இருக்கும். ஆனால் ஒரு வகை உரு வம் மிகமிக இன்றியமையாததாகும். ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவர்கள் அறியாமையினால் மற்ற மதத் தினரின் குறியீடுகளையும், உருவங்களையும் வெறுக் கிறார்கள். அவர்களுடைய வெறுப்பும் ஆத்திர மூட்டும் நிந்தனைகளும் அவர்களுக்குள்ள சமய அறிவுச் சூனியத் தையே காட்டுகிறது. உண்மையில் ஒரு மனிதனோ, ஏதாவதொரு மதமோ தம்மதக்கோட்பாட்டு அறிவில் உயர்ந்து இருப்பின் அவனோ அந்த மதமோ இந்த உண்மையின் இரகசியத்தைப் புரிந்து கொள்வார்கள். அதன் காரணமாக இனம், மதம், சித்தாந்தம், போன்ற பல்வேறு பிரிவுகளிடம் கருணை காட்டி உள்ளார்ந்த அன்புடன் நடந்து கொள்வார்கள்.

**புதன்கிழமை, 26, ஜனவரி, 1938.**

**140.** இந்த உலகத்தோற்றம், பெயர்களும் உருவங்களும் கொண்ட இந்த உலகம், உலகாயத மனிதனுக்கு உண்மை யானதாகத் தோன்றுகிறது. விழிப்புநிலையில் அது உண்மையாகவே இருக்கிறது. கனவு நிலையில் இதே உலகாயத விழிப்பு நிலை உலகத்தை அடியோடு மறந்து விடுகிறான். கனவுலகமே அவனுக்கு உண்மை யாகத் தெரிகிறது. அதே மனிதன் ஆழ்ந்த உறக்கத்தை அனுபவிக்கும்போது கனவுலகம் விழிப்பு நிலை உலகம் ஆகிய இரண்டையுமே மறந்து விடுகிறான். பிறகு கனவு

நிலை உலகம், விழிப்பு நிலை உலகம் இரண்டுமே அவனில் மதிப்பிழந்து விடுகிறது. ஒவ்வொரு நாளும் உலகாயத மனிதன் இந்த மூன்று நிலைகளையுமே அனுபவிக்கிறான். ஒரு ஆன்மிக சாதகன் வேற்றுமையில் ஒற்றுமையைக் காண முயல்கிறான். விழிப்புநிலை உலகின் ஒவ்வொரு பெயரிலும் உருவத்திலும் கடவுள் தன்மையைக் காண முற்படுகிறான். ஆகவே ஒரு சாதகன் (ஒரு ஆன்மிகவாதி) விழிப்பு நிலையில் கடவுளையும், உலகிலுள்ள பெயர் உருவங்களையும் ஒன்றாகக் காண முயல்கிறான். ஆனால் ஒரு விஞ்ஞானி (நிர்விகல்பசமாதி) நிலையை எய்தியவர்) வேற்றுமையில் ஒற்றுமையையே எப்போதும் காண்கிறார். அவர் விழிப்பு நிலையிலும் இவ்வுலகின் பெயர்கள் உருவங்களுக்குப் பின்னால் கடவுளை மட்டுமே காண்கிறார். அதனால் ஒரு விஞ்ஞானி புலன்கள், புலன்பொருட்கள், மனத்தின் வித விதமான பேரக்குகளுக்கு அப்பாற்பட்டவராகிறார்.

**புதன்கிழமை, 9 பிப்ரவரி, 1938.**

141. ***அரைகுறை அன்பு காமமாக மாறுகிறது. முறையாகக் கையாளப்படும் காமம் தூய அன்பாக வளர்கிறது.***

**தெளிவுரை:-**

நீங்கள் ஆண் ஆனால் அழகிய இளம் பெண்ணை யும் பெண் ஆயின் அழகிய இளைஞனையும் எடுத்துக் கொள்ளுங்கள். தூய எண்ணத்துடன் விரும்புகிறீர்கள். காமாந்தகார ஆசைகளின்றி நேசிக்கிறீர்கள். இத்தகைய அன்பு வளர்ந்து உங்களிடையே மிக நெருக்கத்தை உண் டாக்குகிறது எனக்கொள்வோம். நீங்களிருவரும் தாராள மாகப் பழகுகிறீர்கள்; பேசுகிறீர்கள். தனிமையிலுங்கூட மிக நெருக்கத்துடன் இருக்கிறீர்கள். பிறகு உங்களுடைய தூய அன்பு நாளாவட்டத்தில் தானாகவே மறைந்து

விடுகிறது. காமஇச்சை அந்த இடத்தைப் பற்றிக் கொள்கிறது. நீங்கள் நிச்சயமாக உங்களுடைய பிரம்மச் சரிய விரதத்திலிருந்து வழுவி விடுகிறீர்கள்.

மாறாக இளமையும் அழகும்மிக்க ஆண் பெண் ணையும், பெண் ஆணையும் காமாந்தகார ஆசையுடனும் எண்ணத்துடனும் நெருங்குவதாகக் கொள்வோம். ஆனால் நீங்கள் உங்களுடைய மனத்தை மிக உன்னிப் பாகப் பார்க்கிறீர்கள். உங்கள் புலன்களைக் கட்டுப் படுத்துகிறீர்கள். தூய நினைவுகள், நல்ல மேன்மையான எண்ணங்களால் அவர்களை நேசிக்கிறீர்கள். உங்களு டைய பேச்சில், பழகுதலில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கிறீர்கள். உங்களுடைய காம இச்சை தூய அன் பாக வளர்கிறது. நீங்கள் நேசிக்கும் நபரிடம் சந்தித்துப் பேசிப் பழகும்போது கிஞ்சித்தேனும் காம ஆசைகள், எண்ணங்களால் பாதிக்கப்பட்மாட்டீர்கள்.

**வியாழக்கிழமை, 23, ஜுன், 1938.**

142. குணபேதங்களே (சத்துவம், ராஜசம், தாமசம்) ஒரு ஆணுக்கும் மற்றொரு ஆணுக்கும், ஒரு பெண்ணிற்கும் மற்றொரு பெண்ணுக்கும், ஒரு ஆணுக்கும் ஒரு பெண் ணுக்கும் இடையே நிலவும் மாறுபாடுகளுக்குக் காரண மாக இருக்கின்றன. ஒருவருடைய தன்மை, பண்பு செயல்கள் முழுக்க முழுக்க அவரிடம் மேலோங்கி நிற்கும் குணத்தைப் பொறுத்தே அமைகிறது. ஒரு மனிதனுடைய நல்ல அல்லது கெட்ட செயல்களுக்கு முக்கிய காரண மாக அமைவது இந்தக் குணங்களேயாகும். இவையே இவ்வுலகில் மகிழ்ச்சிக்கும் துன்பத்திற்கும் காரணம்.

**வெள்ளிக்கிழமை, 24, ஜுன், 1938**

143. சமயம் என்பது கடவுளை அறிவதே. முடிவில்லாத பரம் பொருளில் இருந்து கொண்டு அம்முடிவில்லாததில்

ஒன்றுவதும் அதுவேயாகும். பெயர்களும் உருவங்களும் கொண்ட இவ்வுலகம் தூய்மையற்ற மனத்தின் படைப்பே அன்றி வேறொன்றுமில்லை. புலன்களை அடக்குங்கள். மனதைக் கட்டுப்படுத்துங்கள். உங்களுக்கு ஆற்றல் பெருகும். பேருண்மை இயல்பைக் கண்டு கொள்வீர்கள். சிதறிய மனமும் தூய்மையிழந்த மனமுமே இந்த உலகத்தில் துன்பத்திற்கும் பந்தத்திற்கும் காரணம். புலன் இன்பங்கள் மனத்தின் சக்தியைச் சிதறடிக்கிறது. மனத்தை தூய்மையிழக்கச் செய்கிறது.

**திங்கட்கிழமை, 8 ஆகஸ்டு, 1938**

144. **ஆழ்ந்த அன்பே அதீத வெறுப்பைத் தோற்று விக்கும். அதேபோல் அதீத வெறுப்பு முடிவில் ஆழ்ந்த அன்புக்கும் வழிகோலும்.**

**தெளிவுரை:-**

இரண்டு நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் ஆழ்ந்து நேசிக்கின்றனர். ஆனால் அவர்களுக்குள் கருத்து மாறுபாடு எழுகிறது. இருவருமே விட்டுக்கொடுக்க ஒப்பவில்லை. ஒருவரை மற்றவர் பொருட்படுத்தவுமில்லை. அவரவர் கருத்தே சரியானது என விடாப்பிடியுடன் இருந்தனர். இந்தச் சிறு கருத்து வேற்றுமை பெரிதாக வளர்ந்தது. நண்பர்கள் ஒருவரை ஒருவர் வெறுக்கலாயினர். ஒரு காலத்தில் ஆழ்ந்த அன்புக்குரியதாக இருந்த அதே பெயரும் முகமுமே அதீத வெறுப்புக்கும் துன்பத்துக்கும், கோபத்துக்கும் ஆளா கிறது. இவ்வாறே ஆழ்ந்த அன்பே அதீத வெறுப்பாகவும் வளர்ந்துவிட்டது. இதேயே ஒருவர் மற்றொருவர் மேல் மிகமிக வெறுப்பைக் காட்டுகிறார் எனக்கொள்வோம். வெறுக்கப்பட்டவரின் பெயரைச் சொன்னாலே ஆத்தி ரத்தை மூட்டி எரிச்சலை உண்டாக்கும். ஆனால் சில

காலங்கழித்து குறிப்பிட்ட நல்லதொரு சூழ்நிலை உரு வாகும் போது அவர்களே நண்பர்களாகிறார்கள். அவர் களுடைய தவறை உணர்கின்றனர். நடந்ததை மறந்து மன்னித்துக் கொள்கிறார்கள். அவர்களுடைய நட்புறவு வளர்ந்து நெருக்கமாகிறது. வாழ்நாள் பூராவும் இதய நண்பர்களாகின்றனர். இவ்வுலகில் இத்தகைய நட்புற வுகள் பலப்பல உருவெடுத்துள்ளதைக் காணலாம்.

சனிக்கிழமை, 20. ஜனவரி, 1939.

145. **அறிவு விடுதலைக்கு வழிகோலுகிறது. அறியாமை பந்தத்தை ஏற்படுத்துகிறது.**

தெளிவுரை:-

ஒருவருடைய பேருண்மை இயல்பைக் குறித்த அறியாத்தனமே பந்தம், துன்பம், சொல்லொணாத் துயரங்களுக்குக் காரணமாகிறது. ஞானம் உதித்தவுடன் ஒருவர் ஆன்மாவின் உண்மையான இயல்பை அறிகிறார். அறியாமை அகல்கிறது. நற்கதி கிட்டுகிறது.

சனிக்கிழமை, 20, ஜனவரி, 1939.

146. **தமோகுணம் கீழ்மையில் ஆழ்த்தி ஒருவரை சோம்பலுக்கும் அறிவீனத்திற்கும் உட்படுத்துகிறது. இரஜோகுணம் ஒருவரைச் செயல்பட வைக்கிறது. சத்துவ குணம் ஞானத்தைத் தருகிறது. ஞானம் எய்தியவுடன் ஒருவர் குணங்களைக் கடந்தவராகிறார்.**

தெளிவுரை:-

தமோ குணத்தின் இயல்பு மந்தகதி. ஒருவரிடம் தமோகுணம் மேலோங்கும்போது அவரை மடமைக்கும், சோம்பலுக்கும் உட்படுத்துகிறது. அத்தகையவன் கீழ் மட்டத்தில் அழுந்தி விடுகிறான் அவன் மிருகத்தைவிடக் கேவலமானவன். இரஜோகுணம் செய்கைகளின் சின்னம்.

இரசோ குணம் சிலவற்றில் பற்றுதலை உண்டாக்குகிறது. பாகுபடுத்துந் தன்மையை கொண்டுள்ளது. இரசோ குணம் மேலோங்கும்போது செய்கையில் ஈடுபடுத்தி சிறப்புறச் செய்து காட்ட ஊக்குவிக்கிறது. இரசோ குணம் சிலவற்றில் மிகுந்த ஈடுபாட்டையும், பாகுபாட்டையுந் தோற்றுவிக்கிறது. சத்துவகுணம் அறிவொளி யூட்டுகிறது அறியாமையைத் துரத்துகிறது. சத்துவ குணம் மேலோங்கிய நிலையில் ஒருவரிடம் ஞானத் தெளிவை உண்டாக்குகிறது. சத்துவகுண மனம் தூய்மை, புனிதம், சூக்கும ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பெறுகிறது. அத்தகைய மனம் ஆற்றல் மிக்கதாகி இறை நிலையை எளிதில் பெறுகிறது. ஒருவர் சமாதி நிலையை (நிர்விகல்ப சமாதியை) எய்தும்போது மனம் ஆன்மாவில் ஒன்றிய நிலையில் குணங்களைக் கடந்தவராகி விடுகிறார். அந் நிலையில் மூவகைக் குணங்களுமே அவரிடம் இயக்கம் அற்றுப் போகிறது. அவர் குணங்களின் கட்டிலிருந்து விடுபட்டவர் என்று அழைக்கப்படுகிறார்

**சனிக்கிழமை, 20, ஜனவரி, 1939.**

147. ***இரண்டெனப்படுவது (துவைதம்) எப்போதும் அச்சத்துடன் கூடியது. ஒன்றே என்பது (அத்வைதம்) வலிமை தருவது.***

**தெளிவுரை:-**

ஒருவர் வேறொரு உயிரையோ பொருளையோ தன்னிலிருந்து வேறுபட்டது என நினைப்பாராகில் அவரிடம் அதைப்பற்றிய அச்சமும், நிம்மதியின்மையும் இருந்து கொண்டே இருக்கும். வேற்றுமை உணர்வு அறியாமையின் காரணமாகவே தோன்றுகிறது. அறியாத் தனமுடையவர் , அச்சமின்மையையும், மகிழ்ச்சியையும் அனுபவிக்க முடியாது. மாறாக ஒருவர் எங்கும் எதிலும்

ஒன்றாகவே கருதுவாரானால் அந்த ஒன்றே ஒன்று தன்னுடைய ஆன்மாவே என்பதை அறிகிறார். அங்கே அச்சத்திற்கு இடமில்லை. அச்சமில்லாத மனிதன் தனக்குத் தானே எஜமானனாகி உலா வருகிறான்.

**சனிக்கிழமை, 20, ஜனவரி, 1939.**

148. ***எப்போதும் உனது குறியையும், குறிக்கோளையும் உயர்ந்ததாகவே வைத்துக்கொள்***

**தெளிவுரை:-**

நமது முயற்சிகள் இலேசானதாகவோ, இடைத்தரமானதாகவோ, தீவிரமானதாகவோ இருக்கக்கூடும். நமது குறி, குறிக்கோளின் தன்மை அளவைப் பொறுத்தே அவற்றின் உத்வேகம் அமையும். ஒரு மாணவன் தேர்வில் வெற்றி பெறுவதையே குறியாகக் கொள்வானாயின் சற்றே முயன்று எவ்விதத்திலாவது தேர்ச்சி அடைகிறான். அதனால் வாழ்க்கையில் மேலான குறிக்கோள்களையுடைய ஒரு சிறந்த மாணவன் செய்கையில் இறங்குகிறான். நல்ல பிரஜை என்ற தன்மையில் வலிவுள்ள அடிப்படைப் பயிற்சியினால் தனது பண்பை உயர்த்திக் கொள்கிறான். முடிவில் அவன் மேன்மையானவனாக சிறந்து விளங்குகிறான். ஒரு வியாபாரியின் குறிக்கோள் சில ஆயிரங்கள் அல்லது லட்சங்களைச் சம்பாதிக்கும் விருப்பமுள்ளதெனில் இடைத்தரமான முயற்சியையே அவர் மேற்கொள்வார். வேறொருவர் கோடிக்கணக்கில் சேர்க்க விருப்பங் கொள்வாரெனில் அவருடைய முயற்சி அதிதீவிரமானதாக இருக்கிறது. நம்முடைய குறியையும் குறிக்கோளையும் அரியதாக்கி முயலும்போது அடையத் திண்மையான செயலூக்கத்தைக் கொள்கிறோம். மேற்கொண்ட இலட்சியத்தை எட்டத் தவறினாலும் நாம் அதில் நல்ல முன்னேற்றத்தை எய்துகிறோம். இதே

முறையில் ஒரு ஆன்மிகச் சாதகன் மிக மேலான சமாதி நிலையை (நிர்விகல்பசமாதியை) அடைவதையே குறியாகக் கொண்டு ஓய்வு ஒழிச்சலின்றி சாதனை புரிகிறான். அந்த எட்ட முடியாத உயரத்தை அடையத் தவறினாலும், அவர் மேன்மையான ஆன்மிக முன்னேற்றத்தை எய்துகிறார். மாறாக ஆன்மிக வெற்றிக்கான சில்லறை நிலைகளை மட்டும் எய்தினால் போதுமென நினைப்பானாகில் அவன் தீவிரமுயற்சி காட்டுவதில்லை. அதனால் ஆன்மிகப் பாதையில் முன்னேறுவதில்லை. ஆகவே நாம் எப்போதும் நமது குறிக்கோளையும் உயர்நிலையிலேயே செலுத்த வேண்டும்.

**சனிக்கிழமை, 20, ஜனவரி, 1939.'**

149. ***யார் ஒருவர் காமினியையும் (காமம்) காஞ்சனையையும் (பொன் அல்லது பொருள்) முறையான வழியில் கையாளத் தெரிந்திருக்கிறாரோ அவர் மாபெரும் வீரர்.***

**தெளிவுரை:-**

காமினியும் (காமம்) காஞ்சனையும் (பொன்னும் பொருளும்) சம்சாரத்தில் (இந்த உலகில்) இருந்து கொண்டு ஒருவனைப் பிடித்து விழுங்கும் இரண்டு இராட்சத முதலைகளைப் போன்றவை. பெரும்பாலான ஆண்களும் பெண்களும் இந்த இரண்டிலும் பற்று மிக்கவர்களாகவே உள்ளனர். இவ்வுலகில் அனைத்துப் போராட்டங்களுக்கும், கெடுபிடிகளுக்கும், ஒருவனுக்கு உண்டாகும் எல்லாவிதத் துன்பங்கள் தொல்லைகளுக்கும் மூலகாரணமாக இருப்பது காமினியும் காஞ்சனையுமே. அவற்றை வெல்வது கடினம். அவற்றை உரிய வழியில் உபயோகிப்பதும் சிரமமே. எப்போதும் பெரும்பாலானோர் இவ்விரண்டையுமே தவறான வழியில் உபயோகித்து அதற்கு அடிமையாகி நரக வேதனையை

அனுபவிக்கிறார்கள். சாதாரண ஆணோ அல்லது பெண்ணோ இவற்றைச் சரியான வழியில் பயன்படுத்தும் ஆற்றல் அற்றவர்களாகவே இருப்பர். யார் ஒருவர் இவ்விரண்டையும் நல்வழியில் பயன்படுத்துகிறாரோ அவர் உண்மையிலேயே ஒரு மாவீரன் ஆவார்.

**சனிக்கிழமை, 20, ஜனவரி, 1939**

150. *பொருள் இவ்வுலகின் மகாசக்தி. தியாகம் (துறவு) ஆன்மிக ஆற்றல் படைத்தது. ஆனால் உலகாயதப் பொருள் நிலையற்றது. மாறிக்கொண்டே இருப்பது. திருடக்கூடியது. பறிபோவது. மாறாக ஆன்மிக சக்தி நிலையானது. மாறுபாடற்றது.*

**தெளிவுரை:-**

பணம் உலகத்தின் மாபெரும் சக்தி. அதனுடைய உதவியினால் உலகில் எதை வேண்டுமானாலும் செய்ய லாம். எதையும் அடையலாம். தெருத்தெருவாக பிச்சை யெடுப்பவன்கூட பணம் சேர்த்துவிட்டால் நாளாவட் டத்தில் அவனைப் பாராட்டுகிறார்கள். போற்றுகிறார் கள். பணத்தைக் கொண்டு ஒருவர் உலகத்திலுள்ள எல் லாவித சுகங்களையும் மகிழ்ச்சியையும் அனுபவிக்கலாம். பணம் பறக்கக் கூடியது. எல்லாவகை சுகபோகங்களும், வசதிகளும் வைபவங்களும் பணத்தைக் கொண்டு வாங்க முடியும். ஆனால் அது சொற்பகாலமே நிலைத்திருக்கக் கூடியது. இன்றைக்குச் செல்வச் செழிப்பில் மிதப்பவன் நாளையே அதை இழந்து வறுமைக்கும் துன்பத்திற்கும் உள்ளாவது உலகில் அடிக்கடி நிகழ்வதே. மண்ணுலகில் செல்வத்திற்கு மதிப்பு; ஆன்மிக உலகில் துறவுக்கு அதைவிட மதிப்பு. உண்மையான துறவி எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை. அவனுக்குத் தேவைகள் கிடையாது. மன அமைதியுடன் அவன் தாராளமாக உலா வருகி

றான். கடவுளிடம் கொண்ட இடையறாத அன்பினால் அளப்பரிய ஆற்றல் பெறுகிறான். இந்த ஆற்றலும் மன அமைதியும் சலனமற்றவை. அவனுடைய ஆன்மிகச் செல்வத்தை யாரும் அள்ளவோ பறிக்கவோ முடியாது. வெறுங்கையனாகத் தோன்றினாலும் உண்மையான துறவி அளப்பரிய ஆற்றல் படைத்தவன். இந்த ஆற்றல் நிலையானது. நீடித்து நிற்பது.

**சனிக்கிழமை, 20, ஜனவரி, 1939.**

**151. எப்போதாவது ஒருநாள் ஒவ்வொரு உயிரும் பெருமைக்குரியது ஆவது திண்ணம்.**

**தெளிவுரை:-**

உயிரும் ஆற்றலும் எங்கும், எதிலும் உள்ளது. இன்று அணுவாக இருப்பது பரிணாம வளர்ச்சி பெற்று ஒரு பூச்சி உருவத்தை அடையும். நாளாவட்டத்தில் இதே பூச்சி ஒரு மனிதனாக வளர்ச்சி பெறும். இன்று ஒரு சாதாரணனாக இருக்கும் மனிதன் சில பிறவிகளுக்குப் பிறகு பெரிய வீரனாகலாம் அல்லது மாபெரும் மகானாகவும் ஆகலாம். ஒரு உயிரின் குறிக்கோள் முடிவும், உயரிய பரிணமிப்பு மோட்சத்தை அல்லது ஆன்மவிடுதலையை எய்துவதே. விடுதலையை அல்லது இறைப்பேற்றை எய்தியவரே மகான். மனிதப்பிறவியின் உன்னதமான பரிணமிப்பு இதுவே. இதற்குக் காலம் கனிந்து வர வேண்டும். மனிதப்பிறவி மூலமே ஒருவர் மோட்சத்தை எய்த முடியும். இறைவர்களும், இறைவிகளுங்கூட மனிதப் பிறவியெடுத்தே மோட்சத்தை எய்துகின்றனர். ஒரு உயிர் கீழ்நிலைப் பிறவிகள் மூலம் மோட்சத்தை எய்த முடியாது. மோட்சத்தை அடைந்த ஒரு மனிதன் மனித குலத்தின் மகானாக ஆகிறான். அதனால் ஏதாவது ஒரு நாளில் ஒவ்வொரு உயிரும் உன்னத நிலைபெறும் என்பதின் உண்மை இதுவே.

**திங்கட்கிழமை, 22, ஜனவரி, 1939.**

**152. ஆபத்தும் மரணமும் நெருங்கும்போது மனிதர்கள் எல்லாவித வேற்றுமைகளையும் சண்டைகளையும் மறந்து ஒன்றாகி விடுகிறார்கள்.**

**தெளிவுரை:-**

ஒரே தாய் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் சாதாரண சமயங்களில் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்கின்றனர். கத்திகளைக்கூட கையிலெடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் குடும்பத்தில் துயரமோ, இறப்போ நேரும் போதும், குடும்பம் பூராவிற்கும் பெருத்த ஆபத்து வரும்போதும் சகோதரர்கள் வேறுபாடுகளையும், விரோதத்தையும் மறந்து ஒன்றுகூடி விடுகின்றனர். குரோதங்களுடன் கூடிய எண்ணற்ற மதங்கள், இனங்கள் மிகுந்ததொரு தேசத்தைப் பார்ப்போம். சாதாரண காலத்தில் இந்த மாறுபட்ட இன மதங்களைச் சார்ந்த மக்கள் ஒருவரை ஒருவர் வெறுத்தும், ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொண்டும், ஒருவர் மற்றவருக்கு தங்க இடங் கொடுக்காத நிலையுடனும் இருக்கிறார்கள். ஆனால் தேசம் பெருத்த ஆபத்துக்கு ஆளாகிறது. வெளி நாட்டுப் படையெடுப்பும் முற்றுகையும் ஏற்படுகிறது. இது வரை மதமாத்சரியடத்துடனிருந்த மக்கள் அவர்களுடைய வேற்றுமைகளையும் சண்டை சச்சரவுகளையும் மறந்து விடுகின்றனர். தங்களது எதிரியை விரட்ட ஒன்றுபடுகிறார்கள். இதுவே மனிதர்கள் சாவின் போதும், ஆபத்தின்போதும், ஒன்றாகிவிடுவதற்குக் காரணமாகும்.

**திங்கட்கிழமை, 22, ஜனவரி, 1939.**

**153.** புனிதக் கோயில்களில் மிகப் புனிதமானது ஒரு பக்தனுடைய இதயம். புனிதத் தலங்களில் மிகவும் மேன்மை

யுடைய துறவிகளுடன் இருப்பது சாத்திரங்களில் சிறந்தது. ஞானிகளின் (ஞானிகள் அல்லது இறைக் காட்சி பெற்றவர்களின்) சொற்பொழிவைக் கேட்பது, அவர்கள் எழுதிய நூல்களைப் படிப்பது, கடவுளின் நாமமே மாக களை அகற்றுவது. இறைக்காட்சி பெறுவதே பெரும் பேறு.

**திங்கட்கிழமை, 22, ஜனவரி, 1939.**

**154. மகிழ்ச்சிகரமாக இருக்கும்போது காலம் மின்னலைப்போல் பறக்கிறது. ஆனால் துன்பத்திலும், துக்கத்திலும் அது நத்தையைப் போல் மெதுவாக ஊர்கிறது.**

**தெளிவுரை:-**

ஒருவர் மகிழ்ச்சியாக இருக்கும்போது காலம் எவ்வளவு வேகமாக ஓடுகிறது என்று அதிசயப்படுகிறார். அந்த நேரங்களில் காலம் போதவில்லை என்று அங்கலாய்க்கிறார். மின்னலைப்போல் ஓடிவிட்டதே என்று எண்ணுகிறார். ஆனால் அதே மனிதன் ஆபத்திலோ, துன்பம் அல்லது துக்கத்திலோ உழலும்போது அவருக்கு ஒவ்வொரு கணமும் ஒரு மணியாகத் தோன்றுகிறது. அவருக்குக் காலம் கடத்துவதே பெருத்த வேதனையாகிறது. ஒவ்வொரு கணமும் நீள்கிறது., பாரமாகிறது. வாட்டுகிறது.

**செவ்வாய்க்கிழமை, 23, ஜனவரி, 1939.**

**155. இடையறாத விழிப்புணர்வுடன் கூடியது சந்நியாசம். சந்நியாசத்தை ஒட்டியபடி இருக்க வேண்டியது நிலையான விழிப்புணர்வு. கூரிய கத்தியின் மேல் நடப்பதைப் போன்றது அது.**

தெளிவுரை:-

அலட்சியப் போக்குடைய மனிதன் மந்த கதியும் சோம்பலும் சேர்ந்து இருப்பின் அவன் உண்மையான சந்நியாசியாக இருக்க முடியாது. சந்நியாசம் என்பது இடையறாத விழிப்பு நிலை. ஒரு சந்நியாசி எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பார். அனைத்துச் சூழ்நிலைகளிலும், எது நேர்ந்தாலும் அவர் தன்னுடைய புலன்களையும், மனத்தையும் தன் வசப்படுத்தி இருப்பார். அலட்சியமும் திறமையின்மையும் உடைய மனிதன் அவனிடம் தோன்றும் ஆசைகளையும், எண்ணங்களையும், புலன் களையும் எவ்வாறு கட்டுப்படுத்த இயலும்? மனம், புலன்களைக் கட்டுப்படுத்தும் பயிற்சியற்றவன் எவ்வாறு ஒரு சந்நியாசியாக வர முடியும்? ஒரு சந்நியாசியினுடைய வாழ்க்கையை கூரிய கத்தியின் மேல் நடப்பதற்கு ஒப்பிடுவதே சாலப் பொருந்தும். ஒரு சிறிய அலட்சிப் போக்கு அவனிடம் இருந்தாலும் அது அவனுக்கு அதிக ஊறு விளைவிக்கும். அவனுடைய ஆன்மிக வாழ்வையே குலைத்துவிடும்.

செவ்வாய்க்கிழமை, 23, ஜனவரி, 1939.

156. முழுமையான தனிமை மனத்தளவில்தான் உள்ளது.

தெளிவுரை:-

இந்த உலகத்தில் எங்கும் முழுக்க முழுக்கத் தனிமை என்பதைப் பெற முடியாது. ஒரு மனிதன் தன் வீடு வாசலைத் துறக்கலாம். உற்றார் உறவினரை விட்டு விலகலாம். அடர்ந்த காட்டினுள் ஒரு குகைக்குள் சிக்க லாம். ஆனால் அவன் மனம் தூய்மையிழந்து சலித்துக் கொண்டேயிருந்தால் அந்த நிலையில் அவனுக்குத் தனிமை என்பது கிடையாது. அவனுடைய மனத்துக்குள் புலன் போகங்களும் உலகாயத எண்ணங்களும்

பொருள்களும் புகுந்து கொண்டு சுற்றிச் சுழன்று குடைந்து கொண்டேயிருக்கும். மாறாக (i) ஒருவனுடைய மனம் தூய்மையாக இருக்கிறது. (ii)மனம் புலன்களை அவன் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறான். (iii) அவனுக்குப் புலன்கள், புலன்பொருட்கள் ஆகியவற்றி லிருந்து விடுபடும் வழி தெரிந்திருக்கும். அவன் உண்மை யிலேயே தனிமையில் இருப்பவனாகிறான். இதனால் "உண்மையும் முழுமையுமான "தனிமை" என்பதும் மனத்தளவில்தான் உள்ளது" என்பதை உணர முடியும்.

**வெள்ளிக்கிழமை, 23, ஜனவரி, 1939.**

157. **பூதத்தைக் கண்டு அஞ்சாதே.**

**தெளிவுரை :-**

துயரத்தைக் கண்டு அஞ்சாமல் எதிர்த்து நில். அது பறந்துவிடும். துயரங்களும், ஆபத்துகளும் விளையும் போது ஒருபோதும் அதைக்கண்டு அஞ்சாதே. துயரங் களிலிருந்து தப்பி ஓட நினைக்காதே. கைகைளக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து விடாதே. ஆபத்து வரும்போது அழாதே. இவ்வுலகில் பலவீனனுக்கு இடமேயில்லை. பயங்கொள்ளி பத்திரமாக வாழ முடியாது. எப்படியும் ஒருநாள் சுடுகாட்டுக்குப் போயே ஆகவேண்டும். துன்பம், ஆபத்து, துயரங்களிலிருந்து தப்பித்து வேகமாக ஓட நினைத்தால் அவை வேட்டை நாய்களைப் போல இன்னும் அதிக வேகத்தில் துரத்த ஆரம்பிக்கும். ஒரு வலுவுள்ள நாயை எடுத்துக் கொள்வோம். அதை நோக்கி பட்டினியால் வாடும் பல தெரு நாய்கள் குலைத்துக் கொண்டே ஓடும். அதைக்கண்டு பயந்து வலுவுள்ள நாய் ஓட நினைக்கும். இதைப்பார்த்தவுடன் தெரு நாய்கள் கோபமாகக் குரைத்தபடி துரத்தும். ஆனால் சிறிது தூரம் ஓடிய பின் அந்த நாய் தைரியத்தை வர

வழைத்துக் கொண்டு திரும்பிப்பார்த்துத் துணிவுடன் தெருநாய்களை எதிர்த்து நிற்கும். அப்போது அவை எல்லாமே பயந்து ஓட்டம் பிடிக்கும். இதேபோல் உங்களை ஆபத்துகளும் தொல்லைகளும் நெருங்கும் போது துணிவுடன் எதிர்த்து நின்றால் அவை பனிபோல மறைந்து போகும்.

**செவ்வாய்க்கிழமை, 23, ஜனவரி, 1939.**

158. **ஒரு மனிதனை அவனுடைய தூய்மையற்ற மனம் அடிக்கடி துரோகம் செய்த வண்ணமிருக்கும். ஆகவே உனது சொந்த மனம் புலன்களை நம்பிவிடாதே.**

**தெளிவுரை:-**

தூய்மையின்மையும் கட்டுப்பாடு அற்றதுமான மனம் ஒரு மனிதனை ஏமாற்றிக் கொண்டே இருக்கும். அது புலன்கள், புலன் பொருட்களைப் பற்றிக்கொண்டு இடையறாது மாறிக் கொண்டேயிருக்கும். அது பகுத்தறியக் கூடாத நிலையில் ஒரு புலன் பொருளைக் விட்டு மற்றொன்றுக்குத்தாவும். கட்டுப்பாடற்ற தூய்மையில்லாத மனம் அலட்சியப் போக்குடன் சோம்பிக் கிடக்கும். அது கண்ணியமிக்க சரியான பாதையில் செல்லாது. அது தன் போக்கில் திரியும். அது பொறுப்பற்று தன் வேலையைய தட்டிக்கழிக்கும். அதனால் உமக்குச் சொல்வது உமது சொந்த மனத்தையும் புலன்களையுமே நம்பிவிட வேண்டாம். அதன் கவர்ச்சியிலும். நளினத்திலும் சிக்கி ஏமாந்து விடாதீர்கள் என்பதே. மனம் புலன்களின் மேல் எப்போதும் கண்காணிப்புடன் இருங்கள். அது அலைந்து திரியாதபடி கண்டிப்புடன் கட்டுப்படுத்தப் பயிலுங்கள். புலன்களை உங்கள் பிடிக்குள் வைத்துக் கொள்ளவும். உங்கள் கைப்பிடியிலுள்ள அவற்றைச் சரியான பாதையில் கொண்டு செல்லுங்கள்.

பிறகு - அதன் பின்னர் மட்டுமே வீழ்ச்சிகளிலிருந்தும் அபாயங்களிலிருந்தும் தற்காத்துக் கொள்ளலாம்.

**செவ்வாய்க்கிழமை, 23, ஜனவரி, 1939.**

159. ***பக்குவப்படுத்தப்பட்ட தூய மனமே தன்னுடைய நண்பனும் வழிகாட்டியுமாகும்.***

**தெளிவுரை:-**

முன்பே கூறியுள்ளதுபோல் அழுக்காறுள்ள பக்குவப்படாத மனம் பொதுவில் ஒருவருக்குத் துரோகம் விளைவிக்கிறது. அவருடைய விரோதியாகவும் செயல்படுகிறது. ஆனால் தூய பக்குவமிக்க மனம் அவருடைய சிறந்த நண்பனாகவும், உண்மையான வழிகாட்டியாகவும் திகழும். ஆன்மிகப் பயிற்சியில் மிக முன்னேற்றம் பெற்ற நிலையில் ஒருவர் வழிகாட்டுவதற்குக் குருவைத் தேட வேண்டியதில்லை. அவருடைய தூய மனமே அதைச் செய்யும்.

**செவ்வாய்க்கிழமை, 23, ஜனவரி, 1939.**

160. ***இயமம், நியமம் ஆகியவற்றின் விதி முறைகளைக் கடைப்பிடிக்காத சமயமே இல்லை.***

**தெளிவுரை:-**

இயமம், நியமம் என்பது நன்னடத்தைக்கான விதி முறைகள். அதாவது உண்மை, கொல்லாமை, கள்ளாமை, கற்புநெறி, விலையுயர்ந்த நன்கொடைகளைப் பெறாமை, தூய்மை (உள்ளும் புறமும்) போதுமென்ற மனம், ஓதுதல், விரதம், கடவுளிடம் பரிபூரண சரணாகதி போன்றவை. ஒரு பயிற்சியாளர் இந்த விதிகளை எண்ணம், சொல், செயலில் கடைப்பிடிக்க வேண்டும். இந்த நன்னெறி முறைகளே எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானது. எந்த ஒரு சமயத்தின் மொத்த கட்டுக் கோப்புமே இந்த

விதிமுறைகளை அடித்தளமாகக் கொண்டே அமைந்துள்ளது. உண்மை, கருணை, நிறை யுடைமை போன்றவற்றில் ஊன்றி நிற்காத சமயவாதி முன்னேற ஏலாது. இயமம் நியமத்தைக் கடைப்பிடிக்காத சமயமே கிடையாது.

**செவ்வாய்க்கிழமை, 23, ஜனவரி, 1939.**

161. ***அதிகாரம் என்பது எளிதில் புரிந்து கொள்ள முடியாத ஒன்று. அதைக் கையாள்வது அவ்வளவு சுலபமல்ல.***

**தெளிவுரை:-**

அதிகாரம் மிகவும் ஆபத்தானது. அதைச் சரிவரக் கையாள்வது கடினம். அது ஒரு குலை நோய்க்காரன் சீரணிக்க முடியாத புரதங்கள் நிறைந்த உணவை உட்கொள்வது போலாகும். அத்தகைய உணவு வயிற்றுவலிக் காரனுக்குச் சாப்பிட வேண்டுமென்ற ஆசையைத் தூண்டும். ஆனால் அவனால் அதைச் சீரணிக்க முடியாது. ஒவ்வொரு உயிருமே அதிகாரத்தைக் கைப்பற்ற ஆசைப் படுகிறது. விரும்புகிறது. ஆனால் பெரும்பாலானவற்றில் அது தவறாகப் பயன்படுத்தப் படுகிறது. ஒரு வல்லவனாலேயே அதை உரிய வழியில் கையாள முடியும். ஆன்மீக உலகில் சித்து விளையாட்டுகள் அனைவரையும் கவரக்கூடியது. சாதகர்கள் அல்லது அருளாளர்கள் இந்தச் சக்தியினால் ஈர்க்கப்பட்டு அவற்றைப் பயன்படுத்தி விடுகிறார்கள். அதனால் அவர்களுடைய வாழ்க்கையையே குலைத்துக் கொள்கிறார்கள்; நரக வேதனைக்குள்ளாகிறார்கள்.

**செவ்வாய்க்கிழமை, 23, ஜனவரி, 1939.**

162. ***துவைதம் அல்லது முரண்பட்ட நிலையே வாழ்வு.***

**தெளிவுரை:-**

அத்வைத நிலையில் (ஒருமை நிலையில்) ஒருவர் ஒரே பொருளை அதாவது தன்னில் தானாகவுள்ள நிறை பொருள் ஒன்றையே காண்கிறார். வேறொரு பொருளுக்கு . அங்கே இடமிருப்பதில்லை. இடம், பொருள், பொருளுக்கான விவரம் ஆகியவை முழு அளவில் இணைந்து ஒன்றாகி விடுகின்றன. இந்த நிலையில் ஒருவர் தனது உடலுணர்வு அற்ற நிலைக்கு ஆளாகிறார். நிர்விகல்பசமாதியில் மனம், புத்தி, உள்ளுணர்வு, அகந்தை, சித்தம் (மனக்கோப்பு) எல்லாமே ஆன்மாவில் ஒடுங்குகின்றன. இந்தச் சமாதியை எய்துவதற்கு முன்பு ஆசைகள் செயல்பட்டுக் கொண்டேயிருக்கும். ஒன்றின் விவரத்தை அறிவதோ, வேறொன்றைக் காண்பதோ நிர்விகல்பசமாதி நிலைக்கு முந்தைய நிலையில் மட்டுமே இயலும். அதுவே துவைதம் (இருவேறு நிலை). துவைத நிலையில் மட்டுமே உயிர் இருக்கும். ஒரு மனிதன் நிர் விகல்பசமாதியை எய்தியதும் அவன் அதே நிலையில் இருபத்தோரு நாட்கள் மட்டுமே உயிருடன் இருக்கிறான். அதன் பிறகு உயிர் உடலை விட்டுப் பிரிந்து விடுகிறது. ஆனால் பெரிய மகான்கள் தங்களுக்குள்ள ஆன்மீகப் பணியை முன்னிட்டு பரவெளியின் உயரத்திலிருந்து திரும்பி வருகிறார்கள். மீண்டும் அதே உடலில் தங்கி உத்தம மனத்துடன் துயருறும் மனித குலத்தின் உயர்வுக்குப் பாடுபடுகிறார்கள். நிர்விகல்பசமாதி எய்திய பிறகுங்கூட அகத்தின் தூய்மை நிலையில் இருந்தவாறு அதே மனித உடலில் வாழ்கிறார்கள். அந்த நிலையை துவைத நிலை என்றே சொல்ல வேண்டும். முரண்பட்ட நிலை இல்லாமல் உயிருடன் ஒருவர் வாழ்வது இயலாது.

செவ்வாய்க்கிழமை, 23, ஜனவரி, 1939.

163. குழந்தைப்பருவம் களங்கமற்றது. எளிமை, தூய்மை, அழகு நிறைந்தது. வாலிபப் பருவம், பெருமிதம், துணிச்சல், விளையாட்டு போன்ற குணங்களைப் படைத்தது. வயதுக்கு வந்த மனிதப்பருவம் போராட்டம், கட்டமை, தளை, துயரம் நிறைந்தது. முதுமைப் பருவம் நடுக்கம், பலவீனம், நோய்நொடி, தளர்ச்சி நிறைந்தது. மரணத்தில் முடிவது.

தெளிவுரை:-

குழந்தைகள் களங்கமற்றவர்கள். எளிமை, தூய்மை, அழகு நிரம்பியவர்கள். "குழந்தைப் பருவத்தில் சொர்க்கம் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது" என "வேர்ட்ஸ்வொர்த்" கூறியுள்ளார். உலக ஆசாபாசங்கள் அல்லது காமந்தகார எண்ணங்கள் அற்ற பருவம் அது. அந்தக் குழந்தைகள் கவலையற்றவர்கள். தான் எனும் தன்னுணர்வு அற்றவர்கள். ஒரு குழந்தை வளர்ந்து வலிமைமிக்க கம்பீரமான இளைஞனாகும்போது அவனுடைய உடல்வலிமை, நல்ல தோற்றம், புதுமைக்கோணம் படைத்த வாழ்க்கையைப் பற்றிய எண்ணம் போன்றவை அவனுக்கு துணிச்சல், பெருமிதத்தை அளிக்கிறது. மேலும் அவன் எப்போதும் அமைதியற்ற குரங்கைப் போன்று விஷமத்தனத்துடன் இருக்கிறான். அதே இளைஞன் மனிதனாகிறான். இல்லற வாழ்வை மேற்கொள்கிறான். குழந்தைகளைப் பெற்றுக் கொள்கிறான். குடும்பம், குழந்தைகளைக் கௌரவமாகப் பராமரிக்கச் சிரமப்பட்டு உழைக்க வேண்டியுள்ளது. கௌரவத்தைக் காக்கவும், பெயர் புகழை எய்தவும் உழைக்கிறான். ஆக அவனுடைய

வாழ்க்கை சுமையுள்ளதாகிக் கவலைகள், ஆசைகள், எச்சரிக்கைகள், பற்று, துயரம் ஆகியவை சூழ்ந்து கொள்கின்றன. முதுமை எய்தியவுடன் அவன் உடல் வலிமை குன்றுகிறது. மனம் பலவீனப்பட்டுச் சலன மடைகிறது. பிரச்னைகள் நிறைந்த தன்னால் வாழ முடியாது என்ற பயம் தோன்றுகிறது. வாழ்வில் நம்பிக்கை இழந்த நிலை ஏற்படுகிறது. விரக்திநிலை மேலிடுகிறது. இந்த வயதில் எல்லாவித வியாதிகளும் பிடிக்கின்றன. வலுக்குன்றி தளர்ச்சி மேலிடுகிறது. முடிவில் சாவில் நிம்மதியடைகிறான்.

**புதன்கிழமை, 24, ஜனவரி, 1939.**

**164. அழகான மலர்களும், ஊசிபோன்ற கரட்டு முட்களும் ஒரே ரோசாச் செடியில்தான் தோன்றுகின்றன. ஒன்றின் ஒரே சாரத்திலிருந்து அனைத்து எதிரெதிர் முரண்பாடுகள் விளைகின்றன.**

**தெளிவுரை:-**

ஒரு ரோசாச் செடியிலிருந்து முட்களையும் மிகவும் அழகான மலர்களையும் பெறுகிறோம். செடியென்னவோ ஒன்றேதான். ஆனால் இருவேறு வகையுள்ள பொருட்கள் கிடைக்கின்றன. அதேபோல் நல்லதும் கெட்டதும், துன்பமும் இன்பமும் போன்ற எல்லாமே ஒன்றேயான பேராற்றலிலிருந்து வெளிப்படுகின்றன. வெறோரிடத்தில் கூறியுள்ளது போலப் படைப்பு பிரகிருதியினாலேயே (கடவுளின் படைப்பாற்றல்) உண்டாகிறது. பிரகிருதி சக்தி மூன்று குணங்களை (சத்துவம், ராசசம், தாமசம்) உள்ளடக்கியது. அவை நல்லதும், தீயதும், இன்பமும் துன்பமும் போன்ற பல்வேறு விளைவுகளை உண்டாக்குகின்றன.

புதன்கிழமை, 24, ஜனவரி, 1939.

165. **நாளைய தினத்தைப்பற்றிய எண்ணம் மிகுந்த கவலையையும், ஆர்வத்தையும் உண்டாக்குவது.**

**தெளிவுரை:-**

"நாளைய தினம்" என்கிற நினைப்பு "நான் எங்கே போவேன்? எதைச் சாப்பிடுவேன்? போன்ற திட்டங்களை வகுக்க வைக்கிறது. இந்த எதிர்காலத்திட்டம், எண்ணங்கள் ஒரு மனிதனுடைய மன நிம்மதியைக் குலைக்கிறது. அமைதியிழந்து தவிக்க வைக்கிறது. இதற்குச் சிறந்த வழி முழுக்க முழுக்கக் கடவுளை நம்புவதேயாகும். எதிர்காலத்திட்டமிடுவதைத் தவிர்க்க வேண்டும். அதாவது கடந்தகாலத்தைப் பற்றிய கவலையை அறவேவிட வேண்டும். அல்லது எதிர்காலத்திற்கான திட்டமிடுதலை மறக்க வேண்டும். நடப்பதைப் பெரிதுபடுத்திக் கொள்ளக் கூடாது. போதுமென்ற மனமே சாந்தியையும், மகிழ்ச்சியையும் அளிக்கும்.

வெள்ளிக்கிழமை, 26, ஜனவரி, 1934.

166. **உதவாக்கரை உணர்ச்சிகள், காலத்தை வீணடிக்கும். உண்மையான திட்டங்கள் உடனே செயல்பட வைக்கும்.**

**தெளிவுரை:-**

உதவியற்ற ஒரு அனாதை, நோயாளியை தெருவில் பார்க்கிறீர்கள். அவனுக்காக நீங்கள் அனுதாபப்பட்டால் அந்த அனுதாபம் உண்மையானதாக இருப்பின் உங்களால் சும்மா இருக்க முடியாது. உதட்டளவில் பரிதாபம் காட்டுவதோடு நிற்க மாட்டீர்கள். மாறாக உங்களால் முடிந்த அளவுக்கு அவனுடைய வேதனையைப் போக்க உதவுவீர்கள். எல்லாப் பொறுப்புகளுக்கும் இதுவே பொருந்தும். நமது பெற்றோர்கள், மனைவி, மக்கள்,

உற்றார் - உறவினர், நமது தேசம் ஆகியவற்றின் மீது உண்மையான பற்று இருப்பின் அவைகளுக்கு ஒரு ஆபத்து வந்தால், நமது உதவி இன்றியமையாததாகும் போது நாம் சும்மா இருக்கமாட்டோம். நமது உணர்ச்சிகள் பொய்யானவையாகவும், அசட்டையானதாகவும் இருப்பின் நாம் ஒன்றும் செய்ய மாட்டோம். ஆனால் வாய்ப்பேச்சிலும், உதட்டுறவிலும் காலங்கழித்து விடுவோம். அது காரியத்துக்கு உதவாது. இத்தகைய அலங்கார உபசார வார்த்தைகள் ஒன்றுக்கும் உதவாது. அது சயமை நிறைந்தது. கையாலாகாதது. அது அர்த்தமற்றது.

**வெள்ளிக்கிழமை, 26, ஜனவரி, 1939.**

167. **பெயரும், உருவமுமே மாற்றமடைகிறது. ஆற்றலும், பொருளும் மாற்றமற்றவை.**

**தெளிவுரை:-**

பெயர்களும் உருவங்களும் இடையறாது மாறிக் கொண்டே இருப்பன. ஆனால் பெயர்களுக்கும் உருவங்களுக்கும் காரணமாயுள்ள பொருளும், ஆற்றல் அல்லது சக்தியும் எந்தவித மாற்றமும் பெறுவதில்லை. பரவெளி ஆற்றல், பரம்பொருள் சக்தி இரண்டின் கூட்டுத் தொகை எப்போதும் ஒரே தன்மையுடையது. அதைக் கூட்டவோ குறைக்கவோ இயலாது.

**ஞாயிற்றுக்கிழமை, 27, ஜனவரி, 1939.**

168. **குரு (ஆசான்) சீடன் இருவரிடையிலான உறவு சாதாரணமானதாக இருக்கலாம். ஆன்மநேய உறவாக இருக்கலாம். இரண்டும் கலந்ததாகவும் இருக்கலாம்.**

**தெளிவுரை:-**

பேருண்மை அல்லது இறைமையைக் காண விரும்பும் ஒரு ஆன்மிகவாதி ஒரு மகானிடம் சென்று

உபதேசம் பெறுவார். அவருக்குச் சேவை செய்வார். அவருடைய கட்டளைகளையும் அல்லது பிரசாரங்களை யும் கடைப்பிடிக்க இயலாத நிலையில் ஒரு சாதாரண சீடனாக மட்டுமே இருப்பார். வேறொருவர் ஒரு மகானைத் தேடிச் செல்லமாட்டார். ஆனால் அவருடைய அருளுரைகளைப் படித்திருப்பார். அதைச் செயலிலும் கடைப்பிடிப்பார். அவருடைய பிரதான சீடராகவும் விளங்குவார். ஆன்மிக ரீதியில் உண்மையான சீடராவார். மூன்றாவதான ஒருவர் மகானிடம் செல் வார். உபதேசம் பெற்று அவருக்குப் பார்த சேவையும் செய்வார். அவர் சொன்ன அருளுரைகளை அப்படியே கடைப்பிடித்தொழுவார். இவர் சாதாரண நிலையிலும் ஆன்மிக அளவிலும் உண்மையான சீடராவார்.

**திங்கட்கிழமை, 30, ஜனவரி, 1939.**

**169. ஒவ்வொரு ஒலியுமே, காலம், வெளி, காரண உருவம் மூன்றிலும் உள்ளது.**

**தெளிவுரை:-**

படைக்கப்பட்ட ஒவ்வொரு பொருளும் தூலமாயி னும் சூக்குமமானதாயினும் ஒரு குறிப்பிட்ட காலகட் டத்தில் வெளிப்படுகிறது. அது சிறிது காலம் நிலைத்து நீடிக்கிறது. பிறகு மறைந்து விடுகிறது. அதேபோல் ஒவ்வொரு ஒலியும் சூக்குமமானதாயினும் அதற்கும் ஒரு ஆரம்பம், நிலைத்து ஒலிக்கும் கால அளவு, முடிவு மூன்றும் உண்டு. ஒரு ஒலி முதலில் தோன்றுவது காலத்தைக் காட்டுகிறது. அது தொடர்ந்து நீடித்தால் கால வெளியைக் குறிப்பிடுகிறது. அதன் முடிவு அல்லது வெளியேற்றம் காரண உருவத்தைக் காட்டுகிறது.

**செவ்வாய்க்கிழமை, 31, ஜனவரி, 1939.**

170. ***ஒவ்வொரு எண்ணத்திற்கும் சூக்கும உருவம் உண்டு. ஒவ்வொரு சூக்கும உருவமும் காலம், வெளி, காரண உருவம் ஆகியவற்றில் உள்ளது.***

**தெளிவுரை:-**

ஒவ்வொரு எண்ணமும் மூளை மையத்தில் ஒரு சூக்கும உருவத்தைத் தோற்றுவிக்கிறது. மூளை மையத்தில் சூக்கும உருவத்தின் பிரதிபிம்பம் தோன்றாவிட்டால் எண்ணத்தின் விவரம் புரியாது. ஆசை, எண்ணத்தின் ஒவ்வொரு விவரமும் அந்த ஆசை, எண்ணத்தின் சூக்கும அல்லது கற்பனை உருவத்துடன் இணைந்தே இருக்கும். அது போன்றதொரு கற்பனை உருவம் சில கணங்களே நீடிக்கும். பிறகு மறைந்து விடும். ஆசை எண்ணத்தின் இயல்புக்கு ஏற்பக் கற்பனை உருவம் தோன்றுவதே காலம். மேலும் தொடர்ந்து இருப்பதே வெளி. அதன் முடிவு காரண உருவம். ஆனால் காலம், வெளி, காரண உருவத்திற்கான இந்த விளக்கம் தூலப் பொருள் அல்ல. அது சூக்குமமாகவே உள்ளது.

**திங்கட்கிழமை, 6, பிப்ரவரி, 1939.**

171. ***ஒவ்வொரு கனவும் காலம், வெளி, காரண உருவம் ஆகியவற்றில் உள்ளது. கனவு நிலையில் காலம், வெளி, காரண உருவங்களுக்கான கருத்து விழிப்பு நிலையில் உள்ள கருத்திலிருந்து முழுக்க முழுக்க மாறுபடுகிறது.***

**தெளிவுரை:-**

கனவுலகம், கனவுக்காட்சிகள், கனவு அனுபவங்கள் அனைத்துக்குமே ஒரு ஆரம்பம், தோற்றம், கடைசியும் ஒரு முடிவு போன்றவை உண்டு. ஒரு கனவின் தோற்றம் காலத்தைக் குறிப்பிடுகிறது. அது நிற்கும் நேரம்

வெளியைக் குறிக்கிறது. அதன் மறைவு காரண உருவத்தைக் குறிக்கிறது. ஆகவே ஒவ்வொரு கனவு, கனவு காண்பவரின் அனுபவம் இரண்டுமே காலம், வெளி, காரண உருவத்தில் இருக்கிறது. விழிப்பு நிலையில் காலம், வெளி, காரண உருவத்துக்கான கருத்து, கனவு நிலைக் கருத்திலிருந்து மாறுபட்டது. இவை ஒத்துப் போவதில்லை.

**திங்கட்கிழமை, 6, பிப்ரவரி, 1939.**

172. ***ஒரு பொருள் அல்லது புலன் போகத்துக்கான ஆசை, எண்ணம் ஆகியவற்றிற்கு வேகம் உண்டு. அந்த வேகம் மனத்தின் தூயதன்மை அல்லது மாசுற்ற தன்மையின் அளவுக்கு ஏற்ப மாறுபடுகிறது (மேலோங்கி நிற்கும் குணத்தின் தன்மைக்கு ஏற்ப அமைகிறது.)***

**தெளிவுரை :-**

ஒருவரிடம் தமோகுணம் அதிகமாக இருக்கும் போது மனம் கீழ்த்தர விஷயங்களில் அழுந்திக் கிடக்கிறது. அப்போது புலன் போகங்களின் மீதான ஆசை வலுப்பெற்று நிற்கிறது. அப்படிப்பட்டவனது மனம், புலன்களை அடக்கி ஆள முடியாது. புலன் போகங்களைத் தவிர்க்க முடியாது. ரசோ குணம் மேலோங்கியுள்ள போது மனம் சுறுசுறுப்பாக இயங்குகிறது. தமோ குணத்தவனின் மனத்தைவிட புலன் போகங்களிலுள்ள ஆசையின் வேகம் இவரிடம் குறைந்து போகிறது. இத்தகைய ஒருவர், பகுத்தறிந்து பாடுபட்டால் அவரால் தூலப் புலன் போகங்களின் மீதான ஆசையைக் கட்டுப் படுத்தி அடக்க முடியும். சத்துவ குணம் மனத்தில் வியாபித்து நிற்கும்போது மனம் தூய சூக்கும ஒருமைப்பாட்டைப் பெறுகிறது. எல்லா ஆசைகளின் வேகமும் குறைகிறது. ஒரு சமயம் புலன் போகங்களில் நாட்டம் ஏற்ப

டினும் அவற்றிற்குச் சக்தி இருப்பதில்லை. எளிதில் நினைத்த மாத்திரத்தில் அடக்கிவிடலாம். ஆகவே சத்துவ குணமுடையவன் சுயமாகவே எல்லா விதமான புலன் போகங்களையும் உதறி விடலாம். மூவகைக் குணங்களின் தாக்கத்தால் உண்டாகும் ஆசைப் பற்றின் வேகம், புலன் போக எண்ணத்தின் ஆர்வம் ஆகியவை தூல, சூக்குமக் காரண உருவங்களில் இருக்கும். மேலும் அவை தீவிர, நடுத்தர அல்லது இலேசான அளவுகளில் இருக்கும்.

**திங்கட்கிழமை, 13, பிப்ரவரி, 1939.**

173. ***அன்புக்காகவே அன்பு. கடவுளை தன் ஆன்மவாகவே நேசித்தல், மேன்மையான கன்னியமிக்க அன்பு.***

**தெளிவுரை:-**

அன்பு பலவகைப்படும். பல்வேறு அளவுகளில் விளங்குவது. இந்த எல்லா வகைகளிலும் மிக உன்னதமானது தன் சொந்த ஆன்மாவாகவே நேசிக்கும் அன்பு. ஒருவர் தன் "ஆன்மா" என்ற கருத்தை மறுத்தால் அன்புக்கு அங்கே இடமில்லை. ஒருவர் வேறொரு உயிரை அல்லது பொருளை தான் அல்லது தன்னுடையது எனக் கருத வேண்டும். ஒருவர் வேறொரு உயிரின் மேல் வைக்கும் பற்றும் அன்பும் எவ்வளவு உயரியதாயினும், ஒருவர் கடவுளிடம் கொண்டுள்ள பக்தி அதிகமானதாயினும், சுயநலத்தால் ஏற்பட்டு, கடவுளிடம் பிரதி பயனைப் பின்னணியாகக் கொண்ட மனத்தில் தான் என்கிற கருத்து நிலவும். இப்படிப்பட்ட தன்னல அன்பு தூய குறிக்கோளை உடையது அல்ல. மாறாகக் கடவுளை தன் ஆன்மாவாகவே நேசிப்பவரிடமிருந்து எல்லாவிதமான

எதிர்பார்ப்புகளும் அனைத்துச் சுயநலங்களும் மறைந்தே போகும். கடவுள் மீதான இத்தகைய அன்பும் பற்றுமே உண்மையில் தூய்மையானது. மேன்மையானது

**திங்கட்கிழமை, 13, பிப்ரவரி, 1939.**

**174. ஒரு சொல்லின் வேகமும் பொருளும் அதைக் கூறும் தொனிக்கு ஏற்ப மாறுபடும்**

**தெளிவுரை:**

"முட்டாள்" என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். ஒரு குழந்தை பிறர் பேசுவதிலிருந்து சில வார்த்தைகளைக் கற்றுக் கொள்கிறது அது தன்னுடைய பெற்றோரில் ஒருவரைப் பார்த்து "முட்டாளே" என்கிறது. குழந்தையின் மழலை மொழியில் இந்த வார்த்தை உச்சரிக்கப்படுவதைக் கேட்டதும் பெற்றோர் மனப்பூர்வமாகச் சிரித்து மகிழ்கின்றனர் குழந்தையை மார்போடு அணைத்துக் கொள்கின்றனர். அதே சொல்லை ஒரு கணவன் தன் மனைவியிடம் அவளுடைய சிறிய தவறுகளைப்பார்த்து விளையாட்டாக உபயோகிக் கிறான். அவளுக்கு அது எப்போதோ ஒரு சமயத்தில் கொஞ்சம் உறுத்தலைத் தரும். ஆனால் பல நேரங்களில் அந்தச் சொல் அவளிடம் புன்னகையையே வரவழைக்கும் ஆனால் கணவன் கோபத்தோடு அதே வார்த்தையைச் சொல்லும் போது மனைவி நிச்சயமாக எரிச்சல டைவாள். கோபமாக அவர் மேலேயே திருப்பி விடுவாள். அதே வார்த்தையை கோபமாக வேறொருவனிடம் பேசி னால் பாதிக்கப்பட்டவன் பதிலுக்கு கன்னத்தில் அறையும் அளவுக்கு வளர்ந்து விடும். ஆகவே ஒரு வார்த்தையின் வேகமும் பொருளும் அதை உபயோ கிக்கும் விதத்தைப் பொறுத்தே அமையும்

புதன்கிழமை, 15, பிப்ரவரி 1939.

175. **விதி, முயற்சி எனக்கூறப்படும் இரண்டுமே நம்மிடம் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் இவற்றில் எது வலுவடைகிறதோ அது மற்றொன்றைக் காட்டிலும் மேலோங்கி மற்றதை அமுத்தி விடுகிறது.**

**தெளிவுரை:-**

காரணமும் அதனுடைய விளைவும், கர்மவினையும் அதன் பலனும் தவிர்க்க முடியாதவை. அவை எப்பொழுதும் ஒன்றையொன்று சார்ந்திருப்பவை. ஒருவர் எதை விதைக்கிறாரோ அதையே அறுவடை செய்கிறார். நம்முடைய தற்கால இன்ப துன்பங்கள் நமது முற்பிறவியின் நல்லது கெட்டதுமான செயல்களின் விளைவே. ஆனால் ஒரு மனிதனுடைய வாழ்க்கைக்கு விதி மட்டுமே காரணமாவதில்லை. மற்றொன்றுமுள்ளது. அதுவே நற்காரியங்களை முயன்று செய்வது. நற்காரியங்களைச் செய்வதால் ஒருவர் தன் விதியை வெல்லலாம். ஒரு மனிதன் ஒருவிதச் செயல் முயற்சியுமின்றி தன் விதியையும் கடந்தகால வாழ்வையும் நொந்து கொண்டு இருப்பது சரியானதல்ல. உண்மையில் இது எந்த வகையிலும் ஏற்கக் கூடியதல்ல. விதியும் நன் முயற்சியும் இரண்டு செம்மறி ஆடுகள் ஒன்றுடனொன்று மோதிக் கொள்வதைப் போன்றது. விதி என்ற ஆட்டின் வலிமை அதிகமானால், அது நன் முயற்சி எனும் செம்மறி ஆட்டை வீழ்த்திவிடும். அத்தகைய மனிதனே "விதிவசமானவன்" ஆகிறான். மாறாக நன்முயற்சி என்கிற ஆட்டுக்கிடா வெற்றி பெறுமானால் நன் முயற்சியின் பலனைப் பெறுகிறான். விதிவசமானவனைக் கண்டு நகைக்கிறான். விதி எனும் செம்மறியும், நன் முயற்சி என்கிற செம்மறியும் சம பலத்தோடு இருந்தால் அந்த மனிதனின் வாழ்க்கை போராட்டமாகவே இருக்கும்.

புதன்கிழமை, 15, பிப்ரவரி, 1939.

176. **ஆசைகள் புத்தியினுடைய நேர்மையான செயலை அழித்து விடுகிறது. குழப்பத்தையும், பற்றுதலையும் உண்டாக்கி விடுகிறது. இவ்வுலகில் புத்தியின் இது போன்ற குழப்பமே எல்லாவிதமான வேதனைகள் விபரீதங்களுக்குக் காரணமாகிறது.**

**தெளிவுரை:-**

எதையாவது பெற வேண்டும் அல்லது ஏதாவதொரு புலன்போகப் பொருளை அனுபவிக்க வேண்டும் என்ற ஒவ்வொரு ஆசையும் எண்ணமும் புத்தியின் இயல்பான செய்கையில் குழப்பத்தை உண்டாக்குகிறது. அப்போது புத்தி விபரீதமாகவோ அல்லது மந்தகதியிலோ வேலை செய்கிறது. ஆசையின் பிடியில் சிக்குண்டதினால் ஒருவர் உண்மைகளை மறந்து விடுகிறார். தவறான முடிவுகளை எடுக்கிறார். இதற்கும் மேலாக ஒவ்வொரு ஆசையும் மனோ சக்தியைச் சிதறடித்து விடுகிறது. புத்தியை குறைக்கிறது. சரிவரப் புரிந்து கொள்ளாமல் தவறாக முடிவெடுப்பதால் தீமையைத் தூண்டி பாவச் செயல் களைச் செய்ய வைக்கிறது. இதன் விளைவாக சொல லொணாத வேதனைகளும் விபரீதங்களும் உண்டாகின்றன.

புதன்கிழமை, 15, பிப்ரவரி, 1939.

177. **புலன்போக மயக்கத்தினால் ஒருவர் நியாயத்தை மறந்து விடுகிறார்.**

**தெளிவுரை:-**

ஒரு மனிதன் அழகிய பொருளைப் பார்க்கிறான். அதில் மயங்குகிறான். அதைப் பற்றுடன் நேசிக்கிறான். அவனது ஆரம்பகால நேசத்தின்போது அவன் இயல்

பான சக்தியை இழப்பதில்லை. ஆனால் அவன் அதிக அளவில் பற்று வைக்கிறான். அந்த நிலையில் அவன் முழுமையாகத் தன் பகுத்தறியும் சக்தியை இழந்து விடுகிறான். அச்சமயத்தில் ஒருவர் நேர்மை வழியைக் கூறி புத்திமதி சொன்னாலும் அவருடைய புத்திமதிகள் அவன் காதில் ஏறுவதில்லை. பகுத்தறிவிழந்த அவன் கட்டுப்பாடிழந்து நடந்து கொள்கிறான். அவன் நடந்து கொள்வதற்கும் பைத்தியம் பிடித்தவன் செய்கைகளுக்கும் அதிக வித்தியாசம் இருக்காது. முறை தவறிய மனித னுடைய எல்லா நோக்கங்களும், செயல்களும், நடத்தை களும் பித்துக்குளித்தனமாகவே இருக்கும்.

**வியாழக்கிழமை, 16, பிப்ரவரி, 1939.**

178. சிலர் தங்களைப் பிரம்மஞானிகள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். பாவச்செயல்களைச் செய்கிறார்கள். இப்படிச் செய்யும் ஒவ்வொரு செயலையும் தனது பிராப்த கர்மம் என்று கூறி மறைத்துக் கொள்கிறார்கள். "நாங்கள் செய்யும் கெட்ட செயல்கள் நாங்களாகச் செய்வதல்ல. அது குணதோஷத்தின் விளைவுகள்" என்று கூறித் தப்பித்துக் கொள்கிறார்கள்.

இவர்கள் இப்படியே சொல்லிக்கொண்டு போவ தால் பிரம்மஞானியின் உண்மையான விளக்கத்தையும், இவர்கள் கூறும் வினோதமான கூற்றுக்களின் தவறு களையும் சரிவர எடுத்துக்காட்டிப் புரிய வைப்பது நம் கடமையாகிறது.

பிரம்மஞானத்தை (ஆன்மஞானத்தை) எய்தியவரே பிரம்மஞானி. நிர்விகல்பசமாதி நிலையும், விஞ் ஞானமும் (ஆன்மாவின் பேருண்மை விளக்கம் அல்லது உருவமற்ற இறைமாட்சிப்பேறு) ஒன்றோடொன்று இணைந்திருப்பவை. நிர்விகல்பசமாதியும், பிரம்ம

ஞானத்தையும் எய்த, எண்ணம், சொல், செயலில் இடையறா பிரம்மச்சரியத்தை மேற்கொண்டு பிரம்மச் சரியத்தில் நிலைத்துவிட வேண்டும். கண்டிப்பான பிரம மச்சரியத்தை அனுசரிக்காத ஆண்களும் பெண்களும் நிர்விகல்பசமாதி நிலையை எய்த முடியாது. அது மட்டு மன்று அது போன்றவர்கள் சூக்குமப் பொருள்களை அறிய முடியாது. மேலான பேருண்மையின் விளக்கத் தைப் புரிந்து கொள்ள இயலாது. அவர்கள் பேருண் மைப் பொருளைப்பற்றிப் படித்தாலும், கேட்டாலும், அது அவர்களுக்குப் புரியாது, விளங்காது. இதனாலேயே ஏசு சொன்னார் "பன்றிக்கு முத்துக்களை ஊட்டாதே" என்று! ஒருவர் நிர்விகல்பசமாதியை எய்தி பிரம்மஞானி யாகும்போது எல்லா ஆசைகளும் பாவங்களும் தாமா கவே மடிந்து போகின்றன. அணுவளவு ஆசை, பாபத்தின் நிழல் படிந்திருந்தாலும் அவர் நிர்விகல்பசமாதி நிலை எய்தி பிரம்மஞானி ஆக முடியாது. பிரம்மஞானத்திற்கும் பின்னர் அவர் மூவகைக் குணங்களையும் கடந்தவரா கிறார். (சத்துவம், ராசசம், தாமசம்) அனைத்துத் தீமை களும் மறைந்து விடுகின்றன. அவருடைய விஷயத்தில் பிராப்த கர்மம் என்கிற வார்த்தை பொருளற்றுப் போகிறது. நிர்விகல்பசமாதியை எய்திய பிரம்ம ஞானி உலகாயத உறவு நிலைக்கு இறங்கி வந்த பிறகு தூய ஆன்மசக்தி உதவியினால் தனது உடலில் தங்கி இருக் கிறார். அவரால் எதுவும் முடியும். தனது உடலைப் பற்றிய நினைவு அற்று, மனம் புலன்களை உடலிலிருந்து பிரித்து நினைத்த மாத்திரத்தில் சமாதிக்குள் புக முடியும். இதனால் அவர் உடல் புலன்களுடன் தொடர் புடையவரல்ல. அதனாலேயே பிரம்மஞானிக்கு உடல் கிடையாது என்று கூறப்படுகிறது. இப்பொழுது இந்தக் கூற்றை அப்பட்டமாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

அதன் பொருள் என்னவெனில் ஒரு பிரம்மஞானி தன் உடலில் பற்றற்றவன், உடலை மறந்து விடலாம். நினைத்த மாத்திரத்தில் எவ்வித முயற்சியுமின்றி அதனி லிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளலாம். பிரம்ம ஞானி என்று தன்னைப் பிரகடனப்படுத்திக் கொள்ளும் ஒருவர் குரூர பாபக் கிருத்தியங்களில் ஈடுபட்டால் அது வேறொன்றுமில்லை. குட்டிச்சாத்தான் கதைதான். நய வஞ்சகன் பிறரை ஏமாற்றும் அதே நேரத்தில் தன்னை யும் ஏமாற்றிக் கொள்கிறான். ஒரு பிச்சைக்காரன், நாட கத்தில் ஒரு சக்கரவர்த்தியின் வேடத்தில் தோன்றலாம். அவன் அந்த பாத்திரத்திற்கான உடைகளை அணிந் திருக்கும்வரை அரசன் போல் தோன்றலாம். நாடகம் முடிந்ததும் வேடம் கலைந்து விடுகிறது. மறுபடியும் தெரு வில் பிச்சைப் பாத்திரத்துடன் காண்கிறோம். ஆனால் உண்மையான சக்கரவர்த்தி தெருவில் பிச்சை எடுக்கிறா னென்றால் அதை நம்ப முடியுமா? தன்னைப் பிரம்ம ஞானி என்று சொல்லிக் கொண்டே குரூர பாபச் செயல் களைச் செய்பவன் மோசக்காரன், அயோக்கியன். அவனுக்குத் தகுந்த தண்டனையைத் தந்தே ஆகவேண் டும். பிரம்மஞானி என்று கூறிக்கொள்ளும் வேறு சிலர் "பிராப்த' கர்மம் இப்படி நடத்துகிறது; பிரகிருதியின் குணங்களே இவைகளைச் செய்கிறது. செய்யும் ஒவ்வொரு செயலும் நானாகச் செய்வதல்ல. மனம் சொல்கிறது. புலன்கள் இயங்குகின்றன. எதையுமே நான் செய்வ தில்லை. "நான்" ஆத்மா எனும் உயிர், அந்த ஆத்மா உடலின் ஒரு சாட்சி என்றெல்லாம் உளறுகிறார்கள். வெளிப்படையாகக் கூற வேண்டுமானால் இந்த ரீதியில் பேசுபவர்களுக்குத் தெய்வ தண்டனையும் நரகமும் நிச்சயம், தன்து முழுத் தெய்வீக வாழ்வையும் அழித்துக் கொள்ள இதுவே சுலபமான வழி. நாட்டியக் கலையில்

கைதேர்ந்தவர் அடிபோடு வதில் தவற மாட்டார். முதன் முதலில் கானல் நீரைக் காணும் நாவறண்ட வழிப் போக்கன் தன் தாகத்தைத் தணித்துக் கொள்ள அதனி டம் ஓடுவது திண்ணம். ஆனால் அதன் உண்மையை உணர்ந்ததும் அதைத் தேடுவது வீண் என அம்முயற்சி யைக் கைவிடுகிறான். கானல் நீரைப்பற்றிய தெளிவு ஏற்பட்டதும் அவன் ஏமாறுவதில்லை, ஏமாற்றவும் முடியாது. அதேபோல விவரம் தெரியாத மனிதன் உருவங்களும் பெயர்களும் நிறைந்த உலகத்தை உண்மை யென நம்பி அதன் பின்னே ஓடுகிறான். அவன் பிரம்ம ஞானத்தை எய்தியதும் அறியாமை அழிகிறது. உலகத் தின் பொய்த் தோற்றம் மறைகிறது. அதன் பின்னர் அவன் உலகின் பெயர்கள் உருவங்களைக் கண்டு ஏமாறு வதில்லை. இந்தப் பெயர்கள் உருவங்களின் பின்னணி யில் அவன் ஒரே ஒரு பொருளைத்தான் காண்கிறான். கடவுள் - கடவுளை மட்டுமே காண்கிறான். ஒரு பிரம்ம ஞானியினுடைய உண்மை நிலை, இவ்வாறாயின் அவர் எப்படிப் புலன், புலன் போகப் பொருட்களில் பற்று வைப்பார்? அது போன்ற மனிதனுக்கு குழந்தைகள் எப்படிப் பிறக்கும்? தீய செயல்களை எப்படிச் செய்வான்? ஒரு பிரம்மஞானியிடம் இதெல்லாம் நடக்குமானால் அது சுத்த அபத்தம். பெருங்குற்றம்!

பிரம்மஞானியினிடத்தில் 'பிராப்த கர்மம்' என்ற சொல்லுக்கே இடமில்லை. ஒரு பிரம்மஞானி மூவகைக் குணங்களுக்கும் அப்பாற்பட்டவன். தான் 'தனது' என்ற உடலுணர்வே அற்றவன். மனம் புலன்களை அடக்கி ஆளும் எசமானனாக இருக்கும்போது அவைகளுக்கு அவன் அடிமைப்பட மாட்டான். நினைத்த அளவில் தன் மனத்தை உடல் புலன்களிலிருந்து மீட்டு சமாதியில் நிலைக்கும் சக்தி அவனுக்கு உண்டு. சாதாரணமாகக்கூட

மனத்தின் சிறுபகுதி மட்டுமே அவன் உடல் புலன்களை இயக்குகிறது. மனத்தின் பெரும் பகுதி கடவுளோடு ஐக்கியப்பட்டிருக்கும். உண்மை இப்படியிருக்க, அது போன்ற ஒருவர் எப்படிப் புலன்களுக்கு அடங்கித் தீய செயல்களைச் செய்வார்?

நிர்விகல்ப சமாதி அல்லது மேன்மையான இறை நிலை எய்தியபிறகு ஒரு பிரம்மஞானி எப்படி உலகாயத உறவு நிலைக்கு இறங்கி வரமுடியும்? சாதாரண மனிதனைப் போல எவ்வாறு உடல், புலன்கள் மனத்தை இயக்க முடியும்? அந்த, எட்டமுடியாத உயரத்திலிருந்து ஒருசிலரே கீழிறங்கி வர முடியும். அதுவும் உலகத்தின் நன்மைக்காகத் தெய்வீகச் செய்தியைப் பரப்பும் பணியில் உள்ளவர்கள் மட்டுமே தேவ இரகசிய முறையில் கீழிறங்கி வர இயலும். இவ்வாறு உலகாயத உறவு நிலைக்குக் கீழிறங்கி வரும் நியதி வெளிப்படையாக விளக்க முடியாதது. விளக்க முடியாததை விளக்க பிராப்த கர்ம சித்தாந்தம் பரிசீலனைக்கு அப்பாட்டது. உண்மை என்னவெனில் பிரம்மஞானியை பிராப்த கர்மம் பாதிக்காது. மனத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்ட உடல்புலன்களை தன்னிச்சையாக இயங்க முடியாது என்பது தெள்ளத்தெளிவு. தான் எனும் தன்னுணர்வு அற்ற நிலையில் மனமும் இயங்காது. புலன்களில் ஒன்றை இயக்க வேண்டுமெனில் குறிப்பிட்ட அந்தப் புலன் போகத்தை அனுபவிக்க வேண்டுமென்ற ஆசையும் தன்னுணர்வும் இருந்ததாக வேண்டும். மனம், அகத்தின் உதவியின்றி உடலும் புலன்களும் தாமாகவே இயங்குமெனில் தூக்கத்திலும் கூட உடல் புலன்கள் வேலை செய்ய வேண்டுமே!(உண்பது, பருகுவது நடப்பது போன்ற உடலியக்கச் செயல்கள், முகர்வது, கேட்பது,

பார்ப்பது போன்ற சூக்குமப் புலன் செயல்பாடுகளும் ஆகும்.) ஆனால் நாம் நடைமுறையில் காண்பது ஆழ்ந்த உறக்க நிலையில் இவற்றில் எதுவுமே நடைபெறுவதில்லை.

தானெனும் உணர்வு, மனம் இரண்டும் உடல் புலன்களோடு இணைந்திருக்கும்வரை உடல் புலன்கள் தாமாகவே இயங்க இயலாது என்பதைத் தெரிந்து கொண்டோம். பிரம்மஞானி என்று சொல்லிக் கொள் பவன் பாபச் செயல்களைச் செய்துவிட்டு அதை பிரகிருதியிலிருந்து உற்பவித்த குணங்களின் செய்கைகள் எனக்கூறுவது அப்பட்டமான அயோக்கியத்தனம்

பிரம்மஞானம் எய்தியவர் உலகாயத உறவு நிலை க்குத் திரும்பும்போது அவருடைய தன்னுணர்வு தூய்மை யுற்ற நிலையில் உண்பது, பருகுவது, நடப்பது, பேசுவது போன்ற உடலின் இயல்பான செயல்களைச் செய்கிறார். ஆனால் அவர் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது. எவ்விதத் துராக்கிரக பாபக் கிருத்தியங் களையும் செய்ய இயலாது. ஆக அவரிடமிருந்த விந்துச் சக்தி ஆன்மிக சக்தியாக மாற்றம் பெற்று விடுகிறது. சமாதி நிலையை எய்திய பிறகு, சிற்றின்பம் நீடித்த ஆத்மானுபவ ஆனந்தம் எனும் பிரம்மானந்தமாக மாற்ற மடைகிறது. அத்தகைய உயரிய மனிதன் பாலும் பழமும் காத்திருக்கும்போது ஊசிப்போனதையா உண்பான்? குண்டலினி சக்தி முழுவதுமாக நெஞ்சப் பகுதியில் அமைந்துள்ள ஐந்தாவது சக்கரமான விசுத்த சக்கரத்தை அடையாதவரை ஒருவர் கண்டிப்பான பிரம்மச் சரியத்தில் நிலை பெறமுடியாது. (ஆசிரியரின் "ஆதார சக்தி" என்ற நூலையும் "சாந்தி சக்தி நீண்ட ஆயுள்" என்ற நூல்களையும் தயவு செய்து பார்க்கவும்) சக்தி

முழுவதும் ஐந்தாவது சக்கரத்தை ஒரு முறை அடைந்துவிட்டால் அதன் பிறகு அது கீழ்நிலைச் சக்கரங்களுக்கு இறங்குவதே கிடையாது. குண்டலினி சக்தி கீழ் நிலையிலுள்ள நான்கு சக்கரங்களுக்கிடையில் இயங்கிக் கொண்டிருக்கும் வரைக்குமே ஒருவர் சிற்றின்ப நுகர்வில் ஈடுபட முடியும். ஆனால் அது முழுவதுமாக ஐந்தாவது சக்கரத்துக்கு ஏறிவிட்டால் சிற்றின்ப அனுபவம் பெற முடியாது. ஏனெனில் விந்து வெளிப்படாது. விந்தின் திரவநிலை திண்மை பெற்று "ஓஜஸ்சக்தியாக" மாற்றமடைகிறது. (மாபெரும் மனோசக்தி - ஆன்மிக ஆற்றலாகிறது) அத்தகையவரின் உலகைப் பற்றிய கருத்தின் கோணமே மாறி விடுகிறது., அவர் மனம் எப்போதும் தெய்வீகச் சிந்தனையில் நிலைத்து நிற்கிறது. குண்டலினி சக்தி ஏழாவது நிலைத்தளத்தை அடையும்போது (சகஸ்ரதளம்) ஒருவர் நிர்விகல்பசமாதி நிலையைப் பெறுகிறார். நிர்விகல்பசமாதி எய்திய பின்னர் ஒருவர் உலகாயத உறவு நிலைக்கு இறங்கும்போது அவர் குண்டலினி சக்தியை ஆறாவது சக்கரத்தின் பகுதிக்குக் கொண்டு வருகிறார். அனேகமாக ஐந்தாவது சக்கரத்துடன் நிற்கிறார். அப்படிப்பட்டவர் உலகத்தில் இருந்தும் இல்லாமலிருக்கிறார். உடல் புலன்களின் பாதிப்பு இருப்பதில்லை. இப்படிப்பட்டவர்களின் தன்மையில் நீங்கள் எப்படி ஒரு பிரம்மஞானக் குழந்தை பிறக்கிறது என்று கூற முடியும். பல்வேறு இழிவான செய்கைகளும் பலவீனங்களும் அவரிடம் எவ்வாறு காண இயலும்? ஒரு பிரம்மஞானியிடம் இப்படிப்பட்டவை இருக்கவே இருக்காது.

**வியாழக்கிழமை, 16, பிப்ரவரி, 1939.**

179. **எல்லையற்ற பரவெளியில் முழுக்க முழுக்க "பிரளயம்" (முழுமையான சூனியம் அல்லது அழிவு)**

**நிகழ்வது கிடையாது. உலகங்களில் மட்டுமே பிரளயம் நிகழ்கிறது. அத்தகைய பிரளயம் எல்லையற்ற பர வெளியில் இடையறாது நிகழ்ந்த வண்ணமிருக்கிறது. அதாவது பரந்த சமுத்திரத்தில் நீர்க்குமிழிகள் உண்டாவது, அழிவது மாதிரி அது நிகழ்கிறது.**

**தெளிவுரை:-**

எல்லையற்ற பரவெளியில் ஆரம்பமோ முடிவோ கிடையாது. அதற்கு ஒரு வரையறை இல்லை. படைப்பு, நிலைத்திருத்தல், அழிவு எல்லையில்லாப் பரவெளியில் ஓய்வு ஒழிச்சலின்றி இடையறாது நிகழ்ந்த வண்ணமிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் படைப்பு துவங்கி மற்றொரு குறிப்பிட்ட காலத்தில் முடிகிறது என்பது கால வரம்பு இல்லாத ஒன்றுக்கு காலவரை நிர்ணயிப்பது போலாகும். ஒரு வரம்புக்குட்பட்ட ஒன்று எல்லையற்றது ஆகாது. எல்லையற்ற பரவெளியில் உள்ள எண்ணற்ற உலகங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு ஆரம்பம் முடிவு உண்டு. உலகங்களின் இத்தகைய ஆரம்பமும், இது போன்ற முடிவும் (பிரளயமும்) எல்லையற்ற பரவெளியில் எப்போதும் நிகழ்வது. சமுத்திரத்தின் நீர்ப்பரப்பில் கணக்கிலடங்கா நீர்க் குமிழிகளைப் போன்றது. அதாவது சில குமிழிகள் தோன்றிக் கொண்டேயிருக்கும். சில தோன்றிச் சிறிது நேரம் நீடித்திருக்கும். மற்றும் சில அழிந்துவிடும். அதேபோல கணக்கற்ற உலகங்களின் நிலைத்து நிற்றல், அழிதல் போன்றவை பரவெளியில் நிகழ்ந்தவண்ணம் உள்ளன. ஆனால் எல்லையற்ற பர வெளியில் முழுமையான பிரளயம் என்பது இருக்கவே முடியாது. முழு அகண்டாகார வெளி அல்லது எல்லை யில்லாப் பரவெளி ஒரே நேரத்தில் அழிவது என்று கூறுவது தவறான கருத்து.

முழுவதும் ஐந்தாவது சக்கரத்தை ஒரு முறை அடைந்துவிட்டால் அதன் பிறகு அது கீழ்நிலைச் சக்கரங்களுக்கு இறங்குவதே கிடையாது. குண்டலினி சக்தி கீழ் நிலையிலுள்ள நான்கு சக்கரங்களுக்கிடையில் இயங்கிக் கொண்டிருக்கும் வரைக்குமே ஒருவர் சிற்றின்ப நுகர்வில் ஈடுபட முடியும். ஆனால் அது முழுவதுமாக ஐந்தாவது சக்கரத்துக்கு ஏறிவிட்டால் சிற்றின்ப அனுபவம் பெற முடியாது. ஏனெனில் விந்து வெளிப்படாது. விந்தின் திரவநிலை திண்மை பெற்று "ஓஜஸ்சக்தியாக" மாற்றமடைகிறது. (மாபெரும் மனோசக்தி - ஆன்மிக ஆற்றலாகிறது) அத்தகையவரின் உலகைப் பற்றிய கருத்தின் கோணமே மாறி விடுகிறது, அவர் மனம் எப்போதும் தெய்விகச் சிந்தனையில் நிலைத்து நிற்கிறது. குண்டலினி சக்தி ஏழாவது நிலைத்தளத்தை அடையும்போது (சகஸ்ரதளம்) ஒருவர் நிர்விகல்பசமாதி நிலையைப் பெறுகிறார். நிர்விகல்பசமாதி எய்திய பின்னர் ஒருவர் உலகாயத உறவு நிலைக்கு இறங்கும்போது அவர் குண்டலினி சக்தியை ஆறாவது சக்கரத்தின் பகுதிக்குக் கொண்டு வருகிறார். அனேகமாக ஐந்தாவது சக்கரத்துடன் நிற்கிறார். அப்படிப்பட்டவர் உலகத்தில் இருந்தும் இல்லாமலிருக்கிறார். உடல் புலன்களின் பாதிப்பு இருப்பதில்லை. இப்படிப்பட்டவர்களின் தன்மையில் நீங்கள் எப்படி ஒரு பிரம்மஞானக் குழந்தை பிறக்கிறது என்று கூற முடியும். பல்வேறு இழிவான செய்கைகளும் பலவீனங்களும் அவரிடம் எவ்வாறு காண இயலும்? ஒரு பிரம்மஞானியிடம் இப்படிப்பட்டவை இருக்கவே இருக்காது.

வியாழக்கிழமை, 16, பிப்ரவரி, 1939.

179. எல்லையற்ற பரவெளியில் மூழ்க மூழ்க "பிரளயம்" (முழுமையான சூனியம் அல்லது அழிவு)

***நிகழ்வது கிடையாது. உலகங்களில் மட்டுமே பிரளயம் நிகழ்கிறது. அத்தகைய பிரளயம் எல்லையற்ற பரவெளியில் இடையறாது நிகழ்ந்த வண்ணமிருக்கிறது. அதாவது பரந்த சமுத்திரத்தில் நீர்க்குமிழிகள் உண்டாவது, அழிவது மாதிரி அது நிகழ்கிறது.***

**தெளிவுரை:-**

*எல்லையற்ற பரவெளியில் ஆரம்பமோ முடிவோ கிடையாது. அதற்கு ஒரு வரையறை இல்லை. படைப்பு, நிலைத்திருத்தல், அழிவு எல்லையில்லாப் பரவெளியில் ஓய்வு ஒழிச்சலின்றி இடையறாது நிகழ்ந்த வண்ணமிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் படைப்பு துவங்கி மற்றொரு குறிப்பிட்ட காலத்தில் முடிகிறது என்பது கால வரம்பு இல்லாத ஒன்றுக்கு காலவரை நிர்ணயிப்பது போலாகும். ஒரு வரம்புக்குட்பட்ட ஒன்று எல்லையற்றது ஆகாது. எல்லையற்ற பரவெளியில் உள்ள எண்ணற்ற உலகங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு ஆரம்பம் முடிவு உண்டு. உலகங்களின் இத்தகைய ஆரம்பமும், இது போன்ற முடிவும் (பிரளயமும்) எல்லையற்ற பரவெளியில் எப்போதும் நிகழ்வது. சமுத்திரத்தின் நீர்ப்பரப்பில் கணக்கிலடங்கா நீர்க் குமிழிகளைப் போன்றது. அதாவது சில குமிழிகள் தோன்றிக் கொண்டேயிருக்கும். சில தோன்றிச் சிறிது நேரம் நீடித்திருக்கும். மற்றும் சில அழிந்துவிடும். அதேபோல கணக்கற்ற உலகங்களின் நிலைத்து நிற்றல், அழிதல் போன்றவை பரவெளியில் நிகழ்ந்தவண்ணம் உள்ளன. ஆனால் எல்லையற்ற பரவெளியில் முழுமையான பிரளயம் என்பது இருக்கவே முடியாது. முழு அகண்டாகார வெளி அல்லது எல்லையில்லாப் பரவெளி ஒரே நேரத்தில் அழிவது என்று கூறுவது தவறான கருத்து.*

வியாழக்கிழமை, 16, பிப்ரவரி, 1939.

180. "படைப்பு" என்ற சொல் பொருளற்றது. இந்த வார்த்தையிலிருந்து ஒருவர் என்ன நினைக்கிறார்? 'எதுவுமே இல்லாதிருந்து குறிப்பிட்டதொரு காலகட்டத்தில் திடீரென தோன்றியது போலல்லவா இருக்கிறது! ஒன்றுமில்லாததிலிருந்து எதுவுமே தோன்ற முடியாது. பிரகிருதி சக்தியே (கடவுள் அல்லது பிரம்மத்தின் படைப்பாற்றல்) மனம், உடலாக பரிணமிக்கிறது. உலகம் அல்லது உலகங்கள் பிரம்மனிலிருந்து தோன்றுவன. கடவுளுக்கும், தன் சக்திக்கும் (ஆற்றல்) இடையில் எவ்வித வித்தியாசமுமில்லை. உதாரணத்திற்கு பொன்னைக் கொண்டு பலவிதமான நகைகள் செய்வதை எடுத்துக் கொள்வோம். ஒரு குழந்தையின் பார்வைக்கு அது பொன்னாகத் தெரிவதில்லை. பல்வேறு பெயர்களையும் உருவங்களையும் கொண்ட பலவகை ஆபரணங்களாகவே தோன்றுகின்றன. ஆபரணங்களையே உண்மையானதென நம்புகிறது. ஆனால் பெரியவர்களுக்கு பொன், நகைகள் ஆகிய இரண்டுமே புரிகிறது. அவர்களுக்கு ஆபரணங்களும் அவற்றின் பெயர்களும் மாறுபவையானாலும் உண்மையில் இருப்பது பொன்தான் எனப் புரிகிறது. பொன் இல்லாமல் பல்வேறு நகைகள் உருவாக முடியாது. இந்த நகைகளில் பலவகைப் பெயர்களும் உருவங்களும் மறைந்து போனாலும் பொன் மட்டும் மாறுவதில்லை. இதேபோலப் பெயர்களும் உருவங்களும் கொண்ட உலகம் கடவுள் இன்றி இருக்க முடியாது. உலகம் கடவுளிலிருந்து மாறுபட்டதல்ல. இந்த உலகிலுள்ள உருவங்களையும் பெயர்களையும் எடுத்து விடுவோம். எஞ்சி நிற்பது கடவுள் - கடவுள் மட்டுமே! அறியாமையினால் மனிதன் இவ்வுலகின் பெயர்களையும் உருவங்களையும் உண்மையென நம்பி, கடவுளை மறந்து

விடுகிறான். கடவுள்தான் இவ்வகிலத்தின் மூலகர்த்தா என்பதையும் மறக்கிறான். ஆனால் ஒரு ஞானி (வாலறிவன்) முதலில் கடவுளையே காண்கிறான். பிறகே கடவுளால் படைக்கப்பட்ட பெயர்களையும் உருவங்களையும் பார்க்கிறான். உண்மை அறியாத மனிதன் அல்லது ஆன்மிகத்தைப் பயில்பவன் ஒவ்வொன்றையும் ஒதுக்கித் தள்ளிக் கொண்டே பேருண்மையை நோக்கி முன்னேறுகிறான். அதாவது நேதி, நேதி (இதுவல்ல, இதுவல்ல) என்று கூறிக்கொண்டே போகிறான். ஆனால் அவன் கடவுளை உணர்ந்த பிறகு ஏதி, ஏதி (இதுவே அது, இதுவே அது) என்று கூறியபடி நெருங்குகிறான். கடவுளை உணர்ந்தபிறகு ஒருவர் ஒவ்வொரு பொருளிலும் கடவுளையே பார்க்கிறார். அவருக்கு கடவுளுக்கும் உலகத்துக்கும் இடையே உள்ள வித்தியாசம் மறைந்து விடுகிறது. ஆகவே அகிலம் முழுவதும் கடவுளன்றி வேறில்லை. அது கடவுளை விடுத்து இருக்க முடியாது. அகிலம் கடவுள்கூடவே உற்பவிக்கிறது. பிரம்மம் (கடவுள்) ஒன்றுமில்லாத என்ற நிலையே எப்போதும் இருந்ததில்லை. பிரம்மம் ஒன்றுமில்லாத என்ற நிலை எப்போதும் இருக்கப் போவதுமில்லை. அது அகிலத்தின் கூடவே இருப்பது. உண்மை இவ்வாறிருக்க படைப்பு எப்போது ஆரம்பித்தது என்று கேட்பதும் எப்பொழுது அது முடிவுறும் என்று வினவுவதும் கடவுள் எப்போது படைக்கப்பட்டார், எப்போது இறப்பார் என்று கேட்பது போன்றதாகும். இத்தகைய கேள்வி கத்த அபத்தமானது. இந்த அகிலத்தின் மூலத்தையும் முடிவையயும் காண முயல்வது நிர்மூடத்தனம். ஆன்மா (உயிர்) எப்போதும் சுதந்திரமானது. ஆரம்பமில்லாதது. முடிவற்றது. அதற்குப் பிறப்பு இல்லை. வளர்ச்சி இல்லை.

அழிவு இல்லை. மரணமில்லை. ஆண் பெண் பேதமில்லை. சாதி மதம் கிடையாது. அறியாமையினால் மனிதன் தன்னை அழியும் உடலாக பாவித்துப் தனக்குப் பிறப்பு, வளர்ச்சி, அழிவு, மரணம், ஆண் பெண் பேதம் போன்றவை உண்டு என எண்ணிக் கொள்கிறான். ஆனால் அதே மனிதனிடம் அறியாமை விலகும்போது பேருண்மைப் பொருளை உணர்கிறான். தன்னை ஆத்மா வாகவே காண்கிறான். பந்தம் அல்லது விடுதலை, உயிர் அல்லது மரணம், போன்றவை பொருளற்றது என்பது அவனுக்குப் புலனாகிறது. அவனுள்ளிருக்கும் ஆன்மா எதற்கும் கட்டுப்பட்டதல்ல என்பதையும் தெளிகிறான். தான் இல்லாதிருந்த காலம் இருந்ததில்லை. தான் இல்லாமற்போகும் காலமும் இருக்கப் போவதில்லை என்பதையும் புரிந்து கொள்கிறான். படைப்பு எப்போது, ஏன் போன்ற கேள்விகள் அறிவீனத்தினால் விளையும் கேள்விகள். ஞானத் தெளிவில் தோன்றுபவை அல்ல. ஒரு மனிதன் சமாதி நிலையை எய்திய பிறகு இப்படிப்பட்ட கேள்விகள் அவனிடம் தோன்றுவதில்லை. இதைப் போன்ற கேள்விகள் அவனுக்கு அர்த்த மற்றவையாக இருக்கிறது.

ஞாயிற்றுக்கிழமை, 19, பிப்ரவரி, 1939.

181. சாதகமான காற்று வீசும்போது நீரோட்டத்தின் கூடவே செல்லும் படகின் நிலையை ஒத்தது, பெயர், புகழோடு கூடிய மனிதனுக்குள்ள செல்வச் செழிப்பான சூழ்நிலை. ஆனால் ஒரு படகு வேகமான நீரோட்டத்தை யும், பலத்த காற்றையும் எதிர்த்து முன்னேறும் நிலையைப் போன்றது மாறான சூழ்நிலைகளில் ஒருவனுக்குள்ள துரதிர்ஷ்ட நிலை.

தெளிவுரை:-

நற்காலம் சுழலும் சக்கரத்துக் கொப்பானது. அது நிலையாக இருப்பதில்லை. கெட்டகாலம் அதைத் தொடரும். இரண்டு நிலைகளும் முடிந்தபிறகே சக்கரத்தின் ஒரு சுற்று முடியும். "கோடைகாலத்திற்குப் பிறகு மாரிக்காலம் வருவது நிச்சயம்" என்பது கவிஞன் வாக்கு. நல்லகாலத்தின்போது ஒருவனுக்குச் செல்வம், பெயர் புகழ், மனோவலிமை, திடகாத்திர உடல் எல்லாம் இருக்கும். அப்போது வாழ்வு மிகவும் மேன்மையான தாகத் தோன்றும். மகிழ்ச்சி நிறைந்து காணும். ஒரு படகு நீரோட்டத்தின் போக்கில் சாதகமான காற்றின் உதவியில் லாகவமாக ஓடும் நிலையை ஒத்ததே இது.

ஆனால் கெட்டகாலம் தொடங்கியதும் மன அமைதி, நன்னம்பிக்கை, பணம், பெயர், புகழ், அனைத்தையுமே இழக்க நேரிடுகிறது. அவனுக்கு எதிலும் நம்பிக்கை இருப்பதில்லை. வாழ்க்கையும் அவனுக்கு வெறுத்துப் போகிறது. இதுபோன்ற மாறுபட்ட சூழ்நிலை யில் உள்ள மனிதனின் வாழ்வை, ஒரு படகானது வெள்ளத்தையும் எதிர்க்காற்றையும் மீறி முன்னேறுவதைப் போன்றது.

**செவ்வாய்க்கிழமை, 7, மார்ச் 1939.**

**182. ஒலி சக்தி படைத்தது, அதன் உரத்த தன்மைக் கேற்ப அது ஒலிக்கும்.**

தெளிவுரை:-

சக்தியே ஒலியை உண்டாக்குகிறது. அதே சக்தியே ஒலியைப் பரப்புகிறது. சக்தியின்றி ஒலி இல்லை. ஒரு கல்லை மற்றொரு கல்லின் மீது உராய்க்கும் போது தீப் பொறி வெளிப்படுகிறது. இது சக்தியின் வெளிப்பாடே

சாதாரணமாக இடியோசையைக் கேட்பதற்கு முன்பே மின்னலைக் காண்கிறோம். இதேபோல் தூய மன ஒருமைப்பாட்டு நிலையில் மெலிதான ஒலி அலையின் வேகத்தையும் உணர முடியும். தூரத்தில் முழங்கும் பீரங்கிச் சத்தம் கேட்டவுடன் தகரம் மேய்ந்துள்ள கூரைகள் அதிர்வதைக் காண்கிறோம். உரத்த ஒலியின் வேகத்தின் நிலையை இது விளக்குகிறது. மனம் தூய்மை பெற்றுருக்கும் ஒருநிலைத் தன்மையை எய்தியதும் ஒரு வானொலிப் பெட்டியின் அலை அதிர்வுகளை உணர முடியும். இந்த அதிர்வைப் பெட்டியிடமிருந்து பத்து அடி தூரத்திலிருக்கும் போது கூட உணர முடியும்.

**சனிக்கிழமை, 14, ஏப்ரல், 1939.**

183. ஒருவனுக்கு உடலும், உடலைப்பற்றிய எண்ணமும் இருக்கும் வரையும், நோய்கள், மரணம் போன்ற பயம் உள்ளவரைக்கும் அவன் நாத்திகவாதியாக இருக்க முடியாது. ஆகவே உண்மையைப் பார்க்கப் போனால் இவ்வுலகில் நாத்திகனே இருக்க முடியாது. அறியாமையினால் ஒருவர் கடவுள் இல்லை என்று சொல்லலாம். "கடவுள்" என்ற சொல்லை உபயோகிக்காமலிருக்கலாம். ஆனால் அவருடைய அந்தரங்க மனம் அனைத்துக்கும் மேலான ஒன்று இருக்கிறது என்று உணர்கிறது. இவ்வுலகை ஆட்டிப்படைக்கும் சக்திகளுக்கெல்லாமான பேராற்றல் ஒன்று இடையறாது இயங்கிக் கொண்டிருப்பதும் தெரிகிறது. கடவுள் இல்லை என்று பறைசாற்றும் அதே நேரத்தில் ஒருவர் அனைத்தையும் கட்டுப்படுத்தும் இயற்கை, சக்தி அல்லது ஆற்றல் ஒன்று உள்ளது என்று ஒப்புக் கொள்கிறார். இவை எல்லாமே உண்மையில் பலதரப்பட்ட பெயர்களால் குறிக்கப்படும் ஒன்றேயான கடவுளின் பெயரேயாகும்.

**வெள்ளிக்கிழமை, 1, டிசம்பர், 1939.**

184. ***கத்திக்கு உறையைப் போல் ஆன்மாவுக்கு உடல்.***

**தெளிவுரை:-**

உறையினுடைய உபயோகம் கத்தியைப் பத்திரப் படுத்தி வைத்துக் கொள்வதே. கத்தியில்லாத உறைக்கு மதிப்பில்லை. அதேபோல் உடல் ஆன்மாவுக்காகவே உள்ளது. ஆன்மா இல்லாத உடலுக்கு மதிப்பு இல்லை. அது உயிருடனிருக்க இயலாது. உடலில் ஆன்மா தங்கியுள்ள வரைக்குந்தான் உடல் உயிருடனிருக்கிறது. ஆகவே உடலின் குறிக்கோள் ஆன்மாவை உணர்வதே யாகும். இந்த எண்ணம் ஈடேறாத வரைக்கும் உடலை பத்திரமாகப் பேணிக் காக்க வேண்டும்.

**ஞாயிற்றுக்கிழமை, 7, ஜனவரி, 1940.**

185. பெருமை என்பது பலதரப்படும். அதாவது பிறப்பின் பெருமை (குறிப்பிட்ட செல்வச்செழிப்புள்ள பாரம்பரிய குடும்பப்பெருமை) நல்ல பெற்றோர்கள் எனும் பெருமை (புகழ்மிக்க தாய் அல்லது தந்தைக்குப் பிறந்தவர்கள் என்ற பெருமை) சாதிப்பெருமை, செல்வந்தன் எனும் பெருமை, இளமையில் பெருமை, அழகில் பெருமை, பெயர் புகழ் பெருமை, வெற்றியின் பெருமை, நாட்டுப் பெருமை, அறிவிற்சிந்தவன் என்ற பெருமை (புத்திசாலி என்ற பெயர்), உடையலங்காரத்தின் பெருமை போன்ற வையாகும். இந்த எல்லாவகைப் பெருமைகளுமே ஒருவனை உயர்த்தாது. அவனைப் பற்றில் சிக்கவைத்து தவறான பாதையில் கொண்டு செல்லும். செருக்குள்ள மனிதனின் புத்தி அதீதமாகவோ அல்லது மந்தமாகவோ செயல்படும். அப்படிப்பட்டவன் பேருண்மை அல்லது கடவுளில் இருந்து விலகியே நிற்பான்.

**ஞாயிற்றுக்கிழமை, 7, ஜனவரி, 1940.**

**186. *படைப்பு காலம், வெளி, காரணத்தில் நிற்பது. காலம், வெளி, காரணம் யாவும் மனத்தில் தோன்றுவது. ஆகவே அகிலத்தில் படைக்கப்பட்டுள்ள எல்லாவற்றையும் விட மனமே பெரியது.***

**தெளிவுரை:-**

*சூக்கும தூலப் பெயர்களும், வடிவங்களும் கொண்ட அகிலம் முழுவதுமே ஒரு ஆரம்பத்தை உடையது. ஒவ்வொரு பெயரும், உருவமும் சிறிது காலமே இருந்து பின்னர் மறைகிறது. ஒன்று முதலில் தோன்றுவது காலத்தைக் குறிப்பிடுகிறது. அது உயிருடனிருக்கும் நிலை வெளியைக் குறிப்பிடுகிறது. அதன் மறைவு காரணத்தைக் காட்டுகிறது. காலம், வெளி, காரணம் யாவும் மனத்தில்தான் உள்ளது. மனத்தின் உதவியின்றி நாம் எதையும் புரிந்து கொள்ளவோ உருவாக்கவோ இயலாது. படைப்புக்கு முன்னர் கடவுளின் படைப்பாற்றல் பரவெளியின் மனோசக்தியாக ஆகிறது. அதன்பிறகு படைப்பு துவங்குகிறது. படைக்கப்பட்ட எல்லாப் பொருள்களைக்காட்டிலும் மனமே முதலும் மேன்மையானதும், மிக முக்கியமானதுமாகும்.*

**வெள்ளிக்கிழமை, 12, ஜனவரி, 1940.**

**187. *ஒவ்வொரு ஒலியும் இருவகைச் சூக்கும உருவங்களை உடையது. அதாவது ஒலி உருவம், பொருள் உருவம்.***

**தெளிவுரை:-**

*ஒவ்வொரு ஒலியும் இருவகை சூக்கும உருவங்களை உடையது. அதாவது ஒலி உருவம், பொருள் உருவம். ஒரு உருண்டையான கல்லோ, பந்தோ தரையில் விழுந்தவுடன் உருண்டை வடிவத்தை உண்டாக்குகிறது. ஒரு*

கொம்பு தரையில் விழுந்ததும் நீண்ட வடிவத்தை உண்டாக்குகிறது. நீர்வீழ்ச்சி நீண்ட தொடர்ச்சியான உருவத்தை எற்படுத்துகிறது. கீழே சாயும் மரம் அல்லது பீரங்கி ஓசை வேறுவகை உருவத்தை உண்டாக்குகிறது. ஒலி அல்லது ஓசையின் கூடவே மனம் அதன் சூக்கும உருவத்தை வாங்கிக் கொள்கிறது. அதை மனக்கோப்பிடம் (சித்தத்திடம்) கேட்ட சத்தத்தின் விவரம் அல்லது அர்த்தத்தை அறிய அனுப்புகிறது. அனுப்பிய பொருள் தெரிந்தவுடன் அதன் உருவத்தைப் படம்போட்டுக் காட்டுகிறது. இந்த உருவப்படமே பொருள் வடிவம். உதாரணமாக நீங்கள் கீழே விழும் கால்பந்தின் ஓசையைக் கேட்பதாகக் கொள்வோம். முதலில் ஓசைக்கான உருவம் வருகிறது. அந்தக் குறிப்பிட்ட ஓசை உருவத்தின் விவரத்தைச் சித்தத்திலிருந்து தெரிந்து கொள்கிறது. அதன்பிறகே யாரோ ஒருவர் தரையில் கால்பந்தை விசிய விவரத்தைப் புரிந்து கொள்கிறீர்கள். கால்பந்தின் வடிவம் அல்லது கருத்து உங்கள் மனத்தில் தோன்றுகிறது. கால்பந்தின் இத்தகைய கருத்து அல்லது கால்பந்தின் உருவ அமைப்பு இரண்டாவது நிலையில் ஏற்பட்டு அதை மனம் படம்போட்டுக் காட்டுகிறது. ஆகவே ஒரு ஒலியைக் கேட்டதும் ஒருவர் மூளை மையத்தில் இருவகை சூக்கும உருவங்களைத் தோற்றுவிக்கிறார். இவைகளின்றேல் விவரங்கள் புரியாமற் போகும்.

சனிக்கிழமை, 13, ஜனவரி, 1940.

188. ஒலியின் சக்தி இரு வேறு பொருள்கள் உராயும் வேகத்தைப் பொறுத்து மாறுபடுகிறது. ஒலியின் தொனி பெரிதானால் அதன் வேகமும் அதிகமாகும். அப்போது வேகம் வெகு தூரத்துக்குப் போகும்.

தெளிவுரை:-

இரண்டு பொருட்களின் உராய்வினால் உராய்த லின் அழுத்தத்திற்கேற்ப மெல்லிய அல்லது உரத்த ஒலியைப் பெறுகிறோம். முன்னரே கூறியபடி ஒவ்வொரு ஒலியுமே இருவேறு பொருள்கள் உராயும் அழுத்தத்திற் கேற்ப அமையும் ஒருவகை சக்தி. குறைந்த ஒலியைவிட உரத்த ஒலி துரிதமாகவும் வெகுதூரத்திற்கும் செல்கிறது.

**திங்கட்கிழமை, 16, ஜனவரி, 1940.**

189. மனிதன் முகஸ்துதிக்கு அடிமையாகிறவன். அதற்கு அவன் ஏமாந்து விடுகிறான். பெரும்பாலானவர்கள் அபத்தம் கலந்த சாகச வார்த்தைகளைக் கேட்டு மயங்கி விடுகின்றனர். தங்களைப்பற்றி மிகையில்லாமல் வெளிப் படையாக இருப்பதைச் சொல்வதை விரும்புபவர்கள் வெகு சிலரே. அத்தகையவர்கள் நாளாவட்டத்தில் அதனால் நல்ல பயன் பெறுவார்கள். ஆனால் நாம் அதைக் கேட்கும்போது அது நம்மைக் கண்டித்து திருத்தி நமக்கு நன்மையைத்தரும் நல்ல வார்த்தைகளே யன்றி முகஸ்துதியைப் போன்றதல்ல. இதில் கண்டிப்ப தால் ஏற்படும் வேதனையே நம்மைத் திருத்தி முன்னேறச் செய்கிறது. மகிழ்ச்சியில் இது கிட்டுவ தில்லை. ஆகவே முகஸ்துதி செய்பவனை ஒதுக்க வேண் டும். அந்த வார்த்தைகளக் கேட்பதற்கு வெட்கப்பட வேண்டும். அதே சமயம் நம்மைத் திருத்துபவனை நேசித்து வரவேற்க வேண்டும். நாளாவட்டத்தில் இதை ஒரு நல்ல கொள்கை என்பதை உணர முடியும்.

**செவ்வாய்க்கிழமை, 17, ஜனவரி, 1940.**

190. **இவ்வுலகில் மூவகை முட்டாள்கள் உண்டு. உள்ள படியே உள்ள முட்டாள்கள், படித்த முட்டாள்கள்,**

பணக்கார முட்டாள்கள். இவர்களாலேயே உலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

தெளிவுரை:-

இவ்வுலகில் மூன்றுவிதமான முட்டாள்கள் இருக்கிறார்கள். முதல்வகையினர் பிறக்கும்போதே முட்டாளாகப் பிறந்து வாழ்க்கை முடிவு வரை முட்டாளாகவே இருப்பவர்கள். இரண்டாவது வகை முட்டாள்கள் படித்த முட்டாள்கள். இவர்கள் தங்களைப் படித்தவர்களென்று கூறிக்கொண்டு புத்தக அறிவைப் பெற்று சில பட்டங்களையும், புலமையையும் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் சில கருத்துக்களை கிளிப்பிள்ளையைப் போலத் திருப்பித்திருப்பி அழகாகப் பேசுவார்கள். அவர்களிடம் நன்னடத்தை இருக்காது. தங்கள் கொள்கையை நிலை நாட்டும், உறுதியில்லாத முதுகெலும்பு அற்றவர்கள். தங்கள் சொந்தக் காலில் நிற்க இயலாதவர்கள். அவர்கள் வேறு சிலருடைய குறிப்பிட்ட கருத்துக்களை எடுத்துக் கையாள்கிறார்கள். அதனால் அவர்கள் மூலப்படைப்பாளிகளின் அடிமைகளாகிறார்கள். பேருண்மையையும் மெய்ஞானத்தையும் புரிந்து கடைப்பிடிக்கும் உண்மையான முயற்சியை மேற்கொள்ள மாட்டார்கள். அவர்களை நாகரிகமான முட்டாள்கள் என்றழைப்பது மிகவும் பொருத்தமானது. மூன்றாவது வகை முட்டாள்கள் பணக்கார முட்டாள்கள். ஏற்கனவே செல்வத்தைச் சரியான வழியில் செலவழிப்பது மிகவும் கடினம் எனக் கூறியுள்ளோம். பெரும்பாலான பணக்காரர்கள் பணத்தைத் தவறான முறையில் செலவழிக்கின்றனர். அடிக்கடி அவர்கள் புகழ்ச்சிக்கும் எல்லாவிதத் தீமைகளுக்கும் பலியாகி விடுகிறார்கள். செல்வம் அவர்களைப் பண்பற்றவர்களாக்கி விடுகிறது. மன அமைதியைக்

குலைக்கிறது. குரூர புத்தியைக் கொடுக்கிறது. சீக்கி ரத்திலேயே அறிவீனத்துக்கு ஆளாக்கி கெடுதிகளுக்குப் பலியாக்குகிறது. இவர்களே பணக்கார முட்டாள்கள். அறியாமையே முட்டாள்தனத்திற்கும் பற்றுகளில் உழல் வதற்கும் காரணமாகிறது. மக்களின் மூடத்தனம், பற்றில் உழலல் போன்றவை மூலமே மாயா உலகம் (கடவுளின் மாயாசக்தி) தொடர்கிறது. தொடர்ந்து கொண்டே இருக்கிறது. முட்டாள்களே இல்லையெனில் எல்லோ ருமே மோட்சத்தை (வீடுபேற்றை) எய்தி விடுவார்கள். உலகமே ஒரு முடிவுக்கு வந்துவிடும்.

**வெள்ளிக்கிழமை, 12, ஏப்ரல், 1940.**

191 **ஒவ்வொரு ஆசையுமே ஒரு தேவையாக உள்ளது. ஒவ்வொரு தேவையும் எதிர்மாறானது.**

**தெளிவுரை:-**

நமக்குத் தேவைப்படும்போது நாம் அதற்கு ஆசைப் படுகிறோம். அது போன்று ஒவ்வொரு ஆசையுமே ஒரு தேவைக்குதான். நம் கையில் இல்லாதிருப்பதையே நாம் தேவை என்கிறோம். நம்மிடம் இல்லாத பொருளுக் காகவே நாம் ஆசைப்படுகிறோம். நம்மிடம் எது இருக் கிறதோ அதற்காக ஆசைப்படுவதில்லை. எல்லா இடத் திலும் எல்லாவற்றிலும் ஒரே பொருளைப் பார்க்கும் போது நமது ஆசைகளும் தேவைகளும் தாமாகவே மறைந்து விடுகிறது. மாறாக நாம் விரும்பும் அல்லது வெறுக்கும் பல்வேறு பொருள்களைப் பார்த்து விருப்பு வெறுப்புகளை நாம் அடைய வேண்டும் அல்லது ஒதுக் கித் தள்ளவேண்டும் என நினைக்கும் போது நம் மனங்களில் ஆசை எழுந்து விடுகிறது. ஆகவே ஒவ்வொரு ஆசையுமே ஒரு தேவைதான். நாம் காணும் ஒவ்வொரு தேவையும் முரண்பட்டவையாகவே உள்ளன.

ஞாயிறு, 21, ஏப்ரல், 1940.

192. *சந்நியாசம் இரண்டு வகையாகும். அதாவது உள்ளும், வெளியும். இதுவே பண்டைய முறையிலுள்ளதும் உண்மையானதும் ஆகும்.*

தெளிவுரை:-

வீடு வாசலைத் துறப்பது, உற்றார் உறவினரை விடுத்துப்போய் கானகந் தேடிச் செல்வது, குகையிலும் மரங்களின் அடியிலும் வசிப்பது, நிர்வாணமாகவோ கௌபீனத்துடனோ திரிவது, தன்னுடைய உடலைப் பேணுவதற்கு பிச்சையெடுத்துண்பதோ தளிர் இலைகள் வேர்களை உட்கொள்வது இவை-அனைத்தும் பண்டைய நடைமுறையிலான சந்நியாசம். ஒருவர் வெளிப்புறப் பார்வைக்கு அனைத்தையும் துறந்து விடலாம். எனினும் அவருடைய உள்ளத்தில் பெயர், புகழ் போன்றவற்றுக்கான பல்வேறு நிறைவேறாத ஆசைகள் இருக்கலாம். அவரிடத்தில் சிறிய அளவு ஆசை ஒட்டிக் கொண்டிருந்தாலும் சந்நியாசம் முழுமை பெறாது. மதிப்பில் குறைவானது. ஒரு மனிதர் முழுமையாக எல்லா ஆசைகளையும் விடுத்துப் புலன்களையும் மனதையும் கட்டுப்படுத்த வேண்டும். அவன்தான் தூய்மையான சந்நியாசி. ஒருவர் புலன்களை அடக்காமல் மனத்தையும் கட்டாமல் இருப்பின் சந்நியாசம் என்பதின் உண்மைப் பொருளுக்கு உதாரணமாக நிமிர்ந்து நிற்க முடியாது. மாறாக ஒருவர் புலன்போகங்களுக்கிடையில் மனைவி மக்கள் உற்றார் உறவினருடன் வாழலாம். அவர் விரும்பியதை உண்ணவும் பருகவும் வசதிகள் இருக்கலாம். ஆயினும் அவர் எதன் மீதும் ஒட்டுதல் இல்லாமல் எதையும் தேடி அலையாமல், எதற்கும் ஆசைப்படாமல் இருந்தால் அவரே உண்மையான சந்நியாசி. ஒருவருடைய உள்

மையான ஆன்மிக மேம்பாட்டுக்கான வளர்ச்சிக்கு உள்ளும் புறமும் துறத்தலே சரியான பாதை. ஆனால் உள்ளத்துறவு மிக மிக இன்றியமையாதது. முக்கிய மானது இது இன்றேல் ஆன்மிக முன்னேற்றம் கிட்டாது.
**வெள்ளிக்கிழமை, 26. ஏப்ரல், 1940.**

193. ***அகந்தையே ஆசைக்குக் காரணம். ஆசையே எண் ணத்தின் மூலம். எண்ணமே மனோ உளைச்சலுக்கும் அலைச்சலுக்கும் காரணம். அகந்தை, ஆசை, எண்ணம், மனோ பலவீனம் அனைத்தும் வேற்றுமை நிலையில் விளைவன. அதாவது ஒற்றுமையில் வேற்றுமையைக் காணும்போது தோன்றுவன. ஒருவர் ஒரே மெய்ப் பொருளைக் காணும்போது இவை அனைத்துமே அடி பட்டுப் போகின்றன. பிறகு அவர் ஆன்மீகப் பேரா னந்தத்தில் திளைக்கிறார்.***

**தெளிவுரை:-**

ஆசைக்குக் காரணம் அகந்தை. அகந்தை இன்றேல் ஆசை இல்லை. எண்ணத்தின் சூக்கும உருவம் ஆசை. ஆசை வலுப்பெற்றால் அது எண்ணமாகிறது. ஒவ்வொரு எண்ணமும் ஒரு சக்தி. ஒவ்வொரு சக்தியும் வெளியேறும் போது ஒருவர் குறிப்பிட்ட அளவு மனோ சக்தியை இழக்கிறார். ஆகவே ஒவ்வொரு எண்ணமும் மனோ சக்தியைச் சிதறடிக்கிறது.

ஒவ்வொரு எண்ணத்தின்போதும் அந்த எண்ணத்தை மனத்திரையில் பதிக்கிறார். அதனால் எண்ணம் இருநிலைக்குக் காரணமாகிறது. இவை இப்படி இருக்க வெளிப்புறப் பொருள்களைக் கண்டதும் அவற்றை அடைய வேண்டுமென்ற ஆசை எண்ணத்தை உண்டாக்குகிறது. இருநிலைக் கருத்தை உருவாக்குகிறது. அகந்தை, ஆசை, எண்ணம், மனோ பலவீனங்கள்

போன்றவை. இரு நிலைத்தன்மையைக் கண்டவுடன் வெளிப்படுகின்றன. பல்வேறு கூறுகளை ஒன்றாக பாவிக்கும்போது இரு நிலைக் கொள்கை மறைந்து விடுகிறது. அகந்தைக் கருத்து, ஆசை, எண்ணங்கள் அனைத்துமே தாமாகவே மறைந்து விடுகின்றன. பிறகு ஆசைகள் குறுக்கிடாத நிலையில், வேற்றுமைகள் அற்ற நிலையில் ஒருவர் தன்னுள் ஒளிரும் பேருண்மை இயல்பையே காண்கிறார்.

**சனிக்கிழமை, 27, ஏப்ரல், 1940.**

194. ***இயமம், நியமத்திற்கான விதிமுறைகளைக் (கொல்லாமை, கள்ளாமை, வாய்மை போன்றவைகளை) கண்டிப்புடன் பின்பற்றுவது (சொல்லாலும் உள்ளத்தாலும்) சமாதி நிலையில் மட்டுமே இயலும். சமாதி நிலை எய்தும் வரைக்கும் நிகழும் வாழ்வின் பொருள் அறநெறிகளை எண்ணம், சொல் அல்லது செயலில் உடைத்தெறிவதாகும்.***

**தெளிவுரை:-**

உதாரணத்திற்கு எண்ணம், சொல், செயலில் கொல்லாமை எனும் அகிம்சையை எடுத்துக் கொள்வோம். அதன் பொருள் என்னவெனில் ஒருவர் மற்றவரிடம் பகைமை பாராட்டக் கூடாது. வெறுக்கக் கூடாது. எண்ணத்தில்கூடப் பிறரைப் புண்படுத்தக்கூடாது ஆனால் இவ்வுலகில் வாழும் வாழ்க்கை மற்றொருவர் வாழ்க்கையைச் சார்ந்தே உள்ளது. பலவான் வாழ்வுக்குப் பலவீனன் பலியாகிறான். கீழ்நிலை உயிர்கள் உயர்நிலை உயிர்களுக்கு உணவாகின்றன

புத்திசாலியாகவுள்ள ஒருவன் சட்டங்களை வகுத்து மற்றவர்களை அடக்கி ஆள்கிறான். நாம் சாப்பிடும்

போதும் பருகும்போதும் கணக்கற்ற சிறு உயிர்களை அழிக்கிறோம். பேசும்போதும் மூச்சுஇழையும்போதுங் கூட அனேக உயிர்கள் கொல்லப்படுகின்றன. ஆகவே கண்டிப்பான அகிம்சைக் கொள்கைளை ஒருவனால் வாழ்க்கையில் கடைப்பிடிக்க முடியாது. உண்மையான அகிம்சைக் கொள்கையும், இயம - நியம விதிகளையும் நிர்விகல்பசமாதி நிலையில் மட்டுமே உள்ளத்தாலும் சொல்லாலும் கொண்டொழுக முடியும். இந்த உன்னத நிலையில் மனம் ஆன்மாவில் தானாகவே ஒன்றுகிறது. மூச்சு இழைவது தானாகவே நிற்கிறது. அந்த மனிதன் ஆசைகள், உடல் நினைவு, உடல் இயக்கங்கள் அனைத் தும் அற்ற நிலையில் ஆன்மாவாகவே ஆகிவிடுகிறான். இந்த உன்னத நிலையில் கீழ், மேல் மட்ட நிலைகளி லுள்ள எவ்வகை உயிருக்கும் துன்பம் விளைவிப்பதற்கு இடமில்லை. சமாதி நிலையைத் தவிர்த்து மற்ற சமயங் களில் இயம - நியம விதிகள் பல்வேறு தரங்களில் பின்பற்றப்படுகின்றன. எந்த நிலையில் எத்தகைய கொள்கையுடன் செயல்படுத்தப்படுகிறதோ அதைப் பொறுத்தே ஒரு செயலின் மேன்மை அல்லது தாழ்ச்சி அமைகிறது. தன்னலமற்று தற்பெருமை இன்றிச் செயலுக் காகவே செயல் என்ற முறையில் பற்றற்று பலனைக் கருதாது செய்யும் போது அது உன்னதமான பதவியைப் பெற்றுத் தருகிறது. அந்த மனிதனை மேன்மையான நிலைக்கு உயர்த்தி விடுகிறது.

**செவ்வாய்க்கிழமை, 30, ஏப்ரல், 1940.**

195. ***ஆசைகள், பேதங்கள், மாற்றங்கள் அனைத்தும் அகன்ற மனம் பிரம்மமாகவே ஆகிறது.***

தெளிவுரை:-

மனம் ஆன்மாவின் பிரதான கருவி. தனக்கான ஒளியையும் உயிரையும் ஆன்மாவிலிருந்து பெறுகிறது. அது புலன்களை இயக்கி அவற்றின் உதவியினால் உலகை அறிந்து அனுபவமடைகிறது. அதன் விவரங்களைக் கற்றுக் கொள்கிறது. ஆன்மா அதன் கருவியான மனத்தின் மூலம் உலகத்தைக் காண்கிறது. மனம் நிறமோ, உருவமோ அற்ற சூக்குமமானது. அது தான் நினைத்து ஆசைப்படும் பொருளின் வண்ணத்தையும், உருவத்தையுமே பெறுகிறது. ஒரு சாதாரண மனம் புலன்கள், புலன் போகப் பொருட்களில் பற்று வைக்கிறது. இதனால் உலகாயதப் பொருள்களின் வண்ணத்தையும் வடிவத்தையும் தொடர்ந்து பெறுகிறது. அதனால் அது மாசற்று பளிங்குத் தூய்மையை இழக்கிறது. ஆன்மாவின் காட்சி மறைகிறது. மாறாக அது தூய்மை, ஒருமை, ஆசைகளற்ற நிலை பெற்று பேதங்கள் மாற்றங்களை இழந்து நிற்கும்போது ஆன்மா ஒளியில் ஒளிர்கிறது. பிரம்மத்தில் நிலைத்து பிரம்மமாகிறது. அதனாலேயே ஒருவன் கடவுள் அல்லது பிரம்மத்தை உணரும்போது அவன் கடவுள் அல்லது பிரம்மமாகவே ஆகிறான் என்று கூறப்படுகிறது.

**செவ்வாய்க்கிழமை, 30, ஏப்ரல், 1940.**

**196. தனி மனிதனின் அகந்தை மையத்திலிருந்து விடுவிக்கப்பட்ட மனமே முக்தி நிலை.**

தெளிவுரை:-

"நான்" "என்னுடையது" என்கிற கருத்து பற்றில் சிக்க வைக்கிறது. அதுவே நரகம். அகந்தையின் இக் கருத்தே இவ்வுலகில் சொல்லொணாத் துன்பங்களுக்குக்

காரணமாகிறது. இந்த "நான்" என்பதும் "நான்" என்பதை மகிழ்விக்க தோன்றும் ஆசையுமே இவ்வுலகில் விளையும் வாழ்க்கைச் சுமைக்கும் போராட்டங்களுக்கும், வேதனை வாதனைகளுக்கும் காரணமாகின்றன. அகந்தையின் அரிப்புகளை மகிழ்விக்க மனம் புலன், புலன் போகப் பொருட்களில் பற்று கொள்கிறது. அதனால் அது மாசுற்றுத் தூய்மை இழக்கிறது. இந்த "அகந்தை" நினைவாலேயே பல்வகை ஆசைகளும் எண்ணங்களும் மனத்தை மொய்க்கின்றன. அகந்தை அற்றபோது எல்லா ஆசைகளும் எண்ணங்களும் மறைகின்றன. ஆசைகளும் எண்ணங்களும் இல்லாவிடில் மனத்தின் அமைதி குலையாது, தூய்மை குறையாது. அது தானாகவே ஆன்ம ஒளியில் ஒன்றி மிளிரும். அந்த மனிதன் - அந்த மனம் மோட்சம் அல்லது வீடு பேற்றைப் பெறும்.

**செவ்வாய்க்கிழமை, 30, ஏப்ரல், 1940.**

197. ***நல்லதும், கெட்டதுமான ஆசைகள் எண்ணங்கள் முறையே பொன்விலங்கும், இரும்புவிலங்கும் ஆகும். இரண்டுமே ஒரு நபரைக்கட்டும். இவ்விரண்டையும் விட்டுக் கடந்தவனே நிம்மதியான விடுதலைப்பேற்றை எய்தியவன்.***

**தெளிவுரை:-**

ஒரு சிறிய அல்லது பெரிய அலை அமைதியான ஏரி அல்லது கடலின் நீர்ப்பரப்பில் தோன்றும் சலனத்தைத் தோற்றுவிக்கிறது. ஏரி, கடலின் அமைதியான நீர்ப்பரப்பில் அலை எப்படியோ அதேபோல அமைதி சாந்தம் நிலவிய மனத்திற்கு ஆசையும் எண்ணமும் ஆகும். நல்லதோ கெட்டதோ எவ்வித ஆசை எண்ணமாயினும் மன அமைதியைக் குலைக்கிறது. நல்ல ஆசையும் எண்ணமும் பொன் விலங்கு போன்றது. தீய குரூர ஆசையும்

எண்ணமும் இரும்பு விலங்கைப் போன்றது. ஆனால் ஒரு மனிதனுக்குப் பூட்டப்படும் இவ்விரண்டுமே தளைதான். கெட்ட ஆசைகள், எண்ணங்கள், செயல்களின் விளைவு களை விரட்டுவதற்கு நல்ல ஆசைகள், எண்ணங்கள், செயல்களின் உதவியையே நாட வேண்டும். இதுவே இரண்டுக்குமுள்ள வித்தியாசம். பாபத்தைத் துடைத் தான பிறகு நன்மை தீமை, நீதி அநீதியைக் கருதாமல் முன்னேற வேண்டும். நாம் ஒரு முள்ளை மிதித்து விடுகிறோம். தைத்த முள்ளை எடுப்பதற்கு ஒரு குண்டூசி அல்லது வேறொரு புதிய முள்ளின் உதவியால் காலில் தைத்த முள்ளை அகற்றி விடுகிறோம். பிறகு இரண் டையுமே எறிந்து விடுகிறோம். இரண்டுமே பின்னர் பயனற்றுப் போகின்றன. இதேபோல்தான் நல்லது தீய ஆசைகளும் எண்ணங்களும். ஆன்மிக முன்னேற்றத் தின் உயர்நிலைகளில் ஒருவர் எதிரெதிர் பேதங்களைக் கடக்கிறார். எல்லாச் சூழ்நிலைகளிலும் மனத்தை ஒரே நிலையில் வைத்துக் கொள்கிறார்.

**செவ்வாய்க்கிழமை, 30, ஏப்ரல், 1940.**

198. ***விபச்சாரம் என்ற வார்த்தைக்கான ஆழ்ந்த விளக்கம்:*** - பொதுவாக விபச்சாரம் எனும் சொல் முறைதவறிய உடலுறவுகளைக் குறிக்கும். திருமணமான ஒரு ஆணோ பெண்ணோ வேறொரு பெண் அல்லது ஆணுடன் உடலுறவு வைத்துக் கொள்ளும்போது அதை விபச்சாரம் என்கிறோம். இந்த விபச்சாரம் என்ற சொல்லுக்கு வேறு ஆழ்ந்த பொருளும் உண்டு. சாத்திர முறைப்படி திருமணமான தம்பதியர் மாத விலக்கான நான்காவது நாளிலிருந்து பதினைந்தாவது நாள் வரை உடலுறவு கொள்ளலாம். அவ்வாறு இணையும் நாள் கிரக நாளாகவோ புனித நாளாகவோ இருத்தல் கூடாது.

பகல்வேளை, வயிறுமுட்ட உண்ட பிறகு, விரதத் தின்போது, போதை நிலையில், மருந்துண்ணும்போது, துக்கசமயம் போன்ற நேரங்களில் ஒன்றுபடுதல் கூடாது. தம்பதியர் இந்த விதிகளில் ஏதாவதொன்றை மீறினாலும் அத்தகைய உடற்ககம் விபச்சாரமாகக் கொள்ளப்படும். இந்த விதிகட்குட்பட்ட உடற்சேர்க்கை, பாரம்பரியம் தொடருவதற்கு ஒன்று அல்லது இரண்டு குழந்தை களுக்குப் பிறகு முடிவுற்றுவிட வேண்டும். அதன்பிறகு கணவன் தன் மனைவியை தாய் அல்லது சகோதரியாகப் பாவிக்க வேண்டும். மனைவி தன் கணவனை தந்தை அல்லது சகோதரனாக நினைக்க வேண்டும். இருவருமே உடலுறவைத் தவிர்க்க வேண்டும். இரண்டு குழந்தை களைப் பெற்ற பிறகு கற்பு நெறியை அல்லது பிரம்மச் சரியத்தை மேற்கொள்ளாவிடில் சாத்திரங்களில் வகுக் கப்பட்டுள்ள விதிமுறைகளை மீறிய உடலுறவு கொண் டாலும் அது விபச்சாரமாகவே கருதப்படும்.

**செவ்வாய்க்கிழமை, 30. ஏப்ரல், 1940.**

199. ***ஒரு குட்டையின் அழுக்கு நீர்ப்பரப்பில் பாசி படிதல் போல தூய்மையற்ற மனத்தில் ஆசைகள் எழுகின்றன.***

**தெளிவுரை:-**

ஒரு குட்டையின் அழுக்கடைந்த தண்ணீரைப் பாருங்கள். அந்தத் தண்ணீர் முழுக்க பாசை படிந்திருப் பதைக் கண்டிருப்பீர்கள். தண்ணீரின் மேல் படிந்தி ருக்கும் பாசியை அகற்ற முயலுங்கள். அது மீண்டும். மீண்டும் பாசை படிந்தவண்ணமிருக்கும். குட்டையின் அழுக்கு நீரில் இயல்பிலேயே பாசைபடிவது எப்படியோ அதேபோல் மாசற்ற மனத்தில் தீய கொடிய ஆசைகள் தோன்றியவாறிருக்கும். தூய்மையிழந்த மனத்தினால்

எண்ணற்ற தீய கொடிய ஆசைகளையும் எண்ணங்களையும் அறவே அகற்ற முடியாது. பாசியைப் போல அது மாசுற்ற மனத்தைச் சூழ்ந்து கொள்கிறது. ஆன்மாவைக் காணமுடியாதபடி மறைக்கிறது.

**புதன்கிழமை, 1, மே, 1940.**

200. ஒரு தோட்டக்காரன் தோட்டத்தில் ஒரு விதையை ஊன்றுகிறான். (அல்லது ஒரு நாற்றை நடுகிறான்) விதை அல்லது நாற்று நல்லதாக இருந்தால், நிலம் வளமுள்ளதாக இருந்து நன்றாகப் பராமரித்தால் விதை அல்லது நாற்று நன்றாக வளரும். மாறாக விதை அல்லது நாற்று பழுதாகிச் சீர் கெட்டிருந்தால் நல்ல பராமரிப்பு இருப்பினும் அது வளரவே வளராது. விதை அல்லது நாற்று நன்றாக இருந்தால் உவர் நிலமாக இருப்பின் எல்லா விதப் பராமரிப்புகள் இருந்தாலும் விதை அல்லது செடி முளைத்து வளராது. ஆகவே ஒரு நாற்று நன்றாக வளர வேண்டுமானால் இம்மூவகை நிலைமையும் இன்றியமையாதது. அதாவது நல்லவிதை, வளமான மண், நல்ல பராமரிப்பு ஆகும். அதே போல் எல்லா உயிரினத்திலும் ஆண்கள் விதையை ஊன்றுகிறார்கள். பெண்கள் அதைப் பேணி வளர்க்கிறார்கள். விதை சரியானபடி இல்லாவிட்டால் அது முளைத்து வளராது. விதை நல்லதாக இருப்பினும் வளரும் நிலம் வளமாக இல்லாவிட்டால் நல்ல பராமரிப்பு இருப்பினும் வளர்ச்சி குன்றும். ஆனால் விதை நல்லதாக இருந்து வளரும் நிலம் வளமுடையதாக இருந்து சிறந்த பராமரிப்பும் இருந்தால் அதிலிருந்து வரும் உடல் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியானதாகவும் இருக்கும். ஆகப் பெற்றோர்களே குழந்தைகளின் நன்மை - தீமைக்கும், ஆரோக்கியமுள்ள அல்லது நோயுற்ற உடலுக்கும் காரணமாகிறார்கள். ஒருவர் தூல

தாய் தந்தையரிடமிருந்தே பெறுகிறார். ஆனால் இரண்டாவது உடலும் ஒன்றுண்டு. அதுவே தர்மகாயம் அல்லது ஆன்ம உடல். ஒரு ஆண் அல்லது பெண் குருவிடம் (ஆன்மிக ஆசானிடம்) அடைக்கலமடைகிறார். குருவானவர் சீடருக்கு உபதேசம் செய்கிறார். அவரே சீடனுக்குத் தர்மகாயத்தை அளிக்கிறார். இந்த உபதேசத்துடன் கூடவே உண்மையான குருவானவர் தமது சீடனுக்கு ஒரு புதிய உடலைத் தருகிறார். இந்தப் புதிய உடலை அளித்ததனால் குருவானவர் தந்தையாகவும் பண்புள்ள தாயாகவும் ஆகிறார். ஆகவே குருவினிடத்தில் தந்தையின் கவனிப்பு தாயின் அன்பு இரண்டும் கலந்த பாசத்தைக் காண்கிறோம். அதாவது ஒரு சீடருக்குப் பயிற்சியளிக்க குருவானாவர் ஒரு தந்தையைப் போல் சீடனைக் கவனித்துக் கொள்கிறார். அதே சமயம் சீடனைத் தாயைப் போல் விரும்பி நேசிக்கிறார்.

**செவ்வாய்க்கிழமை, 7, மே, 1940.**

201. எல்லாவித எதிர் எதிரானவையும் இணைந்தே இருப்பவை. அவை ஒரு நாணயத்தின் முன் பின் போன்றவை. பிரிக்க இயலாதன. ஒன்று மற்றொன்று இன்றி இருக்காது. ஒன்றை வைத்துக் கொண்டு மட்டும் அதன் பொருளைத் தெரிந்து கொள்ள இயலாது. உண்மையில் எதிர் எதிர் பொருளையுடைய ஒன்றைப் பற்றிய நுணுக்கத்தை அதன் நேர்மாறான விவரம் இன்றேல் மனத்தினால் உணர முடியாது. உதாரணமாக நாம் ஒன்றை நல்லது என்று சொல்லும்போது மனதில் கெட்டதைக் குறித்த கருத்து எழும். ஆகவே எல்லா எதிர்மாறானவையும் அதன் பொருளால் ஒன்றையொன்று எப்பொழுதும் இணை பிரியாது சார்ந்தே இருக்கும்.

ஞாயிறு, 12, மே 1940.

202 குழந்தைப்பருவம் உதயரேகை, இளமை முற்பகல், நடுத்தரவயது மதியம், முதுமை மாலை

தெளிவுரை :-

உதயவேளை இனிமையும், ஆனந்தமும் நிறைந்தது. உதய சூரியன் அழகாகவும் கவர்ச்சியாகவும் இருக்கும். இதேபோல் குழந்தைப்பருவம் இனிமையானது. களங்கமற்றது. கவர்ச்சிகரமானது. சூரியன் உதித்ததும் மேலே மேலே செல்லச் செல்ல அதன் காலை அழகை இழக்கிறது. மதிய ஒளியின் சிகரத்தை அடைந்ததும் அதன் கதிர்கள் சக்திமிக்கதாகிறது. பிறகு அது மெதுவாகக் கீழிறங்கி மாலையில் ஒளி மங்கி சக்தி குறைந்ததாகிறது. இதுபோலவே குழந்தை இளைஞனாகிறது. இளைஞன் மனிதனாகிறான் அதன் உச்சத்தை எய்தி அதிகார ஆட்சி புரிகிறான். பிறகு வயது முதிரமுதிர அவன் தளர்வுற்றுச் சக்தி அனைத்தும் இழந்து விடுகிறான் அதாவது உடல், மனோவலிமை இரண்டையும் இழக்கிறான்.

ஞாயிற்றுக்கிழமை, 12, மே, 1940

203 ஒவ்வொரு விளக்கமுமே ஒரு சூக்கும மனோ வடிவுடன் தோன்றுகிறது.

தெளிவுரை :-

ஒரு ஒலி ஒலித்தவுடன் அதை நம் காதுகள் பற்றிக் கொள்கின்றன. கேட்கும் சூக்குமப் புலன், ஒலி அலைகளை மூளை மையத்திற்குக் கொண்டு செல்கின்றன. மனம் ஒலி அலைகளைப் பிடித்துக் கொள்கிறது. அதன் பிறகும் கேட்டதின் ஒலி அலைக்கான பொருள் புரியவில்லை. கேட்ட ஒலியின் விளக்கத்துக்காக மூலாதாரச் சக்கரத்திலுள்ள மனக்கோப்பிற்கு (சித்தத்திற்கு) மனம்

"அதிர்வை" அனுப்புகிறது. அதன் பொருளைக் கண்டு கொண்டதும் அது அந்த விளக்கத்துடன் இதய மையத்திற்குத் திரும்பி வருகிறது. இப்பொழுது நாம் கேட்ட ஒலியின் அர்த்தத்தைப் புரிந்து கொள்கிறோம். பிறகு அந்த ஒலி அதிர்வு இதய மையத்திலிருந்து மூளை மையத்திற்குத் திரும்பி வருகிறது. அங்கே கேட்ட ஒலியின் பொருள் தூல வடிவம் பெறுகிறது. இந்த தூலப் பொருளுடன் ஒலிக்கான பொருளும் சேர்ந்து மூளை மையத்தில் எதிரொலிக்கிறது. அதாவது அதன் விவரத தோடு கூடவே விவரத்துக்கான பொருளையும் மனம் இனம் கண்டு கொள்கிறது. ஒரு எண்ணத்தின் இது போன்ற மனோ வடிவம் இன்றேல், எந்த விவரமும், அதற்கான பொருளும் மனத்திற்கு விளங்காது. ஆகவே ஒவ்வொரு விவரமுமே சூக்கும மனோ வடிவத்தைத் தொடர்ந்தே விளங்கும்.

**செவ்வாய்க்கிழமை, 14, மே, 1940.**

**204. ஒவ்வொரு ஆசையும் ஒரு மனோ வடிவத்தைத் தொடர்ந்தே வருகிறது.**

**தெளிவுரை:-**

ஒரு ஆசை இரண்டு விதமானது. சூக்குமம் தூலம். ஒரு ஆசை வளரும்போது ஒரு எண்ணம் உருவாகிறது. நாம் ஒரு பொருளுக்கு ஆசைப்பட்டு அந்த ஆசைக்கான பொருளின் முழு விவரத்தை அறிவதற்கு முன்னர் சூக்கும ஆசை பல்வேறு மாற்றங்களை அடைகிறது. மனம் ஆசைக்கான பொருளின் காரண வடிவத்தைக் கற்பனை யில் கொண்டு வருவதே ஆசையின் முதல் நிலை. அதற்கான ஆசை ஒரு சூக்குமக் குறிப்புடன் கூடிய

உருவத்தைப் பெறுகிறது. பிறகு மனம் இந்தச் சூக்குமக் குறிப்புடன் கூடவே மனக்கோப்பிறகு அதனுடைய பதிவை அனுப்புகிறது. தேவைப்படும் அதன் விவரங்களைப் பெறுகிறது அதோடு இதய மையத்திற்குத் திரும்புகிறது. அந்த நிலையில் அதன் விவரத்தைத் தெரிந்து கொள்ள இயலுகிறது. இங்கேதான் இதன் பிறகுதான் சூக்கும உருவத்திலுள்ள ஆசை தூல ஆசை ஆகிறது. இந்தத் தூல ஆசை மூளை மையத்தை அடையும் போது அது அகந்தை, உள்ளுணர்வின் ஆற்றல், புத்தி ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு தானாகவே ஒரு எண்ணமாக மாற்றம் பெறுகிறது இப்பொழுது ஆசை உறுதியான தூல வடிவம் பெறுகிறது. அதன் பொருளும், பொருளின் விவரம் ஆகிய இரண்டும் அதன் உறுதியான வடிவுடன் மூளை மையத்தில் பிரதிபலிக்கிறது. அதேபோல் ஒரு சூக்கும ஆசையும் மனத்தில் உதித்து ஆசைக்கான பொருளை மிகவும் சூக்குமமாகக் கற்பனை உருவங் காட்டுகிறது. முதலில் மனம் ஆசைக்கான பொருளை அதற்கான காரண உருவில் பார்க்கிறது. அதன் பிறகே அந்தப் பொருளுக்கான ஆசையின் காரண உருவம் வடிவெடுக்கிறது.

**புதன்கிழமை, 15, மே, 1940,**

**205. ஒலியின் ஓசை உட்புகுந்து அலைக்கழிக்கும் சக்தி. "எண்ணம்" வெளியில் சென்று அலைக்கழிக்கும் சக்தி.**

**தெளிவுரை:-**

ஏற்கெனவே சொல்லியபடி ஒலி ஒரு சக்தி. ஒவ்வொரு எண்ணமும் அப்படியே இவ்விரண்டில் ஒலி அலைகள் அலைக்கழிக்கும் சக்தி படைத்தவை. ஒலி

அலைகள் உடலுக்குள் புகுந்தவுடன் அலை மனம், உடலின் அமைதியைக் கலைக்கிறது. உடலமைப்பின் கட்டுக்கோப்பை நிலை குலையச் செய்கிறது. ஒவ்வொரு எண்ணமும் எப்படியும் வெளிச் செல்லும் சக்தியே. நாம் நினைக்கும் போதெல்லாம் அதாவது குறிப்பிட்ட சில எண்ணங்களை வெளியில் அனுப்பும்போது உடல் மனம் இரண்டிலிருந்தும் குறிப்பிட்ட அளவு சக்தியை வெளியேற்றுகிறோம். ஆகவே ஒவ்வொரு எண்ணத்தின் போதும் குறிப்பிட்ட அளவு உடல் வலிமையையும் மனோசக்தியையும் இழக்கிறோம். வெளியேறும் ஒவ்வொரு எண்ணமும் வலிமையைக் குன்றச் செய்யும் சக்தியே.

**வியாழக்கிழமை, 16, மே, 1940.**

206. ***ஒரு ஒலி ஒரு எண்ணத்தை உண்டாக்குகிறது. அதையே திருப்பிப் பார்த்தோமானால் எண்ணம் ஒலியை உண்டாக்குகிறது.***

**தெளிவுரை :-**

காதுகள் ஒலியைக் (ஒலி அலைகளை) கேட்கிறது. கேட்கும் சூக்குமப் புலன்கள் ஒலி அலைகளை மூளை மையத்திற்குக் கொண்டு செல்கிறது. மனம் இந்த ஒலி அலைகளை மூளை மையத்தில் வாங்கிக் கொள்கிறது மனம் கேட்ட ஒலியின் விவரத்தை அல்லது பொருளை அறிந்து கொள்ளும்போது ஒலியின் பொருளுக்கான எண்ணம் அதனுடைய விவரத்தோடு மனத்தில் பிரதிபலிக்கிறது. ஆகவே ஒவ்வொரு ஒலியும் மனத்தில் ஒரு எண்ணத்தை உண்டாக்குகிறது. மீண்டும் ஒரு நபர் ஒரு ஒலியை அல்லது ஒரு பேச்சை வெளிப்படுத்த விரும்பினால் அவர் முதலில் ஆசைப்படுகிறார். நினைத்துப்

பார்க்கிறார். முதலில் ஆசைப்பட்டு நினைக்காவிட்டால் நாம் பேசவோ குரலெழுப்பவோ முடியாது. ஆகவே நாம் எப்போதும் ஆசைப்பட்டு நினைத்த பிறகே பேசவோ ஏதாவதொரு ஒலியை எழுப்பவோ இயலும்.

**வெள்ளிக்கிழமை, 17, மே, 1940.**

**207. எல்லாக் கூட்டுப்பொருள்களுமே காலம், வெளி, காரணத்தில் அமைந்தவை.**

**தெளிவுரை:-**

எல்லாக் கூட்டுப்பொருள்களுமே சில குறிப்பிட்ட தாது கனிமங்களால் ஆனவை. ஒரு குறிப்பிட்ட காலத்தில் அவைகளின் கூட்டுறவு நிகழ்கின்றன. இவ்வாறு கூடும் காலமே அதன் காலத்தைக் காட்டுகிறது. எல்லாக் கூட்டுப்பொருள்களுமே ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவு வரை நீடிக்கிறது. இவ்வாறு நீடித்திருக்கும் காலக் கெடுவே வெளியைத் தோற்றுவிக்கிறது. இவையெல்லாமே ஒரு காலவரையறை வரைக்கும் நீடித்திருந்து மீண்டும் அவற்றின் மூலக் கனிம நிலைக்கு மாறிவிடுகிறது. கனிமப் பொருள்கள் இவ்வாறு அதன் தன் மூலப் பொருள்களுக்குத் திரும்பும் செய்கையே காரணத்தைக் காட்டுகிறது.

**வெள்ளிக்கிழமை, 17, மே, 1940.**

**208. மனத்தின் ஒவ்வொரு புரியும் நிலையும், கற்பனையும் காலம், வெளி, காரணத்தில் உள்ளன.**

**தெளிவுரை:-**

காலம், வெளி, காரணத்திற்கான கருத்து இன்றி சாதாரண மனம் எதையும் புரிந்து கொள்ளவோ, கற்பனை செய்து பார்க்கவோ இயலாது. ஒவ்வொரு கற்பனையுமே ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில்

தோன்றுகிறது. இந்தக் கற்பனையின் ஆரம்பமே காலத்தைக் குறிக்கிறது. ஒவ்வொரு விளக்கம் அல்லது தெளிவும் மனத்தில் சிறிது நேரம் நீடிக்கிறது. இவ்வாறு நீடிக்கும் காலமே "வெளி." ஒவ்வொரு கற்பனையும் சிறிது காலம் நீடித்து மறைந்து விடுகிறது. இவ்வாறு மறையும் காலவெளியே காரணமாகிறது.

**வியாழக்கிழமை, 26, டிசம்பர், 1940.**

209. மன ஒருமைப்பாடு அல்லது மனக்கட்டுப்பாடே எவ்வகை வெற்றிக்கும் பெருமைக்குமான ஒரே வழி. மன ஒருமைப்பாடு ஒருமுகப்படும்போது அது மகோன்னத ஆன்மிக சித்தியை அளிக்கிறது. ஆனால் அது வெளிப்படும் போது செல்வாக்கையும், உலகப்புகழையும் அளிக்கிறது. ஆகவே வாழ்வில் பெறும் வெற்றிக்கான இரகசியம் மன ஒருமைப்பாடும் கட்டுப்பாடுமேயாகும். இதன்றி உலகாயதம், ஆன்மிகம் ஆன இருவேறு உலகங்களிலுமே புகழும் வெற்றியும் கிட்டாது.

**புதன்கிழமை, 21, ஜனவரி, 1942.**

210. முழுக்க முழுக்க நல்லது அல்லது முழுக்க முழுக்கக் கெட்டது என்று சொல்லக்கூடிய ஒரு பொருளோ நிகழ்ச்சியோ சம்பவமோ இல்லை. பொருள் நன்மை தீமையின் கலவையே. நாம் நல்லது எனச் சொல்லும் பொருளில் ஒரு சிறு பகுதி கெட்டதும் இருக்கும். கெட்டது கொடியது என நாம் கூறும் ஒன்றில் துளியேனும் நல்லது இருக்கத்தான் இருக்கும். உண்மையென்னவோ எதிரெதிரானவை. ஒன்றையொன்று தழுவியே இருப்பன. ஆனால் நாம் அதிக சாதகங்களும், குறைந்த இடைஞ்சலும் பெறக்கூடிய ஒரு பொருள், சம்பவம் அல்லது நிகழ்ச்சியை நல்லது என்று அழைக்கிறோம். கெட்டதும் இதே வரையறைக்குள் அடங்கும்.

**சனிக்கிழமை, 7, மார்ச், 1942.**

211. **ஒவ்வொரு ஆசையும் ஒரு குறிப்பிட்ட தேவையே. ஒரு சூக்கும மனநிறைவுங்கூட. மனம் ஒரு பொருளை மூன்று வெவ்வேறு வழிகளில் அனுபவிக்கிறது. ஆசை, சொல், செயலாக.**

**தெளிவுரை:-**

ஒவ்வொரு ஆசையும் ஒரு தேவை. நாம் குறிப்பிட்ட பொருளின் இன்றியமையாமையை உணரும்போதும், குறிப்பிட்ட ஒரு பொருளின் மீது பற்று வைக்கும் போதும், ஒரு பொருள் அல்லது ஒரு வஸ்துவைப் பெற்று அனுபவிக்க விரும்பும்போதும் நாம் அந்தக் குறிப்பிட்ட பொருள் அல்லது விஷயத்துக்கு ஆசைப்படுகிறோம். மனம் ஒரு பொருள் அல்லது விஷயத்தை மூன்று வெவ்வேறு வழிகளில் அனுபவிக்கிறது. அதாவது எண்ணம், சொல், செயலில் முறையே சூக்கும, தூல, உறுதியான தூல வடிவங்களில் அனுபவிக்கிறது. ஒவ்வொரு ஆசையும் சூக்கும வடிவிலான அனுபவம். ஏற்கனவே சொல்லியபடி ஒவ்வொரு ஆசையின் கூடவே மனம் ஆசைக்கான பொருளை சூக்கும உருவத்தில் மூளை மையத்தில் பிரதிபலிக்கிறது. நாம் ஒரு குறிப்பிட்ட பொருளை அனுபவிக்க ஆசையுறும்போது மனம் சூக்கும உடலின் உதவியுடன் ஆசைப்பட்ட பொருளின் சூக்கும உடலைக்கூடி அனுபவிக்கிறது. ஒரு சாத்வீக மனம் இந்த விதமான அனுபவிப்பில் அடிக்கடி மன நிறைவு பெறுகிறது. இவ்வாறான ஆசை, எண்ணத்தின் இரண்டாவது நிலை. இதை வெளிப்படுத்துவது அதாவது வார்த்தைகளால் அதை விளக்குவது ஆகும். நாம் அடிக்கடி அதைப் பேசுவதன் மூலமே திருப்தி அடைகிறோம். இதை ராஜவழி அனுபவம் என்று

கூறலாம். ஒரு இராஜச மனம் ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றிப் பேசுவதிலும், பார்ப்பதிலும், கேட்பதிலும், தொட்டுணர்வதிலும் அவ்வப்போது மகிழ்ச்சியுறுகிறது. இறுதியாக மிகத் தூலமான அல்லது தாமச வடிவிலான அனுபவம் விளங்கப்படுகிறது. இந்த அனுபவம் செய்கையில் அனுபவிப்பதாகும். அதே ஆசை எண்ணமாக வளர்ந்து சொல்லாக உருவெடுத்து பின்னர் "செய்கை" ஆகிறது.

**ஞாயிற்றுக்கிழமை, 9, மார்ச், 1942.**

212, **ஒரு உயிரின் ஒவ்வொரு ஆசையும், எண்ணமும், ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு செயலும் விடுதலைக்காகவும் பேரானந்தத்திற்காகவும் தன்னையறியாமலே செய்யப்படும் முயற்சி. ஆனால் இம்முயற்சி பாதை மாறிச் செல்வதால் சிறிதே மகிழ்ச்சியையும் அதிகத் துன்பத்தையும், பந்தத்தையும் விளைவித்துக் கொள்கிறது.**

**தெளிவுரை:-**

ஒரு உயிரின் ஒவ்வொரு ஆசையும், ஒவ்வொரு எண்ணமும், ஒவ்வொரு செயலும், ஒவ்வொரு சொல்லும் விடுதலைப் பேரானந்தத்தை நோக்கியே உருவெடுக்கிறது. ஒவ்வொருவரும் மகிழ்ச்சியாக இருக்கவே விரும்புகின்றனர். எவருமே துன்பத்தை விரும்புவதில்லை. நோய், மரணத்துக்கான நினைப்பே எல்லோருக்கும் அச்சத்தை தோற்றுவிக்கிறது. இந்த அகிலத்தில் உண்டாகும் கூச்சல் குழப்பம், சண்டை சச்சரவுகளுக்குத் தம்மையறியாமல் விடுதலைக்காகவும், பேரானந்தத்துக்காவும் செய்யப்படும் முயற்சியின் விளைவே காரணம். ஒரு உயிர் ஒரு குறிப்பிட்ட பொருளுக்காக ஆசைப்படுவதாலும், ஒரு குறிப்பிட்ட பொருளைப்பற்றிப் பேசுவதாலும், ஒரு

குறிப்பிட்ட வழியில் செயல்படுவதாலும் மட்டுமேதான் மகிழ்ச்சியடைய முடியும் என்று நினைக்கிறது. ஒருவர் புலன் போகத்தை அனுபவிக்க முயல்வதாலும் தான் மகிழ்வடைய முடியும் என நினைக்கிறார். ஆனால், நடைமுறையில் இந்தப் புலன் போக அனுபவங்கள் ஒருவரை மகிழ்வித்து விடுதலையை அளிப்பதற்குப் பதிலாக கண நேர இன்பத்தைத் தருகிறது. அதிக வேதனையை உண்டாக்குகிறது. பந்தத்தில் ஆழ்த்தி விடுகிறது. உண்மை என்னவோ ஒரு உயிரின் எல்லாச் செய்கைகளுமே விடுதலைக்காகத் துவங்கப்படுவதுதான். ஆனால் மகிழ்ச்சிக்குப் பதிலாக அவர் துன்பத்தில் சிக்கிக் கொள்கிறார். விடுதலைக்குப் பதிலாக அடிமைத் தளையில் உழல்கிறார். ஏனெனில் அவருடைய ஆசைகள், எண்ணங்கள், செயல்கள் எல்லாமே பாதை மாறிப்போகின்றன.

திங்கட்கிழமை, 16, மார்ச், 1942.

213. தூய்மை இரண்டு தன்மையுடையவை. உள்ளும், புறமும். உள்ளத்தூய்மை முதல்நிலை உயிர்நிலை உடையது

தெளிவுரை :-

தூய்மையான இடத்தில் வசிப்பது, சுத்தமான சத்துணவை உண்பது. அழகிய அழுக்கற்ற உடைகளை அணிவது, குளித்து உடலைச் சுத்தமாக வைத்திருப்பது போன்றவை வெளிப்புறத் தூய்மையைச் சார்ந்தவை. உண்மை பேசுதல், கற்பு நெறி. ஒவ்வொரு உயிரிடத்தும் கருணை காட்டுவது, நன்மை புரிவது, காமம், கோபம், பேராசை, வெறுப்புண போன்றவைகளை ஒதுக்குவது மனம், புலன்களை அடக்கி ஆள்வது போன்றவை உள்ளத்தூய்மையைக் குறிக்கும். இத்தகைய உள்ளத்

தூய்மை முதல்நிலையைச் சார்ந்தது. நல்ல ஆசைகளை யும் மனத்திலிருந்து அகற்றி விடுவதே மேலான சிறப் பான உள்ளத்தூய்மை. இந்த ஆசைகளற்ற மன நிலை ஒரு கரும்புள்ளியுமில்லாத அகன்ற, பரந்த வெண்மை யான காகிதத்தாளைப் போன்றது. ஒவ்வொரு ஆசையும் எண்ணமும் மிகச்சிறந்ததாயினும், கண்ணியமானதாயி னுங்கூட அது ஒரு வெள்ளைத்தாளின் மேல் காணும் கரும்புள்ளிக்கொப்பானது. இத்தகைய நிலையான ஆசை களற்ற மனத்தையும், மிக உயர்ந்த உள்ளத் தூய்மை யையும் ஒருவர் சமாதி நிலையை எய்திய பிறகே அடைய முடியும்.

**புதன்கிழமை, 3, ஜூன், 1942.**

214. சூக்கும ஆகாயம் தூல வடிவமாகி காற்று, தீ, நீர், மண் ஆகிய எல்லாத் தூல வடிவங்களிலும் பதிந்து விடுகின்றன. இதேபோலப் பிரம்மசக்தி (பிரகிருதி) முழு அகிலத்தையும் அதிலுள்ள பல்வேறு பொருள்களையும் பரிணமிக்கிறது.

**புதன்கிழமை, 10, ஜூன், 1942.**

215. இயல்பிலேயே காற்று உலர்த்துகிறது. நெருப்பு சுடுகிறது. தண்ணீர் நனைக்கிறது. அதுபோலவே பிரம்ம சக்தியின் (பிரகிருதி சக்தியின்) இயல்பே அகிலத்தையும் அதன் பல்வேறு பொருள்களையும் பரிணமிக்கின்றன. உள்ளிழுத்துக் கொள்கின்றன. படைத்தல், காத்தல், அழித்தல் எல்லாமே காலகாலமாக ஓய்வு ஒழிச்சலின்றி எல்லையற்றதை நோக்கியே செல்கின்றன.

**புதன்கிழமை, 10, ஜூன், 1942.**

216. "உலகம் பொய். பிரம்மம் மட்டுமே உண்மை" என்று சொல்வதின் அர்த்தம் என்ன?

பதில்:-

"முடிவான பொருள்" (பேருண்மை) ஒன்றே ஒன்று தான். இரண்டாவது அற்றது. அந்த ஒரே பொருளை "கடவுள்" அல்லது "பிரம்மம்" என்ற பெயரால் அழைக்கிறோம். பிரம்மம் செயலற்றது. மனமற்றது. குணங்களைக் கடந்தது. பிரம்மசக்தியே இந்த அகிலத்தில் மனம், ஜடமாகச் சுயமாகப் பரிணமிக்கிறது. ஆகவே உண்மையென்னவோ அகிலம் என்பது வேறொன்றுமில்லை. பிரம்மசக்தியே! உண்மை அவ்வாறிருக்க இந்த அகிலம் பொய்யானதாக எப்படி இருக்க முடியும்? உண்மை அதுவல்ல! ஆனால் பொய் எது? பெயர்களும் உருவங்களும் பெற்று மாறிக் கொண்டே இருக்கும் அகிலமே அது! இவ்வாறு மாறிக்கொண்டே இருக்கும் பொருள், இந்தக் கற்பனை அகிலம் பொய்யானது! பொதுவில் அறிந்த அகிலம் பெயர்களும், உருவங்களையும் எடுத்துவிட்டால் எது நிற்கிறதோ அதுவே கடவுள். கடவுள் மட்டுமே நிற்கும்!

புதன்கிழமை, 10, ஜுன், 1942.

217. **ஆன்மா (உயிர்) தூய்மையானதாகவும் மாற்றமில்லாததாகவும், எல்லாத் தவறுகளுக்கும் அப்பாற்பட்டதாகவும் இருந்தும் ஒரு ஜீவன் அதனுடைய பேருண்மை இயல்பை மறந்து நரகவாதனையில் உழல்கிறது. இந்த பெருமறதி மாயாசக்தியின் விளைவே. இது நம்முன் தனித்திருக்கும் ஒன்றல்ல. உலகரீதியில் இதன் இருப்பை மறுக்க முடியாது.**

தெளிவுரை:-

ஆத்மா(உயிர்) தூய்மையானது. எளிமையானது. மாற்றமில்லாதது. அசையாதது. பிறப்பற்றது. வளர்ச்சி

யற்றது, இறப்பற்றது. ஆண் - பெண் பேதமற்றது. எப்போதும் சுதந்திரமானது. ஆனால் ஒரு உயிர் தன் ஆத்மாவின் உண்மையான இயல்பை மறந்து விடுகிறது. தன்னை அழியும் உடல் புலன்களென நினைத்துக் கொள்கிறது. அதனால் நரக வேதனையை அனுபவிக்கிறது. இந்த மயக்கம் மாயாசக்தியின் விளைவே. ஒரு மனிதன் நிர்விகல்பசமாதியை எய்தியதும் மாயாசக்திக்கு அங்கு இடமில்லை. ஆனால் ஒரு சாதாரண மனிதன் இவ்வுலகில் மாயாசக்தியின் இருப்பையும், விளையாட்டையும் மறுக்கவே முடியாது. மாயாசக்தி மனத்தில் விளையும் மயக்கமே. ஒரு தேனீ பறந்து திறந்த வாசல் வழியே ஒரு அறைக்குள் நுழைகிறது. அந்த வாசல் கதவு திறந்தே இருக்கிறது. ஆனால் அந்த ஈ அறையுள் நுழைந்த பிறகு வெண்மையான சுவரைப் பார்க்கிறது. அதையே வழி என நினைக்கிறது. அதன் மீது போய் முட்டிக் கொள்கிறது. தலை மோதியதால் அதற்குக் குழப்பம் விளைகிறது. பிறகு சுவர்ப் பக்கத்திலிருந்து திரும்பி மூடிய ஜன்னல் பக்கமிருந்து வரும் வெளிச்சத்தைப் பார்க்கிறது. ஜன்னல் பக்கம் போகிறது. மீண்டும் ஒரு முறை ஜன்னல் கதவில் தலையை மோதிக் கொள்கிறது. அதிகக் காயமேற்படுகிறது. நிலை குலைகிறது. வேறொரு மூடிய சாளரக்கதவு வழியாக வரும் வெளிச்சத்தைப் பார்க்கிறது. அதை நோக்கிப் பறக்கிறது. அதன் வழியே தப்பி ஓட முயல்கிறது. ஆனால் ஏமாற்றமே. இத்தகைய பலிக்காத முயற்சிகளால் தேனீ சாளரத்திலிருந்து சுவருக்கும், சுவரிலிருந்து சாளரத்திற்கும் பறக்கிறது. சில சமயங்களில் அதிர்ஷ்டவசமாக திறந்த கதவின் வழி கிடைத்ததும் தப்பித்துக் கொள்கிறது. அது போன்றே வேறு பல

தேனீக்கள் வழி தெரியாததால் அறைக்குள்ளேயே மடிகின்றன. ஆனால் அவைகளில் சில அந்த அறையின் சொந்தக்காரரின் மனிதாபிமானத்தினால் வெளியே துரத்தப்படுகின்றன. அதேபோல ஒரு உயிர் இவ்வுலகில் வந்து பிறக்கிறது. அதன் மனம் புலன்கள் புலன் போகப் பொருட்களுடன் தொடர்பு கொள்கிறது. ஆன்மாவின் பேருண்மை இயல்பை மறந்து விடுகிறது. தன்னை அழிந்து போகும் உடல் புலன்களென பாவிக்கிறது. புலன்கள் மூலமாக வெளியேறுகிறது. அப்போது ஆன்மாவின் மேன்மையை மறந்து விடுகிறது அது தானாகவே சிக்கிக் கொள்கிறது. புலன் போகங்கள் மூலமாக விடுதலையையும் ஆனந்தத்தையும் அடைய முடியும் என நினைத்து விடுகிறது. பைத்தியக்காரத் தனமான இந்த எண்ணத்தின் விளைவினால் பெரும் பாலானவர்கள் துன்பத்திலும், பந்தபாசத்திலும் சிக்கி அழிந்து விடுகிறார்கள். தீவிரப் போராட்டத்திற்குப் பின்னர் அதிர்ஷ்ட வசமுள்ள சிலர் நற்பேறு எய்தும் வழியைத் தெரிந்து விடுதலைப் பேற்றைப் பெறுகின்றனர். வேறு சிலர் மாபெரும் புனித ஆன்மாக்களின் தொடர்பைப் பெற்று குரு கிருபையால் (குருவின் அருள் அல்லது ஆசான் அருளால்) உந்தப் பெற்று மோட்சம் அல்லது வீடு பேற்றை எய்துகின்றனர். வாயிற்கதவு பரக்கத் திறந்திருந்தும் அந்தத் தேனீ எப்படித்தான் உட் புகுந்த வாசல் வழியை மறந்து போயிற்று? இந்த மறதி மயக்கத்திற்கு தேனீயே காரணம் அதே போல் ஒரு உயிர் ஏன் அதனுடைய பேருண்மை இயல்பை மறந்து பெரும் அவதிக்கு ஆளாகிறது? இந்த மறதி மயக்கத்தை யார் விளைவிப்பது? இந்த மாய மயக்கம் தன்னால் தன்னில் விளைவது. இதுவே மாயா

சக்தி எனப்படுவது. மாயா சக்தி என்று ஒன்று உண்மையில் இருப்பதில்லை. ஆனால் அதே சமயத்தில் அதன் இருப்பை மறுக்கவும் முடியாது. ஒரு மனிதன் சாதாரணமாக அறியாமையுடனிருக்கும் வரை இந்த மாயா சக்தி அவனுக்கு உண்மையானதாகவே புலப்படுகிறது. ஆனால் அதே மனிதன் நிர்விகல்ப சமாதியை எய்தியதும் மாயாசக்தியின் விளைவுகள் அவனிடம் நெருங்குவதில்லை. ஆகவே மாயா சக்தியின் இருப்பை மறுக்கவும் முடியாது. ஏற்கவும் இயலாது.

**சனிக்கிழமை, 13, ஜூன், 1942.**

218. **சமயத்தைப் பற்றி ஒவ்வொருவருக்கும் தெரியும். யாரோ ஒரிருவர்தான் அதனைச் செயல்படுத்துகிறார்கள். செயலில் சமயக் கோட்பாடுகளை கடைப்பிடிக்காததினால்தான் இந்த அகிலத்தில் அந்த துன்பமும் வறுமையும் விளைகிறது.**

**தெளிவுரை:-**

கீழ்த்தரமான வாழ்வை நடத்துபவன்கூடக் கற்பு நெறியுடன் இருப்பதும், ஒவ்வொருவரிடமும் அன்பு காட்டுவதும், மற்றவர்களைத் துன்புறுத்தாமலிருப்பதும், கள்ளாமையும், பொய் பேசாமலிருப்பதும் போன்றவற்றை நன்றாக அறிவான். ஆனால் ஒரு சிலரே இதைக் கடைப்பிடித்து செயல்படுகிறார்கள். ஒருவர் எதை விதைக்கிறாரோ அதையே அறுவடை செய்கிறார். ஒரு மனிதன் பாபக் கிருத்தியங்களையும், முறை தவறிய செயல்களையும் செய்தானானால் அவன் துன்பப்படுவது நிச்சயம். மாறாக அவன் நல்ல - புனிதச் செயல்களைச் செய்தானானால் பேரானந்தத்தை அனுபவிக்கிறான். இந்த உலகில் நாம் காணும் எல்லாத் துன்பத்திற்கும் வறுமைக்கும் காரணம் முன் வினை பாபச் செயல்களே.

மக்கள் சாத்திரக் கோட்பாடுகளைக் கற்று அதன்படி ஒழுகினால் அகிலத்தில் வறுமையும் துன்பமும் குறைந்து ஆனந்தமும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்வை வாழலாம்.

**சனிக்கிழமை, 13, ஜுன், 1942.**

**219. உமது நாக்கைக் கட்டுப்படுத்து, அப்பொழுதே உமது முழு வலிமையையும் நீங்கள் அறியலாம்.**

**தெளிவுரை:-**

ஒருவருடைய நாக்கு கட்டுவதென்பது அளவோடு பேசுவதும் நாக்கின் ருசியை அடக்குவதும் ஆகும். ஒரு சாதாரணன் உபயோகமற்ற பேச்சிலும், வம்பளப்பிலும் அதீத சக்தியை வீணடிக்கிறான். ஏற்கனவே சொல்லிய வாறு ஒவ்வொரு எண்ணமும் உடல், மனத்திலிருந்து வெளியேறும் சக்தியாகும். பேசும் ஒவ்வொரு சொல்லும் ஒலி உருவிலும் வார்த்தைகளின் வடிவிலுமான எண்ணத் தின் சக்தி இழப்பேயாகும். ஆகவே பேசுவதால் ஒருவர் தனது அதீத ஆற்றலை இழக்கிறார். அதனால் மனம், உடலின் சக்திகள் சிதறுண்டு போகின்றன. வளவளக்கும் மனிதன் மன அமைதியை அனுபவிக்க முடியாது. அவன் அலைபாயும் மனத்தினன் ஆகிறான். அளவோடு பேசும் மனிதன் மன அமைதியை அனுபவிக்கிறான். மனோ உடல் வலிமையைப் பெறுகிறான். அத்தகைய மனிதன் திட சித்தத்துடன் கூடிய புத்திசாலியாகத் திகழ்கிறான். இதுவன்றி அதிகமாகப் பேசுபவர்கள் அடிக்கடி உபயோகமற்ற உதவாக்கரைப் பேச்சுக்களால் மற்ற வரைப் புண்படுத்துகிறார்கள். வெறுப்புக்கும், சச்சரவுக் கும் அதுவே காரணமாகிறது. வீண் பேச்சுக்களைப் பேசு பவர்கள் சச்சரவுகளுக்கும் தவறான கருத்துக்கும் ஆட்படு கிறார்கள். அதனால் அவர்கள் மட்டரகமாகக் கருதப் பட்டு பெருந்தன்மையுடையவர்களால் ஒதுக்கப்படு

கிறார்கள். அதிகமாகப் பேசுபவர்கள் பொதுவாகச் செயல் வீரர்களல்ல. அவர்கள் தாழ்ந்தவர்களாகவும், பின் தங்கியவர்களாகவும் கருதப்படுகிறார்கள் நாக்கைக் கட்டுவது என்பது ருசியைக் கட்டுவது என்றும் அர்த்த மாகும். உயர்ரக உணவு வகைகளுக்காகப பலர் அலை வார்கள் நாக்கிற்கும், பிறப்பு உறுப்புகளுக்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது என்பது பலருக்குத் தெரியாது. யார் ஒருவர் ருசிகரமான உணவுகளுக்கு அடிமையாகி அலைகிறாரோ அவர் காம இச்சைக்குப் பலியாகிறார். அப்படிப்பட்டவர் பிரம்மச்சரியத்தைக் (கற்பு நெறியை) கடைப்பிடிக்க இயலாது. நாம் ஏற்கனவே விவரித்தபடி பிரம்மச்சரியமே வலிமை மிக்கது, அது வாழ்க்கைக்கே அடிப்படையானது ஏன் வாழ்க்கையே அதுதான்! பிரம்மச்சரியத்தின் மூலமே பிரம்ம ஞானத்துக்கும் (இறைகாட்சி பெறுதற்கும்) விடுதலைக்கும் வழி திறக்கும். ஒருவர் நாக்கின் ருசியை அடக்கினால் காம இச்சையையும் எளிதாக அடக்க முடியும். காம உணர்ச்சிகளை அடக்குவதாலும், பிரம்மச்சரியத்தை கடைப்பிடிப்பதாலும், ஒருவர் அளப்பரிய சக்தியைப் பெறுகிறார். எளிதாக வீடு பேற்றையும் எய்துகிறார்.

புதன்கிழமை, 15, ஜூலை, 1942.

220. இடிமுழக்கத்தைக் கேட்பதற்கு முன்னரே நாம் மின்னலைப் பார்க்கிறோம். ஒவ்வொரு முறையும் இடியோசைக்கு முன் மின்னல் ஒளி பளிச்சிடுவதை நம்மால் காண முடிவதில்லை. இது ஏனெனில் நமது மனம் தூய்மையற்று இருப்பதுவே. ஒருவருடைய மனம் தூய்மையடைந்து, சூக்கும நிலை பெற்று ஒருமுகப்பட் டால் அவர் இலேசான இடி ஓசைக்கு முன்னரே

தெளிவாக மின்னல் ஒளியைக் காண்பார். உண்மை யென்னவெனில் ஒவ்வொரு ஒலியும் சிறியதோ பெரியதோ, உரத்ததோ மெலிதானதோ ஆயினும் மின்னலை உண்டாக்கவே செய்யும்

வெள்ளிக்கிழமை, 17, ஜூலை, 1942.

**221. பணம் உலகத்தில் மிகச் சக்தி வாய்ந்தது. ஆனால் பிரம்மச்சரியமோ (கற்புநெறி) உலகத்திலும், ஆன்மிகத்திலும் அதைவிட மிக உன்னதமான சக்தி வாய்ந்தது.**

**தெளிவுரை:**

பணம் உலகில் மகாசக்தி படைத்தது. அது உலக வாழ்க்கையில் பல அதிசயங்களைச் செய்யக் கூடியது. ஒரு கழுதையோ நாயோ நிறையப் பணம் பெற்றிருக்குமாயின் அந்தக் கழுதை அல்லது நாய் இவ்வுலகில் வந்தனைக் குரியதாகிவிடும். ஆனால் ஆன்மிக உலகில் பணத்திற்கு எவ்விதச் சக்தியும் கிடையாது. ஆன்மிகத்தில் அது தூசுக்கொப்பானது. எப்படிப் பார்த்தாலும் உலகாயதத்திலாகட்டும், ஆன்மிகத்தில் ஆகட்டும் பிரம்மச்சரியம் மாபெரும் சக்தி. உறுதியான பிரம்மச்சரியம் உலகாயதம் ஆன்மிகம் இரண்டிலும் அநேக அற்புதங்களைப் புரிய வல்லது. பிரம்மச்சரியத்தில் ஒருவர் உறுதியாக இருந்து விட்டாரெனில் அவர் நினைத்த மாத்திரத்தில் எவ்வுலகிலும் எதையும் அடைய முடியும். பிரம்மச்சரிய சக்தியுடன் பண பலத்தை எவ்விதத்திலும் ஒப்பிடவே முடியாது. அது பலமிக்க யானையுடன் ஒரு சிற்றெறும்பின் வலிமையை ஒப்பிடுவதைப் போன்றது. பிரம்மச்சரியத்திற்கு எதிரில் பணபலம் மங்கிப் போகும். ஒரு உறுதியான பிரம்மச்சாரி ஆற்றலுடன் உலா வர முடியும். மனம் புலன்களை அடக்கியாளும் ஆற்றல் பெற்றவராகிறார். அகிலத்

தையும் கட்டி ஆள்பவராகிறார். பிரம்மச்சரியத்தின் அளப்பரிய ஆற்றலின் முன்னால் இந்த அகிலம் முழுவதுமே மண்டியிட்டு வணங்கும்.

**வியாழக்கிழமை, 30, ஜூலை, 1942.**

222. சூரியன் ஏரி நீர்ப்பரப்பு முழுவதும் பிரகாசிக்கிறது. ஆனால் நாம் அதன் பிரதிபலிப்பை அல்லது பிரதி பிம்பத்தைக் குறிப்பிட்ட ஓரிடத்தில் அல்லது புள்ளியில் மட்டுமே பார்க்கிறோம். இதேபோல் ஆன்மா (உயிர்) உடல் பூராவும் பரவி உள்ளது. ஆனால் நாம் அதன் பிரதிபலிப்பை (இப்போது உள்ளபடி) ஆன்மிக இதயத்தில் காண்கிறோம். மனம் தூய்மையாக வேண்டும். ஆசைகளற்று ஒருமுகப்பட வேண்டும். அந்த நிலையில் ஒருவர் இந்தப் பிரதிபலிப்பை ஆன்மிக இதயத்தில் மனக் கண்ணால் காணலாம். மார்பின் வலது புறத்தில் ஒரு புள்ளியில் துவங்கி எங்கும் வியாபித்து பரவும் ஒளி வடிவில் இதைப் பார்க்கலாம். இந்த சூக்குமப் புள்ளியே ஆன்மிக இதயம், மனித உடலில் உள்ள ஆன்மப் பீடம்!

**ஞாயிற்றுக்கிழமை, 2, ஆகஸ்டு, 1942.**

223. ***மூலாதாரச் சக்கரத்தில் (குதம், சிறுநீர்வழி சந்திக்கும் தோராயமான இடம்) மனத்தின் மூன்று நிலைத் தளங்கள் (நினைவு நிலைத்தளம், நினைவற்ற நிலைத் தளம், மறதி நிலைத்தளம்) உள்ளன. இதுவே எல்லா வகைக் கடந்த கால ஆசைகள், எண்ணங்கள், செயல்கள், சம்பவங்கள் அல்லது நிகழ்ச்சிகள், பொருள்கள், இடங்களின் சேமிப்புக் கிடங்கு (சித்தம்). குண்டலினி சக்தியே சித்தம். சக்தி ( மனிதனின் ஆதார சக்தி) அதன் அளப்பரிய ஆற்றலால் அனைத்துக் கடந்த கால நிகழ்கால ங்கள் போன்றவற்றின் காரண உருவ பதிவுகளனைத்தையும் பதித்து வைத்திருக்கிறது.***

**தெளிவுரை:-**

நம்முடைய எல்லா அனுபவங்களும் · ஆசைகள், எண்ணங்கள், செயல்கள், சம்பவங்கள், அல்லது நிகழ்ச்சிகள், பொருள்கள், இடங்கள் அனைத்துமே மனத்தில் சூக்குமக் காரண வடிவங்களில் இருந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பதிவுகள் மனத்தின் நினைவு நிலைத் தளம், நினைவற்ற நிலைத்தளம், மறதி நிலைத்தளங்களில் தங்கியுள்ளன. மனம் இந்த மூன்று வெவ்வேறு வகை நிலைத்தளங்களில் இருந்து கொண்டு வேலை செய்கிறது. ஆசை, எண்ணம் போன்றவற்றின் பதிவுகள் முதலில் மனத்தின் நினைவு நிலைத்தளத்தில் உள்ளன அந்தப் பதிவுகளை நினைவு கூட்டிக் கொள்ளாமலே வரவழைக் காமலே போனால் அது நினைவு நிலைத்தளத்தை விட்டுவிடுகிறது. மனத்தின் நினைவு நிலைத்தளத்திற்கு இறங்கி அங்கே சூக்கும வடிவுடன் தங்குகிறது. அதே பதிவை சில காலத்திற்கு நினைவு கூட்டாமல் விட்டால் அது நினைவற்ற தளத்தையும் விட்டுவிடுகிறது. பின்னர் மறதி நிலைத்தளத்தில் இறங்கி அங்கே காரண உருவில் தங்கி விடுகிறது. ஆழ்ந்து யோசிக்காமலேயே நம் நினைவுக்கு வரும் எல்லாக் கடந்த கால ஆசைகள் போன்றவற்றின் பதிவுகள் மனத்தின் நினைவு நிலைத் தளத்திலிருந்து வருபவை. ஆழ்ந்து சிந்தித்த பிறகே நினைவுக்கு 'வருபவை மனத்தின் நினைவற்ற நிலைத் தளத்தில் இருப்பவை. நாம் மணிக்கணக்கில் நினைவு கூட்டிய பிறகும் நினைவுக்குக் கொண்டு வர இயலாத பதிவுகள் அனைத்துமே மனத்தின் மறதி நிலைத் தளத்தில் போய்ப் பதிந்து விட்டவை. நாம் அதை நினைவுக்குக் கொண்டு வர இயலாமற் போயினும் அது அடியோடு அழிந்து விடவில்லை. அவற்றை மனம்

சித்தத்தைக் (மனக்கோப்பை) கட்டுப்படுத்துவதின் மூலம் நினைவு நிலைத்தளத்திற்குக் கொண்டு வர முடியும். அதாவது பேராற்றல் நிலையை எய்திய பிறகே இது இயலும். மூவகைத் தளங்களுமே (நினைவு நிலைத்தளம், நினைவற்ற நிலைத்தளம், மறதி நிலைத்தளம்) சித்தத்தில் (மனக்கோப்பில்) மட்டுமே உள்ளது. இது மூலாதாரச் சக்கரத்தில் உள்ளது. (அதாவது குதம், சிறுநீர்வழி சந்திக்கும் தோராயமான இடம்.) மூளை மையத்தில் புதிய எண்ண அதிர்வுகள் மட்டுமே உள்ளன. சற்றே காலந்தாழ்த்திய எண்ண அதிர்வுகள் இதய மையத்தில் தங்கியுள்ளன. மனம் இதையே அவ்வப்போது கொண்டு வந்து ஒரு எண்ணத்தை வெளிப்படுத்துகிறது. ஆனால் எண்ணத்தின் பதிவுகள் மட்டும் எப்போதும் சித்தத்தில் தான் தங்கியிருக்கும். பழைய விவரங்களைப் பெற மனம் எப்போதும் சித்தத்தையே நாட வேண்டி இருக்கும்.

**ஞாயிற்றுக்கிழமை, 2, ஆகஸ்டு, 1942.**

224. "வெளி" என்னும் சொல் மாறுபட்ட அர்த்தங்களைத் தருகிறது. ஓர் இடத்துக்கும் மற்றொரு இடத்திற்கும் இடையில் உள்ளவெளி, ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் இடையிலான வெளி, ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் இடைப்பட்ட வெளி, பொதுவாக "வெளி" என அழைக்கப்படுகிறது. ஒரு சம்பவத்திற்கும் மற்றொரு சம்பவத்திற்கும், ஒரு செயலுக்கும் மற்றொரு செயலுக்கும் இடையிலான சூக்கும இடைவெளியும் "வெளி" என்றே அழைக்கப்படுகிறது, ஒரு ஆசைக்கும் மற்றொரு ஆசைக்கும் அல்லது ஒரு எண்ணத்திற்கும் மற்றொரு எண்ணத்திற்கும் இடையிலான அதி சூக்கும இடைவெளியும் "வெளி" அன்றி வேறல்ல.

**ஞாயிற்றுக்கிழமை, 2, ஆகஸ்டு, 1942.**

**225. *சிறு துளிகள் பல சேர்ந்தே வெள்ளமாகிறது. இதே போல் நல்ல அல்லது தீய செயல்கள் சிறிது சிறிதாக ஒன்று சேரும்போது முறையே செல்வச் செழிப்பையோ தரித்திரத்தையோ அள்ளித் தருகிறது.***

**தெளிவுரை:-**

*பல துளிகள் ஒன்று சேர்ந்து பெரும் வெள்ளமாகப் பாய்கிறது. ஒரு நீர்த்துளி தனியாகப் பிரிந்தால் அதற்கு மதிப்பு இல்லை. பார்வையிலும் படுவதில்லை. அதே போன்ற எண்ணற்ற துளிகள் ஒன்று சேரும்போது அவை வெள்ளமாய் உருவெடுக்கிறது. அது பெரும் அழிவையும் விளைவிக்கிறது. இதேபோல் வெற்றியோ தோல்வியோ எடுத்தவுடன் கிடைப்பதல்ல. அவை எண்ணற்ற நல்ல அல்லது தீய செயல்களின் வெளிப்பாடே. மனிதர்கள் தங்கள் தினசரித் தவறுகளை புரிந்து கொள்வதுமில்லை. திருத்திக் கொள்வதுமில்லை. இவை ஒன்றாகி வலுப்பெறும்போது பெரும் தோல்வியையும், தரித்திரத்தையும் விளைவிக்கிறது. இதைப் போல ஒருவன் சின்னஞ்சிறு நற்செயல்களை செய்து கொண்டே வந்தால் அவைகளும் ஒன்று திரண்டு வலுப்பெற்று ஒரு சமயத்தில் பெரும் வெற்றியையும், அதிர்ஷ்டத்தையும் அளித்து விடுகிறது. ஆகவே நமது அதிர்ஷ்டம் அல்லது துரதிர்ஷ்டம், வெற்றி அல்லது தோல்வி என்பவை நம்முடைய நல்லதும் கெட்டதுமான சிறு சிறு செயல்களின் விளைவேயாகும்.*

**ஞாயிற்றுக்கிழமை, 29, நவம்பர், 1942.**

**226. *ஒவ்வொரு தோல்வியுமே தவறாகச் செலுத்தப்படும் ஆசை, எண்ணத்தின் விளைவே. அதையே எண்ணற்ற***

சின்னஞ்சிறு தவறான ஆசைகள் எண்ணங்களின் வெளிப்பாடாகவும் கருதலாம்.

தெளிவுரை:-

ஆசையே எண்ணத்திற்குக் காரணம் எண்ணமே செயலுக்குக் காரணமாகிறது. ஆசை மூவகையானது. அதாவது ஆசையின் வேகம் மாறுபடுவதால் ஏற்படுவது. அது இலேசானதாகவும், நடுத்தரமானதாகவும், உறுதியானதாகவும் இருக்கலாம். மேற்போக்கான ஆசை எண்ணத்தால் ஏற்படும் செயலில் வேகம் இருப்பதில்லை. அத்தகைய ஆசைகளும் எண்ணங்களும் செயலில் ஈடுபடாமலேயே மறைந்து விடுவன. ஆனால் அதே ஆசை திரும்பத் திரும்பத் தோன்றினால் அது வலுப்பெற்று நடுத்தரவகை ஆசையாகிறது. இந்த நடுத்தர வகை ஆசை ஒருவனைச் செயல்பட வைக்கும். ஆனால் உடனே அல்ல; அது கொஞ்சம் காலத்தைக் கடத்தும். ஆனால் ஆசையும் எண்ணமும் தீவிரமானதாக இருப்பின் நினைத்த கணமே ஒருவரைச் செயலாற்றச் செய்யும். ஆக ஒவ்வொரு தோல்வியும் தவறாகச் செலுத்தும் எண்ணத்தால் விளைவதே. ஒவ்வொரு வலுப்பெற்ற தவறான ஆசையும் எண்ணமும் எண்ணற்ற துளித்துளித் தவறுகளடங்கிய பாதை மாற்றப்பட்ட ஆசை எண்ணங்களின் விளைவுகளே.

**ஞாயிற்றுக்கிழமை, 14, பிப்ரவரி, 1942.**

227. கடவுள் மின்சார மின் இயக்கி சாதனம் அல்லது மின்சார மையம் போன்றவராவார். தனித்தனி உயிர்கள், பலவகை ஒளி உமிழ் சக்தி கொண்ட குமிழ்கள் போன்றவை. அவை நகரின் பலவேறு பகுதிகளில் மின்சாரத்தைப் பெற்று ஒளிர்கின்றன. மின் குமிழ்களின் ஒளி உமிழ்சக்தி வித்தியாசப் படலாம். ஆனால்

மின்சாரம் ஒன்றே ஒன்றுதான். அவை தமக்கான சக்தியை ஒரே பொது இடத்திலிருந்து பெறுகின்றன. அதேபோல் பல்வேறு உயிர்கள் கடவுளில் இருந்தே உற்பவிக்கின்றன. அவரிடமிருந்தே உயிரையும் ஒளியையும் பெறுகின்றன. ஆனால் அவை மனோ வலிமை, தூய்மை, புரிந்து கொள்ளுந் தன்மை ஆகியவற்றின் அளவுகளில் மாறுபடுகின்றன.

**ஞாயிற்றுக்கிழமை, 14, பிப்ரவரி 1943.**

**228. அறியாமை இருண்ட மேகங்கள் சூழ்ந்த இரவைப் போன்றது. உலக அறிவு நிர்மலமான நட்சத்திரங்கள் ஒளி வீசும் இரவைப் போன்றது. சவிகல்ப சமாதி (உருவத் தியானம்) முழுமதி ஒளிரும் இரவாகும். ஞானம் அல்லது நிர்விகல்ப சமாதி (அருவத் தியானம்) நண்பகலுக்கு ஒப்பானது.**

**தெளிவுரை:-**

அறியாமை என்பது கறுத்த மேகம் சூழ்ந்த இரவு போன்றது. அது பார்வையை மறைக்கிறது. அனைத்தையும் இருள் கப்பிக் கொள்கிறது. உலக அறிவு நட்சத்திரங்கள் பளிச்சிடும் நிர்மலமான இரவு போன்றது. அது ஒரு குறிப்பிட்ட எல்லைவரை பார்வைக்குப் புலப்படுகிறது. உலக அறிவு எவ்வளவு சிறந்ததாயினும் மேலும் அறியாமையிலேயே மூழ்கி இருக்கிறது. இதை மேகங்களற்ற நட்சத்திரங்கள் ஒளிரும் இரவுக்கு ஒப்பிடலாம். சவிகல்ப சமாதி நிலையை எய்தியவன் ஆன்மிகத்தில் உயரிய முன்னேற்றம் பெற்றவன் ஆகிறான். உலகாயத அறிவு படைத்த மனிதனை விட உயர்ந்தவன் இவன். அத்தகைய மனிதனின் ஞானத்தை பௌர்ணமி இரவிற்கு ஒப்பிடலாம். அதன் ஒளி வெகு தூரப் பார்வைக்குப் புலனாகிறது. ஆயினும் அந்த ஒளி

உண்மையான வண்ணங்களில் பார்க்க உதவுவதில்லை. ஆனால் ஒரு மனிதன் வாலறிவு நிலை அல்லது நிர்விகல்ப சமாதியை எய்தும் போது அறியாமையென்பது சிறிதேனும் இன்றி அழிந்து போகிறது. அவனுடைய ஞானம் உச்சிப் பகல் சூரியனைப் போன்று ஒளி வீசுகிறது. அத்தகைய மனிதனுக்கு உச்சிக்கால பகலைப் போல் ஒவ்வொன்றும் நன்றாகப் புரிகிறது.

ஞாயிற்றுக்கிழமை, 14, பிப்ரவரி, 1943.

229. *விதவிதமான சுவை உணர்வுகள் கொண்ட விருந்தை நன்றாக அனுபவிக்கலாம். எல்லோருக்கும் அது மன நிறைவை அளிக்கிறது. அதுபோல பல்கலை அறிவு பெற்றவரின் வாழ்க்கை மகிழ்ச்சி நிரம்பியதாக இருக்கிறது. நல்வழியில் அதை அனுபவிக்க முடிகிறது.*

தெளிவுரை:-

ஒரு விருந்தில் பல்வேறு சுவையுள்ள மனிதர்கள் வந்து கூடுகிறார்கள். எல்லோரின் சுவைக்கும் ஏற்பப் பல்வேறு உணவு வகைகள் இருக்கின்றன. உண்ணும் எல்லோருமே திருப்தி அடைகின்றனர். அது போன்ற விருந்து விழாவை நல்ல முறையில் அனுபவிக்க முடிகிறது. மாறாக அந்த விருந்தில் பலதரப்பட்ட சுவைகளில் சில குறைந்திருப்பின் அந்தக் குறை பலருக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது. அவர்களின் சுவைக்கு ஏற்ற உணவு வகை இல்லாததே காரணம். அதுபோல் பல்கலை அறிஞராக உள்ள ஒருவர் அவருடைய நேரத்தை ஒழுங்காகச் செலவழிக்கிறார். அவர் ஒருதலைப்பட்சமான அறிவுடையவரைவிட வாழ்க்கையை நன்றாக அனுபவிக்கிறார். பல்கலை அறிவுத்திறன் கொண்டவரால் பல்வேறு பொருள்களை ஆராய்வதில் முழுக்க முழுக்க

நேரத்தைச் சரிவரச் சிலவழிக்க முடிகிறது. இந்த மகிழ்ச்சியால் இவருக்கு மனச்சுமை தெரிவதில்லை. பல்கலை அறிவில்லாத ஒருவர் ஏதாவதொரு பொருளில் மிகப்பெரிய அறிஞனாகத் திகழ்ந்தாலும் அந்த ஒரே பொருளில் மட்டுமே தன் கவனத்தைச் செலுத்துவதில் மனச்சுமை அதிகரித்து வேதனை விளைகிறது.

**செவ்வாய்க்கிழமை, 9, மார்ச், 1943.**

**230. உள்ளுணர்வின் உந்துதல் பெற்ற ஆசை எண்ணங்களாகிறது.**

**தெளிவுரை:-**

ஏற்கனவே சொல்லியது போல ஒரு ஆசை எண்ணத்தின் சூக்கும வடிவம், ஆசை வளரும் போது எண்ணமாகிறது. எப்போதும் ஆசைகள் மனத்தில் உதித்து இதய மையம் அல்லது மூளை மையத்தில் ஒரு சூக்கும வடிவம் பெறுகிறது. சுயமாகத் தோன்றும் எண்ணக் கதிர்களின் விளைவே இது (ஆசிரியரின் மனிதன், மனம் மனச் செயல்களின் அதிசயங்கள் என்ற நூலைப் பார்க்கவும்) இந்த ஆசைகள் மிகச் சூக்குமமானது. ஒரு சாதாரண மனிதனால் அவற்றைப் புரிந்து கொள்ள முடிவதில்லை ஆனால் இந்தக் சூக்கும ஆசைகளுக்கு விருப்பப்பட்டால் இந்த ஆசைகளின் விவரங்கள் மனக்கோப்பிலிருந்து (சித்தத்திலிருந்து) இதய மையத்தை அடையும். அது தூல ஆசையாகிறது. இந்த நிலையில் ஒரு சாதாரணன் தான் விரும்பிய ஆசையைப் புரிந்து கொள்கிறான். இந்தத் தூல ஆசை மையத்தை விட்டு மூளை மையத்திற்குச் செல்கிறது. விரும்பிய சூக்கும ஆசை மேலும் திடமான தூல ஆசையாக மாறுகிறது. அந்தத் தூல நிலையே எண்ணம்.

**சனிக்கிழமை, 20, மார்ச், 1943.**

231. **அடித்தளம் இல்லாமல் வீடு கட்ட முடியாது. இயம நியம விதிகளை கடைப்பிடிக்காவிட்டால் சமயம் அல்லது சமயத்தின் முன்னேற்றம் கிட்டாது.**

**தெளிவுரை:-**

*சரியான அடித்தளம் இல்லாத வீடு நிலைக்காது. உண்மையில் எந்த ஒரு வீட்டையும் உறுதியான அடித்தளம் போடாமல் கட்டுவதில்லை. வசிக்கும் வீட்டிற்கு அடித்தளம் எப்படி இன்றியமையாததோ, அதே போல இயம - நியம விதிகளை அதாவது கொல்லாமை, உண்மை, கற்பு நெறி, கள்ளாமை, தூய்மை, வழிபாடு போன்றவற்றைக் கடைப்பிடித்தால்தான் ஆன்மிகக் கோபுரத்தை எழுப்ப முடியும். எந்த ஒரு பண்புமற்ற, நன்னடத்தையில்லாத மனிதனும் பணத்தைக் குவித்து உலகில் பெயரையும், புகழையும் பெறலாம். ஆனால் ஆன்மிக சாம்ராஜ்யத்தில் அது முடியாது. ஆன்மிகத்தில் முன்னேற வேண்டுமானால் ஒருவர் தயை, கண்ணியம், தூய எண்ணம், சொல், செயலில் தூய்மை உடையவராக இருத்தல் வேண்டும். ஒரு ஆன்மிகவாதி எல்லோரையும் நேசிக்க வேண்டும். இயம - நியம விதிகளை அனுசரிக்காத மனிதன் ஆன்மிகத்தில் தலை தூக்கவே முடியாது. அதனால் இயம - நியம விதிகளே முக்கிய அடித்தளம். அந்த அடித்தளத்தின் மீதே சமயத்தின் முழுக் கட்டுக் கோப்பும் நிற்கிறது.*

**சனிக்கிழமை, 20, மார்ச், 1943.**

232. **ஆன்மிகத்தில் மிக உன்னத நிலையை எய்திய பிறகு ஒருவர் இயம - நியம விதிகளைக் கடந்து விடுகிறார். எல்லாவித முரண்பாடுகளும் அற்றுப் போகின்றன.**

**அதன் பிறகும்கூட ஒருவர் கெட்ட செயல்களைச் செய்யக்கூடாது.**

**தெளிவுரை:-**

ஒரு மொழிக்கு எழுத்துக்கள் எப்படியோ அதே போல் சமயத்திற்கு இயம - நியம விதிகள் ஆகும். வேறு விதத்தில் சொல்வோமானால் இயம - நியம விதிகளும், நற்பண்பு தீய குணம் போன்றவையும், நல்லதும் கெட்டதுமானவையும் சமயப்பயிற்சியின் ஆரம்ப வகுப்புகள். துவங்கும்போது இவை மிக மிக இன்றியமையாதவை ஆனால் ஒரு மனிதன் ஆன்மிகத்தில் உயர்ந்த நிலைக்குப் போய் நிர்வாணம் அல்லது நிர்விகல்ப சமாதி நிலையை எய்தியதும் ஒருவர் அகிலத்தின் பன்மையில் ஒருமையைக் காண்கிறார். அத்தகைய மனிதன் நல்லது - கெட்டது, நற்பண்பு - தீய குணம் போன்றவற்றை ஒதுக்கி விடுகிறார். ஏனெனில் எல்லாவகை முரண்பாட்டு நிலைகளிலும் தெய்வீகத்தையே பார்க்கிறார். இயம நியம விதிகளிலும் எல்லா வகை இருநிலை முரண்பாட்டுக் கருத்துக்களிலும் இறையுணர்வு எய்திய மனிதனுக்கு சமயாவமே ஏற்படுகிறது. ஆனால் அவர் எவ்விதத் தவறான பாபக் கிருதியங்களையும் செய்யக்கூடாது. ஏனெனில் அவர் இறையுணர்வின் உன்னத நிலையை அடைந்தவராக இருப்பதால் அவரது எல்லாப் பாபங்களும் தாமாகவே நசித்து விடுகின்றன. ஒரு மனிதனிடம் பாபத்தின் ஒரு சிறு நிழல் படிந்திருந்தாலும் அவரால் நிர்விகல்ப சமாதிப் பேற்றைப் பெற முடியாது. அதை எய்திய பின்னர் மேலான உயர் நிலையிலிருந்து சாதாரண நிலைக்கு இறங்கி வந்த பிறகு அவரிடம் பாபங்களும், தீய பதிவுகளும் இருப்பதில்லை. அதனால் பண்புள்ள நற்காரியங்களையே அவரால் செய்ய இயலும்.

செவ்வாய்க்கிழமை, 23, மார்ச், 1943.

**233. மேலான ஆழ்நிலை ஒருமைப்பாடு சித்திக்க மனத்தை ஒரே பொருள் ஒரே புள்ளி அல்லது ஒரே கருத்தில் ஊன்றச் செய்ய வேண்டும்.**

தெளிவுரை:-

ஒருமைப்பாடு பலதரப்பட்டது. மனம் பல்வேறு வழிகளில் ஒருமைப்பாட்டைப் பெறுகிறது. ஒருவர் ஏதாவது ஒரு கருத்து, உருவம், பொருள் போன்றவற்றில் சிரத்தை காட்டி விருப்பங் கொண்டால் மனம் அதில் மிகச் சுலபமாக ஒன்றி விடுகிறது. ஒரு புதினம் அல்லது செய்தித்தாளைப் படிக்கிறோம், வம்பளக்கிறோம். ஒரு திரைப்படக் காட்சியைக் காண்கிறோம். மனம் பல்வேறு உருவங்களில் பதிகிறது. ஒருவர் ஒரு குறிப்பிட்ட பொருளை நினைக்கும்போது மனம் அதன் பல்வேறு கருத்துக்களில் ஊன்றுகிறது. இத்தகைய ஒருமைப்பாட்டில் ஆழம் கிடையாது. ஆனால் மனம் ஒரு புள்ளியிலோ, ஒரு உருவத்திலோ, ஒரு பொருளிலோ ஊன்றி, அந்த ஒன்றைத் தவிர மற்ற பொருள், புள்ளி அல்லது உருவத்தை மறந்து விடுகிறது. அந்த நிலையில் ஒருவர் ஆழ்ந்த உன்னத ஒருமை நிலையை எய்துகிறார். ஆழ்ந்த உயர்நிலை ஒருமைப்பாட்டின்போது மனம் உடலையே மறந்து விடுகிறது. தன்னைப் புலன்களிலிருந்து விடுவித்துக் கொள்கிறது. முழு உலகத்தின் உணர்வே அற்றுப் போகிறது. பிறகு எஞ்சி இருப்பது ஒரே ஒரு பொருள் தான். அதாவது மனம் ஒருமித்த உருவந்தான்! ஆகவே மிக ஆழ்ந்ததும் உயரியதுமான மன ஒருமைப்பாடு, மனம் ஒரே புள்ளி, உருவம் அல்லது பொருளில் ஊன்றும் போது மட்டுமே அது சித்திக்கும்!

**திங்கட்கிழமை, 29, மார்ச், 1943.**

234. ***மனத்தின் ஒருமைப்பாடு தாமாக (சுயமானது நடப்பது) நினைப்பதால் (முயற்சியால்) நிகழ்வது முன்னையது அகண்டமானது பின்னையது வரையறைக்குட்பட்டது. அதாவது முன்னையது கீழின உயிர்களும் பயில்வது பின்னையது ஒரு சில மனிதர்களால் மட்டுமே இயல்வது***

**தெளிவுரை:-**

மன ஒருமைப்பாடு இரண்டு விதமானது. அதாவது சுயமாக விளைவது, நினைத்து நடப்பது. ஒரு மனிதன் விரும்பி, நேசித்து ஒரு உருவத்தின் மீது பற்று வைக்கிறான் அப்போது மனம் தானாகவே முயற்சியின்றி அதில் ஒருமித்து விடுகிறது. இத்தகைய ஒருமைப்பாடு மனித இனத்தில் மேலோங்கி இருக்கிறது. கீழின உயிர்களிலுங்கூட அதாவது மிருகங்கள், பறவைகள், ஊர்வன, புழு - பூச்சிகள் போன்றவற்றிலும் அது உண்டு. ஆனால் நினைத்த மாத்திரத்தில் மனதை ஒருமுகப் படுத்துவதற்கு நீண்ட பயிற்சி தேவை. இதை ஒரு சில மனிதர்களிடம் மட்டுமே காண முடியும்.

**திங்கட்கிழமை, 29, மார்ச், 1943.**

235. ***மன ஒருமைப்பாடின்றி மகிழ்ச்சியோ நினைத்தலோ இல்லை***

**தெளிவுரை:-**

நாம் புலன் போகப் பொருட்களோடு தொடர்பு கொள்ளும் போது, புலன்கள் மூலமாக எல்லாவகை ஆனந்தத்தையும் (கீழ்நிலை ஆனந்தம்) அடைகிறோம். உயர்வகை இன்பம் அல்லது ஆனந்தம் ஒன்று உண்டு அது முழுக்க முழுக்க உள்முகமானது. அதில் புலன்

களின் பங்குப் பணியே கிடையாது. இத்தகைய இன்பம் அல்லது ஆனந்தத்தை மனமானது உள்முகமாக ஒருநிலைப்படும்போது அதாவது ஆன்மாவில் அல்லது உயிரில் ஒடுங்கும்போது எய்துவதேயாம். ஆனால் சாதாரண மகிழ்ச்சி அல்லது இன்பத்தை எய்த ஒருவர் புறப் பொருள்களைச் சார்ந்தே பெற முடியும். அவர் புலன்களின் மூலம் புறப் பொருள்களின் மேல் பற்று வைக்க வேண்டும். இவையின்றி இன்பத்திற்கோ, ஆனந்தத்திற்கோ இடமில்லை. ஏனெனில் மனத்தின் உதவியின்றிப் புலன்கள் தாமாகவே இயங்காது. மனம், ஒலி, தொடு உணர்வு, பார்வை, சுவை, முகர்தல் ஆகியவற்றில் புலன்களோடு தொடர்பு கொள்ளாவிடில் இவற்றை அனுபவத்தில் பெற முடியாது. ஆழ்ந்த உறக்கத்தில் மனம் ஆன்மாவில் ஒன்றுகிறது. அது எந்தப் புலன்களோடும் சேருவதில்லை அறையில் பலர் பேசிக் கொண்டிருப்பார்கள். சுகந்தப் பொருட்களின் மணமும் இருக்கும். இருப்பினும் அப்போது ஒலி, முகர்தல் போன்றவற்றை உணர முடிவதில்லை. மனமே எல்லாப் புலன்களையும் இயக்குகிறது மனமே உலகிலுள்ள எல்லா உருவங்களின் விவரங்களையும் புலன்களின் உதவியால் அறிந்து அனுபவிக்கிறது. உதாரணத்திற்கு கண்கள் குறிப்பிட்டதொரு உருவத்தைக் காண்கிறது என வைத்துக் கொள்வோம். பார்க்கும் சூக்குமப் புலன் அந்த உருவத்தை மூளை மையத்திற்குக் கொண்டு செல்கிறது. மனம் அதன் பதிவை மூளை மையத்தில் வாங்கிக் கொள்கிறது. மனக்கோப்பிலிருந்து உருவத்தின் விவரத்தைப் பெற்றதும் பகுத்தறிவு பார்த்த உருவம் எந்தப் பொருளைப் பற்றியது என்பதைக் கண்டு கொள்கிறது. மனம் உடனே அந்தக் குறிப்பிட்ட புலனோடு தொடர்பு

கொண்டு அந்தப் புலனை இயக்குகிறது. அதன்பிறகு அந்தக் குறிப்பிட்ட புலன் பொருளை அனுபவிக்க வேண்டுமென்கிற பரபரப்பும் ஆசையும் உண்டாகிறது. இந்த ஆசை உட்புகுந்ததும் மனம் அந்தக் குறிப்பிட்ட புலனைச் செயல்படுத்துகிறது. மனமானது முழுக்க முழுக்க அந்தக் குறிப்பிட்ட புலனில் ஒன்றுகிறது. மனத்தின் இத்தகைய ஒருமைப்பாடு இன்றேல் மகிழ்ச்சியோ, இன்பமோ, ஆனந்தமோ, கொள்ள முடியாது. ஆகவே சாதாரணமானதோ அல்லது உயரியதோ ஆன மகிழ்ச்சி அல்லது பேரானந்தம் பெற மனம் ஒருமுகப்பட வேண்டும்.

**திங்கட்கிழமை, 29, மார்ச், 1943.**

**236. அமைதியான நீர்ப்பரப்பில் கல் விழுந்தால் எப்படியோ அதே போல் நிம்மதியான மனத்திற்கு ஆசை.**

**தெளிவுரை :-**

காற்று இல்லாத போது நீர் அலைவதோ, அலைகள் எழும்புவதோ கிடையாது. ஏரியின் நீர்ப்பரப்பு அமைதியாகச் சலனமின்றி இருக்கிறது அப்போது அதைச்சுற்றியுள்ள உருவங்களையும் காட்சியையும் தெளிவாகப் பிரதிபலிக்கிறது. ஆனால் ஏரியில் ஒரு கல்லை வீசி எறிந்தால் நீர் முழுவதுமே அலைக்கழிக்கப் பட்டு எண்ணற்ற அலைகளையும், குமிழிகளையும் உண்டாக்குகிறது. அதே போல் மனத்தில் ஆசைகளும் எண்ணங்களும் இல்லாத போது அது தனது பளிங்குத் தூய்மையைத் திரும்பப் பெறுகிறது. உயிர் அல்லது ஆன்மாவின் தோற்றத்தைக் காண்கிறது. ஆசைகளே ஆன்மத் தோற்றத்தை மனத்தின் பார்வையிலிருந்து மறைகிறது.

ஒவ்வொரு ஆசையும் எண்ணமும் ஏரியின் அமைதியான நீர்ப்பரப்பில் எறியப்படும் கல்லைப் போன்றது. நீரில் விழும் கல் எப்படி அலைகளையும் குமிழிகளையும் உண்டாக்கி அதைச் சுற்றியுள்ள உருவக் காட்சிகளை நன்றாகப் பிரதிபலிப்பதில்லையோ அதேபோல் ஒரு ஆசை, எண்ணம் மனத்தின் அமைதி, சாந்தம் நிறைந்த நிலையைக் குலைத்து விடுகிறது.

ஆசைகளும் எண்ணங்களுமே மனத்தை அலைக்கழித்து தூய்மையை இழக்கச் செய்கிறது. அதனால் ஒருவரிடமுள்ள பேருண்மை இயல்பை மறக்கடிக்கிறது. பந்த பாசத்தைத் திணித்து அவரை நரக வேதனைக்குள்ளாக்குகிறது

**திங்கட்கிழமை, 29, மார்ச், 1943.**

237. **ஆசைகள், எண்ணங்களின் வேகம் மூன்று விதமாகும் அதாவது மெலிதானது, நடுத்தரமானது, வலுவுள்ளது ஆகும். அதனால் விளைவும் விளைவுகளும் அலைகளின் வேக இயல்புக்கேற்ப மாறுபடும்.**

**தெளிவுரை:-**

ஒரு ஆசையின் வேகம் மெலிதாகவோ, நடுத்தரமானதாகவோ, வலுவானதாகவோ இருக்கும்.

மேலெழுந்தவாரியான ஆசையும், எண்ணமும் எந்தச் செய்கையையும் விளைவிக்காது. எப்போதும் அது கவனிக்காத நிலையில் மறைந்து விடும்.

நடுத்தர வேகமுடைய ஆசை தோன்றும், மறுபடியும் தோன்றும். சிறிது காலங்கழித்து வலுப்பெற்று ஒருவரை செயல்புரியத் தூண்டும். ஆனால் வலுவுள்ள ஆசையும் எண்ணமும் உடனே செயல்பட வைக்கும்.

ஒரு மனிதன் பாபத்தைச் செய்தால், செய்த அந்தப் பாபம் சாதாரணமானதாக இருப்பின் அது நெடுநாள் வரை ஒன்றும் செய்யாது. செய்த பாபம் நடுத்தரமான தாக இருப்பின் அவன் இல்வாழ்க்கையிலேயே அதை அனுபவித்தாக வேண்டும். ஆனால் செய்த பாபம் மிகப் பெரிதாக இருப்பின் அதன் பலனை உடனே அனுபவித்தாக வேண்டும். அதனால் தொடர்ந்து நரக வேதனைக்கு ஆட்படுகிறான்.

**திங்கட்கிழமை, 29, மார்ச், 1943.**

**238. எல்லா ஆசைகளும் எண்ணங்களும், அனைத்து எதிரெதிர் முரண்பாடுகளும் இருவேறு நிலைகளில் மனத்திலெழும்.**

**தெளிவுரை:-**

ஒவ்வொரு ஆசையுமே ஒரு தேவை. குறிப்பிட்ட ஒன்று நம் கண்ணுக்குப் புதிதாகத் தோன்றினால் நாம் அதை அடைய விரும்புகிறோம். ஒரு மனிதன் ஒரே பொருளைப் பார்த்ததும், ஒருவர் தன் சொந்த உயிர் அல்லது ஆன்மாவை எங்கும் எதிலும் கண்டதும் எல்லா ஆசைகளும் மறைந்து விடுகின்றன.

ஒருவர் ஒற்றுமையில் வேற்றுமையைக் காணும் வரைக்கும் அவர் மனம் எண்ணற்ற ஆசைகள் எண்ணங்களால் நிரம்பியுள்ளது. ஆனால் அவர் பலவற்றின் பின்னணியில் ஒன்றையே காணும்போது அவரது எல்லா ஆசைகளும் தாமாகவே மறைந்து விடுகின்றன. வேற்றுமை எண்ணம் மனத்தில் உதிப்பதால்தான் எல்லா ஆசைகளும், எண்ணங்களும் எழுகின்றன. அதேபோல் மனத்தில் எழும் வேற்றுமை உணர்வினால் ஒருவருக்கு எதிரெதிர் முரண்பாடுகள் தோன்றுகின்றன.

ஒருவர் எல்லா வகைப் பிரிவினைகளிலும் ஒற்றுமையைக் கண்டால் அனைத்து எதிரெதிர் முரண்பாடுகளும் வலுக்குன்றிப் போகும். நன்மை தீமை, நற்பண்பு, தீய குணம், துன்பம், மகிழ்ச்சி, இழப்பு லாபம் போன்றவற்றின் பின்னணியில் ஒரே வகை தெய்வீக பலத்தைக் காணலாம்.

**புதன்கிழமை, 31, மார்ச், 1943.**

239. ***தனிமை ஆனந்தம் நிறைந்தது. ஆனால் மிகுந்த வேதனையையும், ஆபத்தையுங்கூட விளைவிக்கும்.***

**தெளிவுரை:-**

ஆன்மிகத்தில் மிக உயரிய ஞானத்தைப் பெற்றவர் மட்டுமே தனிமையில் பத்திரமாக வாழ முடியும். அவர் தன் மனத்தை முழுமையாகத் தெய்விகச் சிந்தனையில் இருத்தி எவ்விதச் சிரமமோ அல்லது வேதனையோ இன்றி இருக்க இயலும்.

அத்தகையவர் தனிமையில் பேரானந்தத்தை அனுபவிக்கிறார். ஆனால் ஒருவர் ஆன்மிக வாழ்வை துவங்கும் ஆரம்ப கட்டத்தில் தனிமை வாழ்க்கை கூட்டம் நிரம்பிய இடத்திலும், புலன்போகப் பொருள்கள் சூழ்ந்த இடத்திலும் வாழும் வாழ்க்கையை விடச் சிரமமானது. செய்யும் ஒவ்வொரு செயலையும் தொடர்ந்து தோன்றும் விளைவுக்கு ஏற்ப மனம் உயர்வுக்கும் தாழ்வுக்கும் ஆளாக்கும். செயலில் இறங்கும்போது மனம் ஆரோக்கியமான நிலையில் இருக்கும். நன்றாக இயங்கும், தாம் வேகமாக முன்னேறுவது போல் தெரியும். உடல் ஆரோக்கியமும் நன்றாக இருக்கும். சூழ்நிலையும் நல்லபடி உதவுவது போல தோன்றும். பகுத்தறியும் ஆற்றலும் பற்றற்ற நிலையும் கூர்மையும் உறுதியும் கொண்டிருக்

கும். அப்படிப்பட்ட நேரங்களில் தனிமை சொர்க்கம் போலத் தோன்றும். ஆனால் இதே நிலை வெகுநாள் நீடிப்பதில்லை. சில நாட்களுக்குப், பிறகு எதிர் விளைவு தோன்றத் துவங்கும். உடலாரோக்கியம் குறைந்து போகும். தியானம் சலிப்பு தட்டும். மன ஒருமைப்பாடு பகுத்தறிதல், பற்றுதல் ஆகியவற்றின் ஆற்றல் மந்தப் படும். சுற்றுச்சூழல் எதிர்ப்புகளைத் தோற்றுவிக்கும். துவக்கத்தில் அழுந்தி மறைந்திருந்த பலவீனமானதும் தீயதுமான ஆசைகள் எல்லாமே மீண்டும் தலைதூக்கும். பிறகு கடுமையான போராட்டம் துவங்கும் ஒரு கற்றுக்குட்டி தனிமையில் இருக்கும் போது தோன்றும் வேதனைகளைத் தாங்க இயலாதவராகிறார். தனது மனம், புலன்களை அடக்கி ஆளும் திறமை பெற்றவர் இந்த விளைவின் வேதனையை எளிதில் கடந்து விடுகிறார்.

நினைத்த மாத்திரத்தில் மனத்தை தெய்விகச் சிந்தனையில் ஆழ்த்தி விடுகிறார்.

ஆன்மிக ஆரம்பமானவன் தன்னுடைய மனம் புலன்களை கட்டுப்படுத்துவதற்கு மிகவும் சிரமப் படுகிறார்.

இந்த உண்மைகளை அறியாத பலர் ஆன்மிக வாழ்வின் ஆரம்பக் கட்டத்திலேயே தனிமையில் சென்று பயில்கிறார்கள். அதனால் தாம் மேற்கொண்ட சாதனையை பாழடித்துக் கொள்கிறார்கள்.

ஓர் ஆரம்ப சாதகன் தனிமையில் வாழ்வதால் எதிர் விளைவுகளின் போது மனத்தை முழுமையாகக் கட்டுப் படுத்த இயலாதவனாகிறான். அதனால் ஒவ்வொரு அங்கமும், நாடி நரம்புகளும் புடைத்துக் கொள்கின்றன. அதன் விளைவாக சிலருக்குப் பைத்தியம் பிடிக்கிறது.

சிலர் தற்கொலையில் இறங்குகிறார்கள், வேறு சிலர் பல விதமான தீய வழிகளுக்கு எளிதில் பலியாகிறார்கள்.

புதன்கிழமை, 7, ஏப்ரல், 1943.

**240. விஞ்ஞானம் அல்லது வாலறிவு மட்டுமே மோட்சத்தை (வீடுபேற்றை) அளிக்கும். வாலறிவு மட்டுமே மோட்சமாகும். ஞானம், பக்தி, கர்மம், ராஜயோகம் போன்றவை மோட்சத்தின் வழிகாட்டிகள்.**

**தெளிவுரை:-**

ஒளியே இருட்டைத் துரத்தும் வாலறிவு. இது மட்டுமே அறியாமையை அழித்து வீடுபேற்றைத் தரும். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இருள் சூழ்ந்திருந்த குகைக்குள் ஒரே ஒரு தீக்குச்சியைப் பற்ற வைத்ததும் இருள் மறைந்து விடுகிறது. பேரறிவு உதித்தவுடன் ஆயிரமாயிரம் பிறவிகளாகத் தொடர்ந்து வந்த அஞ்ஞானம் அழிந்து போகிறது. வாலறிவு (விஞ்ஞானமே) மோட்சம் அல்லது வீடுபேறு, ஞானம் அல்லது பேரறிவு இரண்டு விதமானது. அதாவது சாதாரணமானது, மேன்மையானது. சாதாரணத்தை ஞானம் என்று சொல்லலாம். மேன்மையானதை விஞ்ஞானம் எனலாம். ஏட்டுப்படிப்பே ஞானமாகும். ஏட்டில் படித்ததை சாதனம் செய்து அதிலுள்ள உண்மைகளை நேரில் கண்டுணர்வதே விஞ்ஞானம். மனம் நான்கு வகை ஆற்றல்களைப் பெற்றது. அதாவது உள்ளுணர்வின் ஆற்றல், சிந்தனை, திரட்சி ஆகும். இந்த நால்வகை ஆற்றல்களுக்கேற்ப நான்கு விதப் பாதைகள் உள்ளன. அதாவது செயல் (கர்மயோகம்), வழிபாடு (பக்தி யோகம்), தத்துவம் (ஞானயோகம்), மனக்கட்டுப்பாடு (ராஜ யோகம்) ஆகும். மனத்தின் அழுக்குகளே மனிதனை பந்தப்படுத்துகிறது. இதயம் தூய்மை பெற்றவுடன் [illegible]

ஒருமுகப்பட்டு ஒருவர் சமாதி அல்லது விடுதலையை எய்துகிறார். ஒருவர் இதயத்தைத் தூய்மைப்படுத்தவும் இயலும். மனத்தை ஒருமுகப்படுத்தவும் தன்னலமற்ற சேவையினால் இயலும். அதாவது தொழிலுக்காகவே செய்யும் தொழில், தூய்மை நிறைந்த வழிபாடு, பகுத்தறிந்து பற்றறுத்தல் அல்லது மனக்கட்டுப்பாடு ஆகியவற்றில் வாலறிவு நிலை அல்லது மோட்சத்தை எய்து விதேயாம்.

புதன்கிழமை, 7, ஏப்ரல், 1943.

241. சமாதி என்றால் என்ன அர்த்தம்?

பதில்:-

மனம் ஓர் உருவத்தில் அல்லது அருவத்தில் ஆழ்ந்து ஒன்றும் நிலையே சமாதி. சமாதி இருவகைப்படும் சவிகல்ப சமாதி (ஒரு உருவம் அல்லது புள்ளியில் மனம் ஆழ்ந்து ஒன்றுவது ஆகும்). இரண்டாவது நிர்விகல்ப (உருவமற்ற ஒன்றில் மனம் ஆழ்ந்து ஒருமுகப்படுவது) சமாதி ஆகும். ஆரம்ப கட்டத்தில் பெயரும் உருவரும் ஒன்றையொன்று தழுவியே இருக்கும். உண்மையில் இரண்டும் பிரிக்க இயலாதவை. மனத்தை உறுதியாக்கி ஒருமுகப்படுத்த ஒருவர் ஆரம்ப நிலையில் ஒரு பெயர் அல்லது உருவத்தைக் குறியாக எடுத்துக் கொள்கிறார் (மந்திரமும் இஷ்ட தேவதையும்) ஆனால் மனம் உறுதியாக நின்று ஆழ்ந்த நிலைக்குப் போகும்போது மந்திரமும் (பெயரும்) தானாகவே நின்று விடுகிறது மனம் அதன் அர்த்தத்தில் ஒன்றி விடுகிறது அதாவது இஷ்டதேவதையின் மனோ உருவத்தில் ஒன்றுகிறது. மனம் அனைத்தையும் விட்டுவிடும் நிலை வரும் போது பெயரைப் பற்றிய உணர்வுங்கூட அற்றுப் போய் இஷ்ட தேவதையின் மனோ உருவாகவே ஆகி விடுகிறது.

இதுவே சவிகல்ப சமாதி என்பது. சவிகல்ப சமாதியில் எப்பொழுதும் இரண்டு பொருள்கள் உண்டு. அதாவது தியானிப்பவர், தியானிக்கப்படும் உருவம். சவிகல்ப சமாதி நிலையிலிருந்து கொண்டு ஒருவர் நிர்விகல்ப சமாதிக்குப் போகிறார். மனம் மேலும் மிக ஆழ்ந்த நிலைக்குப் போகும்போது உருவமற்ற கடவுளில் முழுமையாக ஒன்றி விடுகிறது இதுவே நிர்விகல்ப சமாதி என்பது. நிர்விகல்ப சமாதி நிலையில் பொருள், உருவம், அறிவு எல்லாமே முழுமையாக ஒன்றி விடுகிறது. பிறகு எஞ்சி நிற்பது தன்னில் தானாகவுள்ள உயிர்ச்சார மகாசமுத்திரம் மட்டுமே.

**புதன்கிழமை, 7, ஏப்ரல், 1943.**

242. இதயம் இருவிதமானது. தூல இதயம் மார்பின் இடப்புறத்தில் உள்ளது. ஆனால் ஆன்மிக இதயம் மார்பின் வலது புறத்தில் இதயக்குழிக்குக் கொஞ்சம் மேலே வலது மார்புக் காம்புக்குக் கீழே ஒன்றரை அங்குல தூரத்தில் அமைந்துள்ளது. ஜீவாத்மா வினுடைய (உயிரின்) பீடமே ஆன்மிக இதய மையம் சூரியன் ஏரியின் நீர்ப்பரப்பு முழுவதிலுமே ஒளிர்கிறான். ஆனால் ஒருவர் அதன் பிரதிபலிப்பை ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே காண முடியும். இதேபோல் ஜீவாத்மா உடல் முழுவதையும் சூழ்ந்துள்ளது. ஆனால் ஆழ்நிலை பெற்ற தூய மனம் ஆன்மிக இதயத்தில் அதன் ஒரு சிறு ஒளிச் சுடரைக் காண்கிறது. இந்த ஒளிச்சுடர் ஒரு சிறு புள்ளியில் துவங்கி வியாபித்து பரவும் ஒளியாகத் தெரிகிறது. பின்னர் உடல் முழுவதும் பேரொளியாகப் பரவுகிறது ஒளி புறப்படும் புள்ளியே ஆன்மிக இதயம். ஜீவாத்மாவினுடைய இருப்பிடம். ஆன்ம இதயம், ஜீவாத்மா இரண்டையும் அளவிட்டோ

வடிவமைத்தோ கூற முடியாது. மனம் தூய்மையடைந்து சூக்குமத் தன்மை பெற்று ஒருமுகப்படும்போது ஒருவன் இதைப் பார்க்க இயலும். ஆன்மிக இதயத்திற்கும் தூல இதயத்திற்கும் மிகுந்த இணக்கமான உறவு உண்டு. ஆன்மிக இதய மையத்திலிருந்தே மனச்சாட்சியின் வாக்கு பிறக்கிறது.

**திங்கட்கிழமை, 26, ஏப்ரல், 1943.**

243. ***ஒரு கண்ணாடியோ அல்லது பளிங்குத் தரையோ, அதன் அளவு, தொலைவுக்கு ஏற்பச் சுற்றியுள்ள உருவங் களைப் பிரதிபலிக்கிறது. அதன் அளவுக்கு மிகாமலோ குறையாமலோ தெரிவதில்லை. அதே போலத்தான் கண்களின் செய்கையும்.***

**தெளிவுரை:-**

ஒரு பளிங்குத்தரை அல்லது கண்ணாடியின் இயல்பு சுற்றியுள்ள பொருள்களைப் பிரதிபலிப்பதுதான். இந்த உருவங்களைப் பிரதிபலிக்கும்போது அந்தக் கண்ணாடி அல்லது பளிங்குத்தரை விரிவாவதோ சுருங்குவதோ இல்லை. ஆனால் உள்ளது உள்ளபடி காட்டும். கண்ணாடியோ பளிங்குத் தரையோ சுற்றியுள்ள பொருள்களை அவற்றின் அளவுக்கு ஏற்பக்காட்டும். அதாவது முதலில் உருவங்களின் பிம்பங்கள் பளிங்குத் தரை கண்ணாடி அளவுக்கு ஏற்பப் பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ தெரியும். இரண்டாவதாகப் பிம்பத்தைக் காட்டும் பொருள்களின் பரப்புக்கு ஏற்பவும், அது இருக்கும் தூரம், உருவத்தின் அளவுக்கு ஏற்பவும் தெரியும். நீங்கள் பெரியதும், சிறியதுமான இரண்டு கண்ணாடிகளை ஒன்றன் பக்கத்தில் ஒன்றாக வையுங்கள். இரண்டுமே சுற்றியுள்ள பொருள்களை அதனதன் அளவுப்படி பிரதிபலிக்கும். பொருள்கள்

உள்ள தூரம், அவற்றின் உருவம் அளவுகளுக்கும் ஏற்பவும் அவை தெரியும். இதேபோலத் தான் கண்களின் இயல்பும். கண்களின் இயல்பு அதன் பார்வைக்கு முன்னால் உள்ள பொருள்களின் உருவங்களைக் காண்பதே. பார்வையின் சூக்கும உறுப்புகள் பிம்பத்தைச் சூக்கும உருவில் மூளை மையத்திற்கு எடுத்துச் செல்கிறது. அது குறிப்பாகப் பதிக்கிறது. மனம் அந்தக் குறிப்பை மூளை மையத்தில் உணர்ந்து கொள்கிறது. மனம் பார்வையைச் சூக்குமப் புலன்களோடு தொடர்பு கொள்ளும்போது கண்கள் மூலமாகப் பொருள்களைப் பார்ப்பது மனமே. மனம் அவற்றைப் பற்றிக் கொள்ளாவிட்டால் பிரதிபலித்த உருவங்கள் கண்களுக்குப் புலனாகாது. பார்வைக்கான சூக்குமக் கருவிகள் பழுது பட்டாலும் அல்லது சரிவர இயங்காமற் போனாலும் மனம் தானாகவே வெளிப் பொருள்களைப் பார்க்க ஏலாது. ஆகவே ஒரு பொருளைப் பார்க்க மூன்று உறுப்புகள் இன்றியமையாதவை. அதாவது வெளிப்புறக் கண்கள், பார்வைக்கான உள்முகச் சூக்கும உறுப்புகள், மூளை மையத்திலுள்ள மனம் ஆகியவையே. கண்கள் (இயல்பானது) கண்ணாடியைப் போல் பார்க்கும் பொருள்களைப் பிடித்துப் பிரதிபலிக்கிறது. அதன் தூரம், வடிவம், அளவுக்கு ஏற்ப அது தெரிகிறது. அந்தப் பிம்பத்தை உறுப்புகள் மூளை மையத்திற்குக் கொண்டு செல்கின்றன. மூளை மையத்திலுள்ள மனம் அந்த விவரத்தை பிடித்துக் கொண்டு மூளை மையத்தில் படம் போட்டுக் காட்டுகிறது. அதன் பிறகே கண்ட காட்சியின் விவரத்தை ஒருவனால் புரிந்து கொள்ள முடிகிறது.

**திங்கட்கிழமை, 3, மே, 1943.**

244. நாம் புத்தகங்களின் மூலமாகப் பெறும் அறிவும், நாம் அதுவரை பார்க்காத ஒரு பொருள் அல்லது இடத்தைப் பற்றிய கற்பனையும் தெளிவானது ஆகாது. அதைப் பற்றிய விளக்கம் என்னமோ சரியானபடி இருக்கும். ஆனால் அதனுடைய முழுமையான விவரத்தை நாம் அறிந்து கொள்ள முடியாது. படித்துத் தெரிந்து கொள்வதைவிட ஒரு பொருள் அல்லது இடத்தை நேரில் பார்த்தவர் சொல்லும் விவரம் சரியாக இருக்கும். ஒரு பொருளையோ இடத்தையோ நாமே நேரில் கண்டு அறிவது இதையெல்லாம்விட மிகச் சிறந்தது, சரியானது. அத்தகைய அறிவு அந்தப் பொருள் அல்லது இடத்தைப் பற்றிய எல்லா ஐயப்பாடுகளையும் போக்கிவிடும். இதே போல் சாத்திரங்களிலிருந்து பெற்ற பேருண்மை அறிவு மிகச் சாதாரணமானது. இதைவிட மேலானது முழுமை யான ஞானத்தை அனுபவத்தால் அறிந்தவர் எடுத்து அதைப்பற்றி விளக்குவது ஆகும். ஆனால் இவை எல்லாவற்றையும்விட மிகச் சிறந்ததும் உண்மையான தும் எதுவெனில் ஒருவர் தானே பேருண்மை நிலையை அறிவதுதான். இது ஒன்றே எல்லா ஐயப்பாடுகளையும் போக்கி ஒருவருக்கு வீடுபேற்றை அளிக்கும்

**திங்கட்கிழமை, 17, மே, 1943.**

245. மனமே எல்லாப் புலன்களையும் இயக்குகிறது. மனத்தின் உதவியின்றிப் புலன்கள் தாமாக இயங்காது. நாம் எழுதுவதற்கு ஒரு பென்சிலையோ பேனாவையோ உபயோகிக்கிறோம். பேனா கையின் உதவியின்றித் தானாக எழுதாது. கையும் பேனா இன்றி எழுதாது. ஐம்புலன்கள் மனத்தின் கருவிகள். மனம் அவற்றின்

மூலமாக உலகத்தையும், அதைப்பற்றிய விளக்கத்தையும் தெரிந்து கொள்கிறது. புலன்களுடன் தொடர்பு கொண்டு அவற்றை இயக்கும்போது மனம் ஒரே சமயத்தில் ஒரு புலனைத்தான் இயக்க இயலும். உதார ணத்திற்குக் கண்கள், மூக்கு, காதுகள் போன்றவற்றை எடுத்துக் கொள்வோம். அவை எப்படி இயங்குகின்றன என்பதைப் பார்ப்போம். ஒரு உருவத்தை நாம் பார்க்கும் போது ஒரே சமயத்தில் இரண்டு கண்களாலும் பார்ப்பதில்லை. நாம் ஒரே சமயத்தில் ஒரே ஒரு கண்ணைத்தான் உபயோகிக்கிறோம். ஆனால் கண்ணின் பார்வை ஒரு கண்ணிலிருந்து மற்றொரு கண்ணுக்கு வெகு துரித கதியில் மாறிக் கொள்ளும். பலருக்கு இதன் விவரம் தெரியாததால் ஒரே சமயத்தில் இரண்டு கண்களாலும் பார்க்கிறோமென்று நினைக்கிறோம். ஒரு பொருளை முகரும்போதுகூட அப்போதைக்கு மூச்சு இழையும். ஒரு நாசித் துவாரத்தின் மூலமாகவே முகர்கிறோம். அதேபோல் ஒரு சாதாரணனிடம் மூச்சு ஒரே ஒரு நாசித் துவாரத்தின் மூலமாகவே இழைகிறது. முகரும் மூச்சு இழைவு மூன்று மணி நேரத்துக்கு ஒரு முறை இடது நாசியிலிருந்து வலது நாசிக்கும் அல்லது வலது நாசியிலிருந்து இடது நாசிக்கும் மாறுகிறது. முகரும் போது எந்த நாசித் துவாரத்தில் மூச்சு இழைகிறதோ அதன் மூலமாகவே முகர்கிறார். முகர்வதில்கூட ஒரே சமயத்தில் ஒரே வித வாசனையைத் தான் முகர இயலும். நீங்கள் ஒரு அறையில் நுழைவதாக வைத்துக் கொள்வோம் அந்த அறையில் ஆப்பிள், மாம்பழம், அன்னாசிப்பழம், பலாப்பழம் போன்றவை வைக்கப்பட்டுள்ளன. நீங்கள் ஒரே சமயத்தில் எல்லாவித வாசனைகளையும் முகர்ந்து அனுபவிக்க முடியாது.

ஆனால் நீங்கள் ஒரே சமயத்தில் ஒன்றே ஒன்றைத்தான் ஏற்க முடியும். காதுகளை எடுத்துக் கொள்வோம். நீங்கள் மிகவும் உரத்து ஒலிக்கும் ஒலியை மட்டுந்தான் கேட்க இயலும். உங்களுக்கு எதில் விருப்பம் இருக்கிறதோ அது மட்டுமே உங்களுக்குக் கேட்கும். ஒரு ஒலியைக் கேட்கும் போது நீங்கள் இரண்டு செவிகளால் கேட்பதில்லை. சுறுசுறுப்புடன் இயங்கும் செவி மூலமாகவே நீங்கள் அவ்வாறு கேட்க முடியும். எடுத்துக்காட்டாக ஒரு ஒலி இடது புறத்திலிருந்து வரும் போது நீங்கள் கேட்பதற்கு இடப்பக்க செவியை உபயோகிக்கிறீர்கள். அந்த ஒலி வலப்பக்கத்திலிருந்து வரும்போது அதை வலப்புறச் செவியினால் கேட்கிறீர்கள். ஒரு ஒலி பின் புறத்திலிருந்தோ முன் புறத்திலிருந்தோ வரும்போது சுறுசுறுப்புடன் இயங்கும் செவியை மட்டுமே பயன்படுத்துகிறீர்கள். இதேபோலத்தான் சுவைப்பதிலும், தொடு உணர்விலும் நாம் ஒரே சமயத்தில் ஒரு வகைச் சுவையை மட்டுமே அனுபவிக்கிறோம். தொடு உணர்வும் அப்படியே. ஆகவே பல்வேறு புலன்களை உபயோகித்து அவற்றின் மூலமாக அனுபவங்களைப் பெறும்போது நாம் ஒரு சமயத்தில் ஒன்றைத்தான் உபயோகிக்கிறாம். இரண்டையுமல்ல. காரணம் என்னவெனில் மனமானது. புலன்களை இயக்கி அதன் மூலமாக அனுபவத்தைப் பெறும்போது அது ஒரு சமயத்தில் அவற்றில் ஒன்றை மட்டுமே இயக்குக்கிறது. உண்மை நிலை இதுவே. அதனால் முகர்வது, கேட்பது, சுவைப்பது, தொடுவது ஆகியவற்றைச் செய்யும்போது இத்தகைய பல்வகைப் புலன்களின் அனுபவங்களும் பல்வேறு சமயங்களிலேயே பெறப்படுகிறது. ஆனால் ஒரே சமயத்தில் இயலாது. ஆனால் மனம் அவற்றில் இணைந்து எல்லாப்

புலன்களையும் மிகத் துரிதகதியில் இயக்குகிறது. இந்தத் துரித நிலை சராசரி மனிதனுக்கு புரியாததினால் உண்மை விளங்குவதில்லை. அதனால் அவர் ஒரே சமயத்தில் பார்த்து, கேட்டு, முகர்ந்து, தொட்டு சுவைத்தலை ஒரே சமயத்தில் நடப்பதாக நினைக்கிறார். ஒருவர் மனத்தையும் மனச்செய்கைகளையும் ஆழ்ந்து கவனித்தால் அவரால் இவற்றை எளிதில் புரிந்து கொள்ள இயலும். இதில் வேறெந்த இரகசியமுமில்லை.

**செவ்வாய்க்கிழமை, 18, மே, 1943.**

246. **"அவன்" என்பதுவே ஒளிர்வது. "நான்" என்பது தளைப்படுவது.**

**தெளிவுரை:-**

கடவுள் எங்கும் வியாபித்து இருப்பவர். எல்லையில்லாதவர். கடவுளின்றி எதுவுமே இல்லை. கடவுளே அகிலமாகத் தோன்றுகிறார். அதே கடவுள் எங்கும் எல்லாப் பொருட்களிலும் பிரகாசிக்கிறார். அதாவது அவரே உயிர். ஒவ்வொரு ஒளியின் உயிரும் அவரே. எல்லா உயிர்களிலும் உள் உயிராக இருப்பவர் அவரே! கடவுளின்றி இந்த அகிலமும் அதில் வாழும் விதவிதமான உயிர்களும் ஒரு கணமும் உயிர் வாழ முடியாது. கடவுள் எங்கும் எப்பொருளிலும் இருப்பவர். ஒரு உயிர் கடவுளை மறப்பதற்குக் காரணம் குட்டி அகந்தையே. அதனால் துன்பமும் பந்தமும் விளைகின்றன. இந்த அகிலத்தில் அகந்தை உணர்வே எல்லா வாதனை வேதனைகளுக்கும், அனைத்துத் தளைகளுக்கும் அடிப்படையாக உள்ளது! அதுவே சம்சாரத்திற்கும் (பிறப்பு, வளர்ச்சி, தளர்ச்சி, மரணம் எனச் சுழன்று வரும் சக்கரம்) இதுவே காரணம். "நான்" எனும் கருத்து இல்லாமலிருப்பின் ஒவ்வொருவரும் பூரண

அமைதியையும், பரிபூரண ஆனந்தத்தையும் அனுபவிக்கலாம்.

**புதன்கிழமை, 2, ஜுன் 1943.**

**247. செல்வத்தை இழப்பது உலகாயதத்தின் பெரிய இழப்பு. பிரம்மச்சரிய இழப்பு ஆன்மீகத்தின் பேரிழப்பு.**

**தெளிவுரை:-**

இவ்வுலக வாழ்க்கையில் பணத்திற்கே பிரதான பங்குண்டு. அதுவே உலகத்தில் செல்வாக்குடையது. இவ்வுலகில் பணம் எதையும், எல்லாவற்றையும் சாதிக்கும். தாழ்த்தப்பட்ட ஒருவன் ஒதுக்கப்பட்டுச் சக்தியிழந்தவனாக இருக்கிறான். அவனே நாளை பணக்காரனானால் பல்லாயிரவர் அவனை வழிபடுவதைக் காணலாம். அவன் பேட்டிக்காகவும் அவன் இட்ட பணியை சிரமேற்கொண்டு செய்யவும் காத்துக் கிடக்கிறார்கள். செல்வ இழப்புக்கு (அல்லது வறுமை) பொருள் உலக வாழ்வில் பெரும் இழப்பாகும். பணம் உலகாயதத்தில் முக்கியப் பங்கு வகிப்பதுபோல் ஆன்மிகத்தில் பிரம்மச்சரியம். பிரம்மச்சரியத்தை அடித்தளமாகக் கொண்டே சமயத்தின் முழுக் கட்டுமானமும் நிற்கிறது. எந்த ஒரு அயோக்கியனும் நடத்தை கெட்டவனுங்கூட பணத்தைச் சேர்த்து விடலாம். பெயரையும் புகழையும் ஈட்டி விடலாம். ஆன்மிக சாம்ராஜ்யத்தில் அப்படியல்ல. ஆன்மிக வளர்ச்சிக்கு பிரம்மச்சரியமே பெரும் பங்கு ஆற்றுவது. எண்ணம், சொல், செயலில் கண்டிப்பான பிரம்மச்சரியத்தை அனுசரிக்காவிடில் ஆன்மிக உலகில் ஒரு அங்குலம்கூட முன்னேற முடியாது. பிரம்மச்சரிய இழப்பு என்பது ஆன்மிகத்தின் மரணம். பிரம்மச்சரிய ஒழுக்கத்தில் தவறினால் ஒருவர் இலக்கையே எட்ட முடியாது.

**திங்கட்கிழமை, 6, ஜூன், 1943,**

**248. மூச்சிழைவு என் இதயத்தின் ஒரு துடிப்புங்கூட "இருநிலை"க் கருத்துடையது.**

**தெளிவுரை :-**

நிர்விகல்ப சமாதி நிலையில் ஆன்மாவில் மனம் ஒன்றும்போது மூச்சிழைவது மட்டுமின்றி இதயத் துடிப்புகளுங்கூட முழுமையாக நின்று விடுகிறது. அந்த நிலையில் உடல், உணர்வு, பொருள், உருவம், விவரம் எல்லாமே மறைந்து போகிறது. எஞ்சி நிற்பதெல்லாம் தன்னில் தானாகவே உள்ள உயிர்ச்சார மகா சமுத்திரமே. இந்த நிலையில் நிலையான அத்வைதமே நீடிக்கிறது. இதைவிட ஒருபடி கீழ் இறங்குவது ஆகும். இது "எனது" எனும் உணர்வு படைத்தது. "நான்" "எனது" உணர்வுகள் இன்றேல் உடல் இயங்காது. மனம் வேலை செய்யாது. "அகந்தை" உணர்வு இருக்கும்போது துவைதம் (இருநிலை) நீடிக்கிறது. அத்வைதத்தில் (ஒன்றெனும் நிலை) அல்ல. ஒருவர் அத்வைத அனுபவத்தை நிர்விகல்ப சமாதி நிலையில் மட்டுமே அனுபவிக்க இயலும்.

**புதன்கிழமை, 16, ஆகஸ்டு, 1944.**

249. அகிலத்தின் பிரபுவே! என்மனத்தின் செயல்களெல்லாம் உனது நினைவோடு செய்யப்படட்டும்! என்னுடைய வார்த்தைகளெல்லாம் உன்னுடைய புகழைப் பாடட்டும்! எனது செயல்களெல்லாமே உமக்குக் காணிக்கை யாகட்டும்!

**புதன்கிழமை, 16, ஆகஸ்டு, 1944.**

250. மகாப்பிரபுவே! உனது நேரிய பாதையில் என்னை அழைத்துச் செல்! உமது வழியே எமது நேர் பாதை யாகட்டும்! எனது இதயத்தில் புதைந்து கிடக்கும் எல்லா

குற்றங் குறைகளையும் துடைத்து விடுவாயாக! பாபங் களிலிருந்து விடுவித்து என்னை உம் சேவகனாக்கிக் கொள்! என்னுடைய மனத்திலிருந்து அனைத்து மயக் கங்கள், ஐயப்பாடுகள், அறியாமை எல்லாவற்றையும் அகற்றுங்கள். மீண்டும் அவை என்னிடம் வராமல் செய்யுங்கள் பிரபுவே! என்னிடமிருக்கும் பேதங்களை அகற்று! என் உள்ளும் புறமும் தூயதாக்குங்கள்!

**புதன்கிழமை, 16, ஆகஸ்டு, 1944.**

251. அகிலத்திலன் எல்லாச் செய்கைகளையும் ஒரே வார்த்தையில் சொல்வோமாயின் அதன் பெயர் "விடுதலை!" சூரிய சந்திரர், நட்சத்திரங்கள், மனித குலம், விலங்கினம், கீழ்த்தர உயிரினங்கள் ஆகியவற்றின் செய்கைகளை ஆழ்ந்து நோக்குங்கள்! இவை எல்லாமே "விடுதலை"யை நோக்கியே நகர்வதாக உள்ளன. இந்த விடுதலை உணர்வு புல்லின் இதழில் கூடப் படிந்துள்ளது. ஆனால் பெரும்பாலான உயிர்களின் செய்கைகள் பாதை மாறி விடுகின்றன. விடுதலைக்குப் பதில் துன்பத்திலும் அடிமைத்தனத்திலும் சிக்குண்டு தவிக்கின்றன. இந்தப் பாதை மாற்றமே இவ்வுலகில் படும் அவதிக்கு தலையாய காரணம்.

**புதன்கிழமை, 16, ஆகஸ்டு, 1944.**

252. மனம் நான்கு பிரதான ஆற்றல்களைக் கொண்டது. அதாவது உள்ளுணர்வின் ஆற்றல், உணர்ச்சி வயப் படுதல், சிந்தித்தல், திரட்டுதல் (மன ஒருமைப்பாட்டுக் கான முயற்சி) ஆகும். இந்த நால்வகை மன ஆற்றல் களுக்கு ஏற்பப் புராதன காலத்து இருடிகள் (பேருண் மையைக் கண்டறிபவர்கள்) சமயத்தின் நான்கு வெவ் வேறு பாதைகளை வகுத்தளித்தனர். அவை கர்மயோகம்,

பக்தியோகம், ஞானயோகம், இராசயோகம் ஆகும். எல்லா ஆற்றல்களுமே மனத்தைப் பொறுத்தே இருப்பி னும், அவை ஒரு சாதாரணனில் சமச்சீராக வளர்ச்சி யுறவில்லை. ஒருவர் அவர் மனத்தில் மேலோங்கியுள்ள ஆற்றலுக்கேற்ப இந்த யோகங்களில் ஒன்றை தேர்ந் தெடுத்துக் கொள்கிறார். அதை எச்சரிக்கையுடன் பின்பற்றிப் பாதை பிறழாது குறிக்கோளை அடைந்து விடுகிறார். இதே போல் உலகிலுள்ள எல்லாச் சமயங் களையுமே இந்தப் பிரதான பாதைகளின் தலைப்பின் கீழ்க் கொண்டு வரலாம்.

**புதன்கிழமை, 16, ஆகஸ்டு, 1944.**

சமயப் பயிற்சியில் ஒருவர் வெற்றிக்கான வாழ்த் தின் விளைவைப் பெற வேண்டுமானால் அவர் அதற்கு உளப்பூர்வமாக உழைக்க வேண்டும். தினசரி ஆன்மிகப் பயிற்சி அல்லது சாதனை முறை பிறழாது இருக்க வேண்டும். காலை மாலை ஜபதபங்களுக்கான கால அளவை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். எவ்விதத்திலும் அதைக் கண்டிப்புடன் பின் பற்றியே ஆக வேண்டும். ஒரு முழு நாளுக்கான வேலை, தியானம், மற்றவற்றைத் திட்டமிட்டு நிர்ணயித்துத் தவறாமல் கடைப்பிடித்தல் வேண்டும். ஒருவருடைய தினசரி வேலை, வழிபாடு, மற்றவை எல்லாவற்றிலும் கண்டிப்பு இருக்க வேண்டும். மேலெழுந்த வாரியான தினசரி செயற்பாடு களால் குறித்த காலக் கட்டத்தில் காண வேண்டிய பயனைப் பெற முடியாது. மனம் சலித்துக் கொண்டே இருப்பது, ஏமாற்றுவது, ஆபத்தானது. அதை நம்ப முடியாது. அது ஒருவனை தவறான வழிகளில் அழைத் துச் செல்லும். தனக்குள்ள பொறுப்பை எப்படித் தட்டிக் கழித்துத் தப்பித்துக் கொள்வது என்பதே மனத்தின்

இயல்பு. ஆகையால் ஒருவர் முழுக்கமுழுக்க கண்டிப்புட னிருந்து அதை எப்போதும் கண்காணிக்க வேண்டும். உரிய காலத்தில் செய்து பழகும் பயிற்சியைத் தொடர்ந்து மேற்கொண்டால் அது மனத்தின் வழக்க மாகி விடும். பின்னர் தியானம் செய்யாமல் இருக்கவே இயலாது என்ற நிலை அவருக்கு ஏற்பட்டுவிடும் குறிப்பிட்ட நேரங்களில் கடவுளை வழிபடாமல் இருக்க முடியாது என்றாகிவிடும். தியானத்தில் அமரும் ஆசன முறையில் தவறு நேர்ந்தாலும் அதைப் பொறுக்க இயலாமல் ஆகி விடும். தியானத்திற்குச் சரியான சமயம் நடுநிசி. நடு நிசியில் ஒரு மணி நேரம் செய்யும் தியானம் பகலில் இரண்டு மணி நேரம் செய்யும் தியானத்திற்கு ஒப்பானது. அடுத்தபடி வரும் தியான நேரங்களில் விடியற்காலை 3 மணி, 6 மணி மாலை 6 மணி ஆகும்.

**புதன்கிழமை, 16, ஆகஸ்டு, 1944.**

**254**. சாதகர்கள் (ஆன்மிகப் பயிற்சியாளர்கள்) அவர் களுடைய உணவுப் பழக்கத்தில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். இது மிகமிக அவசியமானது. மனத்திற்கும் உணவிற்கும், ருசிக்கும் பாலுணர்ச்சிக்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. யார் ஒருவர் ருசியைக் கட்டுப்படுத்தப் பழகாதவரோ அவரால் மனத்தைக் கட்டுப்படுத்திப் பிரம்மச்சரியத்தை (கற்பு நெறியை) மேற்கொள்ள இயலாது. பிரம்மச்சரியத்தின் இழப்பு ஆன் மிகத்திற்கும் மரண அடி. ஆகவே எப்பொழுதும் வயிற்றை நிரப்பாதீர்கள். ஆனால் உணவுத் தூய்மை யானதாகவும், எளிமையானதாயும், சத்துள்ளதாகவும், காய்கறி வகையைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். இரவு உணவு எளிமையாகவும், மிதமானதாகவும் இருக்க வேண்டும். ஒரு சாதகன் மனம், உடல் உழைப்பை மித

மாக்கிக் கொள்ள வேண்டும். அது அவருடைய ஆன்மிக முன்னேற்றத்தைத் தடுக்கும். உறங்கும் முன் ஒரு கோப்பை குளிர்ந்த நீர் அருந்துவது நன்மை பயக்கும்

**புதன்கிழமை, 16, ஆகஸ்டு, 1944.**

255. அதிகமாகப் பேசுபவர், உயர்மட்ட சமூகத்தில் பழக ஆசைப்படுபவர்கள், அதிகமாகப் படிப்பவர்கள், (சாத்திரங் களானாலுங்கூட) "யோகி" ஆக முடியாது. கூடிய வரை பேசுவதைக் குறைத்துக் கொள்ள வேண்டும். வெட்டிப் பேச்சிலும், வம்பளப்பிலும் அதிக சக்தி விரயமாகிறது. அத்தகைய பேச்சுகள் மனதைச் சலனப்படுத்துகிறது. எவ்விதத்திலும் ஒரு சாதகன் இதைத் தவிர்க்க வேண்டும்.

**புதன்கிழமை, 16, ஆகஸ்டு, 1944.**

காமினி, காஞ்சனத்தை எளிதில் துறந்து விடலாம் பெயருக்கும் புகழுக்குமான ஆசையை அறவே துறத்தலும், வெல்வதும் மலை உச்சிக்கு போவதைப் போன்றது காமினி காஞ்சனை ஆசையை வென்ற பிறகு பலர் பெயர் புகழ் ஆசை வலையில் சிக்கிக் கொள்கிறார்கள். இவற்றை வெல்லாவிட்டால் ஒருவர் குறிக்கோளை அடைய முடியாது. ஆதலால் ஒருவர் எப்பொழுதும் கண்காணிப்புடன் இருக்க வேண்டும்.

**புதன்கிழமை, 16, ஆகஸ்டு, 1944.**

257. ஒவ்வொரு செயலுக்கும் எதிர் விளைவு உண்டு. யாருமே இதைத் தவிர்க்க முடியாது. சாதனையின் போது மனம் முழு உற்சாகத்துடனிருக்கும். உடல் ஆரோக்கியமாக இருக்கும். சுற்றுச்சூழல் முழுவதுமே துணையாக இருப்பது போல் தோன்றும். ஆனால் மனத்தின் இந்த நிலை, மற்றச் சூழ்நிலைகள் நீண்ட நாள்

நீடிப்பதில்லை. எதிர் விளைவுகள் தோன்றத் தொடங்கும். மனம் மந்த கதியில் இயங்கும். தியானம் கசக்கும். உடல் ஆரோக்கியமும் குறையும் சுற்றுச்சூழ்நிலை நரகமாகத் தோன்றும். விவரம் புரியாத ஒருவகை ஆழ்ந்த துக்கம் மனதைப் பற்றிக் கொள்ளும். இந்த வருத்த நிலைக்கு எவ்விதக் காரண காரியமும் இருக்காது. ஆயினும் ஒருவர் வருத்தத்தாலும், துக்கத்தாலும் பீடிக்கப்படுகிறார். இதுவே எதிர்விளைவின் காலகட்டம். இந்த நேரங்களில் பலர் நம்பிக்கையிழந்து பொறுமை குலைந்து, வெறுப்புற்று அவர்கள் மேற்கொண்ட சாதனையையே விட்டுவிடுகிறார்கள். வேறு சிலர் மனத்தையும் உடலை யும் வேதனையால் வருத்திப் பைத்தியமாகி விடு கிறார்கள். மேலும் சிலர் இந்த எதிர்விளைவுகளின் கடுமை நீண்டகாலம் நீடிப்பதால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தற்கொலைக்கும் ஆளாகிறார்கள். இத்தகைய எதிர்விளைவின் கட்டத்தில் தற்கொலை செய்து கொண்ட இரண்டு சாதுக்களை (துறவிகளை) நானே நேரில் பார்த்திருக்கிறேன். இந்த அபாய கட்டத்தைக் கடந்து மேலேறச் சரியான வழி என்ன வெனில் கடவுளை இடையறாது உள்ளார்ந்த அன்புடன் பிரார்த்திக்க வேண்டும். தனது குருவுடன் (ஆன்மிக ஆசான்) இருந்து நெருங்கிப் பழக வேண்டும். அது இயலாவிட்டால் ஒருவர் தெய்விக ஞானமுடைய பெரி யார்களின் மத்தியில் இருந்து பழக முனைய வேண்டும். மித உணவு, சத்சங்கம், சாத்திரங்கள் ஆகியனவும் இச் சமயத்தில் வரப்பிரசாதமாக அமையும். ஆனால் நேரம் தவறாது தினசரி சீரான வழிபாடும், பழக்க வழக்கமும் உள்ள சாதகர்கள் இந்த அபாயக் கட்டத்தை எளிதில் கடந்து விடலாம். எதிர்விளைவு காலம் ஒவ்வொருவருக்

கும் ஒவ்வொரு விதமாக இருக்கும். சிலருக்கு அடிக்கடி வந்து ஓரிரு நாட்கள் தொடரும். வேறு சிலருக்கு ஏதோ ஒரு சமயத்தில் வரும். அது பல நாட்கள் மிகத் தீவிர கதியில் தொடர்ந்து இருக்கும். முகம்மது நபி மூன்று முழு ஆண்டுகள் இந்த எதிர்விளைவில் சிக்கித் தவித்தார். அவருடைய மனைவி அவரை உற்சாகப்படுத்தி மரணப் பிடியிலிருந்து மீளச் செய்து காப்பாற்றினார். இந்தச் சமயங்களில் யாராவது ஒருவர் தைரியமூட்டி ஆதரித்து உடனிருக்க வேண்டும். இத்தகைய ஒருவர் இல்லாத காரணத்தால் பலர் அவர்களுடைய வாழ்க்கையையே பாழடித்துக் கொள்கின்றனர். அதனால் ஒரு சாதகன் இந்த எதிர்விளைவு வரும் முன்பே எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அவ்வப்போது அதற்கான முன்னேற் பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும்.

**புதன்கிழமை, 16, ஆகஸ்டு, 1944.**

258. ஒவ்வொரு வெற்றிக்கும் பின்னால் தோல்வி வரும். நன்மைக்குப் பின் தீமை தோன்றும். உண்மையைச் சொல்லப் போனால் எல்லா எதிர் எதிர் முரண்பாடுகளுமே ஒன்றுடனொன்று இணைந்தே வரும். அவற்றைப் பிரிக்கவே முடியாது. அநேகர் இந்த உண்மையை மறந்து விடுகின்றனர். தோல்வியைக் கண்டு துவள்கிறார்கள். அவர்கள் முயற்சியை (சாதனையை) விட்டு விடுகின்றனர். மாபெரும் தவறு. இப்படிப்பட்டவர்கள் ஆன்மிகத்தில் தலைதூக்க முடியாது. இவர்களின் வாழ்க்கை துன்பத்தில் முடிகிறது. தோல்விகள் ஏற்படும்போது பொறுமையுடன் கூடிய விடாமுயற்சியே ஒருவர் கற்றுக் கொள்ள வேண்டிய சிறந்த பாடம். இதை எப்போதும் மறக்கவே கூடாது. சாதனையில், வாழ்வில் ஏற்றத்தாழ்வுகள் இயற்கையானது. தோல்வி இல்லாமல்

வெற்றி ஏது? தோல்விகள் இருந்தே தீரும். இருக்கத்தான் செய்யும். ஒருவர் அதை அஞ்சா நெஞ்சுடன் எதிர் கொண்டு துவளாமல் முன்னேற வேண்டும்.

**புதன்கிழமை, 16, ஆகஸ்டு, 1944,**

259. நம்பிக்கை மாபெரும் சக்தி. அது அற்புதங்களை ஆற்றவல்லது. ஒருவருக்கு முதலில் தன்னம்பிக்கையில் உறுதி வேண்டும். அடுத்துக் கடவுளிடம் நம்பிக்கை, சாத்திரங்களில் ஆழ்ந்த பற்று, குருவிடம் (ஆன்மிக வழிகாட்டி யிடம்) குருவின் வார்த்தைகளில் அசைக்க முடியாத நம்பிக்கை இருக்க வேண்டும். நம்பினால் ஒருவர் எதையும் பெறலாம். நம்பிக்கை இன்றேல் எல்லாவற்றையும் இழக்க நேரிடும்.

**புதன்கிழமை, 16, ஆகஸ்டு, 1944.**

260. சாதகனுக்குச் (ஆன்மிகம் பயில்பவனுக்கு) சந்தேகம் பெரிய எதிரி. ஆன்மா வெற்றி முனையை எட்ட முடியாது. ஒரு சாதகன், தன் மனத்தில் சந்தேகத்தை நுழைய விடுவது தன் இதயத்தில் குண்டை பாய்ச்சிக் கொள்வதை விட ஆபத்தானது.

**புதன்கிழமை, 16, ஆகஸ்டு, 1944.**

261. ஆன்மிக வாழ்க்கை நெடியது. களைப்பை உண்டாக்குவது. சோர்வு தட்டும் பயிற்சி. ஒருவர் தன்னந் தனியாக முன்பின் அறியாத முள்ளும் கல்லும் நிறைந்த பாதையில் நடப்பதைப் போன்றது. அடிக்கடி படுகுழி களையும், ஆபத்துக்களையும் சந்திக்க வேண்டியிருக்கும். ஆகையால் ஒரு சாதகன் தளராத தன்னம்பிக்கையுடன் தைரியமாக இருக்க வேண்டும். அஞ்சாமை, உறுதி நிறைந்தவரே, உண்மையான வீரர்களும் வீராங்கனை களுமாக ஆன்மிக உலகில் வெற்றி மகுடம் சூட வாழ்த்

தப்பட்டவர்கள். ஆகவே ஒருவர் அஞ்சா நெஞ்சுடன் உறுதி பூண்டு முழுமையாகக் கடவுளை நம்பி மனந் தளராமல் தேர்ந்தெடுத்த பாதையில் முன்னேறிச் செல்ல வேண்டும். அகந்தையை வலுப்படுத்தும் நெஞ்சுரம், திண்மையற்றது. ஆன்மாவைச் சிறுமைப்படுத்தும் அடக்கம் அடக்கமாகாது.

**புதன்கிழமை, 16, ஆகஸ்டு, 1944,**

262. நம்முடைய எண்ணங்களை உருவாக்கியவர்களே நாம். நாம் என்ன நினைக்கிறோமோ அதுவாகவே ஆகிறோம். நாம் இன்று எதை விதைத்தோமோ அதையே நாளை அறுவடை செய்கிறோம். நம்முடைய இன்றைய இன்ப துன்பங்கள் பூர்வத்தில் நாம் செய்த செய்கைகளின் விளைவுகளே. மனத்திற்கு தனக்கென நிறமோ வடிவமோ கிடையாது. அது நாம் நினைக்கும் பொருளின் வண்ணத்தையும் உருவத்தையும் பெறுகிறது. ஒருவர் இடையறாது கடவுளைப் பற்றியும், அவருடைய ஆற்றல் பெருமைகளைக் குறித்தும் சிந்தித்துக் கொண்டே இருந்தால் அவர் கடவுளைப் போலவே ஆகிறார். மாறாக ஒருவர் தனது பூர்வ பாபங்கள், தோல்விகள், துரதிர்ஷ்டங்கள் போன்றவற்றையே எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தால், அவர் பலவீனனாகி, பாபியாகி, முட்டாளாகிறார். ஆகவே சிந்தனை, வெற்றி முனை, குறிக்கோள் போன்றவை. உயரிய இலட்சியங்களையே கொண்டு உறுதியுடன் இருக்க வேண்டும். சின்னஞ் சிறு வெற்றிகளைக் கண்டு ஏமாந்து திருப்தியடைந்து விடக்கூடாது. ஒருவர் மிகவும் மேலான உயரிய குறிக்கோளை அடையும்வரை ஓயக்கூடாது. "தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்பவர்களுக்கு கடவுள் எப்போதும் துணையிருப்பார்." இது மறுக்க முடியாத

உண்மை. நம்பிக்கையுடன் நேர்மையாக உழைத்தாலன்றி எதையும் அடைய முடியாது.

**புதன்கிழமை, 16, ஆகஸ்டு, 1944.**

263. ஒரு சாதகன் நம்பிக்கையுடன் ஒரே சீராக ஆன்மிகப்பயிற்சியில் செயல்பட்டால் (சாதனைபுரிந்தால்) அவர் தெய்விக ஒளியைப் (ஒருவகை வெள்ளி நிற ஒளி) பல்வேறு விதங்களில் காணலாம். தெய்வீகக் காட்சிகளைப் பார்க்கலாம். பிரணவம் போன்ற (ஓங்கார) சில தெய்வீக ஒலிகளைக் கேட்கலாம். சில சித்தாடல்களையும் செய்ய முடியும். இவை எல்லாமே சாதகனுடைய ஆன்மிக முன்னேற்றத்தின் அறிகுறியே தவிர வேறொன்றுமில்லை. இந்தக் காட்சிகளும், சித்துகளும் நிரந்தரமானதல்ல. சாதகனிடம் நீடித்து நிற்பதல்ல. ஒருவர் நிரந்தரமாகவும், தொடர்ந்தும் இருக்கும்படி இந்த பேற்றைப் பெற்றால் அவருடைய வாழ்க்கை முழுவதுமே பூரண மாற்றமடைகிறது. அத்தகையதொரு ஆணோ பெண்ணோ உலகிற்கு மரித்தவர்களாகிறார்கள். ஊனுடலின் உணர்வு அற்றவர்களாகிறார்கள். உண்மையான கடவுள் தரிசனம் பெற்றவருடைய பண்பும் மன்மும் முழுமையான மாற்றம் பெற்று எப்போதும் தெய்வீகச் சிந்தனையிலேயே இலயித்து நிற்கிறது. ஆனால் சாதாரண தெய்வீகக் காட்சிகள் நீண்ட தூரம் பயணிக்கும் களைப்புற்ற வழிப்போக்கனுக்கும் பர்லாங்கு, மைல் கற்களிலுள்ள எண்ணிக்கையைப் போன்றவை. அவன் களைப்புறும்பொது இந்தப் பர்லாங்கு, மைல்கற்களின் எண்ணிக்கை சோர்வுற்ற மனத்தைத் தட்டிக் கொடுத்து பயணத்தின் முடிவை நெருங்க உற்சாகப்படுத்தும். ஆனால் பல சாதகர்கள் இந்த அற்பச் சித்துக்களை பெரிதாக்கி அவர்களும் கெட்டு மற்றவர்களையும் பாழாக்கு

கிறார்கள். சிலர் இந்தச் சித்துக்களை உலகில் பெயரும் புகழும் எய்தப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இதனால் அவர்கள் தங்களுடைய ஆன்மிக முன்னேற்றத்தையே பாதித்துக் கொள்கிறார்கள். சில நேரங்களில் தங்கள் வாழ்வையேகூட முடித்துக் கொள்கிறார்கள். அத்தகைய செயல்கள் அந்தக் குறிப்பிட்ட மனிதருடைய பலவீனத்தையும், ஆபாசத்தையும் காட்டுகின்றன. இத்தகைய அற்பத்தனமாகச் செயல்படும் ஈடுபடும் சாதகர்கள் தாங்கள் மேற்கொண்ட நேர்மையான பாதையைத் தவறவிட்டு குறிக்கோளையும் வாழ்வின் லட்சியத்தையும் மறந்து சோக முடிவை தேடிக் கொள் கிறார்கள். ஆகையால் மேலான இலட்சியத்தை எய்த விரும்பும் ஒருவர், சித்துக்களை அற்பமானவை என ஒதுக்கித் தள்ளி, மற்ற சின்னஞ்சிறு வெற்றிகளை குப்பை யாக மதித்து, முடிவான குறிக்கோளை எய்த எப்பொழுதும் உண்மையாகப் பாடுபட வேண்டும்.

**புதன்கிழமை, 16, ஆகஸ்டு, 1944.**

264. மனம் மந்திர ஜபம் அல்லது வேறெந்தச் சாதனை முறையாலாவது ஒருமைப்படின் மந்திரமோ அல்லது சாதனையோ நின்றுவிடும். பிறகு மனம் அதன் பொருளில் இணையும். மூச்சு இழைவது மென்மையாகி, மெதுவாகி, சீராக வருகிறது. மனத்தை மந்திரத்தின் பொருளோடு இணைத்து எடுத்துச் செல்லும்போது அந்த மந்திரப் பொருள் தானாகவே தெய்வீக ஒளியில் (எங்கும் வியாபித்து நிற்கும் ஒருவகை வெள்ளி நிற ஒளி யில்) ஒன்றுகிறது. சுயமாய் தோன்றும் கும்பக நிலை (மூச்சு இழைவது நின்று போதல்) மெதுவாக நிலைத்து விடுகிறது. பிறகு உடலைப் பற்றிய நினைவு அற்றுப் போவதோ அடிக்கடி நிகழ்வது போல எல்லையற்ற பர

வெளியில் சங்கமமாகும் வரை பெரிதாகிக் கொண்டே வருதல் போலவே தோன்றும். மனத்தைத் தெய்வீக ஒளியுடன் கூடவே எடுத்துச் செல்லும்போது தெய்வீக ஒளி ஒளியற்ற ஒன்றில் சங்கமித்து எல்லையற்ற பரந்த வெளியில் மறையும்போது அதை வெளியென்றோ, இருள்என்றோ, ஒளியென்றோ கூற முடியாத நிலை ஏற்படும். இந்த நிலை ஏற்படும்போது உடல் பற்றிய நினைவு முழுமையாக அற்றுப் போகிறது. மூச்சு இழைவதும் தாமாகவே நின்று விடுகிறது. மனம் எல்லையற்றதில் தானாகவே சென்று ஒன்றி விடுகிறது. எல்லா உடல் இயக்கங்களும், இதயத் துடிப்பு உட்பட நின்று விடுகின்றன. அதன் பிறகு பொருள், உருவம், விவரம் எல்லாமே மறைந்து எஞ்சி நிற்பது தன்னில் தானான உயிர்ச்சார மகாசமுத்திரம் மட்டுமே. இதுவே மிகத் தூய்மையும், உயர்ந்த மேலான தன்மையுடையதுமான சமாதி (நிர்விகல்ப சமாதி அல்லது நிர்வாண நிலை).

புதன்கிழமை, 16, ஆகஸ்டு, 1944,

265. இல்லறத்தாருக்குக் கூறுவது:-

சில சூழ்நிலைகளிலும், சந்தர்ப்பங்களிலும் ஏற்படும் பிறப்பு முன் வினைப் பயனால் (முற்பிறவிச் செய்கையால்) ஏற்படுவது. இல்லற வாழ்க்கையில் ஈடுபடுவதும் துறவறத்தை மேற்கொள்வதும் ஒரு மனிதனின் கையில் இல்லை. அது முழுக்க முழுக்கக் கடவுளின் விருப்பத்தைப் பொறுத்ததே. அதுவே ஒரு தனிப்பட்டவனுடைய விதியை நிர்ணயித்துச் செயல்படுத்துகிறது. இறையுணர்வு பெறுதல் அதற்குரிய காலம் வரும்போது நிகழ்வதே. சாதனை அதற்கான முயற்சியை மேற்கொள்வதே. இறையுணர்வு பெறுவது சந்நியாசிக்கு மட்டும் (துறவிக்கு மட்டும்) ஒதுக்கப்பட்டதல்ல.

இல்லறத்தாருக்கும் உரியதே! தேவைப்படுவதெல்லாம் பற்றற்ற நிலையே. உலகம் கடவுளிடமிருந்து வேறு பட்டதல்ல. ஒருவர் இந்த உலகத்தில் வாழலாம். ஒவ்வொரு கடமையையும் செய்யலாம். ஆனால் அதே சமயத்தில் எதனிடத்தும் பற்று வைக்கக் கூடாது.

ஒருவர் சுதந்திர மனிதனாகவே செயல்பட்டு வாழ வேண்டும். தாமரை தண்ணீரில் வாழ்கிறது. ஆனால் அது தண்ணீரில் ஒட்டுவதில்லை. அதே மாதிரி ஒரு மனிதன் இந்த உலகில் எவ்விதப் பற்றுமின்றி வாழ வேண்டும். "நான்" "எனது" என்கிற எண்ணம் எப்போதுமே நரகத்தைப் போன்றது. இதுவே பந்தம், இதுவே இவ்வுலகில் துன்பத்திற்கும், வேதனைக்கும் காரணமாகிறது. "நான்" "எனது" என்ற இடத்தில் "நீங்கள்" "உங்களுடையது" என்பதைப் பதியுங்கள். கடவுளைப் பற்றிய சிந்தனையும், எண்ணமுமே வாழ்க் கையின் உயரிய லட்சியமாக வளர வேண்டும். கடவுளுக் காகச் சாப்பிடுங்கள். கடவுளுக்காகப் பருகுங்கள், கடவுளுக்காக உறங்குங்கள். ஏன்? ஒவ்வொரு இதயத் துடிப்புமே கடவுளுக்காகவே, கடவுளுக்காக மட்டுமே துடிக்கட்டும். செய்யும் ஒவ்வொரு செயலும் கடவுளை வழிபடும் செயலாகவே இருக்கட்டும். ஒரு இல்லறத்தான் இதை மட்டும் செய்தால் அவன் கண்டிப்பாக இந்தப் பிறவியிலேயே மோட்சத்தை (வீடு பேற்றை) அடைவார்.

**புதன்கிழமை, 16, ஆகஸ்டு, 1944.**

266. ஒவ்வொருவருமே மேலான பேருண்மையை நேருக்கு நேர் சந்திப்பதற்கு முன்னால் அவரவரின் பூர்வ கர்மத் திற்கேற்ப குறிப்பிட்டதொரு தூரத்தைக் கடந்தேயாக வேண்டும். சரியான முயற்சியினால் இந்தத் தூரத்தைக் குறைக்கலாம். ஒரு உயிரின் இம்முயற்சி மூவகைப்படும்.

அதாவது மிதமானது, நடுத்தரமானது, தீவிரமானது ஆகும். உதாரணத்திற்கு கல்கத்தாவிலிருந்து காசிக்குச் (பனாரஸ்) செல்லும் மனிதனை எடுத்துக் கொள்வோம். அவன் கால்நடையாகப் போனால் காசியை அடையச் சில வாரங்கள் ஆகும். ரயிலில் போனால் ஒரே நாளில் செல்ல முடியும். ஆனால் அவன் விமானத்தில் பயணித்தால் ஒரு சில மணிகளில் சென்று விடுவான். தூரம் ஒரே அளவானதுதான். செல்லும் வேகத்தைப் பொறுத்து நேரம் குறைகிறது. இம்மூவகைப் பயண முறைகளை மிதமானதும், நடுத்தரமானதும், தீவிரமானதுமான முறைகளுக்கு ஒப்பிடலாம். ஆகவே சரியான முறையில் விருப்பத்துடன் தீவிரமாக முயற்சித்தால் ஒருவர் வெற்றி முனையை எய்தலாம். அவர் இல்லறத்தாராயினும், சந்நியாசியாயினும் இறையுணர்வை விரைவில் எய்தலாம்.

**வியாழக்கிழமை, 30, நவம்பர், 1944.**

267. வலிமையே வாழ்க்கை. பலவீனமே மரணம். இவ்வுலகில் பலவீனமே மாபெரும் பாபமாகும். பலவீனரால் உலகில் செல்வாக்குடன் வாழ முடியாது. ஆன்மீகத்திலும் அதன் தேவை அதிகம்.

**வியாழக்கிழமை, 30, நவம்பர், 1944.**

268. உலகில் சக்தி வாய்ந்தது பணம். தெரு நாயிடம் பணம் இருந்தால்கூட இவ்வுலகில் அனேகர் அதைத் துதி பாடுவார்கள். உண்மை, தூய அன்பு, பிரம்மச்சரியம், துறவு ஆகியவை ஆன்மிகத்தின் மாபெரும் சக்திகள். போர் வீரனின் சக்தி அவன் உடைவாளிலும், ஒரு கவிஞனின் சக்தி அவனது பேனாவிலும் உள்ளது. குழந்தையின் சக்தி அது உரத்து அழும் குரலில் உள்ளது. பக்தனுடைய பிரார்த்தனை, சரணாகதி, தொண்டு புரிதல் ஆகியவற்றில் அது அடங்கும். ஆன்மாவைத் தொண்ட

ளாக்கும் தொண்டு தொண்டே அல்ல. அகந்தைக்கு சக்தியூட்டும் சக்தி சக்தி ஆகாது. இதை மேலும் விளக்குவோம். மனத்தை ஆத்மாவினுடைய (உயிரின்) எல்லையற்ற ஆற்றலில் வாழச் செய்வோம். அதே சமயம் அதை வெளிப்படுத்தும் எவ்வித ஆடம்பரமோ, சக்தியைச் சித்தாடுவதோ கூடாது. உன்னை உனக்குள் உள்ள தூய, சர்வ வல்லமை படைத்த எல்லையற்ற ஆத்மாவாகக் கண்டுக் கொள்! எப்பொருளிலும், எங்கும் உன் ஆத்மாவையே பார்த்து பெருந்தன்மையுடன் கருணை காட்டி பணிவன்புடன் நடந்து கொள். நமக்கு வேண்டியதெல்லாம் ஒரு போர் வீரனுக்குள்ள வீரத்துடன் இணைந்த தாயன்புதான். அடக்கம் அழகைவிட மதிப்புடையது. அகந்தை அதிகமாகுமிடத்தில் கடவுள் ஒளிந்து கொள்கிறார்.

**வியாழக்கிழமை, 30, நவம்பர், 1944.**

269. எப்போதும் மனத்தால் உயர்ந்து உயரிய வலிமையூட்டும் லட்சியங்களோடு பிணைத்துக் கொள்ளுங்கள். உண்மை, தூய்மை, கற்பு ஒழுக்கம், அடக்கம், ஒளிவு மறைவு இல்லாமை ஆகியவற்றுக்குப் பின்னணியில் அசைக்க முடியாத ஆற்றல் இருக்கும். பிரம்மச்சரியமே ஆற்றல். அதுவே உயிர். கண்டிப்பான பிரம்மச்சரியத்தை கடைப்பிடிப்பதனால் ஒருவர் நிம்மதி, ஆற்றல், நீண்ட ஆயுள் அனைத்தையும் பெற இயலும். எண்ணம், சொல், செயலில் திண்மையான பிரம்மச்சரியத்தில் ஊன்றி நின்றால் அவர் சொர்க்கத்தின் நிழலில் எதையும் சாதிக்கலாம். பிரம்மச்சரியம் அசைக்க முடியாத உள்ளுணர்வின் ஆற்றலைத் தருகிறது. இந்த ஆற்றலின் திடபத்தால் ஒருவர் எல்லாவற்றையும் அடைய முடியும். அச்சமின்றி எதிரியே இல்லாமல் வாழலாம்.

**வியாழக்கிழமை, 30, நவம்பர், 1944.**

270. ஒற்றுமையே வலிமை. மெலிதான நூலிழைகள் பல வற்றைச் சேர்த்து முறுக்கேற்றி கனமான கயிறாகத் திரித்தால் அதைக் கொண்டு பலமுள்ள யானையைக் கூடக் கட்டலாம். மாறாக முறுக்கப்படாத வலிமையுள்ள கயிறாக இருந்தால் அதைக் கொண்டு நாய்க்குட்டியைக் கூடக் கட்ட முடியாது. ஒரு குடும்பத்தில், ஒரு சகோதரத்துவத்தில், ஒரு தேசத்தில் ஒற்றுமை இருக்கும்வரை வெளிச் சக்திகள் அதை அசைக்கவே முடியாது. அது எப்பொழுதும் முன்னேறிச் செழிப்புடன் திகழும்.

**வியாழக்கிழமை, 30, நவம்பர், 1944.**

271. ஆன்மிகப் பாதை நெடியது. சோர்வு தருவது. தனிமையானது. முன்பின் தெரியாத வழியில் நீ தன்னந் தனியாக நடக்க வேண்டியிருக்கும். அந்த வழி நெடுக மேடு பள்ளங்கள் இருக்கும். வழியில் தொல்லைகளும் சோதனைகளும் தோன்றும். அடிக்கடி உன் மனத்தில் வெறுப்புத் தட்டலாம். சில கணங்கள் வாழ்க்கையே உனக்குச் சலித்துப் போகும். ஆனால் ஆன்மிக வாழ்க்கையில் வலிமையே முக்கியமான அத்தியாவசியமானது. ஆகையால் நீ நிமிர்ந்த நடையுடன் தளராத உறுதியுடன் தன்னந்தனியாக உனக்குள்ள அளவற்ற ஆற்றலின் துணையுடன் பயணத்தைப் பொறுமையுடன், முயற்சியுடன் முன்னேறு. அப்படியானால் மட்டுமே நீ இலட்சியத்தை அடையலாம். அன்புள்ள - சாதகனே (சீடனே)! அனுவளவும் பலவீனம் உனக்கு உதவாது. கண்ணீர் பிரச்னைகளைத் தீர்க்காது. அழுபவன் அழுது கொண்டேதானிருப்பான். துணிவே உனக்குக் கை கொடுக்கும். ஆகவே முழு மூச்சுடன் புறப்படு! விழித்தெழு! வெற்றி முனையை எட்டும் வரை நிற்காதே!

வியாழக்கிழமை, 30. நவம்பர். 1944.

272. அன்புள்ள சாதகரே! "நான்", "எனது" என்னும் நினைப்பு பலவீனமானது. "உனது" "உங்களுடையது" என்பது வலிமை மிக்கது. அறியாமையே "நான்" "என்னுடையது" என்பதின் காரணம். இந்த அறியாமையே பலவீனம். அறியாமையென்பது மரணம். ஞானம் வலிமை மிக்கது. ஞானமே உயிர். ஞானமே கடவுள். ஆயிரமாயிரம் ஆண்டுகள் குகையில் கவ்வியிருக்கும் இருள் தீக்குச்சியை உராய்தால் கணத்தில் மறைந்து விடுகிறது. ஆழப்பதிந்திருக்கும் அறியாமையைப் போக்க ஒளிக் கதிர் ஒன்றே போதும். ஆகவே கடவுளை நம்புங்கள். அது அறியாமையை அழிக்கும் - வலிமையையும் ஞானத்தையும் தரும். விடுதலையையும் மகிழ்ச்சியையும் அளிக்கும்,

வியாழக்கிழமை, 30, நவம்பர், 1944.

273. பற்று வைத்தல் பலவீனம். அதுவே அடிமைத்தனைக்கும், வேதனைக்கும் காரணம். பற்றறுத்தல் வலிமை, விடுதலைக்கும் நிம்மதிக்கும் இட்டுச் செல்லும். ஆகவே பற்றறுத்தல் எவ்வாறு என்பதை கற்றுக் கொள். உலகில் வாழ்ந்திடு! உலகத்தில் தொழில் செய்.: ஆனால் சுதந்திரமாக இரு! ஆகக் கடவுள் உலகமேயன்றி வேறல்ல! அவர் எங்குமிருக்கிறார்.! எதிலுமிருக்கிறார். "உலகம் பொய்யானது" என்பதின் பொருள் உலகத்தின் பெயர்களும் உருவங்களுமே! பெயர்களும் உருவங்களும் நிலையற்றது. மாறிக் கொண்டே இருப்பது. இவ்வுலகின் பெயர்களையும் உருவங்களையும் நீக்கிவிடு. எஞ்சி நிற்பது கடவுள் - கடவுள் மட்டுந்தான்!

வியாழக்கிழமை, 30, நவம்பர், 1944.

274. மன ஒருமைப்பாடு வலுவுள்ளது. மனத்தை ஒருமுகப்படுத்தி, ஒரே புள்ளியில் நிற்கச் செய்தால் நீ எல்

லையற்ற சக்தியைப் பெறலாம். புலன்களின் பல்வகைச் செயல்களிலும் சாதாரண மனிதன் மனத்தில் முழு வலிமையும் சிதறி விடுகிறது. ஆகவே புலன்களையும் மனத்தையும் அடக்கினால் நீ உனது உண்மையான ஆற்றலைப் பெறுவாய். இழந்த இத்தகைய வலிமையை மீண்டும் பெறுவதே மன ஒருமைப்பாட்டின் குறிக்கோள். இதுவே அனைத்துச் சமயங்களின் குறிக்கோளுமாகும்.

**வியாழக்கிழமை, 30, நவம்பர், 1944.**

275. ஒவ்வொரு ஆசையும் ஒரு தேவை. ஒரு தளை. ஒவ்வொரு ஆசையும் மனதை பலவீனப்படுத்துகிறது. மனதை எல்லா ஆசைகளினின்றும் விடுவித்துக் கொள்வது பலத்தைக் கூட்டும். மோட்சத்திற்கான ஆசைகூட பந்தப் படுத்துவதே. நிர்விகல்ப சமாதி அல்லது நிர்வாணத்தை எய்த ஒருவர் இதையும் விட்டொழிக்க வேண்டும். ஆனால் ஆரம்ப நிலையில் ஒருவர் படிப்படியாக முன்னேற வேண்டும். அதாவது ஒரு பெரியதை நிறைவேற்றிக் கொள்ள சிறிய ஆசைகளை முதலில் விட்டு விட வேண்டும். முடிவில் இதையும் துடைத்தெறிய வேண்டும். அதன்பிறகே ஒருவர் உயர்ந்த மேலான குறிக்கோளை எய்த முடியும்.

**வியாழக்கிழமை, 30, நவம்பர், 1944.**

276. ஒரு ராந்தல் விளக்கின் உபயோகம் முடிந்த அளவு வெளிச்சத்தைத் தருவதே. இதற்காக நாம் ராந்தலைச் சுத்தமாகத் துடைத்து, திரியை நேர்த்தி செய்து எண்ணெய் நிரப்பி வைத்துக் கொள்ள வேண்டும். இன்றேல் ராந்தலை வைத்திருப்பதற்கான உபயோகம் சரிவர நிறைவேறாது. ராந்தல் எப்படி வெளிச்சத்திற்கு தேவையோ அதேபோல் உடல் இறைமை எய்துவதற்கு தேவை. உடலின் உபயோகம் ஆத்மாவை (உயிரை)

அறிவதற்கே. இதற்காக அதைச் சுத்தமாகவும், பழுதில்லாமலும், உறுதியாகவும் வைத்திருக்க வேண்டும். அதற்காகச் சரியான உணவு, பானம், உடை, உற்சாகம் கொடுத்து காக்க வேண்டும். இன்றேல் உடலுக்கான உபயோகம் வீணாகிவிடும். உடலை வருத்தக் கூடாது. அதற்குப் பதிலாக புலன்கள், மனத்தை அடக்கி ஆசைகளை அகற்ற வேண்டும். இந்த ஒரு கருத்தை பலர் புரிந்து கொள்வதில்லை.

வியாழக்கிழமை, 30. நவம்பர், 1944.

277. நமக்கு வலிமையே தேவை.- உடலில் உறுதி. மனோபலம், உள்ளுணர்வின் ஆற்றல், அருள் பலம்; அனைத்திலும் திட்பம்; நமக்குத் தேவை இரும்புக் கரங்கள் படைத்த, உருக்கிரும்பு நரம்புகள் படைத்த ஆணும் பெண்ணும் இடி முழக்கம் செய்யும் திட்ப மனத்துடன் தேவை. நமக்கு வேண்டுவது க்ஷத்திரிய வீரியமும் பிரம்ம தேஜசும். அத்தகைய ஆண்களும் பெண்களும் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவு இருந்தாலே போதும் அவர்கள் இந்த அகிலத்தை கணத்தில் சொர்க்க பூமியாக மாற்ற வல்லவர்கள்.

வியாழக்கிழமை, 30, நவம்பர், 1944.

278. நற்பண்பே ஆற்றல்மிக்கது. நற்பண்புடையவன் காட்டில் சுதந்திரமாகத் திரியும் சிங்கத்தைப் போன்றவன். துர்நடத்தை பலவீனமானது. அதுவே மரணம் - அது ஒரு மனிதனை கோழையாக்குகிறது.

வியாழக்கிழமை, 30, நவம்பர், 1944.

279. வெற்றியின்போது அடக்கம், பொறுமை, விடாமுயற்சி, தோல்வியைக் கண்டு துவளாமை அனைத்துமே உயரியவை. இதை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும்.

**வியாழக்கிழமை, 30, நவம்பர், 1944.**

280. நம்பிக்கையே வல்லமை மிக்கது. எப்போதும் நிறைவான நம்பிக்கையுடன் இருங்கள். எப்போதும் நல்லெண்ணத்துடன் இருங்கள். அவநம்பிக்கை வேண்டாம். வெற்றி நிச்சயம் என்ற உயர்வான எண்ணத்தைப் பற்றிக் கொண்டால் அடுக்கடுக்காய் அடுத்தடுத்து வரும் எதிர்ப்புகளையும், தோல்விகளையும் கடந்து நிச்சயமாக முன்னேறலாம்.

**வியாழக்கிழமை, 30, நவம்பர், 1944.**

281. நன்னம்பிக்கை மிகவும் வலிமை வாய்ந்தது. உண்மையான நன்னம்பிக்கை மண்ணிலும் விண்ணிலும் மலைகளையும் அசைக்கும். அவநம்பிக்கையாலேயே மனிதர்கள் தோல்வியால் துன்புறுகிறார்கள்.

**வியாழக்கிழமை, 30, நவம்பர், 1944.**

282. எண்ணம் ஒரு சக்தி. ஒவ்வொரு சொல்லும் ஒரு சக்தி. உச்சரிக்கும் ஒவ்வொரு சொல்லும் ஒலிக்கும் ஒவ்வொரு ஒலியும் ஒரு குறிப்பிட்ட அளவில் வெளியேறும் சக்தி. இதனால் ஒரு குறிப்பிட்ட அளவு சக்தி வீணாகிறது. பேச்சைக் குறைப்பது வலிமை சேர்க்கும் வழி. அது சக்தியை உள்ளேயே சேமிக்கிறது. இந்தச் சேமிப்புச் சக்தியினால் ஒருவர் மனத்தை எளிதாகக் கட்டுப்படுத்தலாம். வம்பளப்பு சக்தியை விரயடித்து மனத்தைச் சிதறடிக்கிறது.

**திங்கட்கிழமை, 10, மார்ச், 1946.**

283. மனம் ஒருமைப்பாட்டு சக்தியைப் பெற்றபிறகு உடல் புலன்கள் தூய்மையுற்ற சூக்கும நிலை பெறுகிறது. இந்த நிலையில் ஒருவர் இயங்கும் வானொலிப் பெட்டி பன்னிரண்டடி தூரத்தில் இருப்பினும் ஒலியின் அதிர்வு

அலைகளின் வேகத்தை உணரலாம். இயங்கும் வானொலிப் பெட்டியின் (வானொலி அலை அதிர்வுகள்) ஒலி அலைகள் காதுகள் மூலம் கேட்பது அன்றி விரல் நுனிகளைத் தாக்கி உடலுக்குள் பாய்வது போன்ற உணர்வையும் பெற முடியும்.

**திங்கட்கிழமை, 10, மார்ச், 1946.**

**284. ஒரு நபரின் உயரிய தன்மையை அறிய நான்கு வகை நிலைகளை எடுத்துக் கொண்டு கணக்கிட வேண்டும். அதாவது பாரம்பரியம், சுற்றுச்சூழல், திறமை, முயற்சி ஆகும். பாரம்பரியத்தில் தந்தை விதையைத் தரும் மரத்தைப் போன்றவர். தாய் அதைப் பராமரித்து வளர்த்துச் செடியாக்கும் தோட்டத்தைப் போன்றவள். செடியை எடுத்து நடும் இடம், நடும் மண்ணின் வளம், உரம், நீர்ப்பாய்ச்சுதல், தோட்டத்தை பராமரிப்பவன் ஆகிய அனைத்துமே சுற்றுச் சூழலாகும். அவனுக்குள்ள திறமை செடியின் வம்சாவளி சக்தியைப் போன்றது. முயற்சிக்கான ஊக்கம் உறிஞ்சி வளர்க்கும் சக்தியைப் போன்றது. முயற்சியின் தன்மை மரம் நிதானமாகவோ, வேகமாகவோ வளர்வதைப் போன்றது.**

**தெளிவுரை:-**

ஒரு மரம் செழிப்புடன் வேகமாக வளருவதற்கு மூன்று முக்கிய அம்சங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். அதாவது விதை நேர்த்தியானதாக இருக்க வேண்டும். இரண்டாவதாக விதை முளைத்து நாற்றாக வளரும் பண்ணையின் தன்மையைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அதன் பிறகு நாற்றை வேறொரு இடத்தில் நட வேண்டும். நடும் மண் வளமாக இல்லாதிருந்து அதற்குரிய உரமும், தண்ணீரும், பாதுகாப்பும் போன்றவற்றைத் தராவிட்டால் வளமான நாற்றும் அழிந்து

விடும். அதன் வளர்ச்சி குன்றி விடும். மூன்றாவதாக நாற்றின் தரத்தைக் கவனிக்க வேண்டும். அதன் நல்ல தரத்துக்கான சக்தியை தன்னுள் பெற்றிருக்கும் பாரம்பரியத் திலிருந்தே பெறுகிறது. அதாவது அதன் பூர்வ வம்சத்தின் சமஸ்காரங்களையும் அல்லது பூர்விகக் கர்மபலனையும் பொறுத்துள்ளது. (முற்பிறவிகளின் பலன்கள்) கடைசியாக மேற்கொள்ளும் முயற்சி முக்கிய மாகிறது. இம் முயற்சி நாற்றின் தன்மையைப் பொறுத்ததே! அந்த நாற்று தரப்படும் உரம், தண்ணீர் போன்றவற்றை சரி வரப் பயன்படுத்திக் கொண்டால் அது வேகமாகவும், வளமுடனும் வளரும். ஒரு நாற்று இவை அனைத்தையும் பெறுமானால் அது நாளாவட்டத் தில் பெரிய மரமாக வளரும். இது போன்ற பாரா மரிப்புகளைப் பெறாவிட்டால் அது சில நாட்களில் பட்டுப் போகும். இன்றேல் அது வளமான மரமாகாது அதன் வளர்ச்சி இடையிலேயே குன்றிப் போகும் இதேபோல் ஒருவருடைய மனித வாழ்வின் குறிக்கோளை எய்துவதற்குத் தேவையான நல்ல வளர்ச்சிக்கு மேற்கூறிய நால்வகை வசதிகளையும் பெற்றிருக்க வேண்டும். அதாவது நல்ல பாரம்பரியம், சுற்றுச்சூழல், திறமை, சரியான முயற்சி ஆகும். ஒரு மனிதன் இந்த எல்லாப் பண்புகளையும் பெற்றிருந்தால் அவனுடைய வளர்ச்சி வேகமாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கும். அவன் வளர்ந்து மனித வாழ்வின் உயரிய மேலான முடிவை அதாவது ஆன்ம விடுதலை அல்லது மோட்சத்தை எய்தலாம்.

**வியாழக்கிழமை, 30, டிசம்பர், 1948.**

**285. கோயிலின் புனிதம். ஏன் கோயிலைப் புனிதமாக வைத்திருக்க வேண்டும்?**

பதில்:-

மனிதன் கோயில்களைப் புனிதப்படுத்துகிறான். பதிலுக்குக் கோயில் மனிதனைப் புனிதமாக்குகிறது. புதியதாகக் கட்டப்பட்ட கோயில், மசூதி, அல்லது மாதா கோயிலை எடுத்துக் கொள்வோம். கோயில், மசூதி, மாதாகோயில் போன்றவை ஆரம்பத்தில் தெய்விகச் சூழல் குறைந்த புதிதாகக் கட்டப்பட்ட ஒரு கட்டிடத்தைப் போன்றதேயாகும். அதன் பிறகு மக்கள் அங்கு வழிபடவும், பிரார்த்தனை செய்யவும் பக்தி நிறைந்த உள்ளத்துடன் வந்து குழுமுகிறார்கள். சில பெரிய மகான்களும் அங்கே வருகிறார்கள். வழிபடுகிறார்கள். பிரார்த்தனை செய்கிறார்கள். நாளாவட்டத்தில் அந்தக் கோயில், மாதா கோயில், அல்லது மசூதி புனிதமடைந்து தெய்வீக ஆன்ம நேயச் சூழலின் அதிர்வுகளால் நிரம்புகிறது. அஞ்ஞானத்தினால் சிலர் இந்தப் புனித ஆன்ம நேயச் சூழலை வெறும் கட்டுக்கதை என்று கூறுவார்கள். கற்பனை என்றும் வெறும் சோடனை என்றும் கூறுவார்கள். ஆனால் உண்மையில் இது அப்படியல்ல "எண்ணத்தின் சக்தி" என்ற ஒன்று இருக்கிறது.! "எண்ண அலைகள்" என்பதும் உண்டு. இவைகளைச் சாதாரண மனிதானால் கண்டு கொள்ள முடிவதில்லை. மின்சாரம் உலகம் பூரா விலும் சூக்கும உருவில் பரவி நிற்கிறது. ஆனால் பொதுவாக அதை உணருவதில்லை. இதே மின்சாரத்தை மின்இயக்கி சாதனம் மூலமாக உற்பத்தி செய்தால் மட்டுமேதான் அதைக் கண்கூடாக உணர முடியும். அதேபோலக் கடவுள் அகிலம் முழுவதிலும் மிக நுட்ப மாகப் பரவி நிற்கிறார். சாதாரண மனிதன் பொதுவாக அவருடைய இந்தத் தோற்றத்தை உணர முடியாது. இதே

தெய்வம் எங்கும் வியாபித்து தனக்குள்ள மாபெரும் சக்தியை ரிஷிகள், மகான்கள், அருளாளர்கள், கோயில்கள், புனித இடங்கள் போனறவைகளில் திட சக்தியாகத் தங்கி அவற்றின் மூலமாக அருள் பாலிக் கிறார் மின் இயக்கி மூலமாகவோ மின் நிலையத்தின் மூலமாகவோ மின்சக்தியைப் பெற்று பயனடைவதைப் போலக் கடவுளின் இருப்பின் பயனை தெய்வீக மனிதர் கள், கோயில்கள், யாத்திரைக்குரிய புனித இடங்கள் மூலமாக அடையலாம்.

ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு இடமும், ஒவ்வொரு மனிதனுமே குறிப்பிட்டதொரு எண்ண அதிர்வினால் நிரப்பப்பட்டுள்ளனர். இந்த எண்ண அதிர்வை ஒவ் வொருவருமே எளிதில் உணர முடியும். உதாரணமாக நல்ல பக்திமான்கள் வசிக்கும் ஒரு வீட்டிற்கோ ஒரு ஆசிரமத்திற்கோ போனவுடன் நமக்குத் தானாகவே ஒருவகை பக்தி, பணிவு, நம்பிக்கை விளைகிறது. பக்திப் பரவசம் ஏற்படுகிறது. இகழப்பட்ட வீட்டுக்கோ, திருடர்கள் பொய்யர்கள் போன்றவர்களின் இருப்பிடங் களுக்கோ அங்கு வசிப்பவர்களின் குணத்தை அறியாமல் சென்று விடுவோமாயின் நம்மிடம் சுயமாகவே பேராசை நிறைந்த எண்ணங்களும், துன்பம் விளைவிக்கும் சிந்தனைகளும், சந்தேக நினைவுகளும் நம் மனத்தில் புகுந்து விடும். ஒரு கசாப்புக்கடைக்குள்ளோ, புதைக்கும் அல்லது எரிக்கும் மயானத்திற்கோ சென்றதும் நம்மை அறியாமலேயே தீவிர உணர்ச்சி ஏற்பட்டு தீய துக்க எண்ணங்கள் கவ்விக் கொள்கின்றன. தினந் தோறும் முன்பின் தெரியாத ஆண் - பெண் பலரைச் சந்திக்கிறோம். ஆனால் நாம் அவர்களைப் பார்த்த வுடனே முதல் பார்வையிலேயே அவர்களில் சிலருடன்

நட்புக் கொள்கிறோம். சிலரை வெறுக்க ஆரம்பிக்கிறோம். சந்தேகப்பட்டு அவர்களைப் புறக்கணிக்கிறோம். அது ஏன் அவ்வாறு? நாம் இவர்களை முதன் முதலாக இப்போதுதான் சந்திக்கிறோம். அவர்கள் நடத்தையைப் பற்றி நமக்கொன்றும் தெரியாது. இருப்பினும் அவர்களில் சிலரிடம் அன்பு காட்டுகிறோம். நம்பிக்கை வைக்கிறோம். சிலரிடம் வெறுப்புற்று ஒதுக்குகிறோம். இது ஏனெனில் ஒவ்வொருவரைச் சுற்றியும் "எண்ண வளையம்" ஒன்று சூழ்ந்திருப்பதால்தான். ஒவ்வொரு நபரின் வாழ்விலும் மேலோங்கியுள்ள எண்ணம் அவனைச் சுற்றி ஒரு வளையம் போட்டு விடுகிறது. அதை நமது மனம் தானாகவே பற்றிக் கொள்கிறது. முதல் பார்வையிலேயே சிலரை வெறுக்கச் செய்கிறது. சிலரிடம் அன்பு கொள்ளச் செய்கிறது.

"தொற்றுவது" என்ற ஒன்று உண்டு. அது தூலமானதாகவோ சூக்குமமானதாகவோ இருக்கும். நோய்களில் சில தொற்றிக் கொள்வன. ஆரோக்கியமுள்ளவராயிருப்பினும்கூட அவர் நீடித்த நோயினால் துன்புறும் ஒருவரோடு நெருங்கி இருப்பாராயின் அவரையும் அது பிடித்துக் கொள்ளும். பாதிக்கும். அதே போலச் சூக்கும உருவில் தொற்றிக் கொள்ளும் பாபங்களும் உண்டு. ஒரு தூய சூக்கும மனம் இத்தகைய பாபத்தின் சூக்கும உருவைக் கண்டுபிடித்துவிடும். இது தொற்று நோய் என்பதைத் தெரிந்து கொள்ளும். அதை தவிர்க்கவே முயலும். தெள்ளத்தெளிவாக ஒன்றை இவ்விடத்தில் புரிந்து கொள்வது முக்கியம். அதாவது அழுக்குற்ற பாபகரமான துர்நடத்தையும் கெட்ட பெயரையும் கொண்ட தாமச மனத்தையுடைய மனிதன் தன்னுடன் கூடவே துர்நாற்றமுள்ள சூழலை எடுத்துப் போய் அவன்

பழகுபவர்களிடமெல்லாம் அதைத் தொற்ற வைக்கிறான். அது போன்ற மனிதர்கள் அடிக்கடி வந்து போனால் அந்த இடம் தூய்மை இழந்து ஏமாற்று, விபச்சாரம், கொலை போன்றவற்றுக்கு இடமளித்து விடுகிறது. தெய்வீக மனிதர்களுங்கூட இத்தகைய தொற்று நோய் பாதிப்புகளிலிருந்து தப்ப முடியாது. அதனால்தான் ஆலயங்களும், பிரகாரங்களும் புனிதமாக வைக்கப்பட்டுள்ளன. சுத்தமற்றவன் அதனுள் நுழைவது தடுக்கப்படுகிறது. இதன் காரணமாகவே தூய்மையற்ற பாபகரமானவர்களின் கரங்களில் தரப்படும் உணவு, பானத்தைத் தவிர்க்கும் பழக்கம் இருக்கிறது. இந்த வழக்கத்திற்கு ஆழ்ந்த அர்த்தம் உண்டு. விஞ்ஞான பூர்வமான அடிப்படையில் இவை வகுக்கப்பட்டுள்ளன. நாளாவட்டத்தில் அதன் உண்மையான பொருளும், விளைவும், வழக்கத்திலிருந்து மறைந்து போயிற்று. வெளிப்பார்வைக்கு மட்டுமே இப்பொழுது நடைமுறையிலிருக்கிறது. இந்த வகையிலேயே அதன் மதிப்புக் குறைந்து விட்டது. மக்கள் இதில் நம்பிக்கையை இழந்து விட்டனர். அதை எதிர்க்கின்றனர்.

**சனிக்கிழமை, 8, ஜனவரி, 1949.**

**286. தூய்மை என்றால் என்ன?**

**பதில்:-**

தூய்மை என்பது இரண்டு பிரதான பிரிவுகள் கொண்டது. உள்ளும், வெளியும். தினசரி குளிப்பது, சுத்தமான உடைகள் உடுத்துவது, தூய சத்துணவும் சுத்தமான தண்ணீரும் உட்கொள்வது, ஒழுங்கான இடத்தில் வசிப்பது, தூய காற்றைச் சுவாசிப்பது, பிரம்மச்சரியத்தைக் கைக்கொள்வது, எல்லா உயிர்களிடத்தும் கருணையும் மதிப்பும் காட்டுவது, அறச் செயல்களைச்

செய்வது போன்றவை வெளிப்புறத்தூய்மையில் அடங்கும். உண்மையைப் பேசுவது, இனிமையாக அன்புடன் பேசுவது, அவசியமற்ற புண்படுத்தும் கெட்ட வார்த்தைகளைப் பேசுவதைத் தவிர்ப்பது, அளவோடு பேசுவது போன்றவை சொல்லில் தூய்மையைக் குறிப்பதாகும். நல்லதும் உபயோகமுள்ளது மானவற்றையே சிந்திப்பது, மற்றவர்க்கு நல்லன செய்வது, காமம் (சிற்றின்பம்), குரோதம் (கோபம்), லோபம் (பேராசை), மோகம்(மயக்கம்) மதம் (கர்வம்), மாச்சரியம் (பொறாமை) ஆகியவற்றை மனத்திலிருந்து அறவே அகற்றுவது உள்முகத் தூய்மைக்கான செயல்களாகும். எப்போதும் கடவுளைப் பற்றிய நினைவிலேயே லயித்திருப்பது அறச் செயல்கள், நல்ல எண்ணங்களைவிட மேன்மையான எண்ணத்தைச் சார்ந்தது. நல்ல, கெட்ட எண்ணங்கள் முறையே பொன், இரும்பு விலங்குகளைப் போன்றவை. இரண்டுமே மனிதனைப் பிணைக்கும். ஆனால் கெட்ட ஆசைகளையும் எண்ணங்களையும் விரட்ட ஒருவர் நல்ல ஆசைகள் எண்ணங்களைப் பழக வேண்டும். முடிவில் உண்மையான மனச்சாந்தியைப் பெற இவ்விரண்டையும் கடந்து செல்ல வேண்டும். ஆகையால் எண்ணற்ற ஆசைகள் எண்ணங்களுக்கிடையில் ஒரே ஒரு மேலான ஆசையை உயர்த்தி அதாவது கடவுள் மீதான எண்ணத்தை, பெயரை பற்றிக்கொள்ள வேண்டும். மிகவும் மேலான தெய்வீக தூய நிலையை எய்த இந்த உன்னத எண்ணத்தையும் கடந்து செல்ல வேண்டும். எல்லா ஆசைகள் எண்ணங்களிலிருந்தும் விடுபட்டு மனம் ஒரு சிறு புள்ளியும் இல்லாத பரந்த வெண்ணிறத் தாளைப் போல் ஆக வேண்டும். இத்தகைய உன்னத தூய நிலையை நிர்வாணம் அல்லது நிர்விகல்ப சமாதி

நிலையில் மட்டுமே அடைய முடியும். அந்த நிலையில் மனம் மேலான பரம ஆன்மாவில் தானாகவே ஒன்றி விடுகிறது. அதனோடு ஒன்றாகிக் கலந்து ஒன்றாகவே ஆகிறது. உருவம், பொருள், விவரம், எல்லாமே மறைந்து விடுகின்றன. முடிவில் நிற்பது தன்னில் தானாகவுள்ள உயிர்ச்சார மகாசமுத்திரம் மட்டுமே.

ஞாயிறு, 23, ஜனவரி, 1949.

287. கர்மா (செயல்)வும் அதன் பலனும் (விளைவு)- ஆத்மா (உயிர்) முடிவற்றது. அதற்குப் பிறப்பு, வளர்ச்சி, அழிவு மரணம், ஆண் - பெண் பேதம், சாதி பேதம், மத பேதம், பந்தம், விடுதலை என்பது எதுவுமே கிடையாது. அது எப்பொழுதுமே சுதந்திரமாயிருப்பது. எங்கும் வியாபித்திருப்பது. இரண்டாவது அற்று ஒன்று. படைப்பு, பிறப்பு, வளர்ச்சி, அழிவு, மரணம், ஆகியவற்றின் கருத்தும், பந்தம் விடுதலை போன்றவற்றின் எண்ணமும் மனத்துடன் கூடவே பிறந்து மறைவது. மனம் ஜீவாத்மாவின் (உயிரின்) பிரதான உறுப்பு. ஆன்மாவிலிருந்து அதற்கான உயிரையும், ஒளியையும் பெறுகிறது. ஆனால் ஜீவாத்மா மனத்தின் மூலமே உலகத்தை அறிகிறது. மனத்திற்கு மூன்று குணங்கள் உண்டு. இம்மூன்று குணங்களும் மேலோங்கி நிற்கும் அளவுக்கு ஏற்ப மனத்தின் உலகைப் புரிந்து கொள்ளும் தன்மையும், நினைப்பும், செயல்பாடும் மாறுபடும். ஒவ்வொரு செயலுக்கும் பலன் உண்டு. நாம் எதை விதைக்கிறாமோ அதையே அறுவடை செய்கிறோம். நமது இன்ப துன்பங்கள் கடந்த காலச் செயல்களின் விளைவே. நமது எதிர்கால இன்ப துன்பங்கள் இப்போது நாம் செய்யும் செயல்களைப் பொறுத்தே அமையும். கர்மபலம் என்பது எங்கிருந்தோ வருவதில்லை. கர்மபலத்தை விளைவிப்

பவர்கள் நாமேதான். கர்ம பலத்திற்கு ஆரம்பத்தின் கூடவே முடிவும் உண்டு. செயல் விளைவு, கர்மம் அதன் பலன். செயல், அதன் பலன் மனத்தில் தோன்றி, மனத்தில் தங்கியிருந்து மனத்தில் முடிவுறுவதே. அவை அதிகமாவதும் குறைவதும் முறையே மனத்தின் மாசு, தூய்மையைப் பொறுத்தே நிர்விகல்ப சமாதி நிலையில் மனம் தூய்மை பெற்று நிர்மலமாக இருக்கும்போது முற்பிறவி கர்மப் பலன்களெல்லாம் அழிந்து போகின் றன. அத்தகைய ஒருவர் பற்றறுந்து வீடுபேற்றை எய்து கிறார். எப்போதும் ஆன்ம அனுபவத்தில் திளைத்துக் கொண்டிருப்பார். சாதாரணனின் இரண்டு தன்மைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அதாவது பூர்வ வினையின் பலன்களும் (பிராப்த கர்மம்) முயற்சியும் ஆகும். இந்த இரண்டும் இரு செம்மறி ஆடுகள், ஒன்றோடொன்று மோதிக் கொள்வதைப் போன்றது. பிராப்த கர்மத்தின் செம்மறிச் சண்டையில் வெற்றி பெற்றால் அவன் விதிக்கு இலக்கானவன்! ஆனால் முயற்சி எனும் செம்மறி வென்றால் அந்த மனிதன் தன் முயற்சியைப் பாராட்டு கிறான். விதியைப் பற்றி பேசுபவர்களை எள்ளுகிறான். எப்படியாயினும் இரண்டு செம்மறிகளுக்குமிடையில் நடக்கும் போராட்டம் வெற்றி தோல்வியின்றி இருக்கு மாயின் அம்மனிதனுடைய வாழ்க்கைப் போராட்ட மாகவே தொடர்ந்து போராட்டத்திலேயே முடியும்.

பிரகிருதி எனும் கடவுளின் படைப்பாற்றல் மூன்று குணங்களை உடையது. அதாவது சத்துவம், ராசசம், தாமசம் ஆகும். இந்தக் குணங்களே பிரகிருதி சக்தியின் பண்புகளும், சாரமும் ஆகும். குணங்களின் உதவியைக் கொண்டு பிரகிருதி சக்திமனமாகவும், தூலமாகவும், பரிணமித்து அகிலமாகத் தோன்றுகிறது. எங்கெல்லாம்

மணமும் தூலமும் இருக்கிறதோ, எங்கெல்லாம் பெயர் களும் உருவங்களும் இருக்கிறதோ அங்கெல்லாம் குணாங்களும் உள்ளன.

அகிலம் மறையும்போது குணங்கள் சமச்சீராக இருக் கின்றன. ஆனால் அகிலத் தோற்றத்தின்போது குணங் களின் சமச்சீர் நிலையில் ஏற்ற இறக்கம் உண்டாகிறது. இதுவே படைப்புக்குக் காரணமாக அமைகிறது. இந்தக் குணங்களே ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும், ஒரு பெண்ணுக்கும் மற்றொரு பெண்ணுக்கும் ஒரு உயிருக்கும் மற்றொரு உயிருக்கும் இடையில் வித்தியா சங்களை ஏற்படுத்துகிறது. மேலோங்கியுள்ள குணத்தின் செயலுக்கு ஏற்ப ஒரு உயிரின் அறிவும், செயலும் மாறுபடுகிறது. ஆரம்ப நிலையில் ஒரு உயிர் உலகுக்கு வரும்போதே எந்தவித பூர்வ கர்மமுமின்றி வருகிறது. பிறந்த பிறகு அதன் நடத்தைகளும் அறிவு வளர்ச்சியும் அதனிடம் மேலோங்கி நிற்கும் குணத்தின் இயல்புக்கு ஏற்ப அமைகிறது. இந்த நடத்தைகளே அறியாமைக்கும், அறிவு வளர்ச்சிக்கும், பந்தத்திற்கும் விடுதலைக்கும் காரணமாக அமைகின்றன. மனத்தின் இயல்பு புலன்கள் மூலமாக வெளிச்சென்று புலன் போகப் பொருட்களுடன் தொடர்பு கொள்வது. இதைப் போன்றே மனம் தூய்மை இழந்து அதன் பளிங்குத் தன்மை போய், ஆத்மா விடுபேற்றின் காட்சி அதன் பார்வையிலிருந்து மறைந்து விடுகிறது. பந்த பாசம், மனத்தின் மாசு இரண்டுமே கர்மபலத்துக்கான காரணங்கள். அவையே இவ்வுலகில் மீண்டும் மீண்டும் பிறப்பதற்கும் காரணமாகிறது.

இவ்வுலகம் மனம் உமிழ்த் தோற்றமேயன்றி வேறல்ல! ஒரு தூய்மையற்ற மனம் ஆத்மாவின் காட்சியை இழக்கிறது. இதுவே உலகத் தோற்றத்

துக்கான முதற் காரணம். தோன்றி மறையும் பெயர் களையும் உருவங்களையும் உண்மையென எடுத்துக் கொள்கிறது. ஆனால் ஒரு தூய மனம், ஒருநிலை எய்திய மனத்தின் ஞானம், ஒவ்வொரு பெயரிலும் உருவிலும் ஒரே ஆத்மாவையே பார்க்கிறது. தூய்மையற்ற நிலை யும், மயக்கமுமே கர்ம பலத்திற்கு முக்கிய காரணம். மாயை மனத்தை சில குறிப்பிட்ட புலன் பொருட்களில் பற்றுக் கொள்ளச் செய்கிறது. அதனால் பந்தம் விளை கிறது. தூய மனம் ஆசையுறும் போதும் எண்ணங் கொள்ளும் போதும், செயல்படும் நிலையிலுங்கூட எந்தப் பொருளோடும் பந்தப்படுத்திக் கொள்வதில்லை. இத னால் கர்ம பலத்திலிருந்து தப்பித்துகப் கொள்கிறது. ஒருவர் ஆசைப்படும் போதும், நினைக்கும் போதும், செயல்படும்போதும் பற்றற்று இருந்தாரானால் அவர் "தான் செய்கிறோம்" (அகந்தைக்கருத்து) என்பது அறவே இருப்பதில்லை. இந்த நிலையில் "கர்மம்" எந்த விளைவையும் (பலனையும்) உண்டாக்குவதில்லை.

தாகத்தால் தவிக்கும் ஒரு மனிதன் முதன் முறையாக கானல் நீரைப் பார்க்கிறான். கானல் நீரின் உண்மையை அறியாததினால் தாகந் தணிக்க தண்ணீர் தேடி அதை நோக்கி ஓடுகிறான். ஓடி ஓடித் தேடிப் பார்த்து களைப் புற்று தான் பார்த்த தண்ணீர் பொய்யானது என்பதை உணர்கிறான். அதைத் தேடி ஓடியது வீண் என்பதை யும் அறிகிறான். இந்த விவரம் தெரிந்ததும் கானல் நீரைத் தேடி ஓடும் ஆசை மறைந்து விடுகிறது. இதே போல் மனம் முதன்முதலாக உலகில் வந்து பிறக்கும் போது புலன்கள், புலன்போகப் பொருட்களுடன் பற்றுக் கொண்டு அவைகளை அனுபவிப்பதில் மட்டுமே மகிழ்ச்சி இருக்கிறது என நினைக்கிறது. மீண்டும் மீண்டும் அதில்

திளைத்து மூழ்கி இருப்பதால் வேதனைக்குள்ளாகிறது. இவ்வாறு வெறி பிடித்து அலைவதால் ஆத்மாவை மறந்து அதன் பளிங்குத் தூய்மையை இழந்து பிறந்து பிறந்து உழல்கிறது. இப்படித்தான் மனம் கர்ம பலத்தைத் தேடிக் கொள்கிறது. கர்மபலம் விளைவது தன் முயற்சியால்தான். கர்மபலம் முடிவதும் தன் முயற்சி யாலேயே. ஆராய்ந்து ஆராய்ந்து, அடிக்கு மேல் அடி பட்டு, சொல்லொணாத் துன்பங்களுக்கும் வேதனைகளுக் கும் ஆட்பட்டு உலகாயத போகங்கள் பொய்யானது, வேதனை தருவது என்பதை மனம் கற்றுக் கொள்கிறது இவற்றை அகற்றிய பிறகே பேரானந்தம் கிடைக்கிறது. உண்மையான ஆத்மானுபவம் கிட்டுகிறது. இந்த உண்மையைத் தேடும் செய்கையால், ஆத்மாவைப் பற்றிய ஞானத்தைப் பெற்றவுடன் கர்ம பலத்தின் பாதிப்பு மறைந்து போகிறது. மனத்தை ஆட்டிப் படைப்பதும் நின்று விடுகிறது. அதன் பின் மனம் தனது தூய்மை நிலையை மீண்டும் எய்தி நிரந்தரமான பளிங்குத் தூய்மையுடன் திகழ்கிறது. வீடு பேற்றை எய்துகிறது. கர்ம பலத்திற்கும் மோட்சத்திற்கும் மனமே காரணம். இதனாலேயே கீதையில் தூய்மையுடைய நல்லவழியில் செலுத்தப்படும் மனம் ஒருவருடைய நண்பனும் வழி காட்டியுமாக அமைகிறது. மாசுற்று ஒழுங்கற்ற மனம் ஒருவருடைய குரூரப் பகைவன் ஆகும். பந்தமோ வீடு பேறோ நம் கையில்தான் இருக்கிறது. அதாவது நம் முடைய நினைப்பையும் செய்கையையும் பொறுத்தே அமைகிறது. கர்மபலன் கெட்ட எண்ணத்தினாலும் செய்கையாலும் வளர்ந்து அதிகமாகிறது, நல்லெண்ணம் நற் செய்கையால் அது மடிந்து விடுகிறது.

ஒரு புறா சாளரத்தின் வழியாக அறைக்குள் புகுந்து விடுகிறது. சென்ற சாளரம் திறந்தே இருக்கிறது. ஆனால் அந்தப் புறா வெளியேறும் வழியை மறந்து விடுகிறது. மூடியிருக்கும் கண்ணாடிக் கதவு வழியாக வரும் ஒளியைப் பார்த்து அதைத் திறந்த வழி என நினைத்துக் கொள்கிறது. அதன் தலையை ஜன்னல் கதவில் மோதிக் கொள்கிறது. கலக்கமடைகிறது. மூடப்பட்டிருக்கும் மற்றொரு சாளரக் கதவில் வரும் ஒளியைப் பார்க்கிறது. மீண்டும் அதை நோக்கிப் பறக்கிறது. மீண்டும் காயப் படுத்திக் கொள்கிறது. இதேபோல் அந்தப் புறா சில மணி நேரம் வரை ஜன்னலிலிருந்து சாளரத்திற்கும், சாளரத்திலிருந்து ஜன்னலுக்குமாகப் பறந்து அலைகிறது. ஆனால் முடிவில் தான் நுழைந்த சாளரத்தைப் பார்த்து விடுகிறது. அதன் வழியாகத் தப்பித்துக் கொள்கிறது. தான் அறைக்குள் புகுந்து வந்த சாளரத்தை அந்தப் புறா எப்படி மறந்தது? இத்தனைக்கும் அது பரக்கத் திறந்தே இருந்தது! யார் அல்லது எது இந்த மயக்கத்திற்குக் காரணம்? நிச்சயமாக அந்தப் புறாவே அதன் மயக்கத்திற்கும் அலைச்சலுக்கும் காரணம். அதேபோல் அது தப்பித்துக் கொள்வதற்குக் காரணமும் அதுவே. இதே போல் முதன்முதலாகப் பிறவியெடுக்கும் மனம் அதன் குணங்கள் விளைவிக்கும் மயக்கத்தால் இந்த அகிலத்தில் குழம்பி விடுகிறது. அதன் உண்மை இயல்பை மறந்து விடுகிறது. ஆத்மாவையும் மறந்து விடுகிறது. உலக போகங்களில் மூழ்கித் திளைத்து, வேதனைகளுக்குள்ளாகி, கர்ம பலனை உண்டாக்கிக் கொள்கிறது. வெகு தூரம் அலைந்து தேடி ஏமாந்து களைத்த பிறகு மனம் அதன் தவறை உணர்ந்து கொள்கிறது. உலகப்பற்றையும் பொருட்களின் மீது

வைத்த ஆசையையும் துறக்கிறது. ஆத்மானுபவத்தைப் பெறுவதில் கவனம் செலுத்துகிறது. வீடுபேறு எய்து கிறது. கர்மமும், கர்ம பலனும், பந்தமும், வீடுபேறும் முழுக்க முழுக்க மனத்தைப் பொறுத்தே இருக்கிறது.

**திங்கட்கிழமை, 24, ஜனவரி, 1949.**

288. *சமயம் என்றால் என்ன?*

**பதில்:-**

இறையுணர்வு பெறுவதே சமயம். அது பேரான பேருண்மையில் இணையும் ஒன்றாகும். இந்த முடிவான பேருண்மையைப் பற்றி விளக்கும் பொருளே சமயம். கடவுளை அறிவதற்கு வகுக்கப்பட்டுள்ள வழிகளும் விதி முறைகளுமே சமயமெனப்படுவது. ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் உயருவதற்கு விதிக்கப்பட்டுள்ள நடை முறை விதிகளும், ஒழுங்கும், சீர்திருத்தக் கட்டளைகளுமே சமயம் என்று அழைக்கப்படுவதாகும்.

**வெள்ளிக்கிழமை, 28, ஜனவரி, 1949.**

289. ***ஒரு ஏரியின் அமைதியான நீர்ப்பரப்பில் ஒரு கல்லை வீசி எறிவதைப் போன்றதே, ஒவ்வொரு ஒலியும் அந்தக் கல் அதன் தாக்கும் சக்தியின் வேகத்திற்கு ஏற்ப அடுக்கடுக்கான அலைகளையும், சிற்றலைகளையும் வட்ட மிடச் செய்கின்றன. அதேபோல் ஒரு ஒலி ஆகாய வெளியில் ஒலி அலைகளைப் பரப்புகிறது. அவை வட்ட உருவில் பரவுகின்றன. மக்கள் வெவ்வேறு திசைகளில் நின்று கொண்டிருந்தாலும் ஒரு ஒலியை இவ்வண்ணமே கேட்கிறார்கள்.***

**தெளிவுரை:-**

ஒரு ஏரியில் அமைதியான நீர்ப்பரப்பின் மீது ஒரு கல்லை எறியுங்கள். அந்தக் கல் அதன் தாக்கும் சக்திக்

கேற்ப ஒன்றன் பின் ஒன்றாக அலைகளையும் சிற்றலைகளையும் உண்டாக்குகின்றன. இந்த அலைகளும் சிற்றலைகளும் அது உண்டாகும் இடத்திலிருந்து புறப் பட்டு வட்டங்களாகச் செல்கின்றன. கல் விழுந்த இடத் தில் உண்டான சிறு வட்டம் ஏரிக்கரையை அடையும் வரை பெரிதாகிக் கொண்டே போய் அதன் பிறகு மறைந்து விடுகின்றன. அலைகளும் சிற்றலைகளும் எப்பொழுதும் வட்டமான உருவிலேயே நகரும். ஒவ் வொரு சப்தமும் உரத்ததாயினும் மெல்லியதாயினும் தண்ணீரில் ஏறியப் பட்ட கல்லைப் போன்றே நடந்து கொள்கிறது. ஒவ்வொரு ஒலியும் அதன் வலிமைக்கு ஏற்ப அடுக்கடுக்கான ஒலி அலைகளை உண்டாக்குகிறது. அவை எல்லாத் திசைகளையும் நோக்கி வட்டமிட்டுச் செல்கின்றன. இதனால்தான் ஒரே ஒலி வெவ்வேறு திசைகளில் இருக்கும் மனிதர்களுக்குக் கேட்கின்றன. தூரமாகச் செல்லச் செல்ல ஒலியின் வலிமை குறைந்து கொண்டே வருகிறது. அதாவது ஒவ்வொரு வட்டமும் பெரியதாகிக் கொண்டு வருவதால்! ஒலி அலை வட்ட வடிவில் நகர்ந்தாலும் அதன் சரியான ஒலி கேட்பவரின் காதுகளில் குவிந்து ஒலிக்கிறது. பல்வேறு மக்கள் ஒரே இடத்தில் நின்று கொண்டிருந்தாலும், சம தூரத்தில் இருப்பினும் அதே ஒலி தெளிவாகவோ மந்தமாகவே கேட்பது கேட்பவரின் கேட்கும் ஆற்றலைப் பொறுத்தே அமைகிறது. கேட்கும் சூக்குமப் புலன் பழுது பட்டிருந் தால் அந்த ஒலி சரியாக ஒலிப்பதில்லை. கேட்க முடி வதும் இல்லை. ஆனால் ஒரு மனிதனின் கேட்கும் சூக்குமப் புலன் கூர்மையாகவும் சீராகவுமிருந்தால் அதே ஒலியை துல்லியமாகக் கேட்க முடிகிறது.

**வெள்ளிக்கிழமை, 28, ஜனவரி, 1949.**

219. ஓடும் தண்ணீரில் ஒரு கல்லை எறிந்தோமானால் அது கீழ் நோக்கிப் பரவும் அலைகளையும் சிற்றலைகளையும் உண்டாக்குகிறது. அதன் மேல் நோக்கி நகரும் தூரம் (நீரோட்டத்தை எதிர்த்து) மிகக் குறைவாக இருக்கும். அதேபோல ஒலி அலைகள் காற்று வீசும் திக்கை நோக்கிச் செல்லும்போது சுலபமாகவும், வேகமாகவும் நெடுந் தூரத்துக்கும் செல்லுகிறது. காற்றை எதிர்த்துச் செல்லும்' ஒலியின் தூரம் குறைவாக இருக்கும். ஆகவே காற்று வீசும் திசையில் தூரத்திலிருந்தாலும் உரத்துக் கேட்கும் ஒலி காற்றின் எதிர்ப் பக்கம் அதே தூரத்திலிருக்கும்போது கேட்பதில்லை.

**ஞாயிற்றுக்கிழமை, 30, ஜனவரி, 1949.**

291. கடவுளின் உருவமற்ற நிலையை (நிராகாரம்) உருவமென்றோ அருவமென்றோ சொல்ல இயலாது. அது உயிருள்ளதெனவோ உயிரற்றது எனவோ கொள்ள முடியாது. அதை ஒளி என்றோ இருள் என்றோ அழைக்க முடியாது. ஒன்றெனவோ பல எனவோ கணிக்க முடியாது. பேரானந்தமென்றோ துன்பமானது என்றோ உணர முடியாது. ஞானம் என்றோ அஞ்ஞானம் என்று வகுக்க முடியாது. இவை எல்லாமே ஒன்றுடனொன்று தொடர்புடையவை. "ஒரே பொருள்" என்னும் பொழுது அதை யாரால் வருணிக்க இயலும்? உண்மையைச் சொல்லப் போனால் அதை விளக்க வார்த்தைகளே கிடையாது. ஆயினும் அது ஒன்றுமில்லாத ஒன்றல்ல. அதை தன்னில் தானாக உள்ள ஒன்று என்றும் அல்லது தன்னில்தானான உயிர்ச்சார மகாசமுத்திர மென்றும் கூறலாம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

* * *

## ஆசிரியரும் அவர் பணியும்

தென் இந்தியாவில் "கூர்க்" மலைப் பிரதேசத்தில் 1902ஆம் ஆண்டு ஏப்ரல் 12-ல் நாராயணானந்தா பிறந்தார். அவர் பெற்றோர் குழந்தைப் பேற்றுக்காக பல ஆண்டுகள் இறைவனை வேண்டி இறைஞ்சி நின்றனர். ஆகவேதான் தங்களுக்குப் பிறந்த பொலிவு மிக்க அழகுள்ள மகனிடம் ஆழ்ந்த அன்பு காட்டி வந்தனர். அந்த மகனும் அந்தக் கிராமத்தினரின் மனதை மிகவும் கவர்ந்திருந்தான்.

அவனும் தன் பெற்றோரிடம் மிகவும் பாசம் கொண்டிருந்தான். ஆயினும் ஐந்தாவது வயதில் அவனைப் பள்ளிக்கு அனுப்பியதும் அவன் கொஞ்சமும் தயக்கம் காட்டாமல் வெகு சகஜமாக வீட்டை விட்டுச் சென்றான்.

சிறுவயதில் அவன் படிப்பில் சிறந்து, சுறுசுறுப்பு மிக்க மாணவனாகவும் விளையாட்டரங்கில் திறனைக் காட்டுபவனாகவும் விளங்கினான். பள்ளி விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் தேர்வைப் பெற்று பல பரிசுகளைப் பள்ளிக்குப் பெற்றுத் தந்தான்.

இதுபோன்ற பல்வேறு செயல்களுக்கிடையில் காலை மாலை இருவேளைகளிலும் தீவிர தியானத்தில் சுமார் அரை மணி நேரம் அமர்ந்து விடுவான். எந்த வெளிப்புற தூண்டுதலுமில்லாமல் உள்ளுக்குள்ளிருந்து கிளர்ந்தெழுந்த ஒரு வகை உந்துதலினாலேயே இந்தப் பயிற்சியைத் தொடர்ந்து மேற்கொண்டான்.

இத்தகைய முறையான நியதியுடன் கூடிய தியானம் அந்தச் சிறுவனை ஆன்மிக வாழ்க்கையில் நிலை நிறுத்தி எதிர்காலத்தில் நிர்விகல்ப சமாதி நிலையை எய்துவதற்கான அரிய வாய்ப்புக்கு அடி கோலியது.

கல்வியை முடித்ததும் அந்த இளைஞன் திருமணம் செய்து கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக உலகைத் துறந்து இருபத்தேழாவது வயதில் சந்நியாசியானார்.

வாழ்க்கையில் தோல்வி ஏதும் ஏற்படாத நிலையிலேயே அவர் இந்த சந்நியாசத்தை மேற்கொண்டார்.

எந்த விதமான விரக்தியும் ஏற்படாத நிலையில் ஒளிமிக்க எதிர்காலமும் அவருக்காகக் காத்திருந்தது. அவருடைய மனோ நிலையில் ஏற்பட்டிருந்த பெருத்த ஆன்மிக நிலை மாறுதலே இதற்குக் காரணம்.

ஒருநாள் வழக்கம்போல் தியானத்தில் அமர்ந்திருந்த போது அவர் மனம் ஒரு மணி கால அளவுக்கும் மேலே ஒருமுகப்பட்டு ஒருமைப் பாட்டில் ஊன்றி நின்றது. இந்த மேலான உயரிய சாதனை முடிந்ததும் அந்தராத்மா அவரை அழைத்து உலகைத் துறக்கும்படிக் கட்டளை பிறப் பித்த சொற்கள் அவர் காதுகளில் ஒலித்தன. அந்த இளைஞர் கண நேரம்கூடத் தயங்காமல் கடைசி பைசா வரை தன்னுடைய செல்வத்தைத் தானம் செய்து விட்டார்.

1929ல் குருவைத் (ஆன்மிக ஆசானை) தேடி தன் வீட்டை விட்டுப் புறப்பட்டார்.

களைப்பு மிகுந்த பல்லாயிரம் மைல் தூரமான நெடிய பயணத்திற்குப் பின்னர் கடைசியாக அந்த இளந் துறவி ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் தலைமையகமான கல்கத்தாவிலுள்ள பேலூர் மடத்திற்கு வந்து சேர்ந்தார்.

அந்த மடத்திலிருந்த சந்நியாசிகள் மூன்று நாட்கள் வரை அவரைப் பல்விதமான சோதனைகளுக்கு உட்படுத்தி அதன் பின்னரே ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நேர்ச் சீடரான தலைவர் சுவாமி சிவானந்தரைத் தரிசிப்பதற்கு அனுமதித்தனர். இந்த இளந் துறவி அந்த மகானைக் கண்டதும் அவர் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கிச் சரணடைந்தார்.

இவ்வாறு இவர் தமது குருவைத் தரிசித்ததும், அவர் தன்னுடைய ஆழ்ந்த அன்பையும், ஆதரவையும் நல்கினார். இளந்துறவி பதிலுக்கு தமது நம்பிக்கையையும் பக்தியையும் கடவுளிடமும், குருவிடமும் சமர்ப்பித்தார்.

அடுத்து வந்த சில ஆண்டுகளுக்குள் சுவாமி நாராயணானந்தாவிடம் கடவுளைத் தரிசிப்பதற்கான உள்ளுணர்வுடன் கூடிய உந்துதல் உத்வேகமடைந்தது. அவருடைய முழு வாழ்க்கையுமே இந்த ஒரே குறிக்கோளின் முனைப்பிலேயே ஈடுபட்டு, அதன் பயனாக ஓர் தனி இடத்தைத் தேடி தீவிர சாதனையை (ஆன்மிகப் பயிற்சி) மேற்கொள்ள வேண்டுமென்ற தாபம் மேலிட்டது.

கடைசியாக அவருடைய குருவானவர் தனது அருள் நிலையில் சீடனை அழைத்து இமாலயத்திற்குச் சென்று தவம் (கடுந்தவம்) மேற்கொண்டு சமாதி நிலையில் (ஆழ்நிலைத் தியானம்) ஆழ்ந்து சித்தி பெறும்படி கட்டளையிட்டார்.

பிரம்மாண்டமான பனிச் சிகரங்கள் நிரம்பிய அதிசயானந்தத்தைத் தரக் கூடிய இமாலய மலைத் தொடர்களை நேருக்கு நேர் கண்டபோது சுவாமிஜி பரவசமடைந்து உண்மையான கடுந் தவத்தை உடனே தொடங்கினார்.

எந்தவித வசதிகளுமின்றி நடுக்காட்டில் ஒரு சிறிய குடிசையில் தங்கித் தளராத ஊக்கத்துடன் கடுமையாக உழைத்தார். வழக்கமாக அவர் நாளொன்றுக்கு சுமார் பன்னிரண்டு மணியிலிருந்து பதினாறு மணி கால அளவுக்குத் தியானத்தில் அமர்ந்து மந்திர ஜபம் செய்தார். இரவு பகலில்லாமல் நாட்கணக்கில் ஓய்வு ஒழிச்சலின்றித் தொடர்ந்து தியானம் செய்வார். இது போன்ற கடுமையான சாதனையின் பயனாக சுவாமி நாராயணானந்தா குறுகிய காலத்திலேயே மிக உயர்ந்த மேலான கதியான நிர்விகர்ப சமாதி நிலையை எய்தினார்.

1933ம் ஆண்டு பிப்ரவரி மாதம் சிவராத்திரி தினத்தின் இரவு நேரத்தில், அதாவது இந்திய நாடெங்ஙும் அனுஷ்டிக்கப்படும் சிவபெருமான் விழித்தெழும் கொண்டாட்ட தினத்தன்று சுவாமிஜீ வழக்கம் போல் அன்று நள்ளிரவில் தியானத்தில் அமர்ந்தார். மனம்

ஆழ்ந்து ஒருமுகப்பட்டபோது குண்டலினி சக்தி முழுமையாகக் கிளம்பி சகஸ்ராரத்தை வந்தடைந்ததை உணர்ந்தார். அவருடைய இதயத் துடிப்பும் மூச்சும் தானாகவே நின்று போய்விட்டன (கேவல கும்பகம்).

உடலைப் பற்றிய உணர்வு அற்றுப் போய் விட்டது. மனம் பூரணத்துவத்தில் கலந்து விட்டது. தான் எனும் உணர்வு மரத்து உயிர்ச்சார சாகரத்தில் சங்கமித்தது. மனம், அகந்தை, புத்தி போன்றவற்றின் அறிகுறிகள் கிஞ்சித்தேனும் புலப்படவில்லை. இதுவே கடைசி அனுபவம். இதுவே கடவுளின் உருவமற்ற நிலையின் உணர்வு. இதுவே அகண்டாகாரமான ஆனந்த நிலையுமாகும்.

சுவாமிஜி இதே நிர்விகல்ப சமாதி நிலையில் நீண்ட காலம் இருந்தார். மிக மிக உயரத்தில் அவரது ஆன்மா இருந்தாலும் அவர். மனம் நிதானமாகவும் நிச்சயத்துடனும் உலக பந்தத்தின் எல்லைக்குள் இறங்கி வந்தது. இந்த நிலையில் அவருடைய பார்வையின் கோணமே முற்றிலும் மாற்றம் பெற்றிருந்தது. பூரண ஞான ஒளி எய்திய காரணத்தால் அவர் மனத்தில் அறியாமையின் அறிகுறி கிஞ்சித்தேனும் இருக்கவில்லை.

அவர் எங்கணும் எல்லாப் பெயர்களுக்கும் உருவங்களுக்கும் பின்னால்; ஓரே ஆத்மாவையே கண்டார். அபேதத்தின் பேதங்களில் தெய்வீக ஒற்றுமையை உணர்ந்து கொண்டார்.

இந்த அரிய சித்தியை அடைந்த பின்னரும் சுவாமி நாராயணானந்தா அதை விளம்பரப்படுத்திக் கொள்ளவில்லை. இமாலயத்தில் எளிய, தனிமை வாழ்க்கையையே தொடர்ந்து மேற்கொண்டார். அவர் சீடர்களைச் சேர்த்துக் கொள்ளவில்லை. பணத்துக்கோ வசதிகளுக்கோ ஆசைப்படவில்லை. அவை ஏதும் இல்லாத நிலையிலேயே அவர் வாழ்ந்தார்.

உலக ஆசாபாசங்களுக்கு ஆளாகாமல் மனத்தின் நுட்பமான இயக்கங்களின் நூதன களிப்பிலேயே ஆழ்ந்து போனார். மறைந்திருக்கும் காரணங்களின் விளைவுகளால் எழும் சூக்கும இயக்கங்களைப் படம் பிடித்துக் களிக்க தனது ஒருமுகப்பட்ட தூய மனத்தையே நிரந்தரமான ஆய்வுக் கூடமாக ஆக்கிக் கொண்டார்.

இவற்றைப் புத்தகங்களாகக் கொண்டு வரவேண்டுமென்ற யோசனையே இல்லாமல் மனோ தத்துவத் துறையிலும், தத்துவ சாத்திரத் துறையிலும் அவருடைய உன்னதமான கண்டு பிடிப்புக்களைக் குறிப்புகளாக எழுதி வைத்துக் கொள்ளலானார்.

முன் உதாரணமில்லாத, ஈடு இணையற்ற ஞானத்தை அளிக்கக் கூடிய ஒன்றன் பின் ஒன்றான தொகுப்புகளாக தனக்கே உரித்தான அற்புத ஆற்றலினால் எளிய லாகவத்துடன் எழுதிக் குவித்தார். இந்தக் கை எழுத்துப் பிரதிகளை உலகின் பார்வைக்குத் தெரியாமல் பாதுகாத்து வைக்கவே எண்ணினார்.

1947-ல் இந்தியா, பாகிஸ்தான் பிரிவினையின் போது வெறி கொண்ட முஸ்லிம்களாலும் இந்துமதக் கும்பலாலும் கடவுள், மதம் போன்றவற்றின் பெயரால் நிகழ்ந்த மனிதாபிமானமற்ற கோர இரத்தக் களரியை சுவாமிஜீ நேரில் கண்டார்.

கொள்ளை, கொலை, பிணக்குவியல்களின் கோரக் காட்சிகளைக் கண்டார். கன்னிப் பெண்களும், இளம் பெண்களும் கடத்தப்பட்டதையும் பார்த்தார். துன்பப் படும் மக்களைக் கண்டு இரக்கங் கொண்டார். உடனே மனித குலத்துக்கு உதவி புரியத் தீர்மானித்தார். தனிமையைத் துறந்து சீடர்களை ஏற்றுக் கொள்ளத் துவங்கினார்.

ஆரம்பத்தில் சுவாமிஜீயிடம் சரணடைந்த சீடர்களில் மேற்கூறிய படுகொலைகளுக்குத் தப்பிப் பிழைத்து வந்த ஏழை இளம் அனாதைகளும் இருந்தனர்.

அவர்கள் சுவாமிஜீயினுடைய குறிப்புகளையும் கையெழுத்துப் பிரதிகளையும் படித்துப் பார்த்தனர். அவற்றின் தனிப் பெருஞ் சிறப்பை உணர்ந்து அவற்றைப் புத்தகங்களாக வெளிக்கொணர விரும்பினர்.

சுவாமிஜீயிடம் அதற்கான பொருள் வசதி இல்லாமலிருந்தது. பாகிஸ்தானில் அனைத்தையும் இழந்து விட்டு வந்து சரண் புகுந்த சகோதர சகோதரிகளிடம் நிதி வசதி இல்லை. புத்தகங்கள் வெளியிடுவதற்கான வாய்ப்பு இல்லாத நிலை.

அவர்களில் சில பெண்கள் தங்களிடம் எஞ்சி இருந்த ஓரிரு பொன் நகைகளை அதற்காக அளித்தனர். அதைக் கொண்டு புத்தகங்களை வெளியிடும் பணியைத் துவக்குவதற்கான வாய்ப்புக் கிட்டியது.

இந்த நேரத்தில் கெடுமதி கொண்ட சிலரிடமிருந்து கிளம்பிய எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டி நேரிட்டது. அவர்கள் வெறும் பொச்சரிப்புக் காரணமாகவே இந்த மகத்தான பணியின் துவக்கத்தைத் தடுத்து நிறுத்த நினைத்தனர்.

எந்த ஒரு ஆதரவும், உதவியும் யாரிடமிருந்தும் பெறாத் நிலையிலேயே பல சோம்பேறிகளால் அவர் மீது சுமத்தப்பட்ட அவதூறுகளையும், பழிபாவங்களையும் அவர் தனி ஒருவராகவே ஏற்றுக்கொண்டு வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதன் விளைவாகவே எல்லோராலும் அவர் இழிவாகக் கருதப்பட்டார். அதனால் தங்குவதற்கும் இடம் கிடைக்காத நிலை.

இதற்கெல்லாம் ஈடு கொடுத்து சுவாமிஜீ கிஞ்சித்தும் மனந் தளராமல் உறுதியுடன் இருந்தார். சில நாட்கள் சென்றதும் அவதூறுகள் ஓய்ந்து போயின. சோம்பேறி

கள் தாங்கள் செய்த பாவங்களின் பலனை தாங்களே சுமந்து சென்றனர்.

புத்தகங்களின் பணி தொடர்ந்து, ஒன்றன் பின் ஒன்றாக அச்சேறி வெளி வந்தது. அவற்றைப் பற்றிய விளம்பரமோ பிரச்சாரமோ இல்லாமல் அவற்றின் உண்மையான உயர்ந்த மதிப்பினாலேயே உலகம் பூராவும் பரவுவதற்கான வாய்ப்புக் கிடைத்தது.

ஆரம்பத்தில் சுவாமி நாராயணானந்தா இதற்காக எந்த ஒரு நிறுவனத்தையோ அல்லது ஆசிரமத்தையோ அமைக்க விரும்பவில்லை.

அவருடைய துறவு வாழ்க்கையின் பொது மக்களிடமிருந்தோ, சீடர்களிடமிருந்தோ எந்தவித நன்கொடையையும் பெறவில்லை. (அவருக்கே உரித்தான) எளிய வாழ்க்கையை மேற்கொண்டார். பொது வாழ்க்கையின் ஆடம்பரங்களை அவர் தவிர்க்கவே முயன்றார். நாட்கள் செல்லச் செல்ல சீடர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

இது போன்று உருவாகிய இயக்கத்தை நெறிப் படுத்தி ஓர் ஒழுங்கான அமைப்பாக நிறுவ வேண்டிய சூழ்நிலை தவிர்க்க முடியாததாகிவிட்டது.

பின்னர் 1967ம் ஆண்டில், "நாராயணானந்தா யுனிவர்சல் யோகா டிரஸ்ட்" என்ற மையங்கள் இந்தியா, ஜெர்மனி, டென்மார்க், ஸ்விட்சர்லாந்து போன்ற நாடுகளில் ஆரம்பிக்கப்பட்டன. இந்த நேரத்தில் மேலை நாட்டு இளம் ஹிப்பிகள் பலர், குறிப்பாக, "டென்மார்க்" தேசத்தவர் சுவாமி நாராயணானந்தாவிடம் வழிகாட்டி உதவும்படி வந்து சரணடைந்தனர்.

அவர்களில் பலர் போதை மருந்துக்கு அடிமையானவர்கள், மோசமான நாடோடிகள், சரண்புகச் சென்ற பல இடங்களிலிருந்தும் விரட்டப்பட்டு கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள்.

ஆனாலும் சுவாமிஜீ அவர்களைப் புரிந்து கொண்டு தமது சீடர்களாக ஏற்றுக் கொண்டார். விரைவிலேயே

அவர்களைச் சரியான பாதைக்கு கொண்டு வந்து விட்டார்.

இதில் பல இளைஞர்களும், யுவதிகளும் டென்மார்க் தேசத்துக்குத் திரும்பி வந்து ஜில்லிங் என்ற இடத்தில் உள்ள என். யூ. யோக ஆசிரமத்தின், சந்நியாசிகளாக வும், சந்நியாசினிகளாகவும் மாறினார்கள். அந்த ஆசிரமம் புதிதாகத் தொடங்கப்பட்டிருந்த சமயம் அது.

ஜில்லிங் ஆசிரமம் எழுபது ஏக்கர் பரப்பளவுள்ள ஒரு பழைய பண்ணையில் அமைக்கப்பட்டது. அந்த நிலத்தைப் பண்படுத்தி அங்கு ஒரு ஆசிரமத்தை உரு வாக்க ஆசிரமவாசிகள் கடுமையாக உழைக்க வேண்டி யிருந்தது. இந்த உழைப்புடன்கூடத் தங்கள் வயிற்றுப் பாட்டுக்காக அவர்கள் வெளியே சென்று தொழிற் சாலைகளில் பணி புரிந்து சம்பாதிக்க வேண்டியு மிருந்தது.

சுவாமிஜீ அவர்களுடைய உண்மையான உழைப் பைக் கண்டு, டென்மார்க் நாட்டிற்கு வருகை புரிந்தார். சுவாமிஜி ஜில்லிங் ஆசிரமத்தில் ஐந்து மாத காலம் தங்கித் தமது முதல் இலவச ஆன்மிகப் பயிற்சி முகாமை நடத்தினார்.

அந்த முகாமில் உண்மையான ஆன்மிகப் பயிற்சி யாளர்கள் தங்களுக்கெனத் தனித்தனி கூடாரங்களை அமைத்துக் கொண்டு அதுற்றில் தங்கி அடிக்கடி குருவை நேரில் பார்த்து சந்தேகங்களைக் கேட்டறிந்து தெளிந்தனர். தினசரிப் பயிற்சி நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டனர்.

முகாம் மூன்று மாதகாலம் நடந்தது. ஆயிரக்கணக் கானவர்கள் அதில் வந்து கலந்து கொண்டார்கள்.

1971ம் ஆண்டு முதல் சுவாமி நாராயணானந்தா டென்மார்க் நாட்டிற்கும் மற்ற நாடுகளில் உள்ள மையங்களுக்கும் தவறாமல் ஒவ்வொரு ஆண்டும் சென்று வந்தார்.

ஜில்லிங்கில் மட்டும் ஒவ்வொரு ஆண்டும் ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் இலவச ஆன்மிகப் பயிற்சி முகாமை நடத்துகின்றனர். மெய்ஞ்ஞானத்தை நாடிவரும் அன்பர்களுக்கு உபதேசம் அளித்து அகில உலகத்திலு முள்ள ஆயிரக் கணக்கான சீடர்களுக்கு அக்கறையுடன் வழிகாட்டி உதவி புரிகின்றன.

சுவாமி நாராயணானந்தா சீடர்களுடன் கொண் டுள்ள உறவுமுறை அந்தரங்கத் தொடர்புடையது. அவ ரது அருட்பார்வை சீடர்களுக்குள் மறைந்துள்ள ஆற் றல்களை விழிப்படையச் செய்து, அவர்களைத் தங்கள் சொந்த பலத்திலேயே நின்று செயலாற்றும் சக்தியைக் கொடுத்து விடுகிறது. அவருடைய ஆன்மிகப் போதனை யிலுள்ள கருத்தாழமும் ஞானத் தெளிவும் பொழுது போக்காக விளம்பரப் படுத்தக் கூடியது அல்ல. அவர் தமது சீடர்களை பாதிவழியில் கைவிடுபவரல்ல. முடி வான, உறுதியான மனக்கட்டுப்பாட்டை எய்தி அதன் மூலம் நற்கதிக்கு (மோட்சம்) போய்ச் சேரும்படிக் கட்டளை இடுகிறார்.

சுவாமி நாராயணானந்தாவின் சீடர்கள் உழைத்துச் சம்பாதித்து சமூகத்தில் ஒருவராகக் கலந்து வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் நல்லொழுக்க விதி முறைகளை கண்டிப்புடன் கடைப்பிடித்துச் சுயநலமில்லாத பற்றற்ற வாழ்க்கையைப் பின்பற்றி நடக்க முயல்கின்றனர்.

பெரும்பாலான ஆண், பெண் சந்நியாசிகளும் ஆசிர மங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். அவற்றில் பல சுய பலத்தில் இயங்கும் பண்ணைகளாக உள்ளன. அந்தப் பண்ணைகளிலேயே பட்டறைகளும் அதற்கான எல்லா வசதிகளும் உள்ளன. ஆசிரமங்களில் தங்கியுள்ள ஆசிரம வாசிகளுக்கு வேலை வாய்ப்பை அளிக்கத்தக்க வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சர்வதேசக் கூட்டமைப்பின் மையமாக உள்ள டென்மார்க்கிலுள்ள ஜில்லிங் ஆசிரமத்தில் விவசாயப்

பண்ணைத் தொழிலுடன் இணைக்கப்பட்ட ஒரு பால் பண்ணையும் இருக்கிறது. இந்த ஆசிரமத்தில் மிகப் பெரிய அச்சுக் கூடமும் உள்ளது. இங்குதான் வெளியீட்டுத் துறைக்கான புத்தகங்களும் பத்திரிகைகளும் அச்சிடப்பட்டு வெளியாகின்றன.

இங்குள்ள வேறொரு அணியினருக்குப் பல்வேறு ஆசிரமங்களிலும், மையங்களிலும் கட்டக்கூடிய புதிய கட்டடங்களுக்கான சுட்டுமானப் பணிகளும் தொடர்ந்து இருந்து வருகின்றது. இதுபோன்ற பணிகளுக்கு உதவும் வகையில் உலகம் பூராவிலுமுள்ள பல்வேறு மையங்களுக் கிடையே தங்களது அங்கத்தினர்களைப் பரிமாறிக் கொள்ளும் வழக்கமும் தீவிரமடைந்துள்ளது.


இத்தகைய நெருக்கமான கூட்டுறவினால் இந்த நிறுவனம் சர்வதேசப் பல்சமயச் சீடர்களுக்கிடையே நல்லுறவுக்கான ஒற்றுமையை நிலவச் செய்கிறது.

தாங்கள் செய்யும் தினசரித் தொழில்கள் தவிர ஆசிரமவாசிகள் காலை மாலை வேளைகளிலும் தியானத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஞாயிற்றுக்கிழமைகளில், விழாக் காலங்களிலும் எல்லோரும் தியான மண்டபத்தில் பொதுத் தியானத்திற்காக ஒன்றாகக் கூடுகின்றனர். அப்போது நிகழும் கூட்டு வழிபாட்டிலும் இசையிலும் கலந்து கொள்கின்றனர்.

இந்தப் பேரழகு மிக்க இயக்கத்தின் வாயிற் கதவுகளுக்குப் பின்னாலிருந்து இதன் கர்த்தாவின் (பரமாத்மா) உளப்பூர்வ வாழ்த்துக்கள் கரைபுரண்டோடி வருகின்றன.

அவருடைய மாபெரும் ஆன்மிகக் குடும்பத்தின் அங்கத்தினர்களாக உள்ள அனைவருமே மற்ற ஞான வழியைத் தேடி வரும் மற்ற மெய்யன்பர்களோடு இணைந்து தங்களுக்குக் கிடைத்துள்ள விலையில்லாப் பெரும் பரிசைப் பகிர்ந்து கொள்ளும் மேலான விருப்பத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

சுவாமி நாராயணானந்தா தென்னகத்தின் கூர்க் பகுதியில் 1902-ல் அவதரித்தார். 1929-ல் அவர் துறவியானார். ஆன்மிக சாதனைக்காக இமயமலைக்குச் சென்றார். அங்கே பேரானந்தப் பேரறிவு நிலையான நிர்விகல்ப சமாதி நிலை 1933-ல் அவருக்குக் கிடைத்தது. அதன் பின்னரும் பல ஆண்டுகள் இமயத்தில் ஏகாந்தமாகவே இருந்தார். மனம் ஆன்மா உள்ளிட்ட அருள் உலகில் தாம் பெற்ற ஈடு இணையற்ற புதுமையான அனுபவ உண்மைகளை எழுத்தில் வடித்தார். யோகம் மனம் போன்ற தத்துவத் துறைகளில் இன்று ஆதாரப் பூர்வமாக விளங்குவன அவரது நூல்களே. 1947-ல் பாகிஸ்தான் இந்திய மத வெறியர்களின் படுகொலைகளைக் கண்டார். மனித குலத்துக்கு உதவ முன் வந்தார். சீடர்களை ஏற்க முடிவெடுத்தார். சுவாமி நாராயணானந்தா 'அகண்டைக மதம்' என்னும் ஒரு புதிய மதத்தையே படைத்தார். இன்று உலகெலாம் பரவிய பொது சமயக் கொள்கையின் ஆன்மிக ஆசானாக விளங்குகிறார். பல நாடுகளில் ஆசிரமங்களும் மையங்களும் இயங்குகின்றன. 1988-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் தேதி மகாசமாதி எய்தினார்.



## தியான பிம்பம்

"கவிதை தெய்விகத்தை நுகர்கிறது. சிறிதே பரவசத் துடன் அதைச் சுவைக்கிறது. ஆனால் சமாதியில் சுவைத்துச் சுவைத்து அதிலேயே அமிழ்ந்து விடுகிறது. மீண்டும் கவிதைப் பரவசத்தில் அமிழ்ந்து ஆழ்ந்து சமாதியில் ஒன்றிவிடுகிறது."

சுவாமி அவர்கள் தியானத்தின் போது உணர்ந்ததை சின்னச்சின்ன வாக்கியமாக நாள்தோறும் எழுதி வைத்தார். இந்த நிதரிசனத்தை ஒன்று அல்லது இரண்டு பக்கங்களில் எளிமையாக விளக்கியுள்ளார். 1933-ல் இருந்து 1950-வரையிலான கால கட்டத்தில் குறிப்பெடுத்த நிதரிசனப் பேருண்மைகளை மகான் வரிசைப் படுத்தினார். இதில் இருநூற்றுத் தொண்ணூற்றொன்று அத்தியாவசிய உண்மைகளை விளக்க உரையுடன் தொகுத்த ளித்துள்ளார். தனக்கே உரித்தான எளிய, இனிய புரியும் நடையில் ஒவ்வொரு நுட்பத்தையும் விளக்கித் தத்துவக் கருவூலமாகத் தந்துள்ளார். இப்புத்தகத்தில் பல்வேறு தத்துவப் பொருள்களைக் கொடுத்துள்ளார். அவை மிக உயரிய தத்துவ வார்த்தைகள். ஒவ்வொரு பக்கமும் மதிப்பிடவொண்ணா பொக்கிஷமாகும். இந்தப் புத்தகம் எல்லா வகையின ருக்கும் அதாவது தத்துவவாதிகள், யோகிகள், பக்தர்கள், விஞ்ஞானிகள் அல்லது உளவியலார் போன்றோருக்கு சாதி, மத, இனபேத பாகு பாடின்றி-வழிகாட்டியாகத் திகழ்கிறது. சுவாமிஜியின் 'பேருண்மை வெளிப்பாடுகளை' கடைப்பிடிப்பவர் வாசம் நிறைந்த மலர்த் தோட்டத்தில் மிதப்பது போன்ற ஆனந்தத்தை அனுபவிப்பர்!

-வெளியீட்டாளர்

சுவாமி நாராயணாநந்தாவின் படைப்புகள் : தொகுதி 5